Sangathamil

சங்கத்தமிழ்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

குரல் – 09

இருவாரந்திர சர்வதேச மின் செய்தித்தாள்

15. செப்ரெம்பர் . 2021



உயிரினும் மேலானது எமது உரிமை, சுதந்திரம், கௌரவம்

எமது விடுதலை இயக்கம் எத்தனையோ அற்புதமானதியாகங்களைப் புரிந்திருக்கிறது. வீரகாவியங்களைப் படைத்திருக்கிறது. அர்ப்பணிப்புகளைச் செய்திருக்கிறது. இவை எல்லாம் எமது ஆயுதப்போராட்ட வரலாற்றில் நாம் ஈட்டிய வீர சாதனைகள் ஆனால் எனது அன்பான தோழன் திலீபனின் தியாகமோ வித்தியாசமானது; வியக்கத்தக்கது, எமது போராட்ட வரலாற்றில் புதுமையானது; சாத்வீகப்போராட்டக் களத்தில் தன்னைப் பலிகொடுத்து ஈடு இணையற்ற ஒரு மகத்தான தியாகத்தை திலீபன்புரிந்தான். அவனதுமரணம் ஒருமாபெரும் வரலாற்று நிகழ்ச்சி. தமிழீழ போராட்ட வரலாற்றில் ஒரு புரட்சி கரமான திருப்பத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சி. தமிழீழத் தேசய ஆன்மாவைத் தட்டியெழுப்பிய நிகழ்ச்சி. பாரதநாட்டைத் தலை குனிய வைத்த நிகழ்ச்சி. உலகத்தின் மனச்சாட்சியை சீண்டிவிட்ட நிகழ்ச்சி.

திலீபன் யாருக்காக இறந்தான்? எதற்காக இறந்தான்? அவனது இறப்பின் அர்த்தமென்ன? அவனது இறப்பு ஏன் ஒரு மகத்தான நிகழ்ச்சியாக மக்கள் எல்லோரையுமே எழுச்சி கொள் ளச் செய்த ஒரு புரட்சிகர நிகழ்ச்சியாக அமைந்தது? திலீபன் உங்களுக்காக இறந்தான். உங்கள் உரிமைக்காக இறந்தான். உங்கள் பாதுகாப்பிற்காக, உங்கள் சுதந்திரத்திற்காக, உங்கள் கௌரவத்திற் காக இறந் தான் . தான் நேசித்தமக்களுக்காகத் தான் சேித்த மண்ணுக்காக ஒருவன் எத்தகைய உயர்ந்த உன்னததியாகத்தை செய்ய முடியுமோ அந்த அற்புதமான அர்ப் பணிப் பைத்தான் அவன் செய்திருக் கிறான்.

ஒரு உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன். ஆனால் உயிரிலும் உன்னத மானது எமது உரிமை, எமது சுதந்திரம், எமது கௌரவம்.

நான் திலீபனை ஆழமாக நேசித் தேன். உறுதி வாய்ந்த ஒரு இலட் சியப் போராளி என்ற ரீதியில் அவன் மீது அளவு கடந்த பாசம் எனக்குண்டு. அவன் துடி தடித்து செத்துக் கொண்டிருக்கும் பொழுதெல்லாம் என் ஆன்மா கலங் கும் . ஆனால் நான் திலீ பனை ஒரு சாதாரண மனிதப் பிறவியாகப்பார்க்கவில் லை. தன்னை எரித்துக் கொண் டிருக்கும் ஒரு இலட்சிய நெருப் பாகவே நான் அவனைக்கண் டேன். அதில் நான் பெருமை கொண்டேன். இலட்சிய உறுதி யின் உச்சக்கட்டமாக திலீபன் தன் னை அழித் துக் கொண் டான். அவன் உண்மையில் சாக வில் லை. காலத்தால் சாகாத வரலாற்றுப் புருஷனாக அவன் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

திலீபனின் மரணம் குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை தெரி வித்திருக்கிறது. இது அர்த்தமற்ற சாவு என இந்தியத்தூதர் கூறி யிருக் கிறார் . தமது உறுதி மொழிகளை நம்பியிருந்தால் திலீபன் உயிர் தப்பியிருப்பார் என்று சொல் லியிருக் கிறார் . ஆனால் உண்மையில் நடந்தது என்ன? நடந்து கொண்டிருப் பது என் ன ? என் பதை மக் கள் அறிந்து கொள்ளவேண்டும்.

எமது உரிமைகள் வழங்கப் படும், எமது மக்களுக்கும்,எமது மண் ணுக் கும் பாதுகாப் பு அளிக்கப்படும். தமிழீழ மக்கள் தமது பாராம்பரிய தாய்ப்பூமியில் தம்மைத்தாமே ஆளும் வாய்ப்பு அளிக் கப்படும். இப்படியெல்லாம் பாரத அரசு எமக்கு அளித்த வாக் குறுதிகளை நம்பி நாம் எமது ஆ யுதங் களைக் கை யளித் தோம், எமது மக்களினதும் மண் ணின தும் பாதுகாப்பை இந்தியா வுக்கு பொறுப்பளித்தோம்.

இதணையடுத்து என்ன நடை பெற்றது என்பதெல்லாம் எனது மக்களாகிய உங்களுக்குத் தெரி யும்.

தமிழ் அகதிகள் தமது சொந்தக் கிராமங்களுக்குச் செல்ல முடி யாது முகாம்களுக்குள் முடங்கிக் கிடக்க சிங்களக் குடியேற்றம் துரிதகதியில் தமிழ் மண்ணை கபளீகரம் செய்தது. சிங் கள அரசின் பொலிஸ் நிர் வாகம் தமிழ்ப் பகுதிகளில் விஸ்தரிக் கப்பட்டது. அவசர, அவசரமாக சிங்கள இனவாத அரச இயந் திரம் தமிழ்ப்பகுதிகளில் ஊடுரு வியது சமாதான ஒப்பந்தம் என்ற போர்வையில் சமாதனப் படை யின் அனுசரணையுடன் சிங்கள அரச ஆதிக்கம் தழிழீழத்தில் நிலை கொள்ள முயன்றது.

இந்தப் பேராபத்தை உணர்ந்து கொண்ட திலீபன் இதற்கு ஏற்ற ஒரு முற்றுப்புள்ளி காண திடசங் கற்பம் கொண்டான்.

சிங் கள அரசுடன் உரிமை கோரிப் போராடுவதில் அர்த் தமில்லை. பாரதம் தான் எமது இனப்பிரச் சினையில் தலையிட் டது. பாரதம் தான் எமது மக்



களின் உரிமைக் கு உத்தரவாத மளித் தது. பாரதம் தான் எம் மிடம் ஆ யுதங் களை வாங்கியது. பாரதம் தான் எமது ஆயுதப் போராட்டத்தை நிறுத்தி வைத் தது. ஆகவே பாரத அரசிடம் தான் நாம் உரிமை கோரிப் போராட வேண்டும், எனவே தான் பாரதத் துடன் தர்ம யுத்தம் ஒன்றைத் தொடுத்தான் திலீபன். அத்தோடு பாரதத்தின்

26.09.1987 இல் திலீபன் ஈகையடைந்தார். ஈகை திலீபம் அணைந்ததையொட்டி தலைவர் வே. பிரபாகரன் வெளியிட்ட அறிக்கையினை இங்கெ தருகின்றோம். இவ் அறிக்கை தமிழீழ மக்களுக:கு பல விடயங்களைத் தெளவுபடுத்தியது. மக்களைப் போராட்டத்திற்கு அணிதிரவைக் கும் அறை கூவலாக விளங்கியது.

ஆன்மீகமரபில் பெறப்பட்ட
(07 ஆம் பக்கம் பார்க்க)

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

MORTGAGE ALLIANCE
Access Inc.
Independently Owned & Operated | FSCO: 11404
For All Your Mortgage Needs
• Purchase • Refinance
• First | Second Mortgage • Equity Line of Credit
Siva Sethunathan, B.A.
Mortgage Agent
416 725 1732
8130 Sheppard Ave E Suite 209
Toronot, ON M1B 3W3

NISHANTHAN LAW OFFICE
SERVICES
◆ Purchasing a Residential Property
◆ Selling a Residential Property
◆ Residential Mortgage Refinancing
◆ Wills and Powers of Attorney
NOTARY SERVICES
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
1200 Markham Rd., Lower Level Unit 5 & 7
Scarborough, On. (Markham / Ellesmere)

RANI TAILORS & FASHIONS
25 வருடம் அனுபவம் மிக்க மற்றும்
Sri Lanka, India, Germany போன்ற
நாடுகளில் தையல் கலையில் பிரபலமான
புஸ்பராணி மணியம் அவர்கள் இப்போது
Canadaவில் சேவையாற்றுகிறார்
25 Years of Service
தொடர்புகளுக்கு:
647.836.0654 Cell
647.945.8351 Home

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

A TAMILAN CARPET CLEANING
PROFESSIONAL STEAM
CAR & VAN
உங்கள் வீடு தேடி வந்து செய்து கொடுக்கப்படும்
விருகள், கொண்டோக்கள், வாடகை வசியபிடங்கள், விட்டின் படிகள், தரை விரிப்புகள், சோபாகள், மெத்தைகள் வாகன உட்புறம்...
இந்த விளம்பரத்தாலோ எந்த வேலைகளும் நிரந்தரமாகாது
416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam

Annai's PRAGATI
SIDDHA HERBAL CLINIC
A total wellness according to Natures Way!
Treatment based on Ancient Siddha Philosophy of Healing.
MASTER HEALER
PREMILA.S
Hereditary Genetic Siddha Practitioner (Royal Physician Treatment), Spagyric Alchemist (CAN)
Alchemist (IND),
Natural Medicine Practitioner© (CAN)
Canada, Europe & India
TEL: 1 647-278-3100
Email: pragatishc@gmail.com | Web: www.pragatisiddha.com

B.J டெய்லரிங்க & ஜுவலரி
TAILORING & JEWELLARY CLASSES
We provide training in Jewellery Making & Tailoring Classes Available
ONLINE CLASSES AVAILABLE
உங்கள் தொடர்புகளுக்கு:
416.720.4472
jegathees2007@gmail.com

SARA
TAILORS & FASHION
தையற் கலையில் 38 வருட அனுபவம் மிக்கவரின் மேற்பார்வையில் தையல் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன
பாடத்திட்டம்: 3 மாதம், 6 மாதம், 2 வருடம்
65 வயதானவர்களுக்கு படிப்பதற்கு $100 மட்டும்
Saree Blouse, Wedding, Birthday Garments, Flower Girl's Dresses
Ladies Garments, Maternity Gowns, Churithar, Children's Garments
Coat, Pants Hem, Alterations, Ironing
Sewing Classes (Full time & Part Time) Sewing Machine Repairs Etc.
சாரா தையல் பயிற்சி நிலைய ஆசிரியர் திருமதி சரஸ்வதி பாலராசா
2699 Eglinton Ave. East, Scarborough, ON. (Brimley & Eglinton)
Tel: 416-265-0025 / 647-270-1949 | Cell: 416-910-5351

K.S PAINTING & HARDWOOD
PROVINTING THE BEST SERVICE
NIRANJAN SELVARAJAH 647.406.7706
www.kspaintingandhardwood.com

Ideal Auto Tech
For all your vehicle repair and Service needs
Ontario
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

SCARBOROUGH HOME Renovation INC
...your Home Improvement Specialists
24 HOUR EMERGENCY SERVICE
Theepan
Cell: 647 218 7157
VALUE PACK HOME MAKEOVER:
• All General Home Repairs
• Basement Renovation
• Carpet Installation
• Drywall Installation
• Hardwood Flooring Installation
• Washroom Remodeling
• Kitchen Cabinets
• Kitchen Cabinets Installation
• Painting
• Plumbing
• Tiling
100% SATISFACTION GUARANTEED
www:shr1.ca e-mail: y2k21@hotmail.com
At Scarborough Home Renovation, We've definitely get the Experience and the know-how to make your Dream Renovaiton...a practical Reality!

SELVAM
GENERAL PEST CONTROL
Cockroaches, Silverfish, Carpet Beetles, Moths, Fleas
Rodents, Spiders, Wasps/Bees/Hornets & Ants...
எலி, பூச்சி தொல்லையிலிருந்து விடுபட
உடங்களுக்கு உதவிட 24 மணி நேரமும்
7 நாட்களும் இலவச மதிப்பீட்டுடன் 100 வீத
உத்தரவாதத்துடன் சேவையாற்றிட அழையுங்கள்
இந்த விளம்பரத்தாலோ எந்த வேலைகளும் நிரந்தரமாகாது
416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage RAISING YOUR VALUE
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

Samraj Insurance Group Inc.
வாகனக் காப்புறுதி, ஆயட் காப்புறுதி, வீட்டுக் காப்புறுதி, பயணக் காப்புறுதி உட்பட அனைத்துக் காப்புறுதித் தேவைகளுக்கு அழையுங்கள்
Siva Ananthamoorthy (Licensed Insurance Agent)
RE/ON வீடு வாங்க - விற்க சிறப்பான சேவை
Dr. Ananthamoorthy
416.823.3686 / 647.857.0086

அழகிய மனை நிறைவான வாழ்வின் தொடக்கம்! வீடு வாங்க விற்க அல்லது அது தொடர்பான விபரங்கள் அறிய இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்
Higher Standard Agents... Higher Results!
HomeLife Landmark Realty Inc., Brokerage Independently Owned and Operated
Parithi Sinnathamby
Sales Representative
416-904-7444
pari.sinnathamby@gmail.com
7240 Woodbine Ave., Suite 103, Markham, ON. L3R 1A4 Tel: 905-305-1600 Fax: 905-305-1609

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
* AUDIT
* REVIEW ENGAGEMENT
* NOTICE TO READER
* BUSINESS ADVISORY
* CONTROLLERSHIP SERVICES
* CORPORATE TAXES
* PERSONAL TAXES
* FINANCIAL PLANNING
* CRA AUDITS
* PAYROLL
* BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 304 - 5200 Finch Ave East, Scarborough, ON M1S 4Z5
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Preparation of Income Taxes
T1 and T2 with E/File
Location:
Unit 9-40 Winges Rd
Woodbridge, ON
L4L 6B2
Pearl Fortune Canada
Head Office
101 Laird Dr., Markham
ON L3S 3N6
Tel: 905.554.5606
Fax: 905-554-3236
Please contact:
Yo K Gamar (C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993

முக்கிய அறிவித்தல்

உங்கள் வணிக விளம்பரங்கள், அறிவித்தல்கள், சிறு விளம்பரங்கள்
சங்கத்தமிழ் சர்வதேச மின் செய்தித்தாள்
ஊடக மக்களிடம் சென்று அடைய
இன்றே அழையுங்கள்: 437.345.4203,
sangathamilcanada@gmail.com

தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

எமது தாயக தேசத்தின் விடுதலைக் காக ஆயிரமாயிரம் புலி வீரர்கள் களமாடி வீழ்ந்தார்கள். எமது வீர மண்ணின் மார்பைப் பிளந்து அந்த வீரர்களைப் புதைத்தோம். உயிரற்ற சடலங்களாக அவர்கள் மண்ணிற்குள் மறையவில்லை. விடுதலையின் விதைகளாகவே எமது தாயின் மடியில் அவர்களைப் புதைத்தோம். வரலாற்றுத் தாய் அவர்களை அரவணைத்துக் கொண்டாள்.





எமது மண்ணின் விடுதலைக்காக யார் போராடுகிறார்களோ அவர்களே இந்த மண்ணின் மைந்தர்கள்.
எமது மண்ணின் விடுதலையை நேசிக்காத எவரும் இம் மண்ணை ஆள அருகதையற்றவர்கள்

லெப். கேணல் திலீபன்

சங்கத்தமிழ்

தொடர்புகளுக்கு

தொலைபோசி (TP)
437 345 4203
மின்னஞ்சல் (Email)
sangathamilcanada@gmail.com
முகநூல் (Facebook)
Sangathamil Canada

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீடிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சி யும் செய் யப் படுகிறது. எந் தவொரு குறைபாடுகளுக் கும் பிழைகளுக் கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.



திலீபன் இப்போதும் பசியோடுதான் இருக்கிறான்...

ஈகைச்சுடர் லெப்.கேணல் திலீபனின் முதலாம் நாள்

ஈகைப் பயணம் தொடர்வதற்கான ஆரம்பம்...

காலை ஒன்பது மணியிருக்கும் பாடசாலைப் பிள்ளைகள் வரிசையாக வந்து திலீபனை சந்தித்து விடைபெறுகிறார்கள். எல்லோருடனும் அவர் அன்பாக பேசுகிறார். வோக்கி டோக்கியில் தலைவருடன் சில நிமிடங்கள் பேசுகிறார். பேசிவிட்டு அந்த மண்ணிற வாகனத்தை நோக்கி நடக்கிறார். எல்லோரும் பின் தொடர்ந்தோம். ஆம் அவரது ஈகைப் பயணம் ஆரம்பமாகிவிட்டது. மிக மிடுக்காக நடந்து முன் ஆசனத்தில் போய் ஏறினார்.



அவரது பக்கத்தில் சொர்ணம், அன்ரன் மாஸ்ரர், முரளி. பின் ஆசனத்தில் காசி ஆனந்தன், ராஜன், நான் வேறும் சிலர். வாகனம் நல்லூர் கந்தசாமி கோவிலை நோக்கி ஓடுகிறது. பாதையின் இரு பக்கத்திலும் மாணவர்களும், பொதுமக்களும் கையசைத்து வழியனுப்புகிறார்கள். நல்லூர் கந்தசாமி கோவிலை சென்றடைந்தோம். வாகனம் நின்றது. திலீபன் உண்ணாவிரத மேடை நோக்கிச் செல்கிறார். நாங்களும் பின்னால் போய்க்கொண்டிருக்கிறோம்.

தமிழீழ தாயின் எதிர்பாராத ஆசியினை பெறுகின்றார்

எதிர்பாராத விதமாக அந்த நிகழ்ச்சி நடந்தது. வயதான ஓர் அம்மா. தள்ளாத சிவந்த நிற மேனி. பழுத்த தலை. ஆனால் ஒளிதவளும் கண்களில் கண்ணீர் மல்க திலீபனை மறித்து தன் கையில் சுமந்து வந்த அர்ச்சணை சரையில் இருந்து நடுங்கும் விரல்களால் திரு நீற்றை எடுத்து திலீபனின் நெற்றியில் பூசுகிறார். சுற்றியிருந்த கமராக்கள் எல்லாம் அந்த காட்சியை கிளிக் செய்தது. வீரத்திலக மிடுகிறார் அந்தத் தாய். தாயற்ற திலீபன் அந்த தாயின் பாச உணர்வில் மூழ்கிப்போனார்.

போராளி பிரசாத் இன் ஆரம்ப உரை (மேஜர் பிரசாத்)

காலை மணி 9.45 உண்ணாநோன்பு மேடையிலே நாற்காலியிலே திலீபனை அமரவைத்தோம். திலீபனின் அருகே நான், ராஜன், பிரசாத், சிறி ஆகியோர் அமர்ந்திருந்தோம். திலீபனின் ஈகைப் பயணம் ஆரம்பமாகிவிட்டது. அன்று பக்கத்திலிருந்த மேடையில் பிரசாத்தின்



தலைமையில் கூட்டம் நடைபெற்றது. திரு. நடேசன், கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோர் திலீபனின் உண்ணா விரதம் எதற்காக ஆரம்பிக்கப்படுகிறது என்பதனைபற்றி விளக்கம் அளித்தார்கள். தமிழ் மக்களினதும், தமிழர் தாயகத்தினதும் உரிமைகளை பேணும் நோக்கமாக இந்தியமக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளால் முன் வைக்கப்பட்ட ஐந்து கோரிக்கைகளும் விளக்கப்பட்டன.

ஐந்து அம்ச கோரிக்கை

1) பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இன்னமும் தடுப்புக்காவலில் அல்லது சிறைகளில் உள்ளோர் விடுவிக்கப்படல் வேண்டும்.

2) புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நாடாத்தப்படும் சிங்கள குடியேற்றங்கள் உடணடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

3) இடைக்கால அரசு நிறுவப்படும் வரை புனர்வாழ்வு என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்படல் வேண்டும்.


4) வடகிழக்கு மாகாணங்களில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

5) இந்திய அமைதிப்படையின் மேற் பார்வையில் ஊர்காவல் படை என அழைக்கப் படுவோருக்கு வழங்கப்பெற்ற ஆயுதங்கள் திரும்பப்பெறப்பட்டு தமிழ்க்கிராமங்கள், பள்ளிக்கூடங்களில் குடி கொண்டுள்ள இராணுவ, பொலிஸ் நிலையங்கள் மூடப்படவேண்டும்.

பிரசாத் அவர்களால் மேற்படி ஐந்து கோரிக்கைகளும் வாசிக்கப்பட்டன. இதே கோரிக்கையை இரண்டு நாட்களுக்கு முன்பு இந்திய உயர்ஸ் தானிகரின் கையில் நேரடியாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி 24 மணித்தியால அவகாசமும் விடுதலைப்புலிகளால் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் 15 திகதி வரையும் தூதுவரிடமிருந்து எந்த பதில்களும் கிடைக்காத காரணத்தினால் சாகும் வரை உண்ணாநோன்பும் மறியல் போராட்டமும் நடத்துவது என தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதேசப் பொறுப்பாளர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வாசிப்பதற்கு புத்தகங்கள் கேட்ட திலீபன்

அதன்படிதான் இந்த ஈகைச்செம்மலின் ஈகைப்பயணம் ஆரம்பித்தது. பிற்பகல் 2.00 மணி இருக்கும் திலீபன் கம்பீரமாக வீற்றிருந்தார். உண்ணாநோன்பு ஆரம்பிக்கப்பட்டு



இரண்டு மணித்தியாலங்கள் முடிந்து விட்டன. இரண்டாவதுமேடையிலே நடைபெற்றுக் கொண்டிருந்த உண்ணாநோன்பு விளக்கக் கூட்டம் முடிவடைந்து விட்டது. படிப்பதற்கு புத்தகம் வேண்டும் என என்காதில் குசுகுசுத்தார் திலீபன். நான் ராஜனிடம் சொன்னேன்.

15 நிமிடங்களில் பல அரிய நூல்கள் மேடைக்கு வந்தன. விடுதலைப் போராட்டங்கள் பற்றி அறிவதற்கு திலீபனுக்கு ஆர்வங்கள் எப்போதும் உண்டு. பிடல் காஸ்ரோ, சேகுவரோ, கொஜீமின். யசிர் அரபாத் போன்றவர்களின் வாழ்க்கையை பற்றிய நூல்களை நேரம் கிடைக்கும் போதெல்லாம் படிப்பார். பலஸ்தீன மக்களின் வாழ்க்கையை பற்றி படிப்பதென்றால் அவருக்கு பலாச்சுழை மாதிரி பிடிக்கும். பலஸ்தீன கவிதை என்ற நூலை அவரிடம் கொடுத்தேன்.

மாணவர்கள் இளையோர்களின் உணர்ச்சி கவிதைகள்

அதை மிகவும் ஆர்வத்துடன் படிக்கத் தொடங்கினார். மாலை ஐந்து மணிக்கு பக்கத்து மேடையில் மீண்டும் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயிற்று. பாடசாலை மாணவிகள் போட்டி போட்டுக்கொண்டு கவிதைகளை வாசிக்கத் தொடங்கினர். சுசிலா என்ற மாணவி மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் தனது கவிதையை வாசித்துக் கொண்டிருந்தார். அப்போது ஒரு கட்டத்தில் அவர் அழுதேவிட்டார். “அண்ணா திலீபா இளம் வயதில் உண்ணாமல் தமிழினத்திற்காக நீ தவமிருக்கும் கோலத்தைக் காணும் தாய்க்குலத்தின் கண்களில் வடிவது செந்நீர்.” சுசிலாவின் விம்மல் திலீபனின் கவனத்தை திருப்பியது.

கவிதைத்தொகுப்பை மூடிவைத்து விட்டு கவிதை மழையில் நனைய தொடங்கினார். அவர் விழிகளில் முட்டிய நீர் தேக்கத்தை ஒருகணம் என் கண்கள் காணத்தவறவில்லை. எத்தகைய இளகிய மனம் அவருக்கு இந்த இளம் குருத்து இன்னும் எத்தனை நாட்களுக்கு ஒரு சொட்டு நீர் கூட அருந்தாமல் வாடி வதங்க போகிறது. அகிம்சை போராட்டத்திற்கே ஆணி வேராக திகழ்ந்த அண்ணல் காந்தியடிகள் கூட தன்னுடைய உண்ணா விரத போராட்டங் களை நீராகாரம் அருந்தித்தானே நடத்தினார்.

திலீபனின் ஈகைப்பயணம் ஓர்...

ஐரிஸ் போராட்ட வீரர் பொபிஸ் ஆன்ஸ் என்ன செய்தார்? சிறைக்குள் நீராகாரம் அருந்தித் தான் உண்ணாநோன்பு போராட்டத்தை ஆரம்பித்து உயிர் நீத்தார். இந்த உண்ணாநோன்பு அரசின் தலையீட்டினால் வெற்றி பெறுமானால் அந்த வெற்றி திலீபனையே சாரும். அதுபோல் இந்திய அரசு நடவடிக்கை எடுக்காமல் இறுதி உண்ணாநோன்பு இருந்தே திலீபன் இறக்க நேரிட்டால் அதில் கிடைக்கும் தோல்வியும் திலீபனுக்கு கிடைக்கும் மாபெரும் வெற்றிதான்.

நல்லூர் ஓர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடம்

உலகின் புதிய அத்தியாயம் ஒன்றின் சிருஸ்டி கர்த்தா என்ற பெருமை அவனையே சாரும். ஆனால் அதற்காக எங்கள் குல விளக்கை நாமே அணைக்க வேண்டுமா? இறைவா திலீபனை காப்பாற்றிவிடு. கூடியிருந்த மக்கள் நல்லூர் கந்தனிடம் அடிக்கடி இப்படி வேண்டிக் கொள்கிறார்கள். இதை நான் அவதானித்தேன். பழம் தமிழ் மன்னனாகிய சங்கிலியன் அரசாண்ட நல்லூர் அரச தானியிலே, தமிழ்க் கடவுள் ஆகிய குமரனின் சந்நிதியில் ஓர் இளம் புலி உண்ணாமல் துவண்டு கிடந்தது. ஒரு நல்ல முடிவு கிடைக்க வேண்டும். இல்லையேல் உலகில் நீதி செத்து விடும். எனக்குள் இப்படி எண்ணிக்கொண்டேன்.

அப்போது ஒர் மேடையில் முழங்கிக் கொண்டிருக்கிறான். திலீபன் அண்ணாவின் கோரிக்கைகள் மட்டுமல்ல, தமிழ் மக்களின் கோரிக்கைகளும் இதுதான் இதை நிறைவேற்ற வேண்டியது இந்திய அரசின் கடமையாகும். அவர் தமிழீம் தாருங்கள் என்பதற்காக உண்ணாவிரதம் இருக்கவில்லையே. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஐந்தே ஐந்து கோரிக்கைகளை நிறைவேற்றும் படி வற்புறுத்தித்தான் சாகும் உண்ணாநோன்பை ஆரம்பித்திருக்கிறார்.

தமிழீழ தேசிய தலைவர் திலீபனை பார்க்க வருகின்றார்.

இந்தக்காரணத்தாலாவது இந்திய அரசு இதை நிறைவேற்ற தவறுமானால் திலீபன் அண்ணா இறப்பது நிச்சயம். திலீபன்

அண்ணா இறந்தால் ஒரு பூகம்பம் இங்கே வெடிக்கும். ஒரு புரட்சி இங்கே வெடிக்கும். இதுதான் என்னால் கூற முடியும். அவரின் பேச்சு முடிந்ததும் அங்கு கூடியிருந்த மக்கள் அப்பேச்சை வரவேற்பதுபோல் கைகளை தட்டி ஆரவாரித்தனர். அந்த ஒலி அடங்க வெகு நேரம் பிடித்தது. அன்று இரவு 11.00 மணியளவில் தலைவர் பிரபாகரன் திலீபனை பார்ப்பதற்காக மேடைக்கு வருகிறார்.

அவருடன் சொர்ணம், இம்ரான், அஜித், சங்கர், ஜொனி இப்படி பலரும் வருகின்றனர். வெகுநேரம் வரை தலைவருடன் உரையாடிக் கொண்டிருந்தார் திலீபன். யாரையும் அதிக நேரம் பேச அனுமதிக்க வேண்டாம் என்று போகும் போது என்னிடம் கூறிவிட்டுச் சென்றார் தலைவர். நீர், உணவு உட் கொள்ளாத ஒருவர் தொடர்ந்து பேசிக்கொண டிருந்தால் விரைவில் களைப்படைந்து விடுவார். இதனால்தான் தலைவர் அப்படி கூறிவிட்டுச்சென்றார்.

பத்திரிகையாளர் வருகை

அன்றிரவு பத்திரிகை நிருபர்களும் பத்திரிகை துறையை சார்ந்தவர்களும் திலீபனை பார்க்க மேடைக்கு வந்திருந்தனர். முரசொலி ஆசிரியர் திருச்செல்வம், ஈழமுரசை சேர்ந்த பசீர் போன்றோருடன் திலீபன் மனம் திறந்து பேசினார். அவரை கட்டுப்படுத்த எனக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. அதிகம் பேசி உடம்பை கெடுத்துக்கொள்ள போகிறாரே என்பதால் அவரை அன்பாக கடிந்து கொண்டேன். இரவு 11.30 மணியளவில் கஸ்டப்பட்டு சிறுநீர் கழித்து விட்டு 12.00 மணியளவில் படுக்கைக்குச் சென்றார்.

முதல் நாள் முடிவு,அதிகாலை 1.30 இற்கு உறங்கினார்.

அவர் ஆழ்ந்து உறங்கத்தொடங்கியபோது நேரம் 1.30 மணி. அவரின் நாடித்துடிப்பை பிடித்து அவதானித்தேன். நாடித்துடிப்பு 88. சுவாசத்துடிப்பு 20. அவர் சுய நினைவோடு இருக்கும் போது வைத்திய பரிசோதனைக்கு அனுமதிக்க மாட்டார். தனக்கு உயிர் மீது ஆசை இல்லை என்பதால் பரிசோதனை தேவை இல்லை என்று கூறுவார். அவர் விருப்பத்திற்கு மாறாக உணவோ, நீரோ, மருத்துவமோ இறுதிவரை அளிக்கக்கூடாது என்று முதல் நாளே என்னிடம் சத்தியம் வாங்கிவிட்டார். மேடைக்கு முன்பாக மகளிர் அமைப்பு உறுப்பினர்களும், பொதுமக்களும் கொட்டக் கொட்ட கண்விழித்துக் கொண்டிருந்தனர்.

இந்த ஈகைச்சுடரின் உண்ணாநோன்பு போராட்டத்தின் முதல்நாள் முடிவு பெற்றது.

ஈகைச்சுடர் லெப்.கேணல் திலீபனின் இரண்டாம் நாள்

இந்த நாளில் ஈகைச்சுடர் அவர்கள் எந்த நோக்கங்களிற்காக தனது உயிரை உருக்கி யாழ் நல்லூர் கோவில் முன்பாக தனது உயிரை ஆகுதியாக்கினாரோ அந்த நோக்கங்கள் தற்போதய நிலையிலும் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றது.

அன்று சிங்கள அரசாங்கம் பாரத தேசத் தினை வைத்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை ஓர் சூழ்ச்சிபொறிக்குள் தள்ளியதோ அவ்வாறுதான் இந்த ஆண்டிலும் சிங்கள அரசு, இந்திய அரசினை மட்டுமன்றி சர்வதேச நாடுகளையும் தனது பயங்கரவாதம் என்ற சூழ்ச்சி திட்டத்தில் சிக்குற செய்து எமது விடுதலை போராட்டத்தினை இக்கட்டான சிக்கலிற்குள் தள்ளி விட்டிருக்கின்றது சிங்கள பௌத்த பேரினவாதம்.

இந்த நிலையில் ஈகைச்சுடரின் முதல் நாள் பயணத்தில் (19987 செப்டெம்பர் 15) முக்கியமான விடயங்கள் இங்கு தரப்படுகின்றன. 1987 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 16ம் திகதி. இது திலீபனுடன் இரண்டாம் நாள். அன்று அதிகாலை 5.00 மணிக்கே திலீபன் உறக்கத்தைவிட்டு எழுந்து விட்டார். முகம் கழுவி தலைவாரிக்கொண்டார். சிறுநீர் கழித்தார் ஆனால் மலம் இன்னும் போக வில்லை. அவர் முகம் சோகமாக காணப்பட்டாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் எல்லோருடனும் சிரித்து பேசிக்கொண்டிருந்தார்.

சகல தினசரி பத்திரிகைகளையும் ஒன்று விடாமல் படித்து முடித்தார். பத்து மணி யளவிலே பக்கத்து மேடையில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. நிகழ்ச்சிகளுக்கு தேவர் தலைமை தாங்கிக்கொண்டிருந்தார். கவிதை களை படிப்பதற்காக இளம் சந்ததியினர் முண்டியடித்து தங்கள் பெயர்களை பதிவு செய்து கொண்டிருந்தனர். நிதர்சனம் ஒளி பரப்பாளர்களின் ஒளிப்பதிவுக் கருவிகள் நாலா பக்கமும் சுழன்று படம்பிடித்துக் கொண்டி ருந்தன.

மேடைகளில் கவிதைகள் முழங்கிக் கொண்டிருந்போது திலீபன் என் காதுக்குள் குசுகுசுத்தார். "நான் பேசப்போகிறேன் மைக்கை வேண்டி தாங்கோ வாஞ்சி அண்ண." சாப்பிடாமல் குடிக்காமல் இருக் கிறிங்கள் களைத்து விடுவீர்கள்...என்று அவரை தடுக்க முயன்றேன். "இரண்டு நிமிடம் மட்டும்.. நிப்பாட்டி விடுவன். ப்ளீஸ் மைக்கை வாங்கித்தாங்கோ " என்று குரல் தளதளக்க கூறினார். அவரை பார்க்க பரி தாபமாக இருந்தது. கண்கள் குழி விழுந்து, முகம் சோர்ந்து காணப்பட்டாலும் அந்த பசுமையான சிரிப்பு மட்டும் இன்னும் மாறா மல் அப்படியே இருந்தது.



இரண்டு நிமிடத்திற்கு மேல் பேசக்கூடாது என்ற நிபந்தனையுடன் மேடையில் நின்ற தேவரிடம் மைக்கை பெற்றுக் கொடுத்தேன். திலீபன் பேசப்போவதை தேவர் ஒலி பெருக்கியில் அறிவித்ததும் மக்கள் கூட்டம் மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்தது. திலீபன் பேசுகிறார். " எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய மக்கள் அனைவருக்கும் வணக்கம். நின்று கொண்டு பேச முடியாத நிலையில் இருப்பதால் இருந்து பேசுகிறேன். நாளை நான் சுயநினைவுடன் இருப்பேனோ என்று தெரியாது அதனால் இன்று உங்களுடன் பேச வேண்டும் என்று விரும்பினேன். நான் எமது இலட்சியத்தில் உறுதியாக இருக்கின்றோம். 650 பேர் வரையில் இன்று வரை சாவடைந்துள்ளோம்.

மில்லர் இறுதியாகப்போகும் போது என்னிடம் ஒரு வரி கூறினான். நான் அவனுடன் இறுதி வரை இருந்தேன். "நான் எனது தாய் நாட்டிற்காக உயிர் துறப்பதை எண்ணும் போது மகிழ்ச்சியும், திருப்தியும் அடைகிறேன். மக்கள் விடுதலை அடையும் காட்சியை என் கண்களால் காண முடியாது என்பதே ஒரே ஏக்கம் " என்று கூறிவிட்டு வெடி மருந்து நிரப்பிய பார ஊர்தியை எடுத்துச்சென்றான். இறந்த 650 பேரும் அனேகமாக எனக்கு தெரிந்துதான் சாவடைந்தார்கள். அதனை நான் மறக்க மாட்டேன். உண்ணாநோம்பு போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு தலைவரின் அனுமதியை கேட்டபோது அவர் கூறிய வரிகள் என் நினைவில் உள்ளன.

திலீபா நீ முன்னால் போ...நான் பின்னால் வருகிறேன் என்ற அவர் கூறினார். இத்தகைய ஒரு தெளிவான தலைவனை தனது உயிரை சிறிதும் மதிக்காத தலைவ னை நீங்கள் பெற்று இருக்கிறீர்கள். அந்த மாபெரும் வீரனின் தலைமையில் ஒரு மக்கள் புரட்சி இங்கு வெடிக்கட்டும். அது நிச்சயமாக தமிழீழத்தினை தமிழர்களின் அடிப்படை உரிமைகளை பெற்றுத்தரும். இதனை வானத்தில் இருந்து இறந்த மற்ற போராளிகளுடன் சேர்ந்திருந்து நானும் பார்த்து மகிழ்வேன்.

நான் மனரீதியாக ஆத்மார்த்தமாக எமது மக்கள் விடுதலை அடைவார்கள் என உணர்கிறேன். மகிழ்ச்சியுடனும் பூரண திருப்தியுடனும் உங்களிடமிருந்து விடை பெறுகிறேன். விடுதலைப்புலிகள் உயிரினும் மேலான சிறுவர்களை, சகோதரிகளை, தாய்மார்களை, தந்தையர்களை நினைக் கிறார்கள். உண்மையான உறுதியான இலட்சியம். அந்த இலட்சியத்தினை எமது தலைவருடன் சேர்ந்து நீங்கள் அடையுங்கள் எனது இறுதி விருப்பமும் இதுதான்."

மிகவும் ஆறுதலாக சோர்வுடன் ஆனால் திடமுடன் பேசிய அவரின் பேச்சைக்கேட்டு மக்கள் கண்ணீர் சிந்தினர். அன்றிரவு தலைவர் வந்து திலீபனை பார்த்தார். சோர்வுடன் படுத்திருந்த திலீபனின் தலையை தனது கரங்களால் வருடினார். ஒரு தகப் பனின் அன்பையும் தாயின் பாசத்தையும் ஒன்றாக குழைத்தது போலிருந்தது அந்த வருடல். இரண்டு இமய மலைகளையும் என் கண்கள் விழுங்கிக்கொண்டிருந்தன. இரவு பனிரெண்டு மணிக்கு திலீபன் உறங்கத் தொடங்கினார். நானும் அவர் அருகிலேயே படுத்து விட்டேன்.

திலீபனின் வீட்டில் குணபாலன் என்ற சிறுவன் வேலை செய்வதற்காக இருந்தான். அவனது வறுமை நிலையைக் கண்ட திலீபன் தன் கையில் கிடைக்கும் பணத்தை அவனிடம் அடிக்கடி கொடுப்பார். யாழ். இந்துவில் அவர் படிக்கும்போது, வீட்டுக்கு வரும்போதெல்லாம் குணபாலனுக்காக கைநிறைய "டொபி" களுடன் வருவார். குணபாலனுக்கு ரீ.வி. பார்க்கும் பழக்கம் இருந்தது. தன் வேலை களை முடித்துவிட்டு இரவு எட்டு மணிக் குப்பின், பக்கத்துவீட்டிற்குச் சென்று அவன் ரீ.வி. பார்ப்பது வழக்கம். குணபாலனுக்காகத் திலீபன் தன் தந்தையிடம் ஒரு ரீ.வி. வாங்கி வைக்குமாறு பலமுறை கெஞ்சிக் கேட்டார்.

இவரது தொல்லை தாங்கமுடியாமல் இராசையா ஆசிரியர் ஒருநாள் ரீ.வி. யை வாங்கி வந்துவிட்டார். குணபாலனும் அன்றி லிருந்து எதுவித சிரமமுமின்றி ரீ.வி. பார்த்து வரத் தொடங்கினான். யார் மீதும் எளிதில் அன்பு வைப்பதிலும், இரக்கம் காட்டுவதிலும் திலீபனுக்கு நிகர் அவரேதான். அதற்கு இது ஒரு நல்ல உதாரணம். திலீபன் யாழ். இந்துவில் படிக்கும் போது அவரது நெருங்கிய நண்பனாக இருந்தவர்களில் கணேசன் என்பவரும் ஒருவர்: இவர் இப்போது ஒரு வைத்தியராக இருக்கின்றார். ஒருநாள் திலீபன், கணேசன் மற்றும் சிலர் ஊரெழு விலுள்ள திலீபனின் வீட்டுக்கு வந்தனர்.

அப்போது யாழ். இந்துவில் பொருட்காட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. திலீபனின் வீட்டிலே சில மாதங்களுக்கு முன் ஒரு நாய் செத்து விட்டதால், அதை ஒரு மரத்தின் கீழ் கிடங்கு வெட்டித் தாட்டிருந்தார்கள். திலீபனும் நண்பர்களும் அந்தக் கிடங்கைக் கிண்டி நாயின் எலும்புக் கூட்டை வெளியில் எடுத்துத் துப்புரவு செய்தார்கள். அப்போது ஏற்பட்ட துர் நாற்றம் காரணமாக வீட்டில் இருந்தவர்கள் வெளியே போனாலும், திலீபனும் நண்பர் களும் அதைப் பொருட்படுத்தாமல் தமது வேலையை முடித்துவிட்டு, அந்த எழும்புக் கூட்டை அன்றே எடுத்துச்சென்று பொருட் காட்சியில் வைத்தனர். எதையும் ஆராய்ச்சி செய்து பார்ப்பதில் திலீபனுக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. அதனால்தான் தான் இந்த உண்ணாநோன்புப் பாராட்டத்தில் இறக்க நேரிட்டால் தனது உடலை யாழ். வைத்திய பீடத்துக்கு ஆராய்ச்சிப் படிப்புக்காக அனுப்பிவைக்கும்படி அவர் கூறினார் போலும்?

ஈகைச்சுடர் லெப்.கேணல் திலீபனின் மூன்றாம் நாள்

காலை ஆறு மணிக்குத் துயில் எழும்பிய திலீபனின் முகத்தைப் பார்த்த எனக்கு, ஒரு கணம் அதிர்ச்சியாயிருந்தது. காரணம் அவரின் உதடுகள் இரண்டும் பாளம்பாளமாக வெடித்து வெளிறிப்போயிருந்தன. கண்கள் நேற்றைக்கு இருந்ததைவிட இன்னும் சற்று உள்ளேபோயிருப்பது போல் தோன்றியது... முகம் வரண்டு, காய்ந்து கிடந்தது, தலை குழம்பியிருந்தது

"பல் விளக்கி முகம் கழுவவில்லையோ?"

"இல்லை வாஞ்சியண்ணை... வேண்டாம்."

கலைந்திருந்த தலைமயிரை நானே அவரு கில் சென்று வாரி விடுகிறேன். அவர் இன்னும் சிறுநீர் கழிக்கவில்லை. "வெளிக்குப் போகேல்லையோ?" என்று மெதுவாகக் கேட்கிறேன்.

"போகவேணும் போலதான் இருக்கு."

"சரி கீழே இறங்கி வாருங்கோ" என்று கூறிவிட்டு, மேடையை விட்டு நானே முதலில் இறங்கி, கீழே இறங்குவதற்கு உதவி செய்ய முயன்றேன்.

"வேண்டாம் விடுங்கோ.....நானே வருகின் றேன்" என்று என் கையை விலக்கிவிட்டு தானே கீழே குதிக்கின்றார்...

மனதை எவ்வளவு திடமாக வைத்திருக் கின்றார் என்று எனக்குள்ளேயே ஆச்சரியப பட்டேன்.

மறைவிடத்துக்குச் சென்ற அவர், சிறுநீர் கழிக்க முடியாமல் சிரமப்பட்டார்.

5 நிமிடம்...
10 நிமிடம்...
15 நிமிடம்...
20 நிமிடம்...

நிமிடங்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஆனால், எதுவித பயனும் ஏற்படவில்லை. அவரைப் பார்க்க எனக்கு வருத்தமாக இருந்தது. என் கண்கள் என்னையறியாம லே கலங்குகின்றன. மேடையின் வலப் புறத்தில் ஏறி அமர்ந்த திலீபன், தூரத்தில் தெரியும் வழக்கமான ஆட்களை அழைத்து உரையாடத் தொடங்கினார். "கண்டபடி பேசினால் களைப்பு வரும்... கொஞ்சம் பேச்சைக் குறையுங்கோ..." என்று அவரைத் தடுக்க முயல்கிறேன். ஆனால், என்னால் முடிய வில்லை. தனக்கே உரிய சிரிப்பை என் வார்த்தைகளுக்குப் பதிலாக்கிவிட்டுத் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்.



கடைசியாக அவர் நீர் அருந்தி 45 மணித்தியாலங்கள் முடிந்து விட்டன. இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் அவர் இப்படி தன்னைத்தானே வருத்தப்போகிறார்?

இப்போதே சிறுநீர் கழிக்க முடியாமல் கஷ்டப்படத் தொடங்கிவிட்டார். இன்னும் இரண்டு நாட்கள் போனால் என்னென்ன நடக்குமோ? என்று எண்ணிய நான், அவரின் காதுக்குள் குசு குசுக்கிறேன்.

"என்ன பகிடியா பண்ணுறீங்க?..... ஒரு சொட்டுத் தண்ணீரும் குடிக்கமாட்டேன் என்ற நிபந்தனையுடன்தானே இந்த உண்ணா நோம்பைதத் தொடங் கினனான்... பிறகு எப்படி நான் தண்ணீர் குடிக்க வேண்டுமென்ற கேட்டீங்க?"...

என்று ஆவசத்துடன் என்மீது பாய்கிறார்.

"இல்லை..... இப்பவே உங்களுக்குச் சலம் போறது நின்று போச்சு..... இனியும் நீங்கள் தண்ணீர் குடிக்காமல் இருந்தால் மேலும் மேலும் கஷ்டமாக இருக்குமே... அதுக்காகத் தான் கேட்டனான்..." என்று அசடு வழியக் கூறிவிட்டு, வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டேன்.

"இனிமேல் என்னைத் தண்ணி குடிக்கச் சொல்லிக் கேட்கவேண்டாம்... சரியோ?... உண்ணாநோன்பு என்றால் என்ன? ... தண்ணீர், குளுக்கோஸ், இளநீர் எல்லாமே உணவுதான்... இந்த உணவுகளை எடுத்துக் கொண்டு எவ்வளவு நாளும் உயிர் வாழலாம். ஆனால், அது உண்ணாநோன்பு இல்லை. உண்ணாநோன்பு எண்டால் அதுக்கு அர்த் தம் வேணும்... ஒரு புனித இலட்சியம் நிறைவேற வேணுமெண்டதுக்காகத்தான் எங்களை நாங்கள் வருத்திக்கொண்டு உண் ணாநோன் பு இருக்கிறது... இது வெறும் அரசியல் லாபத்துக்காக தொடங் கப்பட்டதல்ல... வயிறு முட்டக் குடித்துவிட்டு மக்களையும் ஏமாற்ற என்னால் முடியாது."

அவரின் பேச்சில் இருந்த உண்மைகள் எனக்கும் தெரியும். ஆனால், திலீபனின் உயிர் மிகவும் பெறுமதி மிக்கது... அதை இப்படி வருந்த விடுவதா? என்ற ஏக்கத்தில்தான் அப்படிக் கேட்டேன். ஆனால் அவர் தன் உயர்ந்த சிந்தனையால் என் பேச்சுக்கு ஆப்பு வைத்துவிட்டார்.

நேரம் செல்ல செல்ல நல்லூர் ஆலய மைதானம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. கடந்த இரு நாட்களாக ஆயிரக்கணக்காக வந்திருந்த சனக்கூட்டம், இன்று இலட்சத் தைத் தாண்டியிருந்தது. யாழ்ப்பாண நகரத் தில் உள்ள கல்லூரிகளிலிருந்து மாணவ — மாணவிகள் காலை 9 மணி முதல் வரிசைவரிசையாக, வெள்ளைச் சீருடையில் அணிவகுத்து வந்து மைதானத்தை நிறைக் கத் தொடங்கினர்.



திலீபன் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஓர் அங்கத்தவர் என்ற நினைப்பு விடுபட்டு, "தமிழ் இனத்தின் பிரதிநிதி" என்ற எண்ணம்தான் அந்தச் சனக்கூட்டத்தினர் மத்தியில் நிறைந் திருந்தது. தாய்க்குலம் — திலீபன் வாடி வதங் கியிருந்த கோலத் தைக் கண் டு கண்ணீர் சிந்தியது. அந்தக் கண் ணீர் மழையில் இதயம் கனிந்து விட்ட வருண பகவான் கூடத் தீடீரென்று பலமாகக் கண்ணீர் சொரியத் தொடங்கிவிட்டான்.

ஆம்!

அனலாகக் கொதித்துக் கொண் டிருந்த சூரியன், ஒரு பிள்ளையின் உடலை வெப்பத் திலிருந்து பாதுகாப்பதற்காகத், தன்னைத் தானே கருமேகத்தின் போர் வைக்குள் மூடிக்கொண் டான் மழைநீர் கோவில் மைதானத்தில் ஆறாக ஓடிக்கொண்டிருந்தது. ஆனால், பொதுமக்களில் ஒருவர்கூட எழும் பால் அப்படியே இருந்தனர். அப்பப்பா! மக் களின் உணர்வு மழைக்கு முன்னிலையில் அந்த வருணனின் மழைநீர் வெகு சாதாரண மானது என்ற எண் ணம் நிதர்சனமாகத் தெரிந்தது.

வாடிய நிலையிலும், சோர்ந்த நிலையிலும் தன் உயிரினும் மேலான மக்கள் மழையில் நனைவதைக் கண்ட திலீபன், அவர்களை நனைய வேண் டாம் என் று கைகளை அசைத்துச் சைகை காட்டினார். ஆனால், அவர்களோ அசைவதாக இல்லை. "உன் னால் மட்டும் தானா தமிழினத்துக்காக மெழுகாக உருக முடியும்? ... உன் உயர்ந்த இலட்சியத்துக்கு முன் இந்த மழை வெகு சாதாரணமானது!" என்று கூறுவதுபோல், அவர்கள் நின்று கொண்டிருந்தனர்.

முரளியும் — நிரஞ்சனும், வேறு சிலரும் படங்குகளை விரித்துக் கட்டிக் கொண்டிருந் தனர்.

ஒலிபெருக் கியில் காசி ஆனந் தனின் கவிதையொன்று முழக் கமிட்டுக்கொண் டிருந்தது.

"திலீபன் அழைப்பது சாவையா? — இந்த

சின்ன வயதில் இது தேவையா?" ...

மூன்றாம் நாளான இன்று இராண்டாவது மேடையில் சூடான பேச்சுக்களும், கண் ணீர்க் கவிதைகளும் முழங்கிக்கொண் டிருந்தன. பேச்சாளர்களில் ஒருவரும், எமது தீவிர ஆதரவாளருமான காங்கேசன்துறை கருணானந்தசிவம் ஆசிரியர் அவர்கள் இப்படிப் பேசினார்:
"தியாகி திலீபனின் உயிர் விலைமதிப்பற்றது. அவர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மட்டும் உரியவர் அல்ல ... அவர் ... தமிழ் இனத்துக்கே சொந்தமானவர்... அப்படிப்பட்ட திலீபன் அவர்கள் ஒரு சொட்டு நீராவது அருந்தி தன் உடலைக் காப்பாற்ற வேண்டும். ஆவர் தன் பிடிவாதத்திலிருந்து இறங்கி நீர் உணவு அருந்தி எம் கவலையைப் போக்க வேண்டும்... இது எனது வேண்டுகோள் மட்டுமல்ல: இங்கே வந்திருக்கும் இலட்சக் கணக்கான மக்களின் வேண்டுகோளும் இதுதான்."

அந்தப் பேச்சைக் கேட்ட திலீபனின் முகம் வாடியதை நான் அவதானித்தேன்... தான் பேசப்போவதாகக் கூறினார். அவரிடம் ஒலி வாங்கியைக் கொடுத்தேன்.

"இந்த மேடையில் பேசிய ஒர் அன்பர் என்னை நீர் உணவு அருந்தும்படி கூறியது என்னை அவமானப் படுத்துவது போல் இருக் கிறது... நான் இந்த மேடையிலே நீராகாரம் எதுவும் எடுக் காமல் தான் உண் ணாநோன் பை ஆரம்பித்தேன்... இறுதிவரை இந்த இலட் சியத்தில் இருந்து மாறமாட்டேன். நீங்கள் இந்தத் திலீபனை நேசிப்பது உண்மையாக இருந்தால், தயவு செய்து இனிமேல் என்னை யாரும் நீராகாரம் அருந்தும்படி வற்புறுத்த வேண்டாம். உங்கள் திலீபனுக்கு நிறைந்த மனக் கட் டுப் பாடும் தன் னம் பிக் கையும் உண்டு...என் கோரிக்கைகளை இந்திய அரசு நிறைவேற்றாவிட்டால் நீரே எடுக்காமல் இறப்பேனே தவிர, இந்த அற்ப உயிரைக் காப்பாற்றுவதற்காக என் இலட்சியத்திலிருந்து ஒரு போதும் பின் வாங்க மாட்டேன்." அவர் பேசி முடித்ததும், மழை ஓய்ந்துவிட்டது.

திலீபனுடன் சேர்ந்து அவன் கோரிக்கைகள் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக தினமும் நல்லூர்க் கோவில் மைதானத்தில் அடையாள உண் ணாவிரதம் இருப் போர் தொகை அதிகாரித்துக் கொண்டே வந்தது.
(12 ஆம் பக்கம் பார்க்கவும்)...
(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பலர் தாமும் சாகும் வரை திலீபனைப்போல் ஒரு சொட் டு நீர் கூட அருந் தாமல் உண்ணாநோன்பு இருக்க விரும்புவதாக, எம்மிடம் வந்து கூறினர். அவர்களின் வேண் டுகோளைப் புறக்கணிக்க முடியாமல் திணறி னோம்.

செல்வி. சிவா துரையப்பா என்ற பெண் அச்சுவேலியைச் சேர்ந்தவர்... 17.09.1987 இல் திலீபனுக்கு ஆதரவாக மூன்றாவது (சிறிய) மேடை ஒன்றில் தனது உண்ணா நோன்பு போராட்டத்தை ஆரம்பித் தார்...

அன்றிரவு திலீபன் சிறுநீர் கழிக்க முடியாமல் மிகவும் அவஸ்தைப்பட்டார். வைத்தியர் ஒரு வரை அழைத்துவந்து அவரைப் பிரிசோதிக்க ஏற்பாடு செய்தோம் ஆனால், திலீபன் அதை மறுத்துவிட்டார். எந்தவித பரிசோதனையும், சிகிச்சையும் தான் இறக்கும் வரை தனக்கு அளிக்கக்கூடாதென்று உறுதியாகக் கூறி விட்டார்.

அன்று அவர் கஷ்டப்பட்டு உறங்கும்போது நேரம் நள்ளிரவு 1.00 மணி.
அவரின் நாடித்துடிப்பு :- 11, சுவாசம் — 24.

ஈகைச்சுடர் லெப்.கேணல் திலீபனின் நான்காம் நாள்

கடந்த மூன்று நாட்களாக மேடையில் திலீபனுடன் சேர்ந்து ஒரு சொட்டு நீர் கூட அருந்தாது இருந்தேன். மானசீகமாகத் திலீபனின் நட்புக்கு உயரிய மதிப்பளிப்பவன் நான். அதனால் தான் என்னால் எதுவும் அருந்த முடியவில்லை. திலீபன் ஒன்றும் அருந்தவில்லையே, உண்ணவில்லையே, என்ற வேதனைதான் என்வாய்க்கு பூட்டுப் போட்டதே தவிர வேறு ஒன்றுமே இல்லை.

கடந்த மூன்று நாள்களாக ஒன்றுமே நான் உண்ணாமல் அருந்தாமால் இருந்தது சிறிது களைப்பை ஏற்படுத்தி இருந்தாலும் திட மனத்துடன் அதைச்சமாளித்துக் கொண்



டேன். நான்காம நாளான இன்றுதான் எனக் குச் சற்று நாவறர்ச்சியாக இருந்தது. ஆனாலும் அதைப்பொருட்படுத்தாமல் யாரிடமும் என் நோன்பைப்பற்றிக் கூறாமல் இருந்தேன். இரண்டு மூன்று முறை ராஜனும், நவீனும் என்னைச் சாப்பிட அழைத்த போது நான் பிடிவாதமாக மறுத்து விட்டேன்.

திலீபன் இருக்கும் நிலையைப் பார்க்கும் போது என்னால் எதுவும் அருந்த முடிய வில்லை. இது என்னால் தாங்க முடிய வில்லை. விம்மி விம்மி அழத்தொடங்கி விட்டேன். என் வாழ்க்கையில் எத்தனையோ சோகச் சம்பவங்கள் நடந்து முடிந்து விட்டன. ஒன் றுக் குமே நான் அழுததில் லை. இன்று?...

ஆனால் இன்று காலை 10 மணியளவில் தலைவர் பிரபாகரன் என்னை அழைத்துவரச் சொன்னதை அறிந்து, என் நெஞ்சு படபட வென்று அடித்துக் கொண்டது. தலைவர் மிகவும் கண்டிப்பானவர். ஏன்ன சொல்லப் போகிறாரோ என்ற கேள்வியை எனக்குள் பலமுறை கேட்டுக் கொண்டேன்.

தலைவரின் அறைக்குள் பயத்துடன் சென்றேன்.

"இருங்க வாஞ்சி அண்ணா" என்ற அன்பான குரல் என்னை வரவேற்றது. ஆச்சரியத்தால் என் கண்கள் அகன்றுவிட்டன. சாப்பிடாத மயக்கத்தில் என் கண்களும் மயங்கி விட்டனவா என்று, ஒரு கணம் சிந்தித்தேன்.

இல்லை! என் முன் இருப்பவர், தலைவர் பிரபாகரன் தான்! துறு, துறுவென்று பார்க்கும் அதே கண்கள். வட்ட முகம், கூரிய அழகான பெரிய மூக்கு, அளவாக அழகாக நறுக்கி விடப்பட்ட நீண்ட மீசை.

"நீங்க படிச்சவர். வயதில் மூத்தவர். நான் சொல்ல வேண்டியதில்லை. திலீபனில் அன்பு இருக்கவேண்டியது தான். அதற்காக இப் படியா சொல்லாமல் கொள்ளாமல் எதுவும் குடிக்காமல், சாப்பிடாமல் இருப்பது? நீங்கள் அவரைப் பார்க்க வேண்டியவர். உங்கள் உடம்பில் சக்தி இருந்தால்தான் அதற்கு உங்களால் முடியும். நான் தலீபனில் அன்பில்லாதவன் என்றா நினைத்திருக் கிறீர்கள்? திலீபன் என் பிள்ளையைப் போன்றவன். நானே அவனை இந்த உண் ணாநோன் புப் போராட் டத் திற்கு அனுமதித் திருக் கிறேனென் றால் என் மனத்தைக் கல்லாக்கித்தான் அதைச் செய்திருக்கிறேன்.

இந்த உண்ணாநோன்புப் போராட்டத்திற்கு தேவையான மனோதிடம் திலீபனிடம் இருப்பதனால்தான், உண்ணாநோன்பை அவன் நடத்த விரும்பியபோது நான் அதற்குச் சம்மதித்தேன். ஒவ்வொருவராக இந்தப் போராட்டத்தில் ஈடுபடுவதுதான் நல்லது. திலீபனுக்கு அடுத்த சந்தர்ப்பம் உங்களுக் குத்தர முயற்சிக்கிறேன். அதுமட்டும் நீங்கள் வழக்கம்போல் சாப்பிட்டு, குடித்து இருக்க வேண்டும். திலீபனை வடிவாகக் கவனித்துக் கொள்ளுங்கள். இப்போது எதையாவது குடித்து உங்கள் பிடிவாதத்தை விட்டு விடுங்கள்."

என்று கூறிய தலைவர், சொர்ணனை அழைத்து குளுக்கோசும் எலுமிச்சம் பழமும் வரவழைத்து, தானே தன் கைப்படக் கரைத்து, அந்தக் கிளாசை என்னிடம் நீட் டினார். ஆவ்வளவு கூறியபின் என்னால் எதுவும் திருப்பிக் கூற முடிய வில்லை. மடமடவென்று வாங்கிக் குடித்தேன்.

தலைவர் பிரபாகரன் கண்டிப்பானவர் என்பது தெரியும். ஆனால் அவரின் அன்பான வார்த்தைகள் எமது வாயைத் தானாகவே அடைக்கச் செய்துவிடும் என்பது எனக்கு இன்றுதான் புரிந்தது.

திலீபனின் உண்ணாநோன்புச் செய்தி இலங்கையில் மட்டுமன்றி உலகம் முழுவதும் பரவத் தொடங்கியது. பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்சர்லாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளில் இருந்தும், அரபு நாடுகளிலிருந்தும் தொலைபேசி அழைப்புக்கள் வந்து கொண் டேயிருந்தன.

ஏன்? இந்தியாவின் தமிழகத்திலும் இந்தச் செய்தி, உணர்வு அலைகளைக் கொந் தளிக்கச் செய்து கொண்டிருப்பதாக அங் கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக் கின்றன. தமிழகம் உட்பட பல நாட்டுப் பத்திரிகைகள் திலீபனின் உண்ணா நோனபிற்கு ஆதரவாகத் தலைப் புச் செய்திகளைப் போட்டிருப்பதாக, எமது தகவல் தொடர்பு அறிக்கைகள் கூறுகின்றன.

இன்று திலீபன் உண்ணாநோன்பு ஆரம்பித்து நான்காவது நாள், அவரது உடல் மிகவும் அசதியாகக் காணப்பட்டது... பயற்றங் காயைப்போல் வாடி வதங்கி, கட்டிலின்மேல் அவர் சுருண்டு கிடந்த தோற்றம், பார்ப்பவர் நெஞ்சங்களைப் பதை பதைக்க வைத்தது. அப்படியிருந்தும் அவர் இன்று மக்கள் முன் உரையாற்றினார். அவரின் உரை பின் வருமாறு:
"அன்பார்ந்த தமிழீழ மக்களே!
விளக்கு அணையுமுன்பு பிரகாசமாக எரியு மாம். அதுபோல இன்று நானும் உற்சாகத் துடன் இருக்கிறேன் என்பது தெரிகிறது. இன்று தாராளமாகப் பேசமுடிகிறது. போராடத் தயாராகுங்கள்! எனக்கு விடை தாருங்கள்! ஒருவரும் என்னை இந்தப் போராட்டத்தைக் கைவிடுமா கேட்க (16 ஆம் பக்கம் பார்க்க

தமிழ் செய்திகள்



இராணுவத்தின் ஊடாக அவசரகால சட்டத்தை அமுல்படுத்தி மக்களை அடக்கி ஆள அரசாங்கம் முயல்கின்றது

–சுரேஸ் பிரேமச்சந்திரன்–

செப்ரெம்பர் 05, 2021



பஞ்சம் மற்றும் பட்டினியை நோக்கி இலங்கை அரசு நகர்ந்து கொண்டு இருக்கின்றது என் சுரேஸ் பிரேமச் சந்திரன் தெரிவித் துள்ளார்.

இன்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் சுரேஸ் பிரேமச் சந்திரன் மேலும் கூறியுள்ளதாவது, "இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இலங்கை யிலுள்ள பலவேறுபட்ட வெளிநாட்டு தூதுவர்களை சந் தித்து கலந்துரையாடி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதாவது, ஐ.நா.ஆணையகம் மற்றும் ஐ.நா.பொதுச்சபை ஆகியன இலங்கை விவகாரத்தில் பிழையான செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாக வெளிநாட்டு தூதுவர்களுடன் இடம்பெறுகின்ற சந்திப்பில் அவர் கூறி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை என்பது ஜனநாயகத்தின் உச்சத்தில் இருக் கின்றது போன்று மனித உரிமைகளை அரசு மதித்து நடக்கின்றது என்ற கோணத்தில் பேசுகின்ற ஜீ.எல்.பீரிஸ், இலங்கையில் இருக்கக்கூடிய பயங்கரவாத தடைச் சட்டம் இன்றும் அப்படியே இருக்கின்றது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதேவேளை, தற்போது பொருளாதார அவசரகால நிலைமையென்ற பெயரில் கட்டவிழ்க்கப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் உருவாகி இருப்பதும் மக்கள் இவ் விடயத்தில் எதனையும் பேசமுடியாத நிலைமையில் இருக்கின்றமையையும் அவதானிக்க கூடியதாக இருக் கின்றது.

ஆகவே, ஒருபக்கத்தில் தங்களை தூய்மையானவனாக காட்டிக்கொள்ள முயற்சிக்கும் இலங்கை அரசாங்கம் மறுபுறத்தில் தமிழ் மக்களுக்கு மாத்திரம் அல்ல அனைத் து மக்களுக்கும் இன்னல்களை உருவாக்கியுள்ளது.

அதாவது, பொருளாதாரத்தில் பாரிய பின்னடைவை இலங்கை சந்தித்துள்ளது. பஞ்சம், பட்டினி நோக்கி இலங்கை அரசு நகர்ந்து கொண்டு இருக்கின்றது.

இந்நிலையில் இராணுவத்தின் ஊடாக அவசரகால சட்டத்தை அமுல்படுத்தி மக்களை அடக்கி ஆள அரசாங் கம் முயல்கின்றது" என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அவசரகால சட்டம் எமது மக்களின் குரல்வளையை நசுக்குகின்ற ஒரு சட்டமாக அமைந்துள்ளது – செல்வம் அடைக்கலநாதன்

செப்ரெம்பர் 03, 2021

அரசாங் கம் அறிவிக் கும் நிர் ணய விலையில் பொருட்களை விற்பனை செய்வதற்கான நடை முறை யினை உரிய முறையில் மேற்கொள்ள வேண்டும். மக்களை ஏமாற்றுகின்ற செயற்பாடுகளை அரசாங்கம் செய்யக்கூடாது. மக்கள் தற்போதைய அரசாங்கம் மீது நம்பிக்கை இன்றி உள்ளனர் என தமிழ் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித் துள்ளார்.

மன்னாரில் இன்று (3) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில், நாட்டில் அவசர காலச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ள அதே நேரத்தில் அவசரகாலச் சட்டத்தின் ஊடாக முழு அதிகாரங்களையும் பெற்றுக்கொண்ட ஜனாதிபதி அவசரகால சட்டத்தை கொரோனா தொற்றுக்கு அதை நீக்குவதற்காக சாட்டாக வைத்துக் கொண்டு சட்டத்தை கையில் எடுத்துள்ளனர்.

இராணுவத்தினருடைய அதிகாரங்களை இராணுவத் திற்கு வழங்கி இப்போது உள்ள போராட்டங்கள் ஜனநாயக ரீதியாக இடம் பெறுகின்ற போதும், போராட்டத் தில் ஈடுபடுகின்றவர்களை கைது செய்வதற்கான ஒரு அத்திவாரமாக இந்த சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

ஜனநாயக நாடு என கூறிக் கொண்டு ஒரு சர்வாதிகார ஆட்சியை நடத்துவதற்கான அத்திவாரத்தை இந்த சட்டத்தின் ஊடாக ஜனாதிபதி நிரூபித்துள்ளார்.

அண்மைக்காலமாக இந்த சட்டத்தின் ஊடாக ஓய்வு பெற்ற இராணுவ தளபதியை குறித்த குழுவிற்கு ஜனாதிபதி நியமித்துள்ளார்.

பொருட்களின் விலையை நிர்ணயம் செய்கின்ற சட்டம் உள்ளது. இந்த சட்டங்களை வழக்காமல் அவசரகாலச் சட்டத்தை அரசாங்கம் கையில் எடுத்ததன் காரணம் ஜனநாயக போராட்டங்களை மழுங்கடிப்பதற்கான திட்டமாக அமைந்துள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை பார்க்கிலும் அவசரகால சட்டம் அன்றாடம் குரல் கொடுக்கின்ற எமது மக்களின் குரல் வளையை நசுக்குகின்ற ஒரு சட்டமாக அமைந் துள்ளது.

எனவே மக்களை பாதிப்புக்கு உள்ளாக்குகின்ற அவசர காலச்சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும். ஜனநாயக நாட்டில் மக்கள் சுதந்திரமாக செயல்பட வழி முறைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அவசரகாலச் சட்டம் மிக மோசமானது. ஜனநாயக ரீதியில் போராடுகிறவர்களை கைது செய்வதற்கான சட்டமாகவே இச்சட்டம் எதிர் காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் மேலும் அரசாங்கம் கூறுகிறது சதொச மற்றும் விற்பனை நிலையங்களில் பொருட்களை மலிவு விலையில் கொள்வனவு செய்ய முடியும் என்று.

வெளிப்படையாக ஊடகங்கள் கூடாக அரசாங்கம் அறியப் படுத்தி உள்ள போதும் உரிய முறையில் நடைமுறையில் இல்லை. மக்கள் ஏமாறும் நிலை காணப்படுகின்றது.

சதொச வில் 130 ரூபாவிற்கு சீனியை பெற்றுக்கொள்ள முடியும் என ஏற்கனவே அறிவித்த போதும், அதனை உரிய முறையில் மக்கள் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சீனி உரிய முறையில் மக்களுக்கு பகிர்ந்து வழங்கப்பட வில்லை. வன்னி மாவட்டத்தில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் மக்கள் உரிய முறையில் சதொச ஊடாக சீனியை பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்பட்டுள்ளது.

தற்போது அரசாங்கம் சீனி உட்பட அத்தியாவசிய பொருட்கள் சிலவற்றிற்கு நிர்ணய விலையை அமுல் படுத்தியுள்ளனர். எனினும் நிர்ணய விலைக்கு பொருட் கள் மக்களுக்கு வழங்கப்படுவது இல்லை.

அரசாங்கம் அறிவிக்கும் நிர்ணய விலையில் பொருட் களை விற்பனை செய்வதற்கான நடைமுறை உரிய முறையில் மேற்கொள்ள வேண்டும். மக்களை ஏமாற் றுகின்ற செயற்பாடுகளை அரசாங்கம் செய்யக்கூடாது. மக்கள் தற்போதைய அரசாங்கம் மீது நம்பிக்கை இன்றி உள்ளனர்.

எனவே அரசாங் கம் அமுல் படுத் தியுள் ள விலை நிர்ணயத்தை மக்கள் உரிய முறையில் பயனடைய அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

உயிரினும் மேலானது எமது உரிமை, சுதந்திரம், கௌரவம்

(01 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அகிம்சை வடிவத்தை ஆயுதமாக எடுத்துக் கொண் டான். நீரா காரம் கூட அரந்தாது மரண நோன்பை திலீபன் தழுவிக் கொள்வதற்கு 24 மணி நேரத் திற்கு முன்னரே நாம் இந்தியத் தூதுவர் திரு. டிக்ஸிட்டுக்கு முன் னறிவித்தல் கொடுத்தோம். உண்ணா விரதம் ஆரம்பமாகி எட்டு நாட்கள் வரை ஒன்றும் நடைபெறவில்லை. பதிலுக்கு இந் தியஅரசு ஆதிக் கத்தின் கீழுள்ள தொடர்புசாதனங்கள், குறிப்பாக அகில இந்திய வா னொலி எம்மீது விசமத்தனமான பொய்ப்பிரசாரத்தை கட்ட விழ்த்து விட்டது. திலீபன் உண்ணா விரத தை மிகவும் கேவலமாக கொச் சைப்படுத்தியது. ஒன்பதாவது நாள் இந்தியத் தூதர் இங்கு வந்தார். உருப்படியில்லா உறுதி மொழிகளைத் தந்தார். பெறுவம் உறுதிமொழிகளை நம்பி எமது இனம் காலம் காலமாக ஏமாற்றப் பட்டு வருகிறது. உருப்படியான திட்டங்களை முன்வையுங்கள்.

எமது கோரிக் கைகள் நிறை வேற்றிவையுங்கள். அதுவரை உண் ணாவிரதம் கைவிடப்பட மாட்டாது என்றேன். உங்களுக் கு திலீபனது உயிரில் அக்கறை இருந்தால், நீங்கள் அவனை வந்து பாருங்கள். எமது மக் களுக்கு முன்பாக அவனிடம் உறுதி மொழிகளைக் கூறுங் கள். நாம் உண்ணாவிரதத்தை வாபஸ் பெறுகிறோம் என் றோன். அதற்கு இந்தியத் தூதர் மறுத்துவிட்டார்.

எனது அன்பான மக்களே...
இந்திய அரசு எமது நியாயமான கோரிக்கைகளைப்புரிந்து காலந் தாழ்த்தாது உருப்படியான நட வடிக்கைகளை எடுத்திருந்தால் திலீபன் உயிர் பிழைத்திருப் பான். இன்னமும் இந்திய அரசு எமது கோரிக்கைகளை நிறை வேற்றுவதில் காலந்தாழ்த்தி வரு கிறது. நாம் கேட்டுக்கொண்டபடி ஒரு இடைக்கால அரசை நிறுவி இன்று எமது மக்கள் எதிர்கொள் ளும் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில் சிரத்தை காட்டு வதை விடுத்து எமக்கு நிபந் தனை களை விதிக்கிறது. எமமோடு கலந்தாலோசிக் காத ஓர் ஒப்பந் தத்திற்கு எமது அங்கீகாரம் கேட் கிறது. இப்போது ஆயுதங்களை ஒப்படைப்புப் பற்றி பேசுகிறது. போராட்டத்தை கைவிடச்சொல் லுகிறது.

நாம் உருப் படியான செயல் முறைத்திட்டங்களைக் கேட்க இந்தியா உறுதி மொழிகளைத் தருகிறது. நாம் விளக் கங் களைக்கேட்க இந்தியா கால அவகாசம் கேட் கிறது. நாம் கோரிக்கைகளை முன்வைக்க இந்தியா நிபந்தனைகளை போடு கிறது. இந்த சூழ்நிலை யில் நாம் போராட்டத்தை கைவிட முடி யாது. மாறாக போராட்டத்தை தீவிரப்படுத்தவேண்டும். தமிழீழ மக்களின் ஒன்றுபட்ட தேசிய எழுச்சியாக எமது போராட்டம் புரட்சிவடிவம் பெறவேண்டும்.

முல் லைத் தீவு, திருக் கோண மலை, மட் டக் களப் பு ஆகிய மாவட்டங்களிலும் விடுதலைப் புலிவீரர்கள் சாகும் வரை உண் ணாவிரதம் இருக் கிறார் கள். வடக்கு, கிழக்கு அடங்கிலு மள்ள தமிழ் பேசும் மக் கள் அனை வரும் புலிகள் முன்னெடுக்கும் இந்த சாத்வீகப்போராட்டத்தில் அணிதிரளவேண்டும் மக்களின் ஒன்று திரண்ட சக்தி மூலமே, மக்களின் ஒரு முகப்பட்ட எழுச்சி மூலமே நாம் எமது உரிமை களை வென் றெடுக் காலம். திலீபனின் ஈடுஇணையற் ற தியாகத்திற்கு நாம் செய்யும் பங்களிப்பு இதுதான்.

முடக்க காலத்திலும் நாயாற்றுக்கு படையெடுக்கும் தென்னிலங்கை மீனவர்கள்

– மு.வ. உ. திரு. துரைராசா ரவிகரன் –

செப்ரெம்பர் 02, 2021



தற்போது கொவிட் பெருந்தொற்றின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் நாடு முடக்கப்பட்டுள்ளது. இந் நிலையில் வெளிமாவட்டங்களிலிருந்து முல்லைத்தீவு - நாயாற்றுப் பகுதிக்கு வெளிமாவட்ட மீனவர்கள் வருகைதருவதாக நாயாற்றுப் பகுதி மீனவர்கள் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்களிடம் முறையிட்டுள்ளனர்.

கொவிட் தொற்றின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் இவ்வாறு வெளிமாவட்ட மீனவர்கள் முடக்க நிலையையும் மீறி நுழைவது, முல்லைத்தீவு மாவட்டத்தில் பாரிய அழிவைத் தோற்றுவிக்கும் என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

எனவே இவ்வாறு முடக்க காலத்தில் நாயாற்றுப்பகுதிக்கு வருகைதரும் வெளிமாவட்ட மீனவர்களைத் தடுப்பதற்கு பாதுகாப்புத் தரப்பும், உரிய அரசதிணைக்களங்களும் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இந்த முடக்ககாலத்திலும் நாயாற்றுப் பகுதிக்கு வெளி மாவட்ட மீனவர்கள் வருகைதருவதாக அங்குள்ள தமிழ் மீனவர்கள் என்னிடம் முறையிட்டுள்ளனர்.

இவ்வாறு வருகைதரும் வெளிமாவட்டமீனவர்களால் அப்பகுதிக்குரிய தமிழ் மீனவர்கள் மிகவும் அச்சமடைந்த சூழலில் வாழ்கின்றனர்.

குறிப்பாக கடந்த ஜூன் மாதம் 29ஆம் திகதி முதல தடவையாக செம்மலை கிழக்கு நாயாறுப்பகுதியில் உள்ள வெளிமாவட்ட மீனவர்கள் 25பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் முடிவிலே ஐவருக்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதி முடக்கப்பட்டிருந்தது.

அதேவேளை குறித்த செம்மலை கிழக்கு நாயாற்றுப் பகுதியில் ஆயிரக்கணக்கில் குடும்பங்களுடன் தங்கியிருந்த வெளிமாவட்ட மீனவர்கள் பெரும்பாலும் பதிவுகள் இன்றி இருந்ததாகவும், இதனால் அங்கு எத்தனைபேர் இருக்கின்றார்கள் என்பதிலும், பரிசோதனைகளை மேற்கொள்வதிலும் பலத்த இடர்பாடுகள் நிலவுவதாகவும் அப்போது தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் அங்கிருந்த வெளிமாவட்ட மீனவர்கள் பரிசோதனைச் செயற்பாடுகளுக்கு ஒத்துழைக்க மறுப்பதாகவும், தனிமைப்படுத்தலை மீறி வெளியிடங்களுக்குச் சென்றுவருவதாகவும் அதனால் தொற்று மேலும் அதிகரிக்கலாம் எனவும் அப்போது பல்வேறு தரப்பினராலும் குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந் நிலையில் அதன்பின்னர் அப்பகுதியில் தங்கியிருந்த வெளிமாவட்ட மீனவர்கள் வெளியில் செல்ல முடியாத வாறு தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டிருந்த வெளிமாவட்ட மீனவர்கள் தாம் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்ததுடன், தமது சொந்த இடங்களுக்குச் செல்லவேண்டும் எனவும் தெரிவித்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து அப்பகுதியில் அமுல்ப்படுத்தப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து, அவர்கள் ஆகஸ்ட் மாதத்தின் ஆரம்பப் பகுதியில் நாயாற்றிலிருந்து தமது சொந்த இடங்களுக்கு சென்றிருந்தனர்.

இவ்வாறு தமது சொந்த இடங்களுக்குச் சென்ற வெளி மாவட்ட மீனவர்கள் மீளவும் தற்போது நாயாற்றுப் பகுதிக்கு வருகைதருவதாக நாயாற்றுப்பகுதிக்குரிய தமிழ் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக கடந்த 30.08.2021அன்று 10படகுகளில் சிலாபம், கருக்குப்பனைப்பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் நாயாற்றுப்பகுதிக்கு வருகைதந்திருப்பதாகவும், தொடர்ச்சியாக வெளிமாவட்டங்களிலிருந்து படகுகளில் மீனவர்கள் நாயாற்றுப்பகுதிக்கு வருகைதருவதாகவும் நாயாற்றுப் பகுதித் தமிழ் மீனவர்கள் என்னிடம் முறையிட்டுள்ளனர். இது மிகவும் ஆபத்தான நடவடிக்கையாகும்.

அதேவேளை 31.08.2021அன்று மாத்திரம் முல்லைத்தீவு மாவட்டத்தில் நான்கு கொரோனத் தொற்றாளர்கள் மரணமடைந்துள்ளதுடன், இதுவரையில் 21கொவிட் மரணங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் பதிவாகியுள்ள நிலையினையும் அவதானிக்கமுடிகின்றது.

இந் நிலையில் இவ்வாறு வெளிமாவட்டங்களிலிருந்து நாயாற்றுக்கு மீனவர்கள் வருகைதருவது முல்லைத்தீவு மாவட்டத்திற்கே பாரிய ஆபத்தினைத் தோற்றுவிக்கும்.

இவ்வாறு கொவிட் பெருந்தொற்றின் தாக்கம் அதிகரித்துள்ள சூழலில், நாடு முடக்கப்பட்டுள்ளது. இப்படியாக நாடு முடக்கப்பட்டுள்ளபோது வெளிமாவட்டங்களிலிருந்து மீனவர்கள் நாயாற்றுப் பகுதிக்கு வருகைதருகின்றனர். இவர்களுக்குரிய அனுமதியை வழங்கியது யார்? இவர்களைக் கட்டுப்படுத்தவேண்டிய பாதுகாப்புத் தரப்பினரும், உரிய அரச திணைக்களங்களும் என்ன பார்த்துக்கொண்டிருக்கின்றனர்?

முல்லைத்தீவு மாவட்டம் என்பது கடந்த 2009ஆம் ஆண்டு பாரிய உயிரிழப்புக்களைச் சந்தித்த ஓர் மாவட்டமாகும். அத்தகையதான சூழலை கொவிட் தொற்றினூடாக மீண்டும் ஏற்படுத்துவதற்கு இந்த அரசு முயல்கின்றதா?

இந்த கொவிட்தொற்று பதற்றமான சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு பாதுகாப்புத் தரப்பினரும், வெளி மாவட்ட மீனவர்களைக் கட்டுப்படுத்தவேண்டிய கடற்



ஏன் எனில் முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மைய நாட்களாக கொவிட் பெருந்தொற்றின் தாக்கம் வேகமாக அதிகரித்துவருவதை அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 29.08.2021 அன்று வெளியான பரிசோதனை முடிவுகளின்படி 50கொவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். அதே போல் 30.08.2021 அன்று 60 கொவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

றொழில் நீரியல் வளத் திணைக்களம் உள்ளிட்ட திணைக்களங்களும் கரிசனையுடன் செயற்படவேண்டும். நாட்டினுடைய முடக்கத்தை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

வெளிமாவட்ட மீனவர்களின் வருகையால் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்படப்போகின்ற பாரிய அழிவைத் தடுப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் - என்றார்.

தமிழ் அரசியல்வாதிகள் விடுதலை அரசியலை மேற்கொள்வதாக தெரியவில்லை

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன

செப்ரெம்பர் 11, 2021

தமிழ் அரசியல்வாதிகள் எவரும் உண்மையான தமிழ்த்தேசிய விசுவாசத்தில் விடுதலை அரசியலை மேற்கொள்வதாக எமக்கு தெரியவில்லை என தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன் தெரிவித்துள்ளார்.

மேலும், முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கு ஐக்கியத்துடன் ஒருமித்து நீதி கோர முடியாதவர்களினால், காணாமல் போன 1 இலட்சத்து 46ஆயிரத்து 679 பேரை கண்டுபிடிக்க வழி வகுக்க முடியுமா என திரு. சிவகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன், கடந்த 12 வருடங்களாக எந்த விதமான திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலும் இல்லை. கோசங்களுக்கு அப்பால் இலட்சியமும் இல்லை, இலக்கும் இல்லை. அணிகளாக பிரிந்து பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை நட்டாற்றில் தவிக்க விட்டு நர்த்தனமாடுகிறார்கள் என அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

அதாவது, பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளை உளமார புரிந்து கொண்டு, அவர்கள் துயர் துடைக்க எந்த அரசியல்வாதியும் இதுவரை முனையவில்லை எனவும் சிவகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.



வடகிழக்கு தமிழர்களின் பொருளாதாரத்தினை அழிப்பதற்கான நடவடிக்கை நெல் பறிமுதல்

– த.தே. கூ. நாடாளுமன்ற உறுப்பினர் திரு. இரா. சாணக்கியன் –

செப்ரெம்பர் 01, 2021



நெல் பறிமுதல் என்னும் போர்வையில் அரசாங்கம் வடகிழக்கு தமிழர்களின் பொருளாதாரத்தினை அழிப் பதற்கான நடவடிக்கையை மேற்கொள்கின்றது என தமிழ்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, நேற்றைய தினம் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள விவசாய அமைப் புகளின் பிரதிநிதிகள் உட்பட மாவட்ட அரசாங்க அதிபர் கருணாகரனை சந்தித்து கலந்துரையாடினார்கள்.

அதனை தொடர்ந்து என்னோடு கலந்துரையாடினார்கள் இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் பரம்பரை பரம் பரையாக தாங்கள் விவசாயம் செய்துவரும் நிலையில் நெல்லையும் சேமித்து அதனை உரிய காலத்தில் பயன் படுத்திவரும் நிலையில் இன்று அந்த நெல்லை பறிமுதல் செய்யும் பணிகளை அதிகாரிகள் முன்னெடுத்து வருவதனால் விவசாயிகள் பாதிக்கப்படுவதாக விவ சாயிகள் தெரிவித்தனர்.

அறுவடை செய்யும் நெல்லை உடனடியாக உரிய விலைக்கு விற்பனை செய்யமுடியாத காரணத்தினாலும் அடுத்த விவசாய செய்கைக்கு தேவையான முளைநெல் லுக்காகவும் நெல் சேமித்துவைக்கப்படுவதாகவும் உரிய காலத்தில் நல்ல விலை கிடைக்கும்போது அவை விற் பனை செய்யவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் இன்று அவ்வாறு நெல்லை வைக்கமுடியாது என விவசாயிகளின் களஞ்சியங்களை முற்றுகையிடும் நுகர் வோர் அதிகார சபையினரால் அவை சீல் வைக்கப் படுவதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

காலம்காலமாக அறுவடைசெய்யும் நெல்லை களஞ்சியப் படுத்தி வைத்து விதைப்பு நடவடிக்கைகளுக்கு பின்னரே குறித்த நெல்லை விற்பனை செய்வதாகவும் தாங்கள் நெல்லை வியாபார நோக்கில் வாங்கி களஞ்சியப்படுத்த வில்லையெனவும் தங்களது உழைப்பினால் கிடைத்தவற் றையே சேமித்துவைத்திருந்ததாகவும் விவசாயிகள் இதன்போது தெரிவித்தனர்.

பாரியளவிலான நெல்லை பதுக்கிவைத்திருக்கும் முதலா ளிகளை விட்டுவிட்டு விவசாயிகள் சேமித்துவைத்துள்ள நெல்லை பறிமுதல் செய்யும் செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்துவருவதாக பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர், சில தினங்களுக்கு முன்பாக இந்த மாவட்டத்தில் நெல் தொடர்பில் விவசாயிகள் முகங்கொடுக்கவுள்ள பிரச்சினைகள் தொடர்பில் பேசியிருந்தேன்.நான் கூறிய விடயங்கள் இன்று நடைபெற்றுவருகின்றன. சில தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் நெல் வைத்திருக்கும் இடங்களை நுகர்வோர் அதிகார சபையினர் சீல் வைப்பது தொடர்பில் நான் கூறியிருந்தேன்.இன்று அது விவசாயி களை பாரியளவில் பாதிக்கும் வகையில் வந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவான மக்கள் விவசாயத்தினை நம்பி வாழும் மக்கள்.இந்த மாவட்டம் விவசாயத்தினையும் மீன்பிடியையும் மையமாக வைத்து மக்கள் வாழும் மாவட்டம்.இந்த மாவட்டத்தில் முயற் சியாளர்களாக இந்த விவசாயிகள் இருந்துவருகின்றனர்.

ஒரு மாவட்டத்தின் அபிவிருத்திக்குள் அந்த மாவட்டத்தின் பொருளாதாரமும் வரும்.இன்று இலங்கை அரசாங்கம் தனது நிர்வாகத்தினை சரியான முறையில் செய்யாமல் தனது வேலைத்திட்டங்களை பொறுப்பற்ற வகையில் செய்து இலங்கை பொருளாதாரத்தினை முற்றாக அழித்துக் கொண்டிருக்கும் காலப்பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கும் விவசாயிகளின் வாழ்வாதாரத் தினையும் அழிக்கும் ஒரு செயற்பாட்டினை ஆரம்பித்துள் ளனர்.

இதைப்பற்றியெல்லாம் கதைப்பதற்கு முன்வராமல் இந்த மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவர் டிக்டொக் செய்து கடற்கரையோரத்தில் குளித்துக் கொண்டிருக்கின்றார். இதுவொரு கவலையான விடயம்.

மட்டக்களப்பு மாவட்டத்தினைப்பொறுத்தவரையில் ஒரு ஏக்கரில் 50 தொடக்கம் 60மூடை வரையான நெல்லைப் பெற்றுக்கொள்ளும் நிலையுள்ளது.ஒரு விவசாயி 10 ஏக்கர் விவசாயம் செய்தால் 500மூடைகள் வரும். சில வேளைகளில் அண்ணன்,தம்பிகள் இணைந்து 100 எக்கர் செய்தால்1000மூடை வரும்.

அரசியல் விலையினை அரசாங்கம் குறைக்கவேண்டு மானால் இலட்சக்கணக்கான நெல் மூடைகளை பதுக் கிவைத்துள்ள மில் உரிமையாளர்கள் இருக்கின்றார்கள். அவர்களின் நெல்லை பறிமுதல்செய்யுங்கள். அதனை விடுத்து வருடக்கணக்காக படிப்படியாக முன்னேறிவந்த அப்பாவி விவசாயிகளின் நெல்லை பறிக்கீன்றீர்கள் என்றால் அது எந்த வகையில் நியாயம். இந்த செயற்பாடு வடகிழக்கில் வாழும் தமிழ் மக்களின் பொருளாதாரத் தினை அழிக்கும் ஒரு நடவடிக்கையாகவே நான் பார்க்கின்றேன்.

விவசாயிகள் சேமித்துவைத்துள்ள நெல்லை விற்பனை செய்து கோடிக்கணக்கில் சம்பாதிக்கப் போவ தில்லை.அவர்கள் பரம்பரைபரம்பரையாக செய்துவந்த தொழில். இந்த நாட்டில் அரசின் விலையினை தீர்மானிக் கும் செயற்பாடுகளை விவசாயிகள் செய்யவில்லை.

இந்த விவசாயிகள் தங்களது நெல்லை வைத்து வேறு தொழில்கள் செய்யலாம்.இந்த மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் மாவட்ட விவசாயிகளை கேவலப்படுத்தும் வகையில் மாவட்டத்திற்குள் விதைநெல்லை உற்பத்தி செய்யமுடியாதா எனக்கேட்டவர்கள் இன்று விதைநெல் லுக்காக வைத்திருந்த நெல்லைக்கூட பறித்துக்கொண்டு செல்கின்றார்கள் என்றால் இது எந்தவகையில் நியாயமானது.

இது தொடர்பில் நுகர்வோர் அதிகார சபையின் இலங்கைக் கான பணிப்பாளருடன் கதைத்தபோது மட்டக்களப்பு மாவட்டத்தில் அவ்வாறான பிரச்சினைகள் இருந்தால் மாவட்ட அரசாங்க அதிபருக்கு தெரியப்படுத்துங்கள் நாங்கள் பொதுவான முடிவொன்றை எடுத்து நடை முறைப்படுத்துவோம். இது தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபரையும் சந்தித்து இது தொடர்பில் கூறியிருக்கின் றோம்.

தெற்கில் இலட்சக்கணக்கான மூடைகளை வைத்திருக் கும் பல நெல் ஆலைகள் அரசியல்வாதிகளிடம் உள்ளன. அதனையெல்லாம் விட்டுவிட்டு இங்குள்ள விவசாயிகளின் சீல்வைத்து எடுத்து அந்த நெல்லை இவ்வாறான அரசியல்வாதிகளின் நெல் ஆலைகளுக்குத்தான் குறைந்த விலையில் வழங்கப்போகின்றீர்கள் என்ற சந்தேகம் கூட எங்களிடம் உள்ளது.

உடனடியாக இந்த திட்டத்தினை நிறுத்தவேண்டும். எதிர்காலத்தில் அட்டைகளைக்கொடுத்தே அரசி போன்ற பொருட்களை வாங்கவேண்டிய நிலையேற்படும்.எங்கள் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளின் நெல்லை பறித்து

காணாமலாக்கப்பட்ட மகனைத் தேடிய தந்தை உயிரிழப்பு

செப்ரெம்பர் 11, 2021

காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடி அலைந்த மற்றொரு தந்தையும் நேற்று உயிரிழந்தார்.

வவுனியா, மதியாமடு, புளியங்குளத்தைச் சேர்ந்த செபமாலை இராசதுரை என்பவரே இவ்வாறு உயிரிழந் தவராவார்.

2009ஆம் ஆண்டு இறுதிப் போர் முடிவடைந்தபோது - 2009. 05. 24 அன்று ஓமந்தை சோதனைச் சாவடியில் வைத்து இராணுவத்தினர் உயிரிழந்தவரின் மகனான இராசதுரை விஜி (வயது 22) என்பவரைக் கைது செய்தனர்.

இதன் பின்னர், அவர் குறித்த எந்தத் தகவலும் தெரிய வரவில்லை. தனது மகனைத் தேடியும் நீதி கோரியும் போராட்டங்கள் பலவற்றில் அவர் பங்கேற்று வந்திருந் தார்.

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் 1,668 நாட்களைக் கடந்து நடத்தப்படும் போராட்டத்திலும் அவர் பங்கேற்று வந்திருந்தார்.

இந்த நிலையில், தனது மகன் குறித்து எந்தத் தகவலும் தெரியாத நிலையிலேயே அவர் உயிரிழந்தார்.

சீன சார்ப்பு மொரகொடா இந்தியாவுக்கான தூதரக சிறிலங்கா நியமனம் ! இந்தியாவுக்கு நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் எச்சரிக்கை.

செப்ரெம்பர் 09, 2021

இந்தியாவுக்கான சிறிலங்கா தூதுவராக மிலிந்த மொரகொடாவின் நியமனத்தை ஏற்க வேண்டாம் என இந்தியாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், மிலிந்த மொரகொடாவின் (Credentials) தகுதிச்சான்றை ஏற்றுக் கொள்ள வேண்டாம் என்று இந்தியப் பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு அனுப்பிய சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் அக்கடித த்தில் தெரிவிக்கப்பட்டுள் ளதாவது,

அமைச்சுத் தகுதிநிலையுடன் தூதுவராக மொரகொடா நியமனம் செயப்பட்டிருப்பதனை சுட்டிக்காட்டியுள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், இவ்வாறு அமைச்சர் தகுநிலை வழங்குவதானது தூதுவர்களை நியமிக்கும் மரபில் இல்லை என்றும், இது பல கேள்விகளையும் சந்தேகங்களையும் எழுப்புவதாக உள்ளதெனவும் சுட்டிக்காட்டியது.

இலங்கைத்தீவின் இறுதிப்போரின் முடிவுக்கு பின்னராக 2009 மே - 2020 ஏப்ரல் காலப்பகுதியில் சிறிலங்காவின் நீதி மற்றும் சட்டச் சீர்திருத்த அமைச்சராக மொரகொடா இருந்தவர் என்பதோடு, அக்காலத்தில் உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களுக்கான முகாம் (Internally Displaced People (IDP) camps) என்ற பெயரில் பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் மனிதத் தன்மையற்ற முறையில் தள்ளப்பட்டிருந்தனர் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் சுட்டிகாட்டியுள்ளது.

குறிப்பாக புனர்வாழ்வு முகாம்களில் “புனர்வாழ்வு“ என்ற பெயரில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களும், ஆதரவாளர்களும், ஆதரவாளர் களாகக் கருதப்பட்டவர்களுமாக ஆயிரக்கணக் கானவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் எனத் தெரிவித் 12 ஆம் பக்கம் பார்க்க...



ஒன்ராரியோவில் தடுப்பூசிச் சான்றிதழ்

ஒன்ராரியோவில் COVID - 19 தடுப்பூசிச் சான்றிதழ் எதிர்வரும் 22 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வருமென அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளரங்கு உணவுச்சாலைகள', திரையரங்குகள், உடயற்பயிற்சிக் கூடங்கள், சூதாட்ட மையங்கள், இசை நிகழ்ச்சிகள், விளையாட்டப் போட்டிகள், ஒழுங்கமைக் கப்பட்ட பாரிய நிகழ்ச்சிகள் போன்றவற்றுக்குச் செல்வதற் கும் இந்தச்சான்றிதழ்கள் தேவைப்படும் எனவும் அறியப்படுகின்றது.



இரண்டு தடுப்பூசிகள் போட்டுக் கொண்டமைக்காக அவர்களுக்கு வழங்கப்பட்ட சான்றிதழ்களை அடையாள ஆவணம் ஒன்றையும் சமர்ப்பித்து ஆரம்பத்தில் மக்கள் இதை உறுதி செய்யவேண்டும். QR குறியீட்டைக் கொண்ட செல்பேசிச் செயலி ஒன்று ஒக்ரோபர் 22 ஆம் திகதி பயன்பாட்டுக்கு வரும்.

இந்தச் செயலி, ஏனைய மாகாணங்களினதும், சமஷ்டி அரசு உருவாக்கவுள்ள செயலியுடனும் இனைக்கும் வகையில் அமைந்திருக்கும்.

ஏறக்குறைய 1 மில்லியன் கனேடியர்கள் தபால் மூலம் வாக்களிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது

செப்ரெம்பர் 13, 2021



அடுத்த வாரம் நடைபெறவுள்ள கூட்டாட்சித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்கும் கனடியர்களின் எண்ணிக்கை, கனடாவின் ஆரம்ப மதிப்பீடுகளை விட மிகக் குறைவாகவே இருக்கும்.

COVID-19 தொற்றுநோய்க்கு மத்தியில் கனேடியர்கள் மாற்று வாக்களிக்கும் முறைகளைத் தேடியதால், கடந்த மாதம் மெயில்-இன் வாக்குச் சீட்டுகளில் பெரும் எழுச்சியை எதிர்கொள்வதாக அந்த அமைப்பு கூறியது.

எலக்ஷன்ஸ் கனடா நடத்திய ஆய்வுகள், இந்த ஆண்டு இரண்டு முதல் மூன்று மில்லியன் கனேடியர்கள் மெயில் மூலம் வாக்களிப்பார்கள், இது 2019 தேர்தலில் சுமார் 50,000 ஆக இருந்தது.

ஆனால், வாக்காளர்கள் சிறப்பு வாக்குச் சாவடி கருவிகளைக் கோர ஒரு நாள் மட்டுமே உள்ளது, அதை அஞ்சல் மூலம் சமர்ப்பிக்க முடியும், 985,000 கனடியர்கள் மட்டுமே அவ்வாறு செய்துள்ளனர். அந்த கோரிக்கைகளில் சுமார் 52,000 நாட்டிற்கு வெளியே வாழும் கனடியர்களால் செய்யப்பட்டது. 2019 ஆம் ஆண்டில், அத்தகைய வாக்காளர்கள் பெரும்பாலான மின்னஞ்சல் கோரிக்கைகளைக் கொண்டிருந்தனர்.

சிறப்பு வாக்குச் சாவடிகளில் வேட்பாளர்களின் பட்டியல் இல்லை - வாக்காளர்கள் அதற்கு பதிலாக அவர்கள் தேர்ந்தெடுத்த வேட்பாளரின் பெயரை வாக்குச்சீட்டில் எழுத வேண்டும்.

தேர்தல்கள் கனடா அலுவலகங்களிலும் சிறப்பு வாக்குச் சீட்டுகள் கைவிடப்படலாம். மருத்து வமனைகள் மற்றும் சிறைச்சாலைகளிலும் வாக் களிக்க அவை பயன்படுத்தப்படுகின்றன.

தேர்தல்கள் கனடா இந்த ஆண்டு கோரப்பட்ட பெரும் பான்மையான சிறப்பு வாக்குகள் அஞ்சல் மூலம் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கிறது.

அரசியல்வாதிகள், மருத்துவக் குழுக்கள் கனடா முழுவதும் மருத்துவமனைகளுக்கு வெளியே போராட்டங்களை கண்டனம் தெரிவிப்பு

செப்ரெம்பர் 13 , 2021



திங்களன்று கனடா முழுவதும் உள்ள மருத்துவமனைகளுக்கு வெளியே நடைபெற்ற தடுப்பூசி ஆணைகள் மற்றும் பிற கோவிட் -19 தொடர்பான பொது சுகாதார நடவடிக்கைகளுக்கு எதிரான தொடர் போராட்டங்கள் அரசியல்வாதிகள் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு அமைப்புகளால் ஏற்றுக்கொள்ள முடியாதவை மற்றும் ஊழியர்கள் மற்றும் நோயாளிகளுக்கு நியாயமற்றவை என்று கண்டனம் செய்யப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டங்களை கனடிய ஃப்ரண்ட்லைன் செவிலியர கள் ஏற்பாடு செய்தனர், இரண்டு ஒன்ராறியோ செவிலியர் களால் நிறுவப்பட்ட குழு, கோவிட் -19 பற்றிய சதி கோட்பாடு களை ஊக்குவித்தது மற்றும் தொற்றுநோய் "மோசடி" என்று நினைப்பவர்களுக்கு அமெரிக்காவில் பேரணியில் கலந்து கொண்டது.

அனைத்து 10 மாகாணங்களிலும் எதிர்பார்க்கப்படும் "அமைதியான விழிப்புணர்வு", கோவிட் -19 பரவுவதைத் தடுக்க பொது சுகாதார நடவடிக்கைகளை விமர்சிப்பதாகும் என்று குழு கூறுகிறது.

அமைப்பாளர்கள் அவர்கள் "கொடுங்கோன்மை நடவடிக்கை ககள் மற்றும் அரசாங்கத்தின் மீறல்" என்று அழைக்கப் படுவதை எதிர்க்கிறார்கள், தாதியர்களை தாங்கள் வெளியேற வோ அல்லது நோயாளிகளை கைவிடவோ அவர்கள் ஊக்குவிக்கவில்லை.

குழுவின் நிறுவனர்களில் ஒருவரான பதிவுசெய்யப்பட்ட நடைமுறை செவிலியர் Sarah Choujounian டொராண்டோ ஆர்ப்பாட்டத்தில் இருந்தார்.

"கனடா முழுவதும் எங்களுடன் ஆயிரக்கணக்கானவர்கள் எங்களிடம் உள்ளனர், ஆனால் வெளிப்படையாக, நாங்கள் ஒரு சிலர் மட்டுமே பேசுகிறோம், ஏனென்றால் நாங்கள் பணிநீக்கம் செய்யப்பட்டோம்" என்று முன்னர் உள்ளூர் நீண்ட கால பராமரிப்பு இல்லத்தில் பணிபுரிந்த Choujounian கூறினார்.

ஒன்ராறியோ பிரீமியர் டக் ஃபோர்டு, தடுப்பூசி-சான்று அமைப்புக்கான திட்டங்களை அறிவித்த பிறகு, இதேபோன்ற போராட்டங்களை அரசாங்கம் நடத்தியது, ஞாயிற்றுக்கிழமை சமீபத்திய சுற்றை ஒரு ட்வீட்டில் கண்டித்து, இதுபோன்ற நிகழ்வுகளை "சுயநல, கோழை மற்றும் பொறுப்பற்றது" என்று விவரித்தார்.

தமிழக செய்திகள்



கச்சத்தீவில் சீனா – இந்திய இறையாண்மைக்கு அச்சுறுத்தல்

முன்னாள் பேராசிரியர் ராமு மணிவண்ணன்

செப்ரெம்பர் 04, 2021

கச்சத்தீவில் சீனா மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் இந்தியாவின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் உள்ளதால் அதனை மீட்க வேண்டும் என சென்னை பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர் ராமு மணிவண்ணன் வலியுறுத்தியுள்ளார்.

சென்னை: கச்சத்தீவு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக சென்னை முதல் தனுஷ்கோடி வரை நேற்று முதல் (செப்டம்பர் 3) வரும் 27ஆம் தேதி வரை விழிப்புணர்வு நடைபயணம் செல்வதற்கு சென்னை பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர் ராமு மணிவண்ணன் திட்டமிட்டிருந்தார்.

சென்னை மெரினா கடற்கரையில் இன்று காலையில் தமிழ்நாட்டு பாதுகாப்பு, தமிழ்நாட்டு மீனவர்கள் நலன், இந்தியப் பாதுகாப்பு மற்றும் இறையாண்மை ஆகியவை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடைபயணத்தைத் தொடங்கினார் ராமு மணிவண்ணன்.

சிறிது நேரத்திலேயே காவல் துறை அனுமதி இல்லை எனத் தடுத்துவிட்டது.

இந்நிலையில் செய்தியாளரிடம் பேசிய அவர், "கச்சத்தீவு வரலாற்று ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் தமிழர் நிலம், தமிழ்நாட்டு நிலப்பரப்பிற்கும், இந்திய இறையாண்மைக்கும் உள்பட்ட பகுதியாகும்.

1974ஆம் ஆண்டு இந்திய அரசு, இலங்கை அரசுக்கு நாடாளுமன்றம் அங்கீகரிக்கப்படாத ஒப்பந்தம் மூலம் தாரைவார்த்துக் கொடுத்துள்ளது. அதன் பிறகு தமிழ்நாட்டு மீனவர்களுக்கு, பாதுகாப்பற்றச் சூழலும், வாழ்வாதார இன்னல்களும் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன.



தொடர்ந்து கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக சீனாவின் ஊடுருவல், இராணுவ கட்டுமானங்கள் காரணமாக, தமிழ் நாட்டு மக்களின் பாதுகாப்புக்கும், இந்திய இறையாண்மைக்கும் மிகப் பெரிய அச்சுறுத்தல் உருவாகியுள்ளது.

இந்தச் சூழ்நிலையில் இந்திய அரசு இலங்கை அரசிடமிருந்து கச்சத்தீவை மீட்க வேண்டும் என்பதோடு, தமிழர் நலம், தமிழ்நாட்டு மீனவர்களின் பாதுகாப்பு, இந்திய நாட்டின் இறையாண்மை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசு அதற்கான பரிந்துரைகளை மத்திய அரசிடம் வைக்க வேண்டும்.

கச்சத்தீவைத் திரும்பப் பெறுவதற்கான தீர்மானத்தை உடனடியாகச் சட்டப்பேரவையில் நிறைவேற்ற வேண்டும்.

மாநில அரசின் ஒப்புதல் இன்றியும், நாடாளுமன்றத்தின் ஒப்புதல் இன்றியும் அன்றைய இந்திய அரசு தன்னிச்சையாக இலங்கைக்கு கச்சத்தீவை தாரைவார்த்தது. அது அரசியல் சாசனத்திற்கு முரணானது.

இதனால் பெரிதும் வாழ்வாதார பாதிப்புகளையும், உயிரிழப்புகளையும் தமிழ்நாட்டு மீனவர்கள் சந்தித்துவருகின்றனர் என்பதால், அரசியல் சாசனத்திற்கு உள்பட்ட கச்சத்தீவை திரும்பப் பெற வேண்டும்.

இதற்காக, இந்த விழிப்புணர்வு நடைபயணத்தைத் திட்டமிட்டபடி சட்டரீதியாக அனுமதி பெற்று விரைவில் ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளோம்" எனத் தெரிவித்தார்.

ஈழத்தமிழர்களிற்கு இரட்டை குடியுரிமையை உறுதி செய்து திருச்சி முகாமில் உள்ளவர்களை விடுதலை செய்ய வேண்டும்

– தமிழ் பேரசு கட்சியின் தலைவர் திரு. வ. கௌதமன்–



செப்ரெம்பர் 02, 2021

ஈழத்தமிழர்களிற்கு இரட்டை குடியுரிமையை உறுதி செய்து திருச்சி முகாமில் உள்ளவர்களை விடுதலை செய்ய வேண்டும் என தமிழ்பேரசுகட்சியின் தலைவர் வ. கௌதமன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ்நாட்டின் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் கே.எஸ் மஸ்தானிற்கு வழங்கியுள்ள கடிதத்தில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
தமிழ்நாடு எங்களுடைய தந்தையர் நாடு என்று, நம்பி ஓடிவந்து, 1983இல் தொடங்கி, இன்றுவரை கிட்டத்தட்ட மூன்று தலைமுறைகளாய் நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கிற ஈழத் தமிழர்களுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 110 விதியின் கீழ்ப் பல நல்ல திட்டங்களையும் சலுகைகளையும் அறிவித்துள் ளதைத் தமிழ்ப் பேரரசு கட்சியின் சார்பாக வரவேற்கி றேன். இத்துறை நலன் சார்ந்த அமைச்சரான தங்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் திருச்சி சிறப்பு முகாமில் உள்ள ஈழத் தமிழர்களுக்கான விடுதலையை அறிவிக்காதது ஏமாற்றமளிக்கிறது.

ஏதிலியர் முகாம்களில் பழைய பழுதடைந்த வீடுகளில் வசித்துக் கொண்டிருக்கிற 7,469 வீடுகளைக் கட்டித் தருவதற்கு 231 கோடியே 54 லட்சம் ரூபாய் ஒதுக்கியும் அதிலும் 3,510 வீடுகளை முதற்கட்டமாகக் கட்டித் தருவதற்கு 108 கோடியே 81 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதும் வரவேற்கத்தக்கது.

நல்ல மதிப்பெண் எடுத்த 50 மாணவர்களுக்கு, பொறியியல் படிப்புக்கான இலவசக் கல்வியும், அவர்களுக்கான விடுதிக் கட்டணத்தையும் அரசே ஏற்குமென்றும், வேளாண் படிப்பிற்காக 5 மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அதற்கான செலவுகளையும் அரசே ஏற்றுப் படிக்க வைக்கும் எனவும் அறிவித்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. அதே சூழலில் ஈழத் தமிழர்களின் நீண்டநாள் கோரிக்கையான மருத்துவப் படிப்பிலும் தங்களுக்கு இடமளிக்க வேண்டும் என்பதைத் பரிசீலனை செய்து, மருத்துவ படிப்பிற்கான இடங்களையும், தாங்கள் முதல்வரின் பார்வைக்கு எடுத்து சென்று உடனடியாக ஒதுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

அமெரிக்கா, கனடா, ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட புலம் பெயர்ந்த நாடுகளிலெல்லாம் தஞ்சம் புகுந்த ஈழத்தமிழர்கள் கல்வி வேலைவாய்ப்பு உரிமைகளில் மட்டுமல்ல அரசியல், அரசு சார்ந்த உரிமைகளிலும் கோலோச்சிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களின் அண்டை நாடான இந்திய ஒன்றியத்தில் மட்டும் இன்னும் குடியுரிமையும் கிடைக்கவில்லை, கல்வி வேலைவாய்ப்பு உரிமைகளிலும் அவர்கள் பங்கெடுக்கவில்லை. அதற்கு பெரும் தடையாக இருப்பது அவர்களுக்கான குடி உரிமை பிரச்சினை மட்டும்தான். திமுக வின் தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக்குறுதியினை நிறைவேற்றும் விதமாக ஈழத்தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமையை விரைவில் உறுதி செய்ய வேண்டுமென்றும் தண்டனை காலத்தைத் தாண்டி தனது தாய் தந்தை பிள்ளைகள் மனைவியைப் பிரிந்து ஆற்ற முடியாத துயரத்தோடு திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டிருக்கும் ஈழத்தமிழர்களை வெகு விரைவாக விடுதலை செய்யப்பட வேண்டுமென்றும் உரிமையோடு கேட்டுக் கொள்கிறேன். இரட்டை குடியுரிமை சம்பந்தமாகவும் திருச்சி சிறப்பு முகாமில் உள்ள ஈழத் தமிழர்கள் விடுதலை தொடர்பாகவும் எம்.பி.,- அமைச்சர், துறைச் செயலர் உள்ளிட்டவர்களோடு ஒரு குழு அமைத்து விரைந்து ஆய்வு செய்யப்படும் என்று அறிவித் திருப்பதையும் இந்நேரத்தில் நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கிறோம்.

அதே நேரத்தில் இனியும் காலம் தாழ்த்தாமல் 2016இல் 6 நபர்களை விடுதலை செய்ததை முன்னுதாரணமாகக் கொண்டு, அவர்களை விரைவாக விடுதலை செய்ய, விரைந்து முடிவெடுக்க வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள ஏதிலியர் முகாமில் அவர்களின் குடும்பத்தோடு வசிக்க விருப்பப்படுகிறவர்களையும் முகாமை விட்டு வெளியே பதிந்து இருப்பவர்கள் அல்லது ஈழத்திற்கு போக நினைப்பவர்களையும் அவரவர்களின் விருப்பப்படி, இங்கு வாழவோ அல்லது ஈழத்திற்கு அனுப்பி வைக்கவோ ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். சிறப்பு முகாம்களில் உள்ள ஒரு சிலரை சிங்கள அதிகார வர்க்கம் தங்கள் நாட்டிற்கு அழைத்துச் சென்று மறைமுகமாக மீண்டும் ஒரு இனப்படுகொலையை அரங்கேற செய்வதற்கு காத்திருக்கிறது என்பதையும் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதேபோன்று, மிக முக்கியமாக திருச்சி சிறப்பு முகாம்களில் தண்டனைக் காலங்களைக் கழித்தவர்களின் தண்டனைக் காலத்தையும் கணக்கில் எடுத்து அரசு போர்க்கால அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும் என்றும் உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கை தமிழர்கள் வஞ்சிக்கப்படுகின்றனர்! குடியுரிமை சட்டத்திற்கு எதிராக தீர்மானம்

செப்ரெம்பர் 08, 2021

சென்னை- ஒன்றிய அரசு கொண்டுவந்த இந்திய குடியுரிமை சட்டத்துக்கு எதிராக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவை இன்று தீர்மானம் கொண்டு வந்தார்.

ஒன்றிய அரசு கடந்த 2019-ம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய இந்திய குடியுரிமை திருத்த சட்டத்திற்கு எதிராக தமிழ்நாடு சட்டப்பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மதம் மொழி இனம் கடந்து ஒற்றுமையுடன் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்த சட்டம் மத நல்லிணக்கத்திற்கும் உகந்ததாக இல்லை என்று கூறி தீர்மானம் கொண்டுவந்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசுகையில்...

இந்த சட்டத்திருத்தம் மதசார்பற்ற தன்மைக்கு எதிராக உள்ளது. அகதிகளாக வருபவர்களை சக மனிதர்களாக பார்க்க வேண்டும். இலங்கை தமிழர்கள் வஞ்சிக்கப்பட்டுள்ளனர். இலங்கை தமிழர்கள் அங்கு வாழ முடியாமல் இங்கு வந்து முகாம்களில் வாழ்கின்றனர். ஒன்றிய அரசு இலங்கைத் தமிழர்களைப் பற்றி கவலைப் படாமல் ஒன்றிய அரசு வஞ்சனையுடன் செயல்படுகின்றனர்.

மதம் மொழி இனம் கடந்து ஒற்றுமையுடன் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். நல்லிணக்கத்துக்கு எதிராக உள்ள இந்த சட்டம் தேவையா? இணக்கமாக வாழ்ந்து வரும் மக்களிடையே பாகுபாட்டை உண்டாக்க நினைக்கும் இந்த சட்டத்தை அரசு இரத்து செய்ய வலியுறுத்துகிறேன்.

இந்தத் தீர்மானத்தை எதிர்கொள்ள முடியாமல் தான் அதிமுக வெளிநடப்பு செய்தனர் என்று கூறினார்.

தொடர்ந்து பேசிய முதலமைச்சர்...

மக்களாட்சி தத்துவத்தின் படி ஒரு நாட்டின் நிர்வாகம் என்பது அந்நாட்டில் வாழும் அனைத்து மக்களின் கருத்தினையும், உணர்வுகளையும் உணர்ந்து அமைந்திருக்க வேண்டும். ஆனால், இந்திய குடியுரிமை திருத்தச் சட்டமானது அகதிகளாக இந்நாட்டிற்கு வருபவர்களை அவர்களின் நிலை கருதி அரவணைக்காமல் மத ரீதியாகவும், எந்த நாட்டிலிருந்து வருகிறார்கள் என்பதைப் பொருத்தும் பாகுபடுத்திப் பார்க்கும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது தெளிவாக தெரிகிறது என்றார்.

பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து இந்தியாவில் குடியேறிய முஸ்லிம் அல்லாத மற்ற மதத்தினருக்கு குடியுரிமை வழங்குவதற்கு வழிவகை செய்யும், குடியுரிமை சட்டத் திருத்த சட்டத்திற்கு இதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக, பல்வேறு மாநிலங்களில் எதிர்கட்சிகள் போராட்டம் நடத்தினர்.

அதனைத் தொடர்ந்து, கேரளா, பஞ்சாப், மேற்கு வங்கம் உள்ளிட்ட மாநிலங்களின் சட்டப்பேரவையில் இந்த சட்டத்திற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டன. இந்நிலையில் தமிழ்நாடு சட்டப்பேரவையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது.

குடியுரிமை திருத்த சட்டத்திற்கு எதிராக பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்படும் என திமுக தனது தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

செப்டம்பர் 11' இனி மகாகவி நாளாக கடைப்பிடிக்கப்படும் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவிப்பு

செப்ரெம்பர் 10, 2021



பாரதியார் நினைவு நாளான செப்டம்பர் 11 இனி மகாகவி நாளாகக் கடைபிடிக்கப்படும் என்று முதல்வர் மு.க ஸ்டாலின் அறிவித்திருக்கிறார்.

பாரதியாரின் நினைவுநாளையொட்டி 14 முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார் முதல்வர் மு.க ஸ்டாலின். பாரதியாரின் கவிதைகள், கட்டுரைகளை தொகுத்து 'மனதில் உறுதி வேண்டும்' என்ற புத்தகம் வழங்கப்படும். பள்ளிக் கல்லூரி மாணவர்களுக்கு கவிதைப் போட்டி நடத்தி 'பாரதி இளங்கவிஞர் விருது' வழங்கப்படும் போன்ற பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டுள்ளா

சீன சார்ப்பு மொரகொடா இந்தியாவுக்கான தூதரக சிறீலங்கா நியமனம் !

(09 ஆம் பக்க தொடர்ச்சி...) துள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், 1960களில் சீனக் கலாசாரப் புரட்சிக் காலத்தில் அங்கு அமைக்கபட்ட "புனர்கல்வி மையங்களைப் போன்றவையாக" இவைகள் அமைந்திருந்தன எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் கடும் சித்திரவதைகளுக்கும், ஏற்றுக் கொள்ளமுடியா பெருங் கொடுமைகளுக்கும் ஆளாக்கப்பட்டார்கள் என நம்பகமான சான்றுகளின் அடிப்படையில் சர்வதேச மனித உரிமையாளரும், ஐ.நாவின் வளஅறிஞராக முன்னராக இருந்தவருமாகிய ஜஸ்மின் சுக்கா அவர்களது International Truth and Justice Project அமைப்பு தெரிவித்திருந்ததனையும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

சிறீலங்காவின் தற்போதைய சிறையமைப்பிலும் மொரகொடாவுக்குப் பாரிய பங்கு இருக்கின்றது எனத் தெரிவித்தள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், இந்தச் சிறையமைப்பில்தான் தமிழ்அரசியல் கைதிகள், தமிழ்ப் போர்க்கைதிகள் நீண்ட நெடுநாட்களாக தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்கும் வலிந்து காணாமலாக்கும் கொடுமைக்கும் ஆளாக்கப்பட்டுள்ளனர்.

சிறீலங்கா சட்டமா அதிபர் திணைக்களமும் நீதித்துறை அமைச்சர் என்ற முறையில் மொரகொடாவின் மேற்பார்வைக்கு உட்பட்டதே என்றும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் (PTA) கீழ் நடந்த துன்புறுத்தல்கள், சிறைக் காவல், சித்திரவதை யாவற்றுக்கும் இவரே பொறுப்பாகிறார் என்றும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

சிறீலங்காவின் பயங்கரகவாத தடுப்புச்சட்டம் (PTA) மேன்மைகொண்ட சட்டநெறிகளில் படிந்த கறை என பன்னாட்டுச் சட்டவாளர் ஆணையம் (ஜசியே) கூறியுள்ளதனையும் சுட்டிக்காட்டியுள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், ஐ.நா மனித உரிமைச்சபையின் ஆணையாளர் மட்டுமல்லாமல் மனிதவுரிமைப் பேரவை, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியனவும் இச்சட்டத்தை சிறீலங்கா நீக்கம் செய்ய வேண்டுமெனக் கோரியிருந்தனர் என்பதனையும் தெரிவித்துள்ளது.

மொராகொடாவினால் நிறுவப்பட்டுள்ள Pathfinder Foundation எனும் அமைப்பு, அமைதிக்காகவும் மதங்களிடையே நல்லெண்ணத்துக்காகவும் பாடுபடுவதாகக் கூறிக் கொள்கிற போதும், சீனாவுடனான அதன் நெருக்கத்தை அந்நிறுவனம் வெளிப்படுத்தவதாக அமைந்துள்ளது என இந்தியாவுக்கு நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

சீனாவின் ஆசிர்வாதத்துடன் மொரோகொடாவின் பங்களிப்புடன் சிறீலங்காவில் ஆட்சியில் அமர்ந்துள்ள தற்போதைய அரசாங்கத்துக்கு அமைதியையோ மதங்களிடையே நல்லிணக்கத்தையே ஊக்கிவிப்பதில் நம்பிக்கை கிடையாது எனவும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத் தீவுகளில் இந்தியாவுக்கு வழங்குவதாக இருந்த காற்றலை மின்திட்டத்தில் இருந்து இந்தியாவை நீக்கம் செய்து அதனை சீனாவுக்கு வழங்கியிருந்ததோடு, வட பகுதியில் இந்தியா மேற்கொள்ளும் அபிவிருத்தி திட்டங்களை சீர்குலைந்து வருவது தொடர்பில் ஈழத்தமிழ் மக்கள் கவலை கொண்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், இந்தியாவை தொடர்ந்து சிறீலங்கா உதாசீனம் செய்து சீற்றங்கொள்ளவைப்பது தொடர்பிலும் கவலை கொண்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளது.

சீனாவுடன் நெருக்கமான உறவினைக் கொண்டுள்ள மொரகொடா தூதுவராக நியமனம் செய்திருப்பதானது, ஈழத் தமிழர்களின் அக்கறை கொண்டுள்ள இந்தியாவுக்கு தடைக்கல்லாக அமைவது மட்டுமல்லாது இலங்கைத் தீவில் இந்தியாவின் நலன்களுக்கு எதிராகவும் அமைந்து விடும் என்று நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் எச்சரித்துள்ளது.

மேலும் கீழ் வரும் சம்பவங்களையும் முன்னுதாரணங்களாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

2020ம் ஆண்டு கனடாவுக்கு தனது தூதராக சிறீலங்கா நியமனம் செய்திருந்த ஏர்மர்செல் விமானப்படை தளபதி சுமங்கல டயசை "கனடா" நிராகரித்தது.

2010ம் ஆண்டு ஈரான் நியமித்த தூதரை கனடா மறுதலித்தமையும் பாகிஸ்தான் அமர்த்திய தூதரை சவுதி அரோபியா மறுதலித்தமையும் இவ்வாறான முன்னுதாரணங்கள் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் பட்டியலிட்டுள்ளது.

தற்போது கனடாவினால் நிராகரிக்கப்பட்ட ஏர்மர்செல் விமானப்படை தளபதி சுமங்கல டயசை, இத்தாலிக்கான தனது தூதராக சிறீலங்கா நியமித்துள்ள நிலையில், இத்தாலி அதனை இதுவரை ஏற்றுக் கொள்ளவில்லை என சொல்லப்படுகின்றமை இங்கு குறிப்பிடதக்கது

உலக செய்திகள்

ஊடக அறிக்கை:

தமிழ் இளைஞர்களைச் சித்திரவதைக்கும் பாலியல் வல்லுறவுக்கும் உட்படுத்தும் சிறிலங்கா பாதுகாப்பு படையினர்

- யஸ்மின் சூக்கா



செப்ரெம்பர் 08, 2021 - ஜோகன்னஸ்பர்க்:
நினைவேந்தல் நிகழ்வுகள், அரசுக்கு எதிரான போராட்டங்களில் பங்கேற்றல் மற்றும் வெளிநாடுகளில் இருந்து நிதி பெறுதல் போன்றவற்றில் சித்திரவதை செய்து பாலியல் பலாத்காரம் செய்து வருவதாக ITJP ஜெனிவாவில் நிகழ்ந்த மனித உரிமைகள் பேரவையின் செப்ரெம்பர் அமர்வில் வெளியிட்ட புதிய அறிக்கையில் தெரிவித்துள்ளது.

"ஜெனீவாவில் இலங்கையைப் பற்றி விவாதிக்கும் போது, பாதுகாப்புப் படையினரின் தொடர்ச்சியான சித்திரவதைகள் சர்வதேச சமூகத்தின் நிகழ்ச்சிநிரலில் முதன்மை பெறல் வேண்டும் - காணாமல் போனவர்களின் குடும்பங்கள் துன்புறுத்தப்படுவதாகச் சொன்னால் மட்டும் போதாது" என்று ITJP இன் நிர்வாக இயக்குனர் யஸ்மின் சூக்கா கூறினார். "இலங்கையில் அமைதியான முறையில் தங்கள் குடிமை உரிமைகளைப் பயன்படுத்தும் சிலர் கொடூரமாக தடுத்து வைக்கப்படுகின்றனர், சூடான உலோகக் கம்பிகள் மற்றும் சிகரெட்டுகளால் சூடுவைக்கப்படுகின்றனர் பெற்றோலில் நனைத்த பொலிதீன் பைகளுக்குள் முகத்தை திணித்து மூச்சுத் திணறடிக்க செய்யபடுகின்றனர். பின்னர் பாதுகாப்புப் படையினரால் கூட்டு பாலியல் பலாத்காரம் செய்யப்படுகின்றனர்".

ITJPஇன் சர்வதேச விசாரணையாளர்கள், தற்போது இங்கிலாந்தில் உள்ள 15 தமிழர்களிடமிருந்து விரிவான அறிக்கைகளை பதிவு செய்தனர். அவர்கள் 2019 நவம்பரில் கோட்டாபய ராஜபக்சே ஆட்சிக்கு வந்த பின்னர் கடத்தப்பட்டு சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்குள் ளானவர்கள். இதில் அதிகமானவர்கள் இந்த ஆண்டு நிகழ்ந்த பொத்துவில் முதல் பொலிகண்டி வரை (P2P)போராட்டத்தில் பங்கேற்றவர்கள். மேலும் சிலர் இறந் தவர்களுக்கான நினைவேந்தல் நிகழ் வுகள் மற்றும் காணாமல் போனவர் களுக்கான போராட்டங்களில் பங்கேற் றவர்கள். இன்னும் பலர் தமிழ் அரசியல் கட்சிகளுக்கு தன்னார் வலர்களாக பணியாற்றியவர்கள்.

வெள்ளை வான்களில் தாங்கள் கடத் தப்பட்டதாக அறுவர் விவரித்தனர். இம்முறையே கைது மற்றும் கடத்தலுக்கு படையினர் பல தசாப்தமாக பயன்படுத்தி வந்துள்ளனர். அவர்கள் சித்திரவதைக்கென விசேடமாக தயாரான அறைகளில் முட்டு காலில் பெரும்பாலும் உள் ளாடைகளுடன் நிற்க வைக்கப்பட்டு கொடூரமான சித்திர வ தை க ளு க் கு மீண்டும் மீண்டும் உள்ளாக்கப்பட்டு விசார ணைக்கு உட்படுத்தப்பட்டுள் ள ன ர் . ஏறக்குறைய அனைவரும் இனவெறி வார்த்தைகளால் துஷ்பிரயோகப்படுத்தப்பட்ட அதே வேளையில் பாலியல் வல்லுறவுக்கும் ஆளாக்கப்பட்டுள் ளனர். பாதிக்கப்பட்டவர்கள் காயங்களுடன் இரத்தம் சொட்ட சொட்ட தரையில் இருட்டில் நிர்வாணமாக வைக்கப்பட்டனர். அவர்களின் உள்ளாடைகள் மட்டுமே இரத்தத்தையும் விந்தணுக்களையும் துடைக்க எஞ்சின. பயங்கரவாத தடுப்பு புலனாய்வு பிரிவினால் கைது செய்யப்பட்ட இரண்டு நபர்கள் தாம் மலவாசல் மூலமான பாலியல் வன்புணர்வுக்கு உள் ளானதாகவும் உலோகக் கம்பியை மலவாசலில் புகுத்தி கொடுமைப்படுத்தபட்டதாகவும் வாக்குமூலம் அளித்தனர்.

எல்லா சந்தர்ப்பங்களிலும் குடும்பங்கள் தங்கள் பிள்ளைகளின் விடுதலைக்காக லஞ்சம் கொடுத்தன. விசாரணை செய்யப்பட் டவர்கள் பல வாரங்களாக மலைகளை கடந்து நடந்து வாகனங்களின் பிற்புறம் மறைந்திருந்து ஆங்கில கால் வாயினை ரப்பர் வள்ளங்களில் கடந்து அசாதாரணமான பயணங்களை மேற்கொண்டு இங்கிலாந்து வந்துள்ளனர். இங்கிலாந்தில் வந்த பிறகு கூட வெளிப்படையான உடற்காயங் களுடனும் மாறாத மன வடுக்களுடனும் இருந்த ஆறு பேர் தற்கொலைக்கு முயன்றுள்ளனர்.

சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறைகளைச் செய்தவர் களில் மோசமான பயங்கரவாத தடுப்பு பொலிஸ் பிரிவுடன் சீருடையில் இருந்த இலங்கை இராணுவ அதிகாரிகளும் அடங்குவர். பாதிக்கப்பட்டவர்களில் இருவர் கடந்த ஆண்டு எந்த காவல் நிலையத்தில் தாங்கள் சித்திரவதை செய்யப்பட்டு பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டனர் என்பதை நினைவில் வைத்திருக்கின்றனர். அதில் ஒருவர் துஷ்பிரயோகம் செய்யப் பட்ட நிலையத்தின் பின்புறத்தில் உள்ள கட்டிடங்களின் வரை படத்தை கூட வரைந்து காட்டினார்.

"இது முறையான தண்டனையின்மையின் அசிங்கமான முகம். 1987-90இல் ஜேவிபி மீதான வன்முறை மற்றும் கடந்த நான்கு தசாப்தங்களாக தமிழர்களுக்கு எதிரான அரச வன் முறைக்கு பொறுப் பானவர்கள் மீது அடுத்தடுத்த அரசாங்கங்கள் வழக்குத் தொடரத் தவறியதால் அந்த குற்றவாளிகள் பொறுப்பைத் தவிர்த்து காவல்துறை மற்றும் இராணுவத்தின் உயர் பதவிகளில் இலகுவாய் அமர முடிந்தது. இப்போது இந்த கட்டமைப்பு பயிற்சி மற்றும் திறன் மேம் பாட்டின் மூலம் தன்னை சீர்திருத்துவதாக எதிர்பார்ப்பது நகைப்புக்குரியது" என்று திருமதி சூகா கருத்து தெரிவித்தார். "கொடூர குற்றங்களுக்கு இலங்கை அரசு தண்டனை வழங்கவில்லை. குற்றவியல் பொறுப்புக்கூறல் இல்லாமல் கொடூர குற்றங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்க எந்த ஊக்கமும் கிடைக்க போவது இல்லை. சர்வதேச சமூகம் அனைத்து சர்வதேச பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு திட்டங்களை ரத்து செய்ய வேண்டும் காரணம் அவை பயனளிக்கப் போவ தில்லை.

யுத்தம் முடிவடைந்த பின்னர் பல வருடங்களாக மாறியது பாதிக்கப்பட்டவர்களின் தன்மை மட்டுமே. அவர்களில் சிலர் முன்னாள் புலிகள் அல்லது முக்கிய மனித உரிமை ஆர்வலர்கள் என்று ITJP கூறுகிறது. ஜே.வி.பி காலத்தில் பாதிக்கப்பட்டவர்களைப் போலவே கடைக்காரர்கள், மின் தொழிலாளர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் மாணவர்களே இவர்களின் பார்வைக்கு ஆளாகின்றனர்

"இரண்டு கைகளை இழந்தாலும் நம்பிக்கையை இழக்கவில்லை"

சீன வீரர் ஜெங் தாவோ

செப்ரெம்பர் 04, 2021

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் பாரா விளையாட்டு



வீரர்களுக்கான பாராலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் சீன நாட்டைச் சேர்ந்த பாரா நீச்சல் வீரர் ஜெங் தாவோ (Zheng Tao) நான்கு தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார். அதோடு இணை யத்தளத்தின் ஊடாக உலக மக்களின் இதயங்களையும் கவர்ந்துள்ளார் அவர். 'Armless Swimmer' என பலராலும் செல்லமாக அழைக்கப்படுபவர் ஜெங் தாவோ.

கடந்த 1990, டிசம்பர் 25-ஆம் தேதி சீனாவின் யுன்னான் மாகாணத்தில் உள்ள குன்மிங் நகரத்தில் பிறந்தவர். தற்போது அவருக்கு 30 வயது.

எல்லோரையும் போல நல்ல உடல் வளத்துடன் பிறந்துள ளார் ஜெங். இருந்தாலும் குழந்தைப் பருவத்தில் அவர் மீது மின்சாரம் பாய்ந்த காரணத்தினால் தனது இரண்டு கைகளையும் இழந்துள்ளார்.

கைகளை இழந்திருந்தாலும் நம்பிக்கையை துளி அளவு கூட இழக்கவில்லை அவர். அதன் பலனாக 13 வயதில் கைகளே இல்லாமல் நீச்சல் பழகியுள்ளார். அடுத்த ஆறு ஆண்டுகளில் சீனாவுக்காக உலக சாம்பியன்ஷிப் போட் டியில் கலந்து கொண்டு அசத்தினார். அதுதான் சர்வதேச அளவில் அவர் பங்கேற்று விளையாடிய முதல் போட்டி. அதன் பிறகு அவர் நீச்சல் குளத்தில் இறங்கினாலே பதக்கத்துடன் திரும்புவார் என்ற அளவுக்கு சாதனை களை படைக்கத் துவங்கினார். அதோடு அவரது தனிப் பட்ட சாதனைகள் அனைத்தும் உலக சாதனைகளாக பொறிக்கப்பட்டன.

2012 முதல் பாராலிம்பிக்!

லண்டனில் 2012-இல் நடைபெற்ற பாராலிம்பிக்கில் களம் கண்டார் ஜெங். அது தான் அவரது முதல் பாராலிம்பிக். இதுவரை ஆறு தங்கம், ஒரு வெள்ளி, இரண்டு வெண் கலம் என மொத்தம் ஒன்பது பாராலிம்பிக் பதக்கங்களை வென்றுள்ளார். அதில் டோக்கியோ பாராலிம்பிக்கில் மட்டுமே அவர் நான்கு தங்கங்களை தனி ஒருவராக சீனாவுக்காக வென்றுள்ளார்.

50 மீட்டர் பேக் ஸ்ட்ரோக், 50 மீட்டர் பட்டர்பிளை, 50 மீட் டர் ஃப்ரீஸ்டைல் மற்றும் கலப்பு 50 மீட்டர் ஃப்ரீஸ்டைல் ரிலே போட்டிகளில் டோக்கியோவில் தங்கங்களை வென்றுள்ளார் அவர். இதில் பட்டர்பிளை மற்றும் பேக் ஸ்ட்ரோக் போட்டிகளில் உலக சாதனை படைத்து தங்கம் வென்றுள்ளார்.

பாரா நீச்சல் வீரர்களுக்கான உலக சாம்பியன்ஷிப்பில் ஆறு பதக்கங்களை வென்றுள்ளார். அதில் நான்கு பதக்கங்கள் தங்கமாகும்.

மனங்களை கவர்ந்த மெசேஜ்!

டோக்கியோ நகரில் உலக சாதனை படைத்த பிறகு அங்கிருந்த கேமராவை பார்த்து தனது இரண்டு வயது மகளுக்கு ஒரே மெசேஜ் சொல்லி இருந்தார் ஜெங். அது தான் தற்போது உலக அளவில் பலரது மனங்களைக் கவர்ந்துள்ளது. அதோடு அவர் வென்றுள்ள நான்கு தங்கப் பதக்கங்களும் நெட்டிசன்களின் கவனத்தை பெற் றுள்ளன.

"பார் மகளே பார். என்னால் கைகள் இல்லாமல் வேகமாக நீந்த முடிகிறது" என்பது தான் அந்த மெசேஜ்.

டோக்கியோ பாராலிம்பிக்கில் கலந்து கொள்ளும் நோக் கில் நாள் ஒன்றுக்கு பத்து கிலோ மீட்டர் தூரம் நீச்சல் பயிற்சி மேற்கொண்டாராம் ஜெங். அவரது உழைப்புக்கு ஏற்ற கூலியாக தங்கங்களை அறுவடை செய்துள்ளார்.

எனது அலுவலகம் ஜெனீவா தீர்மானத்தின் பொறுப்புக்கூறல் தொடர்பான அம்சங்களை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது

– ஐநா மனித உரிமை ஆணையாளர் மிச்செலே பச்செலெட் –



செப்ரெம்பர் 13, 2021

எனது அலுவலகம் ஜெனீவா தீர்மானத்தின் பொறுப்புக்கூறல் தொடர்பான அம்சங்களை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது, ஒரு ஆரம்பகட்ட குழுவிற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் தொடர்கின்றன ஐநாவிடம் ஏற்கனவே உள்ள 120,000 தனிப்பட்ட பொருட்களை அடிப்படையாக கொணடு நாங்கள் ஏற்கனவே தகவல் மற்றும் ஆதார களஞ்சியத்தை உருவாக்கியுள்ளோம் இந்த வருடம் எங்களால் முடிந்தளவிற்கு தகவல்களை சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவோம். என ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் மிச்செலே பச்செலெட் தெரிவித்துள்ளார்.

ஐநா மனித உரிமை பேரவையில் இன்று இலங்கை குறித்து வெளியிட்ட வாய்மூல அறிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

இலங்கை குறித்து மனித உரிமைகள் பேரவை மற்றும் எனது இறுதி அறிக்கையில் அடையாளம் காணப்பட்ட போக்குகள் மற்றும் விவகாரங்கள் தொடர்பில் புதிய தகவல்களை வெளியிடுவது குறித்து நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த மேலதிக தகவல்களை வழங்குவதற்காக இலங்கை அரசாங்கம் உள்ளீடுகளை அனுப்பியதை நான் ஏற்றுக்கொள்கின்றேன், மேலும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்காக அரசாங்கம் ஐக்கிய நாடுகளுடன் இணைந்து செயற்பட தயாராகவுள்ளது இதற்கான நிறுவன சீர்திருத்தங்களை மேற்கொள்ள தயாராகவுள்ளது என இலங்கை ஜனாதிபதி ஜ்ன் மாதத் தெரிவித்துள்ளதையும் நான் கவனத்தில் எடுத்துள்ளேன், இது தொடர்பில் நாங்கள் வெளியிட்ட அறிக்கைகள் மற்றும் பல்வேறு மனித உரிமை பொறிமுறைகளால் செய்யப்பட்ட பரிந்துரைகளை பின்பற்றி வலுவான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை எதிர்பார்த்திருக்கின்றேன்.

இந்த விடயத்தில் எனது அலுவலகம் இணைந்து செயற்பட தயாராகவுள்ளது.

2021 இல் வெளியிடப்பட்ட தேசிய விசாரணை ஆணையகத்தின் அறிக்கைகளை விரைவாகவும் பகிரங்கமாகவும் வெளியிடுவதை நான் ஊக்குவிக்கின்றேன். இந்த வருட இறுதிக்குள் அந்த ஆணையகம் தனது ஆணையை நிறைவேற்றும் என என்னால் அறியமுடிந்துள்ளது.இதன் காரணமாக அதன் பணிகள் மற்றும் பரிந்துரைகளை அறிந்துகொள்ளமுடியும். இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள சமூக பொருளாதார மற்றும் நிர்வாக சவால்கள் இராணுவமயப்படுத்தல் மற்றும் பதிலளிக்கும் கடப்பாடின்மை ஆகியவற்றினால் அடிப்படை உரிமைகள், குடிமைகளிற்கான இடம், ஜனநாயக ஸ்தாபனங்கள் சமூக ஒருங்கிணைப்பு மற்றும் பேண்தகு அபிவிருத்தி ஆகியவை எதிர்கொண்டுள்ள மோசமான பாதிப்பை குறிக்கின்றது.

இலங்கையில் பொருளாதார மந்தநிலை தீவிரமடைந்து வரும் நிலையில் உணவுப் பாதுகாப்பு விலைக்கட்டுப்பாடு ஆகியவற்றினை உறுதி செய்யும் நோக்கத்துடன் ஆகஸ்ட் 30 ம் திகதி புதிய அவசரகால நிலை அறிவிக்கப்பட்டது.

இந்த அவசரகாலவிதிமுறைகள் மிகவும் பரந்துபட்டவை மற்றும் சிவில் நிர்வாக செயற்பாடுகளில் இராணுவத்தின் செல்வாக்கை அதிகரிக்ககூடியவை. சிவில் சமூக தலைவர்களுடனான ஜனாதிபதியின் சமீபத்தைய சந்திப்பை நான் ஆர்வத்துடன் அவதானித்துள்ளேன், இலங்கையின் குடிமை வெளியை விஸ்தரிப்பதற்கு பரந்துபட்ட கலந்துரையாடல்களை முன்னெடுக்குமாறு நான் ஊக்குவிக்கின்றேன்.

மனித உரிமை செயற்பாட்டாளர்கள் பத்திரிகையாளர்கள் காணாமல்போனவர்களின் உறவுகள் எதிர்கொண்டுள் கண்காணிப்பு அச்சுறுத்தல் நீதித்துறை கண்காணிப்பு ஆகியன கவலை தரும் விதத்தில் தொடர்வதுடன் மாணவர்கள் கல்விமான்கள் மருத்துவர்கள் அரசாங்கத்தின் கொள்கையை விமர்சிக்கும் மதத் தலைவர்கள் என பரந்துபட்ட சமூகத்தை நோக்கி விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

பல அமைதியான போராட்டங்கள் மற்றும் நினைவுகூறல்கள் அதிகளவு பலத்தை பயன்படுத்தி கட்டுப்படுத்தப்பட்டுள்ளன, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு தனிமைப்படுத்தல் முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

சிவில் சமூகத்தினர் தொடர்பான புதிய விதிமுறைகள் உருவாக்கப்படுகின்றன,அவை அடிப்படை சுதந்திரங்கள் மீதான கட்டுப்பாடுகளை மேலும் இறுக்கமானதாக்கப்போகின்றன, என்ற அச்சம் பரவலாக காணப்படுகின்றது. அந்த வரைவு சாத்தியமான அளவு பொது விவாதத்தை அனுமதிக்கவேண்டும் என நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

பல அதிகளவு கவனத்தை ஈர்த்த மனித உரிமை சம்பவங்கள் குறித்த நீதித்துறை நடவடிக்கைகளில் உருவாகியுள்ள நிலைமை குறித்து நான் கவலை அடைந்துள்ளேன்.

2008 மற்றும் 2009ம் ஆண்டுகளில்11 பேர் கடத்தப்பட்டமை தொடர்பில் முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரணாகொடவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை கைவிடுவது என்ற சட்டமா அதிபரின் தீர்மானமும் ஒன்றாகும்.

பல விசாரணைகளிற்கு அப்பாலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களும் மதத்தலைவர்களும் உண்மை மற்றும் நீதி உடனடியாக நிலைநாட்டப்படவேண்டும் என வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

அந்த தாக்குதல் நிகழ்வதை சாத்தியமாக்கிய முழுமையான சூழ்நிலையை பகிரங்கப்படுத்தவேண்டும் என அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

2011 இல் அரசியல்வாதியொருவரை கொலை செய்தமைக்காக தண்டனை பெற்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவிற்கு ஜனாதிபதியின் சமீபத்தைய பொதுமன்னிப்பு சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதி செயல்முறையின் மீது நம்பிக்கையை சிதைக்கும் அபாயம் உள்ளது.

பொலிஸ்காவலில் மேலும் இறப்புகள் மற்றும் போதைப்பொருள் குழுக்கள் மீதான பொலிஸ் என்கவுன்டர்கள் மற்றும் சட்ட அமுலாக்கல் அதிகாரிகளின் தொடர்ச்சியான சித்திரவதைகள் மோசமான நடவடிக்கைகள் குறித்து நான் கவலையடைகின்றேன்.

மார்ச் மாதத்தில் புதிய தீவிரமயமாக்கல் விதிமுறைகள் அறிவிக்கப்பட்டன இது தனிநபர்களை இரண்டு ஆண்டுகள் வரை தன்னிச்சையாக நிர்வாக காவலில் வைக்க அனுமதிக்கின்றது,இந்த உத்தரவை எதிர்த்து அடிப்படை உரிமைகள் தாக்கல் செய்யப்பட்டவேளை நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவை பிறப்பித்தது என்பதை நான் அவதானித்துள்ளேன்.

ஜ்ன் மாதத்தில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றவாளிகளாக கருதப்பட்டு தண்டணை முடிவடையும் தறுவாயிலிருந்த 18 கைதிகளிற்கு மன்னிப்பு வழங்கப்பட்டது. இழப்பீடுகளிற்கான தேசிய கொள்கை ஆகஸ்ட்மாதத்தில் அங்கீகரிக்கப்பட்டது, மேலும் இழப்பீடு கொடுப்பனவு திட்டங்கள் நல்லிணக்க திட்டங்கள் தொடர்கின்றன.

ஐநாவிடம் ஏற்கனவே உள்ள 120,000 தனிப்பட்ட பொருட்களை அடிப்படையாக கொணடு நாங்கள் ஏற்கனவே தகவல் மற்றும் ஆதார களஞ்சியத்தை உருவாக்கியுள்ளோம் இந்த வருடம் எங்களால் முடிந்தளவிற்கு தகவல்களை சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவோம்.

காணாமல்போனோர் குறித்த அலுவகம் தொடர்ந்து செயற்பட்டுவருகின்றது, கிளிநொச்சியில் ஆறாவது பிராந்திய அலுவலகம் திறக்கப்பட்டது ஆனால் அது பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் நம்பிக்கையை ஊக்குவிக்கவேண்டும்.பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்திய பாலின உணர்திறன் அகுமுறைகளின் முக்கியத்துவத்தை நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன்.

மேலும் பரிகார திட்டங்கள்பரந்துபட்ட நீதிமற்றும் உண்மை நடவடிக்கைகளுடன் இணைந்ததாகயிருக்கவேண்டும்.

இந்த பின்னணியில் எனது அலுவலகம் 46-1 தீர்மானத்தின் பொறுப்புக்கூறல் தொடர்பான அம்சங்களை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது, ஒரு ஆரம்பகட்ட குழுவிற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் தொடர்கின்றன.

ஐநாவிடம் ஏற்கனவே உள்ள 120,000 தனிப்பட்ட பொருட்களை அடிப்படையாக கொணடு நாங்கள் ஏற்கனவே தகவல் மற்றும் ஆதார களஞ்சியத்தை உருவாக்கியுள்ளோம் இந்த வருடம் எங்களால் முடிந்தளவிற்கு தகவல்களை சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவோம்.

வரவுசெலவுகள் தொடர்பாக தேவையான ஆதரவை அளிப்பதை உறுப்பு நாடுகள் உறுதி செய்யவேண்டும் நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private 1st Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

MORTGAGE IN ANY SITUATION

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

MORTGAGE CLINIC

www.mortgageclinicccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ(Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843



எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto ON M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto ON M2J 5B4

Manaja

manajaskitchen.ca

MANAJA'S KITCHEN

A Fusion of Indian & Sri Lankan Cuisine



மணம், சுவை கொண்ட அறுசுவை உணவுகளை
நிபுணத்துவத்துடன் தயார் செய்து விநியோகிப்பவர்கள்.

Take Out
Birthy Parties
Picnic / Get Together
or Office Parties
Backyard Dosa Party



அனைத்து தாயக சைவ
மற்றும் அசைவ உணவுகளுக்கு
உங்கள் விருப்பப்படி சிறந்த முறையில் தயாரித்த
அறுசுவை உணவுகளை செய்து குறிப்பிட்ட
நேரத்தில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
அழையுங்கள்

FREE Delivery for orders over $150 in GTA

75 Williamson Dr., W, Ajax ON L1T 4Y4

905.427.8263



BOROS CANADIAN
PAPER CONVERTING INC.



Alan Maniam
Director

647 299 2450

235 Nugget Ave., Unit 12, Scarborough ON M1S 3L3

boroscanadianpaper@gmail.com

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி...) வேண்டாம். நானும் எனது தலைவரும் சேர்ந்து எடுத்த முடிவுதான் இது. மறைந்த போராளிகள் 650 பேருடன் சேர்ந்து 651 ஆவது ஆளாகி



மேலிருந்து பார்ப்பேன். எங்கள் உயிர் உங்களுடன் ஒட்டிவிடும். என்னைப் பற்றிக் கவலைப் படாதீர்கள். எனது அவயவங்கள் செயலிழப்பதனால், இனிமேல் மனிதனாக வாழ முடியாது என்பது எனக்குத் தெரியும்.

எமது வீரர்கள் கொள்கைக்காக உயிரைக் கொடுப்பவர்கள். கொள்கைக்காக என்னைத் தொடர்ந்து வருவார்கள். அவர்களையும் தடுக்காதீர்கள். நாங்கள் ஐந்து ஆறு பேர் சாவதால் எவ்வித தீங்கும் வந்துவிடாது. முக்கள் புரட்சி வெடிக்கட்டும். நான் மூன்று தடவைகள் பேசியுள்ளேன். மூன்று தடவை களும் ஒரே கருத்தைத்தான் பேசியுள்ளேன்".

நேற்று இரவு முழுவதும் அவர் ஆழ்ந்து தூங்கினார். இன்று காலை ஒன்பது மணி ஆகியும் தூக்கத்தைவிட்டு அவர் எழுந்திருக்க வில்லை.

இளைஞர்களான "நவீனன்கள்" இருவரும், அவரின் இடப் பக்கத்திலும் வலப்பக்கத் திலுமாக அமர்ந்திருந்து விசிறியால் ஆள்மாறி ஆள் வீசிக்கொண்டிருக்கிறார்கள்.

நேற்று இரவு வழக்கத்தைவிட நாடித்துடிப்பு 110 ஆக அதிகரித்திருந்ததில் இருந்து அவர் உடல் நிலை பாதிப்படையத் தொடங்கிவிட்டது என்பதை நான் அறிந்து கொண்டேன். சூரியனின் கதிர்கள் பூமியெங்கும் வியாபித் திருந்தன.

அவரருகே சென்று அவரின் நாடித்துடிப்பை மெதுவாகப் பரிசோதித்துக் கொண்டு சுவாசத்தையும் எண்ணுகின்றேன்.

நாடித்துடிப்பு – 120

சுவாசத்துடிப்பு – 24

ஆம். சாதாரண நிலையிலிருந்து மிகவும் அசாதாரணமாகக் கூடிக்கொண்டிருக்கிறது நாடித்துடிப்பு. (நாடித்துடிப்பு – சாதாரணம் 72-80)(சுவாசம் – 16-22)

நான்கு நாட்களாக நீராகாரம் உட்கொள்ளாத காரணத்தினால் உடலில் திரவநிலை குறையத் தொடங்கிவிட்டதால், இருதயத்திற்கும் நுரையீரல்களுக்கும் செல்லும் இரத்தத்தின் அளவும், கனமும் குறையத் தொடங்கி விட்டது. அதனால்தான் இருதயமும், சுவாசமும் பலமாக வேலை செய்யத் தொடங்கியிருந்தன. இதைவிட இரண்டு நாட்களாகச் சிறுநீர் கழியவில்லை.

தொடர்ந்து இன்னும் இரண்டு நாட்களுக்குச் சிறுநீர் கழியாமல் இருக்குமானால் சிறுநீரகத் தளர்ச்சி (Kidney Failiure) ஏற்படலாம். "கிட்னி பெயிலியர்" ஏற்படுமானால் அது இருதயத்தில் தாக்கத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தி இறப்பை உண்டுபண்ணலாம்.

எனக்கு தெரிந்தவரை வழக்கமான நடைபெறக்கூடி இந்த நிகழ்சிகளினால் திலீபனின் உயிர் பறிக்கப்பட்டக்கூடிய வாய்பு எந்த நேரத்திலும் ஏற்படலாம்.

நல்லூர்க் கந்தனிடம் முறையிட்ட மக்கள் நாச்சிமார் கோயில் அம்மனிடமும் மனமார வேண்டுவதைக் காதல் கேட்கிறேன்.

"தாயே உன் பிள்ளையொன்று உண வில்லாமல் செத்துக் கொண்டிருக்கிறது. அதை நீதானம்மா கடைசிவரையும் காப்பாற்ற வேண்டும்..." நீண்ட, நாட்களுக்குப் பின், திலீபனுக்காக மக்களுடன் சேர்ந்து நானும் இப்படி வேண்டிக் கொள்கின்றேன். வெகு நேரத்தின்பின் கண் விழித்த திலீபன், எழும்புவதற்குச் சத்தியின்றி படுக்கையிலேயே கிடக்கிறார்.

மைதானம் சனக்கூட்டத்தினால் நிரம்பிக் கொண்டிருக்கிறது. திலீனைப் பார்ப்பதற்குகாக அணியணியாக மேடைக்கு முன் புறம் மக்கள் வந்து போய்க்கொண்டிருந்தனர்... ஒருவர் முகத்திலாவது மகிழ்ச்சி இல்லை. சில தாய் மார்கள் திலீபன் படுத்திருக்கும் பரிதாப நிலை கண்டு பொறுக்க முடியாடல் விம்மி விம்மி அழுகின்றனர்.

கிறிஸ்தவ பாதிரியாரும், பல வருடங்காய் சிறையில் அடைபட்டுத் தாங்க முடியாத சித்திரவதைகளை அனுபவித்தவரும், 1983 ஜூலையில் வெளிக்கடைச் சிறைச்சாலையில் 52 தமிழ்க் கைதினள் சிங்கள இனவாதப் பூதங்கால் கொல்லப்பட்ட சமயம் எதிர்பாராத விதமாகத் தம்பியவரும் ஆகிய, வண, பிதா சிங்கராயர் அவர்கள், திலீபனை பார்ப்பதற் காக மேடைக்கு வந்தார்.

ஒரு துறவியாக இருந்தாலும் திலீபனின் கோலத்தைக் கண்டதும் அவர் அழுதே விட்டார். திலீபனின் கரங்களைப் பற்றி அவர் அன்போடு வருடினார். உடல் சோர்வுற்று இருந்தபோதிலும் திலீபன் அவருடன் மனம் திறந்து வெகுநேரம்வரை பேசிக்கொண் டிருந்தார்.

திலீபனின் பிடிவாதத்தையும், திடமனத் தையும் நன்கு அறிந்தவர் துறவி அப்படிருத் தும் திலீபன் படுத்திருக்கம் கோலத்தைக் கண்டு பொறுக்க முடியாடல் விசும்பினார். கொஞ்சமாவது தண்ணீர் அருந்திவிட்டு உண்ணாநோன்பைத் தொடருமாறு அவர் வற்புறுத்தினார்.

பாதர் சிங்கராயர் மீது திலீபனுக்கு எப்போதும் மிகுந்த மதிப்பும் பாசமும் உண்டு. அப் படியிருந்தும் தனக்கே உரிய புன்முறுவலைக் காட்டி, அதையே அவரின் வேண்டு கோளுக்குப் பதிலாக்கிவிட்டு மௌன மாகினார் திலீபன்.

பாதர் சிங்கராயர் சென்ற பின் ஈரோஸ் இயக்கத் தலைவர் பாலகுமாரும், இயக்க யாழ். மாவட்ட அரசியல் பிரிவுப் பொறுப் பாளரும் "பரா" வும் வந்தனர்.

எந்த இயக்கத்தவர்களானாலும் அவர்களுடன் சகஜமாகப் பேசுவதில் திலீபனுக்கு நிகர் திலீபன்தான்.

அவர்களும் திலீபனைத் தண்ணீராவது அருந்தும் படிவற்புறுத்தினார். அனால், அவர்களுக்குக் கிடைத்த பதிலும் மௌனம் தான்.

செல்வி குகசாந்தினி, திருமதி நல்லையா ஆகிய இரு பெண்கள் திலீபனுக்கு ஆதரவாக, சாகும் வரையிலான உண்ணா நோன்பினை ஆரம்பித்தனர். ஆத்துடன், வல்வெட்டித் துறையயில் 05 தமிழர்கள் ஏற்கெனவே உண்ணாநோன்பை ஆரம்பித்துவிட்டதாக பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்தது.

இன்று மாலை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள், திலீபனை வந்து சந்தித்தார். இந்திய அரசிடமிருந்தோ, இந்தியத் தூதுவரிடமிருந்தோ இதுவரை எந்தப் பதிலும் கிடைக்கவில்லை என்று. அவர் திலீபனிடம் கூறினார். அவருடன் திரு யோகியும் வந்திருந்தார்.

திலீபனின் பொறுப்புக்களையெல்லாம் தன்



தலைமீது சுமந்து கொண்டிருப்பவர் யோகி. சில நாட்களுக்குமுன் இந்திய அமைதி காக்கும் படையின் பாரபட்சமான நடவடிக் கைகளையும் சிங்கள இராணுவத்துக்கு ஆதரவான நடவடிக்கைகளையும் கண்டித்து, ஒரு நாள் அடையாள மறியற் போராட்டம், சகல இராணுவ முகாம்களிலும் பொது மக்களால் நடத்தப்பட்டபோது, யாழ் கோட்டையின் முன்பாக அன்றைய மறியல் போராட்டத்தை முடித்துவைத்து திலீபன் பேசிய பேச்சு என்நினைவுக்கு வருகின்றது.

" இந்த யாழ்ப்பாணக் கோட்டையியே சில நூற்றாண்டுகளுக்கு முன் தமிழனின் கொடி பறந்த அந்த கொடியை போர்த்துக்கேயர் பறித்தெடுத்தனர்... போர்த்துக்கேயரிடம் இருந்து ஒல்லாந்தரும் ஒல்லாந்தரிடமிருந்தும் ஆங்கிலேயரும் கைப்பற்றிக் கொண்டனர். ஆங்கிலேயரிடமிருத்து சிங்களவர் கடைசியில் கைப்பற்றினர். அதாவது புலிக்கொடி பறக்கும் காலம் வெகுதூரத்தில் இல்லை. அந்த தமிழ்க் கொடியைப் பறக்க விடுவதற்காக, ஒவ் வொருவரும் எமது உயிரை அர்பணித்துக் கொண்டு வருகிறோம். அதில் என் பங்கு எப்போது...? என்பதுதான் எமது கேள்வியாக இருக்க வேண்டும் தவிர, பதவிகள் எமக்கு பெரியதல்ல.. பதவிகளைத்தேடிச் செய்பவர்கள் புலிகள் அல்ல. அதற்கு வேறு ஆட்கள் இங்கே இருக்கிறார்கள்!"

அந்த தீர்க்கரிசனப் உயிர்வடிவம் கொடுப் பதற்குற்காகத்தான், திலீபன் சாகும்வரை உண்ணாநோன்புப் போராட்டத்தை ஆரம் பித்தான்.

திலீபன் ஒரு சிறப்பான சதுரங்க வீரன். தனது பள்ளிப் பருவத்தில் பல பரிசுகளை இதற்காக அவர் பெற்றுள்ளார். ஆரசியலில் எந்த காயை எப்படி, எந்த நேரத்தில், நகர்த்த வேண்டும் என்பது அவருக்கு நிச்சயமாகத் தெரிந்துருக்க வேண்டும்.

அகிம்சைப் போராட்டத்துக்கு மதிப்பளிக்கும் இந்திய நாட்டின் சமாதான படையினரின் கண்களைத் திறப்பதற்கு, இந்த சாகும் வரையிலான உண்ணாநோன்புப் போராட் டத்தை ஆரம்பித்தது முற்றிலும் பொருத்த மானதே. இந்தியா உள்ப்பூர்வமாக அண் ணல் காந்தியைப் பின்பற்றும் நாடாக இருந்தால், நிச்சயம் பதில் சொல்லியே ஆகவேண்டும். இல்லையேல் உலகத்தின் பார்வையில் இருந்து அது தப்பவே முடியாது.

அன்றிரவு திலீபனுக்குத் தெரியாமல் அவரது இரத்த அழுத்தத்தைப் பதிவு செய்து விட்டேன். அது 100/65

நாடித்துடிப்பு – 114சுவாசம் – 25

இந்தியா என்ன செய்யப்போகிறது? ஏனக்கு ஒன்றும் புரியவில்லை. "வெள்ளையனே வெளியேறு" என்று ஆங்கிலேயரை வெளி யேற்றுவதற்காகப் போராட்டம் நடாத்திய காந்தி இன்று இருந்திருந்தால் என்ன செய்திருப்பார்? ஆனால் திலீபனோ இந்தியப் படையை வெளியேறு என்று கூடக் கேட்க வில்லையே! இவர்கள் திலீபனின் சாதாரண கோரிக்கைகளுக்கு ஏன் மௌனம் சாதிக் கிறார்கள்? எனக்கு எதுவும் புரியவில்லை.

ஈகைச்சுடர் லெப்.கேணல் திலீபனின் ஐந்தாம் நாள்

"ஈகையர் லெப்.கேணல் திலீபன் பாரதப் படைகளுக்கெதிராக நீராகாரம் கூட அருந்தாது பன்னிரண்டு நாட்கள் உண்ணாநோன் பிருந்து வீரச்சாவடைந்தவர். அவருக்கு உதவியாளராக இருந்த முன்னாள் போராளி கவிஞர் மு.வே.யோ. வாஞ்சிநாதன் அவர்கள் அந்தப் பன்னிரண்டு நாட்களையும் தொகுத்து "திலீபனுடன் பன்னிரண்டு நாட்கள்" என்ற புத்தகமாக வெளியிட்டிருந்தார். அத்தொடரை, திலீபனின் உண்ணாநோன்புக் காலமாகிய இக்காலத்தில் தருகிறோம்."

வழக்கம்போல் காலையில் சகல பத்திரிகை களையும் வாசிக்கும் திலீபனால் இன்று எதுவுமே செய்யமுடியவில்லை. யாழ்ப்பாண குடா நாடு முழுவதும் இருந்து தனியார் பஸ் வண்டிகளில் மக்கள் வெள்ளம் போல் வந்து நிறையதொடங்கிவிட்டனர்.

இன்னும் திலீபன் போர்வைக்குள்ளேயே புதைந்து கிடக்கிறான். அவனால் எழும்ப முடியவில்லை. உடல் பயங்கரமாக வியர்த்து கொட்டியது. மின்விசிறி அவர் பக்கத்தில்



வேகமாக சுழன்று கொண்டிருந்தது. ஒரு மனித இயந்திரம் தன் முழுச்சக்தியையும் பிரயோகித்து இயங்கிக் கொண்டிருக்கிறது. அன்றைய பத்திரிகைகளில் முக்கிய செய்திகளாக வழக்கம்போல் திலீபனைபற்றிய செய்திகளே இடம்பெற்றிருந்தன. திலீபன் சோர்ந்து வருகிறார். மெழுவர்த்தியைப் போல அவர் சிறிது சிறிதாக உருகிக்கொண்டிருக்கிறார். அவரது சிறுநீரகம் பாதிப்படையத் தொடங்கிவிட்டது. இருதயம் பலமாக இயங்கிக்கொண்டிருக்கிறது. தொடர்ந்து அவர் நீராகாரம் எடுக்காவிட்டால் நிலமை மேலும் மோசமாகி எந்த வேளையிலும் எதுவும் நடக்கலாம்.

பத்திரிகைகளைப் படிக்கும்போது என் கைகளுடன் உள்ளமும் சேர்ந்து நடுங்கியது. திலீபன் என்ற ஒரு இனிய காவியத்தின் கடைசி அத்தியாயத்திற்கு வந்து விட்டதுபோல் பிரமை எனக்கு ஏற்பட்டது. அதற்கிடையில் ஓர் செய்தி காற்றோடு காற்றாக கலந்து வந்து என் செவியில் விழுகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவைச்சேர்ந்த திலகர் அவர்கள் இந்தியாவுக்குச் சென்றிருக்கிறார் என்பதுதான் அது. புலிகளின் சார்பாக திம்பு பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டவர்களில் திலகரும் ஒருவர். அப்படியானால் பிரதமர் ராஜீவ்காந்தியிடமிருந்து ஏதாவது அழைப்பு வந்திருக்குமா என்ற நப்பாசை என் மனதில். விசாரித்தபோது எந்த விதமான அழைப்பும் வரவில்லை வழமைபோல சாதாரண விசயங்களை கவனிப்பதற்காகத்தான் திலகர் போய் இருக்கிறார் என்று கேள்விப்பட்டதும் ஏன் கேட்டோம் என்றிருந்தது.

திலகரின் இந்தியப்பயணம் பற்றி கேட்டு அறியாமல் விட்டிருந்தால் ஓரளவு மன நிம்மதியாவது கிடைத்திருக்கும். ஆனால் விதியே உன் கரங்கள் இத்தனை கொடியதா ? பம்பரம்போல் கள்ளமில்லாத வெள்ளை யுள்ளத்துடன் கலகலவென்று சிரித்துக் கொண்டு எம்மையே சுற்றி வரும் திலீபனை சித்திரவதை பள்ளத்தில் தள்ளுவதுதான் உன் கோர முடிவா ? அப்படி அவர் என்ன குற்றம் செய்து விட்டார். தமிழினத்திற்காக தனது தந்தை சகோதரங்களை பிரிந்து வந்தாரே அது குற்றமா? தமிழினத்திற்காக தன் வைத்திய படிப்பையே உதறி எறிந்தாரே அது குற்றமா? தமிழினத்திற்காக இரவும் பகலும் மாடாக உழைத்தாரே அது குற்றமா? தமிழினத்திற்காக தனது வயிற்றிலுள்ள குடலின் 14 அங்கலத்தை வெட்டி எறிந்தாரே அது குற்றமா? தமிழினத்திற்காக இன்று தன்னையே சிறிது சிறிதாக அழித்துக் கொண்டு உண்ணாநோன்பு இருக்கிறாரே அது குற்றமா? எது குற்றம்?

வானத்தைப் பார்த்து வாய்விட்டு கத்த வேண்டும் போல் இருக்கிறது. கதறித்தான் என்ன பயன் ஏற்படப்போகிறது. இலட்சக் கணக்கான மக்கள் கடந்த ஐந்து நாட்களாக கண்ணீர் சிந்திக்கொண்டு இருக்கிறார்களே. யாருக்காக? திலீபனுக்காக,தமிழினத்திற்காக அப்படி இருக்க அந்த கண்ணீரை ஏக்கத்தை இன்னும் யாருமே புரிந்து கொள்ளவில்லையே. ஏன்? உலகில் மனித தர்மமே செத்துவிட்டதா? காந்தி இறந்ததற்காக கண்ணீர் வடிக்கும் உலகம் காந்தியத்தின் காலடியில் சிறிது சிறிதாக எரிந்து கொண்டிருக்கும் திலீபன் என்னும் மெழுகுவர்த்தியைக் காணவில்லையா? அல்லது கண்டும் காணாது போய்விட்டதா? எத்தனையோ முறை திலீபன் சாவின் விளிம்பில் இருந்து தப்பியிருக்கிறார்.

1983ம் ஆண்டு அவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் நவாலிப்பிரதேச பொறுப்பாளராக இருந்தபோது ஓர் நாள் நவாலி கத்தோலிக்க தேவாலயத்தின் அருகே நின்று பொது மக்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது திடீரென்று இரண்டு ஜீப் வண்டிகள் அவரருகே முன்னும் பின்னுமாக வந்து நின்றன. சிறீலங்கா இராணுவத்தினர் கண்சிமிட்டும் நேரத்தில் சுற்றி வளைத்து விட்டதை உணர்நத திலீபன் எதுவித பதற்றமும் அடையாமல் நிதானமாக நின்றார். அவரின் மதி நுட்பம் மிகவும் தீவிரமாக வேலைசெய்யத்தொடங்கியது. யாரோ ஒரு தமிழ்த்துரோகியால் வழங்கப்பட்ட தகவலை வைத்துக்கொண்டு திலீபனை அடையாளம் கண்டு கொண்ட சிங்கள இராணுவத்தினர் ஜீப் வண்டியில் ஏறுமாறு உத்தரவிட்டனர். அவரது கையிலே ஆயுதம் அடங்கிய சிறிய சூட்கேஸ் ஒன்று இருந்தது. அவரருகே இரு இராணுவத்தினர் சேர்ந்து வந்தனர்.

ஜீப் வண்டியில் ஏறும்போது எதிர்பாராத விதமாக பக்கத்தில் வந்து கொண்டிருந்தவர்கள் மீது பாய்ந்து சூட்கேஸினால் மின்னல் வேகத்தில் தாக்கிவிட்டு பக்கத்திலிருந்த பனந்தோப்பை நோக்கி ஓடத் தொடங்கினார் திலீபன். எதிர்பாராத தாக்குதலினால் நிலைகுலைந்து விட்ட இராணுவத்தினர் என்ன செய்வது என்று திகைத்து நின்றனர். மறுகணம் அவர்களின் கைகளிலிருந்த துப்பாக்கிகள் பயங்கரமாக திலீபனை நோக்கி உறுமத் தொடங்கின.

அவரது கை ஒன்றை துளைத்துக்கொண்டு சென்றது துப்பாக்கிகுண்டு. இரத்தம் சிந்த மனதை திடமாக்கிக்கொண்டு வெகுநேரமாக ஓடிக்கொண்டிருந்தார் திலீபன். இராணுவதத்தினரால் அவரை பிடிக்கமுடியவில்லை. இந்த ஏமாற்றத்தினால் பல பொதுமக்களை அவர்கள் அன்று கண்மூடித்தனமாக சுட்டுத் தள்ளிவிட்டுச் சென்றனர். யாழ் பெரியாஸ்பத்திரியில் 1986ம் ஆண்டின் இறுதியில் வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற இராணுவத்தினருடனான மோதலின்போது திலீபன் தன் துப்பாக்கியால் பலரை சுட்டுத் தள்ளினார்.

ஆனால் எதிரிகளின் ஓர் குண்டு அவர் குடலை சிதைத்துவிட்டிருந்தது. யாழ் பெரியாஸ்பத்திரியில் அவர் அனுமதிக்கப்பட்டபோது அவர் குடலின் 14 அங்குலத்துண்டை சத்திரசிகிச்சை நிபுணர்கள் அகற்றிவிட்டனர். சுமார் மூன்று மாதங்களாக வைத்தியசாலையிலேயே வாழ்ந்தபின்தான் அவர் பூரண குணமடைந்தார். இப்படி எத்தனையோ துன்பங்களை தமிழினத்திற்காக அனுபவித்தவர்தான் திலீபன். ஆயுதப் போராட்டத்தினால் மாத்திரமன்றி அகிம்சையாலும் தன்னால் சாதனை புரிய முடியும் என திலீபனுக்கு அசையாத நம்பிக்கை இருந்தது.

அதனால் இந்தப்போராட்டத்தில் அவர் தானாகவே முன்வந்த எத்தனையோ பேர் தடுத்தும் கேளாமல் குதித்தார். இன்று மாலை இந்திய சமாதானப்படையினரின் யாழ் கோட்டை இராணுவ முகாம் பொறுப்பாளர் கேணல் தரார் அவர்கள் திலீபனை பார்க்க வந்தார். அவர் சனங்களிடையே நடந்து வரும்போது பலதாய்மார்கள் அவர் மீது கல்களை வீச தயாராகிக்கொண்டிருந்தனர். அவர்களை தடுத்து அவருக்கு தகுந்த பாது காப்புக்கொடுத்து மேடைக்கு அருகே அழைத்துச் சென்றனர் விடுதலைப்புலிகள். திலீபனின் உடல் மோசமாகி வருவதால் பொதுமக்களும், இயக்க உறுப்பினர்களும் மிகுந்த உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருக்கிறார்கள் என்பதை யோகியும் வேறு சிலரும் எடுத்துக் கூறினர்.

தான் சென்று தகுந்த நடவடிக்கை எடுப்பதாக அவர் கூறிவிட்டுச் சென்றார்.அவர் மூலமாவது திலீபனின் உயிர் காப்பாற்றப்படாதா என்று எங்களில் சிலர் நிம்மதியாக இருந்தோம். களைப்புடன் திலீபன் உறங்கிவிட்டார்.

ஈகைச்சுடர் லெப்.கேணல் திலீபனின் ஆறாம் நாள்

அதிகாலையில் ஒரு அதிசயம் நிகழ்ந்திருந்தது. ஆம் ! இன்று திலீபன் காலை 5 மணிக்கே படுக்கையை விட்டு எழுந்து விட்டார். அதுமட்டுமன்றி தான் சிறுநீர் கழிக்கப்போவதாகக் கூறினார். அவர் இருக்கும் நிலையிலே படுக்கையை விட்டு எழுந்து செல்வது என்பது முடியாமல் இருந்ததால் படுக்கையிலேயே சலப்போத் தலைக் கொடுத்தேன்.



ஆனால் சலம் போகவில்லை. வயிற்றை வலிப்பதாகவும் சலம் போவதற்குக் கஷ்டமாக இருப்பதாகவும் கூறினார். சுகிச்சையின் மூலம் கொஞ்சமாவது சிறுநீர் கழிக்க முடியும். ஆனால் அதைப்பற்றி பேசினாலே எரிந்து விழுவார் என்பதற்காக ஒன்றும் பேசாமல் இருந்தேன்.

நூலைந்து நாட்களாகப் படுக்கையிலே கிடப்பதாலும் நீர் அருந்தாமல் இருப்பதாலும் அவரது சலப்பை பாதிக்கப்பட்டிருக்கலாம்... இதை அவரிடம் எப்படிக் கூறுவது? தூன் மறைவிடம் சென்று சிறுநீர் கழிக்கப் போவதாகக் கூறினார். ஆவரின் விருப்பத்துடன், அவரைக் கைத்தாங்கலாகப் பிடித்து இறக்கி மேடையின் பின்பக்கம் கொண்டு சென்றோம் பதினைந்து நிமிடங்களாக வயிற்றைப் பொத்திக் கொண்டு மிகுந்த கஷ்டப்பட்டார்.

அதன்பின் ஆச்சரியப்படுமளவிற்கு சுமார் அரை லீற்றர் அளவு சலம் போனது. ஏனக்கு அது மிகுந்த அதிர்ச்சியைத் தந்தது. ஐந்து நாட்களாக எதுவும் குடிக்காமல் இருக்கும் ஒருவரால் இது எப்படிச் சாத்தியமாக முடியும்? அன்று வைத்திய நிபுணர் சிவகுமார் அவர்களிடம் இதுபற்றி மறக்காமல் கேட்டேன். ஆவர் எந்தப் பதிலுமே கூறாமல் மௌனமாக சிரிப்பை உதிர்த்துவிட்டுச் சென்றார்.

அன்று மத்தியானம் எமது இதயத்துக்கு மகிழ்ச்சியைத்தரும் ஓர் இனிய செய்தி எனது செவிகளில் விழுந்தபோது இனந்தெரியாத நிம்மதி என்னிடம் குடிவந்தது. கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரகத்திலிருந்து ஓர் முக்கிய நபர் இன்று வரப்போகிறாராம். ஆவர் நமது அரசியல் பிரிவினருடன் திலீபனைப் பற்றிப் பேசப் போகிறாராம்...

என் பிரார்த்தனை வீண்போகாது திலீபனின் உயிர் காப்பாற்றப்படப் போகின்றது...

இந்தியத் தூதுவரகத்திலிருந்து யாராவது வருவதானால் நிச்சயமாக பிரதமர் ராஜீவ் காந்தியின் ஆலோசனைப்படிதான் வருவார்கள்... அப்படி வருபவர்கள் உணர்ச்சி பொங்கும் தாய்க்குலத்தின் கண்ணீரைக் கண்டாவது இரங்கமாட்டார்களா?

திலீபனை எண்ணித் துடிதுடித்துக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் மனங்களிற்கு அந்த ஆறுதல் செய்தி நிச்சயம் சாந்தியளிக்கத்தான் செய்யும்.

திலீபா ! நீ ஆரம்பித்து வைத்த அகிம்சைப் போர் எங்களது ஆயுதங்களுக்கு மதிப்பில்லாமல் செய்யப்போகிறது. போலும்? உன் அகிம்சைப் போரினால் அப்படி ஒரு நிலை எமக்கு வருமானால் அதை நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்போம்.

ஏமக்கு மட்டும் ஆயுதங்களை தூக்கி கண்டபடி சுட்டுத்தள்ள வேண்டும் என்று ஆசையா என்ன? முப்பது வருடங்களாக எமது மூத்த அரசியல் தலைவர்கள் தந்தை “செல்வா” தலைமையில் முயன்று முடியாத நிலையில்... எமது தமிழ்ச் சமுதாயத்தை அழிவிலிருந்து காப்பாற்றத்தானே வேறு வழியின்றி ஆயுதம் ஏந்தினோம்.

நாம் அகிம்சைக்கு எதிரானவர்கள் அல்லர். ஆனால் நம் எதிரி அகிம்சையைப் பற்றி ஒன்றுமே தெரியாதவன்... அவனுக்கு அது புரியாதது. அவனுக்கு தெரிந்ததெல்லாம் கத்தியும், துப்பாக்கியும்தான்...

ஒருவன் கத்தியையும், துப்பாக்கியையும் தன் பலமாக எண்ணும்போது அவனெதிரில் நிற்பவனால் என்ன செய்ய முடியும். நீண்டகசப்பான அனுபவங்கள் தான் எமது கரங்களில் துப்பாக்கிகளைத் தந்தன. 1948இல் இலங்கை சுதந்திரம் அடைந்ததாகக் கூறப்படும் நாளில் இருந்து, சிங்கள இனவாதிகளால் தமிழர்கள் காலத்துக்குக் காலம் அழிக்கப்பட்டு வருகின்ற கொடுமை எப்பொழுது முடியும்? தங்கத் தமிழர்கள் வாழ்வில் பொங்கும் மகிழ்வும், பூரிப்பும் எப்பொழுது மலரும்?

அண்ணல் காந்தி அகிம்சைப் போரிலே வெற்றி கண்டார் என்றால் அதற்கு அவர் கையாண்ட அகிம்சைப் போராட்டங்கள் மட்டும் காரணமல்ல. காந்தியின் போராட்டத் தளம் இந்திய மண்ணிலே இருந்தது...

காந்தியின் போராட்டத் தளத்திலே மனித நேயம் மிக்க ஆங்கிலேயர்கள் இருந்தார் கள்... ஆகவே அகிம்சையைப் புரிந்து கொள்வதற்கு அந்த வெள்ளைக்காரர்களால் முடிந்தது.



ஆனால் நமது மண்ணில் அப்படியா?

எத்தனை சந்தர்ப்பங்களில் நமது தலைவர் கள் குண்டாந்தடிகளால் தாக்கப்பட்டிருப் பார்கள்? எத்தனை இனக்கலவரங்களில் நமது இனத்தவர்களின் தலைகள் வெட்டப் பட்டு தாய் பீப்பாக்களுக்குள் போடப்பட்டிருக் கும்? எத்தனை பெண்கள் தம் உயிரினும் மேலான கற்பை இழந்திருப்பர்?

அப்போதெல்லாம் நாம் ஆயுதங்களையா தூக்கினோம்?

அகிம்சை ! அகிம்சை ! அகிம்சை !

இந்த வார்த்தைகள் தான் எங்கள் தாரக மந்திரமாக இருந்தது. இந்தக் தாரக மந்திரத் தைத் தூக்கி எறிந்து விட்டு எமது கைகளிலே ஆயுதங்களைத் தந்தவர்கள் யார்? நாமாகப் பெற்றுக்கொள்ளவில்லை. அவர்டகளாகத் தான் தந்தார்கள்... மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் தான் தந்தன... தலைவர் பிரபாகரனின் பின்னே ஆயிரமாயிரம் வேங கைகள் அணிதிரண்டு நிற்பதற்குக் காரணம் யதார்? சிங்களப் பேரினவாதம்தான் !

இன்று காலையிலிருந்து நல்லூர்க் கந்தசாமி கோவிலில் திலீபன் பெயரில் நூற்றுக் கணக் கான அர்ச்சனைகள் செய்யப்பட்டு அவை பொதுமக்கள் மூலம் மேடைக்கு வந்தவண் ணமிருந் தன. பிற் பகல் மூன் று மணி யிலிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வெளியிலிருந்து சனங்கள் பஸ்களில் வந்து குவியத் தொடங்கினர். எங்கே பார்த்தாலும் மக்கள் அலைகள் தான் !

தளபதி கிட்டு அண்ணாவின் தாய், திலீபனை வாரி அணைத்து உச்சி முகர்ந்து அழுத காட்சி என் நெஞ்சை தொட்டது. துரோகிகளினால் வீசப்பட்ட வெடிகுண்டினால் தன் மகன் ஒரு காலை இழந்த போது அந்தத் தாய் கூறிய வார்த்தைகள் இன்னும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

“ஒரு கால் போனால் என்ன? இன்னும் ஒரு கால் இருக்கு.... இரண்டு கையிருக்கு... அவன் கடைசி சரையும் போராடுவான்...”

போர் முனையில் தன் மகனின் மார்பில் வேல் பாய்ந்திருப்பதைப் பார்த்து ஆனந்தக் கண் ணீர் விட்ட வீரத் தமிழ்த்தாயின் கதையை இது எனக்கு நினைவூட்டியது.

உதவி இந்தியத் தூதுவர் திரு.கென் அவர்கள் விமான மூலம் பலாலிக்கு வந்து விட்டா ராம்... அவருடன் பேச்சு வார்த்தை நடத்து வதற்காக திரு அன்ரன் பாலசிங்கம், போயிருக்கின்றனர்... ஏன்ற செய்தியை “சிறி“ வந்து சொன்னபோது மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தேன். திலீபனுக்கும் அதைத் தெரிவித் தேன்.

காலையில் சிறுநீர் கழித்ததால் திலீபன் சற்றுத் தெம்பாக இருந்தார். பேச்சுவார்த்தை முடிந்து அதில் சாதகமாக முடிவு கிடைக் குமானால்... உண்ணாநோன்பை நிறுத்திவிட்டு திலீபனை யாழ். பேரியாஸ்பத்திரியில் அனுமதிக்க வேண்டும்... அங்கே அவசர சிகிச்சைப் பிரிவில் அவருக்குவேண்டிய சிகிச்சைகளை உடனடியாக அளிக்கத் தொடங்கினால்... இரண்டு மூன்று நாள்களில் திலீபன் வழக்கம்போல் எழும்பி நடக்கத் தொடங்கி விடுவார்.

இப்படி எனக்குள்ளேயே கணக்குப் போட்டுக் கொண்டேன்.

இயக்க உறுப்பினர்கள் திலீபனுடன் பேசிக் கொண்டிருந்தனர். அவரை சந்திக்க வந்த மகளிர் அமைப்பு உறுப்பினர்கள், தம்மைக் கட்டுப்படுத்த முடியாமால் விம்மி விம்மி அழுத என் நெஞ்சைத் தொட்டது.

தளபதி சூசை, பிரபா, ரகு அப்பா, தளபதி புலேந்திரன், தளபதி ஜொனி போன்றோர் கண்கலங்கி திலீபனின் தலையை வருடி... பேசி விட்டுச் சென்றனர்.

அவர்கள் போனதும் திலீபன் என்னை அழைத்தார்.

“ கிட்டண்ணையைப் பார்க்க வேணும்போல இருக்கு...” என்று மெதுவாகக் கூறும்போது அவர் முகத்திலே “ஏக்கம் படர்திருந்தது. ஒரு கணம் எனக்கு என்ன செய்வதென்றே தெரிய வில்லை.

கிட்டண்ணா, குட்டிசிறி, ஜயர்... இவர்கள் எல்லாரும் இந்தியாவில் இருக்கபின்றனர்.

திலீபனுக்கு என்ன பதில் சொல்லதென்று தெரியாமால் தவித்தேன்...கிட்டு அண்ணர் இந்தியாவில் தெரியும்... ஆனால் இந்த நிலையில், அவர் கிட்டு அண்ணாவைக் காண விரும்பியது நியாயம்தான்.

இரவு வெகுநேரம்வரை போச்சுவார்த் தையின் முடிவு வரும் வருமென் று பார்த்துக்கொண்டிருந்தோம்... ஆனால், அது வரவேயில்லை.

இன்று மாலை சிறீலங்கா நவ சமமாசக் கட்சித் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்கார, மற்றும் அவரது கட்சியைச் சேர்ந்தவர்கள் வந்து திலீபனைப் பார்த்துவிட்டுச் சென்றனர். இரவு வெகுநேரம் வரை எனக்குத் தூக்கமே வரவில்லை.. ஆனால், திலீபன் தன்னை மறந்து நன்றாக உறங்கினார்.

அவரின் இரத்த அழுத்தம் 85 . 60
நாடித்துடிப்பு- 120
சுவாசம் -22

ஈகைச்சுடர் லெப்.கேணல் திலிபனின் ஏழாம் நாள்

இன்று காலையில் எழுந்ததும் முதல் வேலையாக யோகியை என் கண்கள் தேடின...

நேற்றைய பேச்சுவார்த்தையின் முடிவு என்னவாக இருக்கும்...? இந்தக் கேள்விதான் இதயத்தின் பெரும் பாகத்தை அரித்துக் கொண்டிருந்தது. காலை 10 மணிவரை எவ்வளவோ முயன்றும் அவர்கள் இருவரும் என் கண்களில் படவேயில்லை. ஆனால், திடீரென்று “இந்தியா ரூடே” (India Today) பத்திரிகை நிருபரும் இந்திய துரதஷனின் (இந்தியத் தொலைக்காட்சி ஸ்தாகனம்) வீடியோப் படப்பிடிப்பாளரும், யோகியுடன் வந்து திலீபனைப் படம்பிடிக்கத் தொடங்கினர். “இந்தியா ரூடே” நிருவர் என்னிடம் திலீபனின் உடல் நிலையைப்பற்றித் துருவித் துருவித் கேட்டுத் தெரிந்துகொண்டார். என்னால் முடிந்தவரை முதல் நாள் உண்ணா நோன்பிருந்து இன்றுவரை அவரின் உடலின் நிகழ்ந்த மாற்றங்கள் அனைத்தையும் விரிவாக எடுத்துக் கூறினேன்.

அவர்கள் சென்ற பின் யோகியை அழைத்து, என் மனதுக்குள் குடைந்துகொண்டிருந்த அந்தக் கேள்வியைக் கேட்டேவிட்டேன். அதற்கு யோகி கூறிய பதில் எனக்கு அதிர்ச்சியைத் தந்தது.

“இந்திய அமைதி காக்கும் படையின் மூத்த தளபதி ஒருவரும் பிரிகேடியர் ராகவன், எயர் கொமாண்டர்ஜெயக்ககுமார், கடற்படைத் தளபதி அபயசுந்தர் ஆகியோரும் வந்து பேசியதாகவும், உதவித்தூதுவர் வரவில்லை என்றும், திலீபனின் பிரச்சினையில் அவர்கள் ஒரு தீர்க்கமான முடிவை இதுவரை எடுக்க வில்லை” என்றும் யோகி கூறினார்.

அந்தப் பதிலைக் கேட்டால் அதை ஜீரணிக்க என் மனத்துக்கு வெகுநேரம் பிடித்தது. அந்தப் பேச்சுவார்த்தை பற்றிய முழு விபரத்தைம் யோகியும் யோகி திலீபனிடம் விளக்கிக் கூறி, என்ன செய்யலாம்...? என்று கேட்டார்.

பேசச் சத்தியற்று, நடக்கச் சத்தியற்று துவண்டு கிடந்த அந்தக் கொடி, தன் விழிகளைத் திறந்து பார்த் துவிட்டு வழக் கம் போன் றுதன் புன்னகையை உதிர்த்தது.

“எந்த முடிவும்... நல்ல முடிவாக இருக்க வேணும். ஐந்து கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதாக அவர்கள் எழுத்தில் தர வேணும்... இல்லையெண்டால்... நான் உண்ணாநோன்பைக் கடைசி வரைக்கும் ... கைவிடமாட்டன்.”

ஓவ்வொரு வார்தையாக கரகரத்த குரலில் வெளிவந்தது திலீபனின் பதில்.

ஆண்டின் இறுதிப்பகுதியில் வந்த பின்னர் அரசியல்ப் பிரிவுப் பொறுப்பாளராக திலீபன் இருந்து மிகச் சிக்கலான பிரச்சனைகளை யெல்லாம் பொதுமக்கள் மத்தியில் தீர்த்து வைத்திருக்கின்றார்.

1986 ஆம் ஆண்டு அச்சுவேலியில் ஏற்பட்ட ஒருசிறு பூசல் காரணமாக மினிபஸ்களின் சொந்தக்காரர்கள் ஒருவாரகாலமாக பஸ் களை ஓடவிடாமல் வழிமறிப்புப் போராட்டம் நடத்தியதால் மக்கள் மிகுந்த துன்பப்பட்டனர்.

திலீபன் தனக்கேயுரிய புன்முறுவலுடன் அவர்களை அணுகி மிகவும் எளிமையாக அவர் களுடன் பேசி இரண்டு மணித் தியாலத்தில் பஸ் களை ஓடச் செய் தனர்.யாழ்ப்பாண மாவட்ட மீனவர்களுக்கு இடையே நடைபெறும் பூசல்கள் கடல் எல்லையிலே ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் தொழிலாளர்களுக்கு இடையே ஏற்படும் சில சிக்கலான பிரச்சினைகள்

பல்கலைக்கழகத்தில் ஏற்படும் சிக்களான பிரச் சினைகள், கடை முதலாளிகள் - தொழிலாளர்களின் பிரச்சினைகள், மூட்டை தூக்குவோர், வண்டி ஓட்டுவோர் — ரச்சிக் கரர்கள், மாநகரசபை ஊழியர்கள், ஆசிரியர் கள், எழுதுவினைஞர் கள், டாக்ரர் கள், தாதிமார், வைத்தியசாலை சிற்றூழியர்கள், வழக்கறிஞர்கள், லொறிச் சொந்தக்காரர்கள் இப்படிப் பலரகமானவர்களின் பிரச்சினை களை யெல்லாம் உடனுக்குடன் பேசிச் சமரசமாகத் தீர்த்து வைத்தவர் திலீபன்.

யாழ்ப்பாணக் கரையோரக் கிராமமான நாவாந்துறையில் தமிழர்களுக்கும் முஸ்லிம் களுக்கும் இடையில் பலமான இனக்கலவரம் ஏற்பட்டது. கத்தகள், பொல்லுகள் கைக் குண்டுகள், துப்பாக்கிகள் எல்லாம் தாராள மாகப் பாவிக்கப்பட்டன. ஒரே நாளில் பலர் இருபக்கத்திலும் மாண்டனர். பலர் படுகாய முற்றனர்.

திலீபன் தன்னந்தனியாக இரு சமூகத்தவர்



படபடவென்று நடுங்கிய நடுங்கிய குரலில் மெதுவாகத் திடமாகத் திலீபன் கூறிமுடித்த போது யோகி மேடையில் இருக்கவில்லை.

யாழ்ப்பாணக் குடாநாடு விடுதலைப் புலிகளின் பூரண கட் டுப் பாட் டுக் குள் 1985 ஆம் களையும் இரவிரவாகச் சென்று சந்தித்தார். முடிவு? அடுத்த நாள் பெருமழை பெய்து ஓய்ந்தது போல் கலவரம் நின்றுவிட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தமிழீழ மக்கள் மத்தியில் மாபெரும் செல்வாக்கு

இருப்பதற்குக் காரணம் இவர்கள் சிங்கள இராணுவத்தின் அட்டூலியங்களிலிருந்து தம் உயிரையே அர்ப்பணித்து மக்களைக் காப்பாற்றுவது மட்டுமல்ல எந்தச் சிக்கலான சமூகப் பொருளாதாரப் பிரச்சினையானாலும் புலிகளின் அரசியல்ப் பிரிவுத் தலைவர்



திலீபனால் அவை நிச்சியமாகத் தீர்க்கப்படும். என்ற உயர்ந்த நம்பிக்கையாலும் ஏற்பட்ட செல்வாக்குத்தான். அது.

மற்றவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இரவு பகலாக உறங்காது வேளா வேளைக்கு உணவின்றி அயராது உழைப்பதில் திலீபனுக்கு நிகர் திலீபன் தான். ஆவர் சுயமாக எப்போதாவது மினுக்கிய மடிப்புக் கலையாத ஆடைகள் அணிந்ததையும் நான் பார்த்ததில்லை.

அவரிடம் இருப்பதெல்லாம் ஒரேயொரு நீளக்காற்சட்டை (ட்ரவுசர்) ஒரேயொரு சேர்ட் தான். அரசியல் விசயமாக ஊரெல்லாம் சுற்றி பல பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டு காய்ந்த வயிற்றுடன் இரவு 12.00, 1.00 மணிக்கு தலைமை அலுவலகத்திற்கு வருவார். ஆந்த நள்ளிரவில் அழுக்கேறிய தன் உடைகளைக் களைந்து தோய்த்து காயப் போட்டுவிட்டே படுக்கச் செல்வார். பின்னர் அந்த இயந்திரம் அதிகாலையிலேயே தன் இயக்கத்தை மீண்டும் ஆரம்பித்து விடும்.

இப்படிப்பட்ட திலீபன் இன்று வாடி, வதங்கி தமிழினத்துக்காக தன்னையே அழித்துக் கொண்டிருக்கின்றாரே? ஏத்தனையே பேரின் பிரசிசினைகளைத் தீர்த்து வைத்த இவரின் பிரச்சினையை, தமிழினத்தின் பிரச்சினையை யார் தீர்க்கப் போகின்றார்கள்.

சீலமுறு தமிழன் சிறப்பினை இழப்பதோ?
சிங்கள இனத்தவர் நம்மை மிதிப்பதோ?
கோலமுறு திரு நாடினிக் கொள்ளையர்...
விரித்த வலையினில் வீழ்ந்து அழிவதோ?
காலனெனும் கொடும் கயவனின் கையினால்...
கண்ணை இழந்து நாம் கவலையில் நலிவதோ?
நீலமணிக்கடல் நித்தமும் அழுவதோ..?
நாடு பெறும்வரை நம்மினம் தூங்குமோ...?

"ஈழமுரசு" பத்திரிகையில் வெளிவந்த இந்தக் கவிதையை ஒருநாள் திலீபன் வாசித்துவிட்டு என் தோள்களைத் தட்டிப் பாராட்டியதை இன்று எண்ணிப்பார்க்கின்றேன்.

வாரா வாரம் பத்திர்கைகளில் வெளிவந்து கொண்டிருக்கும் எனது கவிதைகளை ஒரு தொகுப்பாக்கி வெளிவிட வேண்டும். என்ற திலீபனின் ஆசையை நிறைவேற்றுவதற்காக சென்ற வாரம் தான் அவைகளை ஒன்று சேர்த்து பிரதிகள் எடுத்து ஒருபிரதியை ராஜனிடமும் மறு பிரதியை யோகியிடமும் கொடுத்திருந்தேன்.

தலைவர் பிரபாகரன் "முன்னுரை" எழுத வேண்டும் என்ற என் விருப்பத்தை திலீபனிடம் வெளியிட்ட போது அவரும் அதற்குச் சம்மதித்தார். உண்ணாவிரதம் முடிந்த பின் முதல் வேலையாகத் தலைவரிடம் சகல கவிதைகளையும் கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டேன்.

தலைவர் பிரபா ஒர் "இலக்கிய ரசிகன்" என்பது பலருக்குத் தெரியாது.

அந்த நெஞ்சுக் கூட்டிற்குள் நிறைந்து கிடக்கும் இராணுவத் திட்டங்களும், அரசியல்ப் புரட்சிக் கருத்துக்களும், இலக்கியக் குவியல்களும் மலை போன்ற தமிழுணர்வும்.... அப்பப்பா! ஏராளம் ஏராளம்.! அப்படிப்பட்ட ஒரு தலைவனின் வழிவந்த திலீபனின் ஏழாம் நாள் தியாகப் பயணம் தொடர்கின்றது.

ஈகைச்சுடர் லெப்.கேணல் திலீபனின் எட்டாம் நாள்

இன்று அதிகாலையிலே நிரஞ்சன் குழுவின் கொட்டகை போடும் வேலையை ஆரம்பித்து விட்டனர். முதல் நாள் இலட்சக்கணக்கான மக்கள் வந்திருந்ததால் போடப்பட்டிருந்த கொட்டகைகள் எல்லாம் சனக்கூட்டத்தினால்



நிரம்பி வழிந்தன. ஏராளமானோர் சுடு வெயிலில் கால்கடுக்க நிற்கவேண்டி ஏற்பட்டதால் நல்லூர் கோவில் மைதானம் முழுவதிலும் படங்குகளினால் கொட்டகை போடத் தொடங்கியிருந்தார்கள்.

உண்ணாவிரதம் ஆரம்பிக்கும் போது இத்தனை சனக்கூட்டம் வருமென் யாருமே எதிர்பார்க்கவில்லை. இலங்கையில் மட்டு மன்றி, இந்தியா மற்றும் பல வெளிநாடுகளில் கூட திலீபனின் தியாகப் பயணம் பற்றியே மக்கயில் பெரும்பாலானோர் பேசிக் கொண்டிருப்பதாகப், பத்திரிகைகளில் போட்டிருந்தார்கள்.

அத்துடன் தமிழீழத்தின் பல பாகங்களிலும் பரவலாக மக்கள் அடையாள உண்ணாநோன்புகளை மேற்கொண்டு தம் எழுச்சியைக் காட்டிக் கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாநகரில் "மதன்" என்ற இளம் தளபதி ஒருவர், மக்களின் ஆதரவுடன் தன் போராட்டத்தைத் திலீபனின் வழியில் இன்னும் இரண்டு நாட்களில் ஆரம்பிக்க விருப்பதாக என்னிடம் மாத்தா கூறினார். இந்த மதனைத் தெரியாதவர்களே மட்டக்களப்பில் இல்லை. 1985ம் ஆண்டு நான் இந்தியாவில் இருந்தபோது மதன் தமிழீழத்துக்குச் சென்றார். பல போர்க்களங்களைத் தன் இளம் வயதில் சந்தித்தார்.

திருகோணமலையிலுள்ள குச்சவெளிப் பொலிஸ் நிலையத்தைத் தகர்த்தவர்களுள், இந்த மதனும் ஒருவர். இதே குச்சவெளிப் பொலிஸ் நிலையத் தாக்குதல்களில் முக்கிய பங்கெடுத்தவர்கள் என் மனதில் மட்டுமன்றி தமிழ் மக்களின் மனங்களிலும் நீங்காத இடம் பிடித்திருக்கின்றார்கள். அவர்கள் வேறு யாரமல்ல...

லெப்டினன்ட் கேர்ணல் சந்தோஷம், லெப்டினன்ட் கேர்ணல் குமரப்பா, லெப்டினன்ட் கேர்ணல் புலேந்திரன் ஆகியோர்தான்.

தமிழீழத்தின் முல்லைத்தீவு மாவட்டத்திலே திருச்செல்வம், என்ற போராளியும், அவருடன் சேர்ந்து பல பொது மக்களும், உண்ணா நோன்புப் போராட்டத்தினை நாளை தொடங்கவிருப்பதாகச் செய்திகள் வெளி வந்தன.

தமிழீழம் எங்குமே அஹிம்சைப் போர் தீப்பிளம்பாக எரிந்து கொண்டிருக்கிறது.

திலீபன் ஓர் மகத்தான மனிதன் தான். இல்லைன்றால் அவன் வழியிலே இத்தனை மக்கள் சக்தியா...?

வல்வெட்டித்துறையிலே திலீபனுக்கு ஆதரவாக உண்ணாவிரதம் இருக்கும் ஐந்து தமிழர்களைத், தலைவர் பிரபாகரன் நேரில் சென்று சந்தித்தபோது எடுக்கப்பட்ட படத்தையும், திலீபனின் படத்தையும், பத்திரிகைகளில் அருகருகே பிரசுரித்திருந்தார்கள்.

"ஈழமுரசு" பத்திரிகையில் திலீபனுக்கு அடுத்த மேடையிலே சாகும் வரை (நீராகாரம் அருந்தாமல்) உண்ணாநோன்பு இருந்து கொண்டிருக்கும் திருமதி நல்லையா, செல்வி.குகசாந்தினி, செல்வி.சிவா துரையப்பா ஆகியோரின் படங்களைப் போட்டிருந்தார்கள். மொத்தத்தில் எல்லாமே திலீபனின் அகிம்சைப் போருக்கு வெற்றி முரசு கொட்டிக் கொண்டிருந்தன. பத்திரிகைகளில் வெளி வரும் செய்திகள் மட்டுமன்றி ஒவ்வொரு ஊரிலிருந்தும் பல பொதுசன அமைப்புக்கள் அணியாக வந்து உண்ணாநோன்புப் போராட்டத்தில் பங்குபற்றுவதோடு திலீபனுக்காக கவிதை வடிவில் ஆயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்களையும் அச்சடித்து விநியோகித்து வந்தன.

இந்த எழுச்சியை, மக்களின் வெள்ளத்தைப் பார்ப்பதற்கு என்றே தினமும் யாழ்ப்பாண நகரத்தைச் சுற்றி சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தன. இந்திய சமாதானப் படையின் ஹெலிகொப்டர்கள்.



புலிகள் ஆயுதப் போராட்டத்தில் மட்டுமல்ல. அஹிம்சைப் போராட்டத்திலும் சாதனை படைக்கும் திறன் பெற்றவர்கள் என்ற பேருண்மை, உலகம் முழுவதும் பரவிக் கொண்டிருந்தது.

திலீபனின் சாதனை உலக அரங்கிலே ஓர் சரித்திரமாகிக் கொண்டிருக்கிறது. உலகிலே முதன் முதலாக ஒரு சொட்டு நீர் கூட அருந்தாமல் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து ஏழு நாட்களை வெற்றிகரமாக முடித்தவர். என்ற பெருமையுடன் அதோ கட்டிலில் துவண்டு வதங்கி, உறங்கிக் கொண்டிருக்கிறார் திலீபன்.

அவரது கண்கள் இரண்டிலும் குழிகள் விழுந்து விட்டன. முகம் சருகைப்போல் காய்ந்து கிடக்கிறது. தலைமயிர்கள் குழம்பிக் கிடக்கின்றன... வயிறு ஒட்டிவிட்டது. நீரின்றி வாடிக்கிடக்கும் ஓர் கொடியினைப் போல் வதங்கிக் கிடக்கின்றார். அவரால் விழிகளைத் திறக்க முடியவில்லை. பார்க்க முடியவில்லை...
பேச முடியவில்லை...
சிரிக்க முடியவில்லை...

ஆம்! தூங்க மட்டும்தான் முடிகிறது. இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் இந்தக் கோல நிலவு தன் எழிலை இழந்து வாடி வதங்கப் போகிறது?

முரளியின் பொறுப்பிலுள்ள மாணவர் அமைப்பைச் (S.O.L.T) சேர்ந்த மாணவ-மாணவிகள் சனக்கூட்டத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

மகளிர் அமைப்பு உறுப்பினர்கள், சனங்களை வழிநடத்திக் கொண்டிருக்கின்றனர். புக்கத்து மேடையிலே நிகழ்ச்சிகள் ஆரம்பமாகி விட்டன. பெரும்பாலானோர் அழுதழுது கவிதை படிக்கின்றார்கள்.

"சிந்திய குருதியால்
சிவந்த தமிழ் மண்ணில்
சந்ததி ஒன்று
சரித்திரம் படைக்க...
முந்திடும் என்பதால்...
முளையிலே கிள்ளிட...
சிந்தனை செய்தவர்
சிறுநரிக் கூட்டமாய்...
"இந்தியப்படையெனும்"
பெயருடன் வந்தெம்
சந்திரன் போன்ற...
திலீபனின் உயிரைப்
பறித்திட எண்ணினால்...
பாரிலே புரட்சி...
வெடித்திடும் என்று...
வெறியுடன் அவர்களை...
எச்சரிக்கின்றேன்!"

மேடையிலே முழாங்கிக் கொண்டிருந்த இந்தக் கவிதை என் மனத்திலே ஆழமாகப் பதிகிறது. இன்று திலீபனின் உடல் நிலை மிகவும் மோசமாகி விட்டது என்பதை அவரின் வைத்தியக் குறிப்புகள் எடுத்துக் காட்டுகின்றன.

இரத்த அழுத்தம் – 80/50
நாடித் துடிப்பு – 140
சுவாசம் – 24

ஈகைச்சுடர் லெப்.கேணல் திலீபனின் ஒன்பதாம் நாள்

அதிகாலை 5 மணியிருக்கும். கிழக்குப் பக்கத்தே தேர்முட்டி வாசலில் நின்றிருந்த

வேப்ப மரத்தினின்று குயில் ஒன்று கூவிக் கொண்டிருக்கிறது. "கூ... கூ...குக் ...கூ..." அதன் குரலில் தொனித்த விரக்தியின் சாயலைக் கேட்ட நான், திலீபனை ஏக்கத் துடன் பார்க்கின்றேன். அந்தக் குயில் எதை இழந்து இப்படிக் கூவுகிறதோ தெரியவில்லை.

ஆனால் இந்தக் குயில்...?

எம்மை — எம் இனத்தைக் காக்க தன்னையே இழந்து கொண்டிருக்கிறதே.... இந்த சிறு குயிலின் சோக கீதம் உலகத்தின் காதுகளில் இன்னுமா விழவில்லை...?

திலீபனை நன்றாக உற்றுப் பார்க்கிறேன். அவரின் உடலிலுள்ள சகல உறுப்புகளும் இன்று செயலற்றுக் கொண்டிருக்கின்றன. உதடுகள் அசைகின்றன. ஆனால் சத்தம் வெளிவரவில்லை. உதடுகள் பாளம், பாள மாக வெடித்து வெளிறிவிட்டிருந்தன. கண்கள் இருந்த இடங்களில் இரு பெரிய குழிகள் தெரிகின்றன.

இன்று காலை 10 மணியளவில் திலீபனின் மேடைக்கு அருகேயுள்ள மேடையில் நிகழ்ச் சிகள் ஆரம்பமாயின.

இந்திய வம்சாவழியினர் சார்பில் பேசிய திரு.கணேசராசா என்பவர் "பாரத அரசு விடுதலைப் புலிகளின் ஐந்து அம்சக் கோரிக் கையை ஏற்று திலீபனின் உண்ணா நோன்பை முடித்து வைக்க வேண்டுமென் றும் இல்லையேல் இதனால் ஏற்படப்போகும் விளைவுகளுக்கு இந்திய அரசே பொறுப் பேற்க வேண்டும்" என்றும் பேசினார்.

திலீபனை பார்வையிட வருவோர் தங்கள் கருத்துக்களை சில நாட்களாக எழுத்து மூலம் வழங்கி வருகின்றனர். இதற்காக நான்கு போராளிகள் கை ஓயாமல் ஓர் மூலையில் அமர்ந்திருந்து எழுதிக் கொண்டிருக்கின் றனர். இதுவரை 1500 இற்கும் மேற்பட்டோர் தமது கருத்துக்களை மிக உருக்கமாக எழுதியிருந்தனர்.

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சகல அரச



இன்று காலை எட்டரை மணியில் இருந்து, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பதினேழு பாடசாலைகளிலிருந்து சுமார் 5000 மாணவ மாணவிகள் அணிவகுத்து வந்து திலீபனைப் பார்த்துக் கண்கலங்கியவாறு மைதானத்தை நிறைத்துக் கொண்டிருந்தனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களும், ஊழியர்களும் ஏராளமாக வந்து பார்த்தனர். காலை ஒன்பது மணியளவில் யாழ். கோட்டை இந்திய இராணுவ முகாம் முன்பாக ஆயிரக் கணக்கான பொதுமக்கள் பிரதான வாசலில் அமர்ந்து, இந்தியப் படையினர் வெளியே வராதவாறு மறியல் செய்யத் தொடங்கினர்.

பொதுவாக திலீபனின் உடல் நிலை மோச மடைந்து வந்த அதே வேளை பொது மக் களின் குமுறலும் அதிகரிப்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. திலீபன் தங்கள் குடும்பத் தில் ஒருவன் என்ற எண்ணமே ஒவ் வொருவர் மனதிலும் நிறைந்திருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

இன்று காலையில் இந்தியப் படையின் தென் பிராந்தியத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் திபேந்தர் சிங் அவர்கள் ஹெலிகொப்டர் மூலம் யாழ் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகனைச் சந்தித்தார். பின்னர் இருவரும் தனித் தனியான வாகனங்களில் புறப்பட்டு யாழ் கோட்டை இராணுவ முகாமுக்குள் சென் றனர். ஒரு மணி நேரத்துக்கு மேலாக இரு வரும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்... ஆனால் கிடைத்தது ஏமாற்றம்தான்!

கோட்டை வாசலில் மறியல் செய்த ஆயிரக் கணக்கான பொது மக்களின் எழுச்சியைக் கண்ட பின்னர் தான் தளபதியவர்கள் தலைவர் பிரபாகனைக் காணப் பறந்து வந்திருக்க வேண்டும்.

அலுவலகங்களிலும் வேலைகள் நடைபெறாத வண்ணம் பொதுமக்கள் மறியல் செய்து வருகின்றனர்.

சங்கானை உதவி அரச அதிபர் பிரிவிலும் புங்குடுதீவு அரசாங்க அதிபர் பிரிவிலும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் திலீபனுக்கு ஆதரவாக ஒரு நாள் அடையாள உண்ணா நோன்பையும் மறியலும் இருந் தனர். இதைப் போல் பல கிராமங்களில் சிறு சிறு குழக் களாகச் சேர்ந்து மக்கள் உண்ணா நோன்பு கடைப்பிடித்தனர்.

எங்கும் — எதிலும் திலீபன் என்ற கோபுரம் மக்கள் சக்தியினால் உயர்ந்து விட்டதைக் காண முடிந்தது. ஆம் ! மக்கள் புரட்சி வெடிக்கத் தொடங்கிவிட்டது.

திலீபனின் ஐந்து கோரிக்கைகளை நிறை வேற்றுமாறு பல தொண்டர் நிலையங்கள், இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு மகஜர்களை இன்று அனுப்பி வைத்திருப் பதாகச் சில தமிழ்ப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக் கின்றன.

1. யாழ் பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழு. (இந்தியத் தூதுவர் ஊடாக அனுப்பப் பட்டது)
2. வட பிராந்திய மினி பஸ் சேவைச் சங்கம். (பிரதி தமிழக முதல்வருக்கும் அனுப்பப் பட்டது)
3. வட மாகாணம் பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம்
4. தொண்டைமானாறு கிராம மட்ட கடற் தொழில் சமூக அபிவிருத்திச் சங்கம்
5. வட பிராந்திய போக்குவரத்து ஊழியர் சங்கம் என்பன அவற்றில் சிலவாகும்.

இன்று மன்னாரிலுள்ள இந்திய அமைதிப் படை முகாமுக்கு முன், திலீபனுக்கு ஆதரவாக மகஜர் ஒன்றைக் கொடுப்பதற்காக ஆயிரக் கணக்கான பொதுமக்கள் திரண்டு சென்ற போது ஆத்திரமடைந்த இந்திய அமைதிகாக் கும் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது ஒருவர் அதில் இறந்து விட்டதாகவும், 18 பேர் படுகாயமடைந்ததாகவும் எமது தகவல் தொடர்புச் சாதனச் செய்திகள் கூறுகின்றன.

இன்று மாலை என் காதில் ஓர் இனிய செய்தி வந்து விழுந்தது. இந்தியத் தூதுவர் டிக்ஷிற்-தலைவர் பிரபாவைச் சந்திப்பதற்கு வந்திருக் கிறார் என்பது தான் அது! ஆம் பிற்பகல் 1-30 மணியிலிருந்து பிற்பகல் 6-30 மணிவரை, இரு குழுக்களும் அமைதியாகப் பேச்சுவார்த் தைகளை நடத்தின. இந்தியத் தரப்பில் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டவர்கள்:- தூதுவர் திரு. ஜெ. ஏன். டிக்ஷிற், இந்தியப் படையின் தென் பிராந்தியத் தளபதி, லெப்டினன்ட் ஜெனரல் திபேந்தர் சிங், அமைதி காக்கும் படைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹர்கீத் சிங், பிரிகேடியர் பெர்னாண்டஸ், இந்தியத் தூதரகப் பாதுகாப்பு அதிகாரி, கப்டன் குப்தா ஆகியோர்

விடுதலைப் புலிகளின் தரப்பில்:- தலைவர். திரு. வே. பிரபாகரன், திரு. அன்ரன் பாலசிங்கம் (அரசியல் ஆலோசகர்), திரு. செ. கோடீஸ்வரன் (வழக்கறிஞர்), திரு. சிவானந்த சுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருப்பதாகச் செய்தி வந்ததும், என்னை அறியாமலே என் மனம் துள்ளிக் குதித்தது. ஒன்பதாம் நாளான இன்று ஒரு நல்ல முடிவு எப்படியும் ஏற்படும்... அந்த நல்ல முடிவு ஏற்பட்டதும் உடனடியாக திலீபனை யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதித்து அவசர சிகிச்சைப் பிரிவில் விசேட சிகிச்சைகள் அளித்தால் 24 மணித்தியாலங்



களில் அவர் ஓரளவு பழைய நிலைக்குத் திரும்பிவிடுவார்...

எமக்காக இத்தனை நாட்களாகத் துன்பப்பட்டு அணு, அணுவாகத் தன்னை வருத்திக் கொண்டிருக்கும் அந்த நல்ல இதயம், நிச்சயம் பூத்துக் குலுங்கத்தான் போகிறது... என்ற கற்பனைக் கடலில் இரவு 7-30 மணிவரை நானும், என் நண்பர்களும், மிதந்து கொண் டிருந்தோம்.

இரவு 7-30 மணிக்கு அந்தச் செய்தி என் காதில் விழுந்தபோது இந்த உலகமே தலை கீழாக சுற்றத் தொடங்கியது... அந்தக் கற்பனைக் கோட்டை ஒரே நொடியில் தகர்த்து தவிடு பொடியாகியது.

ஆம் ! பேச்சுவார்த்தையின் போது இந்தியத் தூதுவரால் வெறும் உறுதி மொழிகளைத் தான் தர முடிந்தது... திலீபனின் உண்ணா நோன்புப் போராட்டம் ஒரு தொடர் கதையாகவே ஆகிவிட்டது. எழுத்தில் எந்தவித ஊறுதி மொழிகளையும் தர இந்தியத் தரப்பு விரும்பவில்லை என்பதை அவர்களின் நடத்தை உறுதி செய்தது. திலீபனின் சாவுப் பயணம் இறுதியானது என்பதையும் அது உணர்த்தியது.

ஈகைச்சுடர் லெப்.கேணல் திலீபனின் பத்தாம் நாள்

பெற்றோர், பிள்ளைகள், சகோதரர், உற்றார், உறவினர், நண்பர் இவர்களின் யாராவது நம் கண் முன்னாலே இறக்க நேரிடும்போது மனம் துன்பத்தில் மூழ்கிவிடுறது. கண்கள் கண்ணீரைச் சொரிகின்றது. ஆனால், இவர்களின் ஒருவர் அணுஅணுவாகச் செத்துக் கொண்டிருபதைப் பார்க்கும் போது... துயரத்தின் எல்லைக்கே நாம் போய்விடுகின் றோம். உலகமே சில வினாடிக்குள் வெறுத்துப் போய்விடும். கண்களில் அழுவதற்குக் கண்ணீர் கூட எஞ்சியிருக்காது.

ஆனால், இவர்களில் ஒருவர் ஒருசொட்டு நீர் கூட அருந்தாமல் 10 நாட்களாக எம் கண் முன்னால் அணு அணுவாகச் சாவின் விளிம்பில் நின்று தத்தளிப்பதைப் பக்கத்தில் இருந்து பார்த்துக்கொண்டிருக்கும் போது ஏற்படும் மன வேதனை இருக்கிறதே- அப்பப்பா! அதை வாய்விட்டுச் சொல்ல முடியாது. ஆத்துனை கொடுமை அது. அனுபவித்தவர்களுக்கு மட்டும் புரியும்.

அதை நான் என் வாழ்நாளில் முதல்முறை யாக அனுபவிக்கிறேன். இதையெல்லாம் என் கண்களால் பார்க்கவேண்டும். என்று முன்பே தெரிந்திருருமால், நான் திலீபன் இருந்த பக்கமே தலைவைத்துப் படுத்திருக்கமாட் டேன்.

நான் முற்றுமுழுதாக நினைத்திருந்த தெல் லாம் இதுதான். இந்தியா ஒரு பழம்பெருமை மிக்க ஜனநாயக நாடு. காந்தி பிறந்த பொன் னான பூமி. அகிம்சையைப் பற்றியும் — உண்ணாநோன்பைப் பற்றியும் உலகில் பெருமைப்படக்கூடிய அளவுக்கு காந்தியடிகள் மூலம் புகழ்பெற்ற நாடு. அப்படிப்பட்ட ஒரு நாட்டிடம் நீதிகேட்டு அகிம்சை வழியில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்த திலீபன், உண்மையிலேயே பாக்கியசாலி தான்.

ஏனெனில், மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருந்த நாடு நிச்சயமாக திலீபனுக்கும் ஒரு நல்ல வழியைக் காட்டத்தான் செய்யும்... ஆதன் மூலம் தமிழ் மக்களின் அபிலாசை களை ஓரளவாது இந்திய அரசு நிறைவேற்றத் தான் போகிறது... என்ற எண்ணத்தில்தான் மூடிக்கொண்டு... இந்தத் தியாக வேள்வியில்

என்னால் முடிந்த பங்கைச் செலுத்துவதற்குத் தயாரானேன். நான் நினைத்ததெல்லாம்... இவ்வளவு விரைவில் மாயமான் ஆகிவிடும்



என்று நான் கனவுகூடக்கண்டிருக்க வில்லை... எத்தனை பெரிய ஏமாற்றம் எத்தனை பெரிய தவிப்பு?

இன்றைய நிலையில் திலீபன் இருந்த நிலையைப் பார்த்தபோது. நம்பிக்கையே அற்றுவிட்டது. இனி ஒரு நல்ல திர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதன் பிறகு திலீபனை ஆஸ்பத்திரிக்கு அனுமதித்தாலும் காப்பாற்ற முடியுமா என்பது என்னைப் பொறுத்த அளவில் கேள்விக்குறிதான்.

அப்படியிருக்க...கடவுளே! மனித தர்மத்துக்கு கிடைக்கப் போகும் பரிசு இதுதானா?

திலீபனைக் கொல்வதற்கு அவர்கள் திடமனம் பூண்டுவிட்டனர். என்பது புரிந்துவிட்டது.

அதோ வானத்தில் ஓர் வயோதிப உருவம் முகில்களைக் கிழித்துக்கொண்டு என்னையே பார்த்துக் கொண்டிருக்கிறது. அவ்வுருவத்தின் தலையிலே மயிரைலே...கண்களிலே வெள்ளை கண்ணாடி... அந்தக் கண்களில் அருவியாக வழிந்து கொண்டிருக்கிறது...அது என்ன? இரத்தமா? அந்த "மனிதன்" இரத்தக் கண்ணீர் சொரிகிறாரே... ஏன்? ஏன்? ஏன்? அடுத்து வேறு ஒரு உருவம்!

அதன் தலையிலும் மயிரைக் காணவில்லை ... வர்னத்தின் நடுவலே வெள்ளரசு மரத்தின் அடியிலே அமர்ந்திருக்கும் அந்த உருவம் எம்மை, இல்லை திலீபனையே பார்த்துக் கொண்டிருக்கிறது. பௌர்ணமி நிலவில் அந்தக் கருணை முகத்திலே... கருணையைத் தேடுகின்றேன்... ஆனால் காணமுடியவில்லை... ஏன்...? ஏன்...?

இந்திய மண்ணில் என்றோ தோன்றி மறைந்துவிட்ட அந்த இரு சோதிகளும் அல்ல, உருவங்களும் வெகுநேரம் திலீபனைப் பார்க்க முடியாமல் வெட்கித் தலை குனிந்த வாறு சிறிது சிறிதாக என் கண்களை விட்டு மறைந்து கொண்டிருக்கின்றன...

நேற்று சிறிதளவாவது அசைந்து கொண்டிருந்த திலீபனின் கை, கால்கள் இன்று அசைவற்று சோர்ந்து விட்டன. உள்மூச்சு மட்டும் பலமாக இழுத்துக்கொண்டிருக்கின்றது. கண்கள் உச்சியிலே குத்திவிட்டு நிற்கின்றன. உடலின் நிறம் சிறிது நீலமாக மாறத்தொடங்கிவிட்டது.
நாடித்துடிப்பைப் பரிசோதிக்கின்றேன் 52.
இரத்த அழுத்தம் -80/50.

சராசரி மனிதனின் அளவுகளைவிட எல்லாமே மிகவும் குறைந்துள்ளன. இனித் திலீபனுக்கு எந்த நிமிடமும் எதுவும் நடக்கலாம். ஐயோ... அதைநினைத்துப் பார்க்கவே நெஞ்சம் வெடித்துவிடும் போலிருக்கின்றது. நெஞ்சே இந்தக் கணமே நீ வெடித்து விடக்கூடாதா?

அன்று திலீபன் கிட்டுஅண்ணாவைப் பார்க்க வேண்டும் என்றாரே? இதற்காகத்தானா? இந்திய அரசு தன் கோரிக்கைகளை நிறைவேற்றாது என்பதை அவர் உள்ளுர அறிந்தவர் போல் அன்று உண்ணாவிரத மேடையிலிருந்து எவ்வளவு தீர்க்கதரிசியாக இதைக் கூறினார்.

"நான் இறப்பது நிச்சயம்... ஆப்படி இறந்ததும் வானத்திலிருந்து என் தோழர்களுடன் சேர்ந்து... தமிழீழம் மலர்வதைப் பார்ப்பேன்..."

இந்த வார்த்தைகளை இன்று ஆயிரக்கணக்கான மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

திலீபன், கிட்டு அண்ணா மீது எவ்வளவு பாசம் வைத்திருந்தானோ அதைப் போல் அவரும் திலீபன் மீது உயிரையே வைத்திருப்பது எனக்குத் தெரியும்.

கிட்டு அண்ணா யாழ் மாவட்ட தளபதியாக இருந்த காலத்தில் யாழ்ப்பாணக் குடா நாட்டை புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக அரும் பாடுபட்டு உழைத்தவர். திட்மிடும் சாதுர்யம் அதை நிறைவேற்றுவதில் மிகச் சாதுர்யம்... எதிரியைப் பந்தாடுவதில் ராஜதந்திரம். இவற்றுடன் குறிதவறாமல் சுடுவதிலும் தன்னிகரற்றவரான தளபதி கிட்டுவும் , யாழ் மாவட்ட அரசியல் பிரிவுத் தலைவன் திலீபனும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குக் கிடைத்த மாபெரும் பொக்கிசம் என்று தான் கூறவேண்டும். இவர்களை உறுப்பினர்களாகப் பெற்ற உறுதி மிக்க தலைவனை நாம் பெற்றுள்ளோம்.

கிட்டு அண்ணாவைப் பார்க்கவேண்டும் என்று திலீபன் அன்று மேடையிலிருந்து கூறிய போது அதை நான் பெரிதாக எடுக்கவில்லை. ஆனால் இன்று...? இந்த நிலையில் அவரது அந்த ஆசை நிறைவேறாமலேயே என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

இதை என்றோ ஒரு நாள் கிட்டு அண்ணாவிடம் கூறும் போது அவர் மனம் எவ்வளவு வேதனையடையும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க எனக்கு இந்த உலகத்தின் மீது வெறுப்பு வருகின்றது. இந்த மண்ணிற்காக நாம் எத்தனை அரும்பெரும் உயிர்களை யெல்லாம் இழந்திருக்கின்றோம்.

நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. தமது துப் பாக் கிகளைச் சிங் கள இராணுவத் திடமிருந்து காப்பாற்று வதற்காக காயப்பட்டு நடக்க முடியாத நிலையில் தம்மைச் சுட்டு விட்டு ஆயுதங்களை எடுத்துக் கொண்டு தப்பி ஓடும் படி கட்டளையிட்ட சீலன், ஆனந் தன்...

இயக்க இரகசியங்கள் அடங்கிய முக்கிய விடையங் களையும் கோப் புக் கனையும் காப்பாற்றுவதற்காக கடைசிவரையும் தாக்குப் பிடித்து அவகளை மற்றவர்களிடம் எடுத்து அனுப்பிவிட்டு தன் உயிரைத் தியாகம் செய்த "பண்டிதர்".

இயக்கப் போராளிகள் குடியிருந்த இடமொன றில் வெடிகுண்டின் கிளிப் எதிர்பாராமல் வி ல கி வி ட ம ற் ற வ ர் க ள ை அ ந் த அழியிலிருந் து காப் பாற் றுவதற் காக வெடிகுண்டை தன் வயிற் றுக்குள் அமுக்கிக் கொண்டு குப்புறப்படுத்து தன் உடலையே சி த ற ப் ப ண் ணி ம ற் ற வ ர் க ள ை அழிவினின்றும் காப்பாற்றிய தியாக வீரன் " அன்பு".

இவர் களைவிட அவ் வப் போது சிங் கள இராணுவத்திடம் பிடிபடும் நிலையில் இயக்க ரகசியங்களை காப்பாற்றுவதற்காக சயனைட் டைத் தின்று ஈகைச் சாவடை ந்தவர்கள் உலக வரலாற்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக் கத் திற் குத் தான் ஏராளம் ஏராளம்.

இந்த வழிகளையெல்லாம் விட தன் வழி மிகவும் வேறுபட்டதாக இருக்கட்டும் என்பதற் காக திலீபன் இந்த முடிவிற்கு வந்தார்?

இன்று மாலை வசாவிளான் என்ற ஊரைச் சேர்ந்த ஒரு ஆதரவாளர் அங் கிருந் து உண்ணாநோன்பு மேடை வரை தூக்குக் காவடியுடன் அழுதழுது வந்தது எல்லோரையும் கவர்ந்த ஒன்றாகும்.

வட்டுக்கோட்டை சிவன் கோவிலடி, அச்சுவேலி மகாவித்தியாலயத்திற்கு முன்பாக, மற்றும் சாவகச்சேரி, கொடிகாமம், எழுதுமட்டுவாள் போன்ற இடங்களிலெல்லாம் அடையாள உண்ணாநோன்பும் மறியல் போராட்டமும் பரந்தளவில் நடைபெற்றது.

பளையிலிருந்து நாவற்குழி வரையுள்ள பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 6000 மாணவ மாணவிகள் அழுத கண்களும் சிந்திய மூக்குமாக ஊர்வலமாக வந்து நல்லூர் மைதானத்தை நிறைத்தனர். அவர்களின் ஊர்வலத்தில் பார்க்குமிடமெல்லாம் புலிக் கொடிதான் பறந்துகொண்டிருந்தன.

நாவந்துறையைச் சேர்ந்த மக்களின் உணர்ச்சி வெள்ளத்தை இன்று வந்த அவர்களின் ஊர்வலத்தின் மூலம் தான் அறியமுடிந்தது.

முல்லைத்தீவு மாவட்டமெங்கும் எங்கும் உண் ணாநோன் பும் மறியலும் நடக்காத இடமே இல்லை என்று கூறிவிடலாம்.

"திலீபன்" என்ற இந்தச் சிறிய கூட்டிற்குள் இருக்கும் இதயத்தை எத்தனை இலட்சம் மக்கள் தான் நேசிக்கிறார்கள்." மன்னிக்கவும் இலட்சமல்ல கோடி! தமிழ் நாட்டிலும் ஏன்? ஏனைய ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் உள்ள தமிழர்கள் எல்லோருமே திலீபனுக் காக கண் ணீர் சிந்திக் கொண் டிருக் கின் றார்கள்.

ஈகைச்சுடர் லெப்.கேணல் திலீபனின் பதினோராம் நாள்

இன்று திலீபனின் உடல் நிலையைப் பற்றி எழுத முடியாதவாறு என் கை நடுங்குகிறது. அவரது உடலின் சகல உறுப் புகளும் உணர்ச்சியின்றிக் காணப்பட்டன. கை, கால் கள் சில சமயம் தானாகவே அசைக்கின்ற. அவர் இன்னும் உயிரோடு இருக்கிறார் என்பதை இதன் மூலம்தான் அறிய முடிகிறது.

"கோமா" வுக்கு முந்திய நிலையில் (Semi Coma) ஒரு நோயாளி எவ்வளவு கஷ்டப் படுவாரோ அதைப்போல், அவர் உடல் தன்னை அறியாமலே அங்குமிங்கும் புரளத் தொடங்கியது. அவர் படுத்திருந்தது சிறிய கட்டில்... ஆகையால், தேவரிடம் சொல்லி, பெரிய கட்டிலொன்று கொண்டுவரச் செய்து, அதில் திலீபனைப் படுக்க வைத்தோம்.

அப்போதுதான் அவர் கட்டிலில் ஏற்கனவே சிறுநீர் கழித்திருந்ததைக் காண முடிந்தது. மாறன், நவீனன், தேவர் ஆகியோர் மிகக் கஷ்டப்பட்டு அவரது ஆடைகளை மாற்றி, புத்தாடை அணிவித்தனர். அவர் சுயநினைவோடு இருக்கும்போது புது ஆடைகளை அணியும்படி பலமுறை நான் கேட்டபோது, பிடிவாதமாக மறுத்து விட்டார்.

"சாகப் போகிறவனுக்கு எதுக்கு வாஞ்சி அண்ணை புது உடுப்பு?" என்று, தனக் கேயுரிய சிரிப்புடன் கேட்டார்... அதை இப்போது நினைத்துப் பார்க்கிறேன்...

பிற்பகல் 4 மணியளவில் திலீபனின் உடல்நிலை மிகவும் மோசமான நிலைக்கு வந்தது. ஆம் அவர் முழுமையான கோமாநிலைக்கு வந்துவிட்டார்...

மைதானத்தில் கூடியிருந்த சனக் கூட்டத்தினர் திலீபனின் நிலைகண்டு மிகவும் வருந்தினர்... ஒவ்வொருவர் முகத்திலும் சோகத் திரை படர்ந்திருந்தது.

இன்று காலையிலிருந்து, இலட்சக்கணக்கான மக்கள் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து வந்து குவிந்து கொண்டிருந்தனர். லொறிகள், பஸ்கள், வான்கள், கார்கள், ஏன்? மாட்டு வண்டிகளிற் கூட அவர்கள் சாரி, சாரியாக வந்து நிறையத் தொடங்கினர். யாழ்ப்பாணத் திலோ, அல்லது இலங்கையின் எந்தப் பகுதியிலோ இதுவரை எந்த நிகழ்சிக்கும் இப்படி மக்கள் வெள்ளம்போல் நிறைந்ததாகச் சரித் திரமே இல்லை.

வட்டுக்கோட்டையில் இருந்து மட்டும் 50 மாட்டு வண்டிகள் புலிக்கொடிகளை ஏந்திய வாறு, மக்களை நிறைத்துக் கொண்டு





வரிசையாக வந்து சேர்ந்தன.

இன்று பிற்பகல் 1.30 மணியுடன் முல்லைத் தீவில் உண்ணாநோன்புப் போராட்டத்தை ஆரம்பித்த திருச்செல்வம் என்ற விடுதலைப் புலி உறுப்பினர், 60 மணித்தியாலங்களை வெற்றிகரமாகத் தாண்டிவிட்டார்.

மட்டுநகரில் மதன் என்ற விடுதலைப் புலி இன்று காலை 10.40 மணிக்கு, சாகும்வரை உண்ணாநோன்புப் போராட்டத்தைத் திலீபனுக்கு ஆதரவாக ஆரம்பித்தார்.

அதேபோல் திருக்கோணமலையிலும் "கிருபா" என்ற போராளி இன்று மாலை ஆரம்பித்துவிட்டார். திருக்கோணமலை, முல்லைத்தீவு, மட்டுநகர் ஆகிய மாவட்டங்களில்தான் கடந்த 10 ஆண்டுகளாக, சிறீலங்கா அரசு திட்டமிட்டவாறு சிங்கள மக்களைக் குடியேற்றி வருகின்றது.

1983 ஆம் ஆண்டு கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலையிலே படுகொலை செய்யப்பட்ட தமிழர்களில் தங்கத்துரை, குட்டிமணி போன்றோர் மிக முக்கியமானவர்கள். ஜெயிலிலிருந்த சிங்களக் கைதிகளைத் தூண்டிவிட்டு 52 பேர்களைக் கொல்வதற்குத் திட்டம் வகுத்துக் கொடுத்தது வேறு யாருமல்ல, கனம் ஜே. ஆர். ஜெயவர்த்தனாதான்.

52 பேர்களைத் திட்டமிட்டபடி கொலைசெய்த நூற்றுக்கணக்கான சிங்கள ஆயுள் தண்டனைக் கைதிகளும் என்ன பரிசு அளிப்பதென்று ஜே. ஆர். ஒரு வருடமாக மண்டையைப் போட்டு உடைத்தார். கடைசியில் அனைவரையும் அவர்களின் குடும்பங்களுடன் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள "டொலர் பாம்", "கென்ற் பாம்" ஆகிய இடங்களில் நவீன வீடுகளைக் கட்டிக் கொடுத்து, குடியமர்த்தினார்.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் 5000 ரூபா பணமும், 2 ஏக்கர் நிலமும், குடியிருக்க வீடும் வழங்கப்பட்டன. இது மட்டுமா? கொலைகாரர்களின் பிள்ளைகள் படிப்பதற்கு பாடசாலைகளும் ஏற்படுத்தப்பட்டன. இது வெறும் பொய்யல்ல நடந்த உண்மை. என்ன ஆச்சரியம்? உலக வரலாற்றில் எந்த நாட்டிலாவது இப்படி நடந்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

அப்படிப்பட்ட ஜே. ஆர். என்ன சொல்கிறார் தெரியுமா? தான் உண்மையான "காந்தியவாதி" என்று கூறுகிறார். என்ன கேலிக்கூத்து இது! காந்தீயம் அத்தனை மலிவானதா?

இத்தனை இனத்துவேசியான ஜே. ஆருடன் "தமிழர் நலம் காப்பது" என்ற பெயரில் ஓர் ஒப்பந்தம் செய்வதென்றால், அது நடைபெறக் கூடிய காரியமா? அல்லது நடக்கத்தான் விடுவாரா அந்தக் குள்ளநரி?

ஒப்பந்தம் சரிவர அமுலாக வேண்டும் என்பற காகத்தான். அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள ஐந்து கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கேட்டு — திலீபன் சாகும்வரை உண்ணாநோன்புப் போராட்டத்தை ஆரம் பித்தார். அவர் "தமிழீழத்தைப் பிரித்துத் தா" என்று கேட்டு உண்ணாவிரதமிருந்தால் அதை எதிர்ப்பதில் நியாயம் உண்டு: இதை ஏன் எதிர்க்கிறார்கள்? புரியவேயில்லை!

நீங்கள் இருவரும் கையெழுத்துப் போட்ட ஒப்பந்தத்தை ஒரு திலீபன் சரிவர நிறைவேற்றும் படி கேட்கிறான். இது நியாயமான கோரிக்கையா இல்லையா...? இதைத் தமிழ் மக்களே முடிவு செய்யட்டும்.

இன்று (25.09.87) இலங்கைக் கொம்னிஸ்ட் கட்சியின் வடபிராந்தியக் குழு "இந்திய இராணுவத்தின் அத்துமீறலைக் கண்டிக்கிறோம்." என்ற தலைப்பில் ஓர் அறிக் கையைப் பத்திரிகைகளுக்கு வெளியிட்டிருந் தது. வடக்கும் — கிழக்கும் இணைந்த பிரதேச சுயாட்சியையும், நியாயமான சகல உரிமைகளையும் வழங்க முன்வர வேண்டுமென்று அது தன் அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தது.

இன்று திருகோணமலையில் விறகு ஏற்றிச் சென்ற எட்டு அப்பாவித் தமிழர்கள் சிங்களக் குடியேற்றவாசிகளால் வெட்டிக் கொல்லப்பட்டதாக, பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருந்தது.

நாளைமுதல் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து அரச அலுவலகங்களும், தனியார் நிறுவனங்களும், போக்குவரத்துச் சேவை ஊழியர்களும் திலீபனுக்கு ஆதரவாக உண்ணாநோன்பும் மறியலும் செய்து, தமது வேலைகளைப் பகிஷ்கரிக்கப் போவதாக சகல பத்திரிகைகளிலும் செய்திகள் வெளியாகி இருந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகள் "நிதர்சனம்" தொலைக்காட்சிச் சேவை கடந்த 10 நாட்களாக தினமும் இரவு 7 மணிமுதல் விசேட நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி வருகின்றது.

இன்றிரவு திலீபனின் உடல்நிலை மேலும் மோசமடையத் தொடங்கியது. அவர் சுவாசிப்பதற்கு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

திலீபன் சுயநினைவுடன் இருந்தபோது அவரால் விரும்பிக் கேட்கப்படும் பாடல் ஒன்றை, இன்றிரவு மேடையில் ஒலிபரப்பினார்கள்.

அந்தப் பாடல் எனக்கு மட்டுமன்றி, திலீபன் இருந்த அந்த நிலையில் அனைவரினது கண்களில் இருந்தும் கண்ணீரை வர வழைத்து விட்டது.

ஒ! மரணித்த வீரனே!
உன்ஆயுதங்களை எனக்குத் தா
உன்சீருடைகளை எனக்குத் தா
உன்பாதணிகளை எனக்குத் தா
(ஓ?. மரணித்த)

கூட்டத்திலே சில பெண்கள் இந்தப் பாடலைக் கேட்டதும் விம்மி விம்மி அழத் தொடங்கினர்.

அந்த வேதனைமிக்க இரவு சிறிது சிறிதாக மறைந்து கொண்டிருக்கிறது. இரவே! நீ ஏன் இரக்கமில்லாமல் எமைவிட்டு மறைந்து கொண்டிருக்கிறாய்?

ஈகைச்சுடர் லெப்.கேணல் திலீபனின்–12 ஆம் நாள்

1987ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ம் திகதி தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தில் மகத்தான சரித்திரம் படைத்த நாள்.

இன்று அதிகாலை 5 மணிக்கு ஓர் எதிர்பாராத நிகழ்ச்சி நடந்து விட்டது! திடீரென்று மின்சாரம் தடைப்பட்டு விட்டது. எங்கும் ஒரே இருள் மயம். காற்றும் பலமாக வீசத் தொடங்கியது.

பல நாட்களாக திலீபனுடன் சேர்ந்து நானும் எனது நண்பர்களும், முழுமையான தூக்கமில்லாமல் இருந்ததால் இன்று மிகுந்த சோர்வுடன் ஆழ்ந்து உறாங்கிக் கொண்டிருந்தோம். மாறன், ராஜன், தேவர், இரு நவீனாங்கள், திலீபனின் அண்ணன் இளங்கோ, எல்லோரும் போட்டி போட்டுக் கொண்டு தூங்கினோம். பன்னிரண்டு நாட்கள் உடல்களைச் சாறாகப் பிழிந்தெடுத்த அசதித் தூக்கமின்றி, அது வேறொன்றுமில்லை. மேடைக்கு முன்னே அமர்ந்திருந்த ஒருவர் என்னை வந்து தட்டி எழும்பியதும் நான்தான் முதலில் திடுக்கிட்டு எழும்பினேன். கும்மிருட்டில் என்ன செய்வதென்று தெரியாமல். "நவீனன்..." என்று அழைத்தபடி திலீபனின் கட்டிலில் கையை வைத்தேன். அவர் ஆடாமல் அசையாமல் படுத்திருந்தார். அதனால் மனம் அமைதியடைந்தது. அவரின் உடல் "ஜில்" லென்று பனிக்கட்டியைத் தொடுவது போல் குளிர்ந்து காணப்பட்டது.

மனம் "பட பட" வென்று அடிக்கத் தொடங்கியது... மீண்டும் "நவீனன்" என்று அழைத்தேன். நவீனன் எழும்பி விட்டான். ஐந்து நிமிடங்களில் மேடையில் ஒரு பெரிய மெழுவர்த்தி எரியத் தொடங்கியது... மெழுகுவர்த்தியின் ஒளியிலே திலீபனின் முகம் நன்றாகத் தெரிந்தது... ஒரே வினாடிதான்! அதற்குள் அந்த மெழுகுவர்த்தி காற்றின் வேகத்தினால் அணைந்துவிட்டது. பலத்த வீசிய காற்று அதை மீண்டும் எரிய விடுமா? என்பது சந்தேகமாகத்தான் இருந்தது... ஆனால், ஐந்து நிமிடங்களில் மின்சாரம் வந்துவிட்டது... திலீபனின் நிலை எல்லையைக் கடந்துவிட்டது என்பது எனக்கு நன்றாகப் புரிந்துவிட்டது. அதனால், என்மீதே எனக்கு வெறுப்பு ஏற்பட்டது... நாடித்துடிப்பைப் பரிசோதிக்கிறேன். கணிக்க முடிய வில்லை... மிகவும் மெல்லியதாக அடிக்கிறது.... உடனே இரத்த அழுத்தத்தைக் கணிக்கின்றேன்... அது மிகவும் குறைவாக இருக்கிறது... 50/? என்ற நிலையில் ஒரு நோயாளியால் இன்னும் எத்தனை மணித்தியாலங்கள் உயிர் வாழ முடியும் என்பது எனக்குத் தெரியும். உலகமே தலைகீழாகச் சுற்றுவது போல் இருந்தது.

திலீபன் அடிக்கடி கூறிய வார்த்தைகள் எனக்கு நினைவுக்கு வருகின்றன. "வாஞ்சி அண்ணை! எனக்கு என்ன நடந்தாலும் நீங்கள் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட பலவந்தமாகவோ, சுய நினைவற்ற நிலையிலோ தர முயற்சிக்கக்கூடாது... அப்படி என் கோரிக்கைகள் நிறைவேறாவிட்டால் நான் இறக்குமட்டும் எனக்கு எந்தவிதமான சிகிச்சையும் அளிக்கக் கூடாது... சுயநினைவோடு என்றாலும் சரி... சுய நினைவில்லை என்றாலும் சரி... இதுக்குச் சம்பதிக்கிறனெண்டு சத்தியம் செய்து தாருங்கோ..." என்று விடாப்பிடியாக நின்று என்னிடம் சத்தியம் வாங்கிய பிறகுதான் உண்ணாநோன்புப் போராட்டத்தை ஆரம்பித்தார் அவர். அப்படியிருக்க, அவர் விருப்பத்துக்கு மாறாக எப்படி அவருக்குச் சிகிச்சையளிப்பேன்? எப்படி அவருக்கு நீர் ஊட்டுவேன்? மனிதநேயத்தையும் — அதன் தார்ப்பரியங்களையும் மதிக்கும் ஓர் வைத்திய சேவையாளன் என்ற நிலையைத் திலீபன் விஷயத்தில் நிறைவேற்ற விடாமல் என் கைகளைக் கட்டிப் போட்டது எது?... எது? ஆம்ளூ "சத்தியம்!" என்ற இந்த ஐந்து எழுத்துக்களுக்காகத் தானே திலீபன், " அகிம்சை" என்ற நான்கு எழுத்துக்களைக் கொண்ட போராட்டக் களத்தில் குதித்தான்.



கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று உயரிய அம்சங் களினால் வேரூன்றி வளர்த்த விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவன் என்பதால், "கட்டுப்பாடு" என்ற நல்வழியிலே கொடுத்த சத்தியத்தைக் காப்பாற் றுவதற்காகத் திலீபனை என் கண் ணெதிரி லேயே "பலி" கொடுப்பதைத் தவிர, வேறு வழியொன்றும் எனக்குத் தெரியவில்லை. என் கடமையைச் செய்வதற்காக மேடையின் பின் பக்கம் இறங்கிச் செல்கிறேன். அங்கே பிரதித் தலைவர் நிற்கிறார். அவரிடம் திலீபனின் உடல் நிலையின் அபாயகரத்தைப் பற்றி எடுத்துரைக்கிறேன். திலீபனின் உடல் நிலை மோசமாகிவிட்ட விடயம் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் பரவத் தொடங்கியது விடுதலைப் புலிகளின் உறுப் பினர் களும் பொதுமக் களும் மேடையைச் சுற்றி வளைத் துக் கொண்டனர். திலீபனுக்கு கடைசி நிமிடம் வரையும் ஒரு வித சிகிச்சையும் அளிக்க முடியாமல் எமது கைகள் கட்டப்பட்டிருந்ததற்கு வேறு முக்கிய காரணமும் ஒன்று இருந் தது. எமது காதில் விழக்கூடியதாகவே பல எதிரணி உறுப் பினர் களும், எமது இயக்கத்துக்கு எதிரானவர்களும் பேசியதைக் காதால் கேட்டவர்களில் நானும் ஒருவன்.

"புலிகள் தந்திரமாக மக்கள் மனத்தை மாற்று வதற்காக உண்ணாநோன்பு என்ற பெயரிலே தண்ணியைக் குடிச்சுக்கொண்டு இருப்பார் கள்... ஆர் இதைக் காணப்போகினம்? கடைசியில் 5 தீர்மானங் களும் நிறைவேறு மட்டும் வைத்தியம் செய்து ஆளைச் சாகவிடமாட்டினம்... இதுதான் இந்த சாகும் வரை நீர் அருந்தாமல் உண் ணாநோன் பு இருப் பதன் உண்மை..." இப்படியான பேச்சுக் களுக் கு உண் மை வடிவம் கொடுத்து, "புலிகள் பொய்யர்கள்" என்ற கெட்ட பெயரை வர விடாமல் காப்பாற்றுவதற்காகவும் எம்கைகள் கட்டப்பட்டிருந்தனவே தவிர, வேறு ஒன்றுக் காகவும் அல்ல.

எம் கைகள் மட்டும் கட்டுப்படாமல் இருந் திருந்தால், எமது உயிரினும் மேலான, ஈகைச்சுடர் திலீபனை எமது உயிர்களைக் கொடுத்தாவது காப் பாற் றியிருப் போம்... ஆனால்... முடிய வில்லையே? விதி! தன் வலிய கரங்களை மிக நன்றாகவே திலீபனின் கழுத்தில் இறுக்கி விட்டான். உயிருடன் அந்த மனித தெய்வம் நீண்ட நேரம் போராடிக் கொண்டிருப்பதை என் கண்களால் பார்க் கவேண் டிய நிலை ஏற்பட்டமைக் காக, நான் வெட்கப் பட்டேன். வேதனைப் பட்டேன். ஆனால், என்ன செய்ய முடியும்? 265 மணித்தி யாலங்கள் தனது சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை வெற்றி கரமாக நடாத்தி முடித்த அந்த ஈகையர் திலீபன், இன்று காலை (26.09. 1987) 10.48 மணியளவில், எம்மை யெல்லாம் இந்தப் பாழும் உலகில் பரி தவிக்கவிட்டு விட்டுத் தான் மட்டும் போய் விட்டான்.

ஆம்! தமிழர்தம் விளக்கு அணைந்து விட்டது! அணைந் தேவிட்டது! வைத்தியர் சிவகுமார் அவர்கள், திலீபன் இறந்த பின் அவரைப் பரிசோத னை செய்து தனது இறுதியான முடிவைச் சொல்லிவிட்டு, திலீப னின் பாதங் களில் விழுந்து வணங் கி எழுந்த போது, மக்கள் கதறி அழத் தொடங் கினர்... எங்கும் அழுகைச் சத்தம்... விம்மல் ஒலி... சோக இசை... வானமே இடிந்து விட்டதைப் போன்ற வேதனை எல்லோரையும் ஆக் கிரமித்திருந்தது. வானத்து நிலவு கீழே விழுந்து விட்டது போன்ற உணர்வு! காலை 11 மணிக்கு "என்பார்ம்" செய்வதற் காக, அவரது உடலை யாழ். வைத்தியக் கல்லூரிக்கு எடுத்துச் சென்றோம். பிற்பகல் 4.15 மணி யளவில் திரும்பவும் அதே மேடைக்கு முன்பாக அவரின் புகழுடம்பு பொதுமக்களின் வணக்கத்துக்காக வைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் புள்ளி போட்ட, பச்சை யும் — கறுப்பும் கலந்த இராணுவ உடை யும், தொப் பியும் திலீபனுக்கு அணியப் பட்டு, "லெப்டினன்ட் கேணல்" என்ற பட்டமும் அவருக்கு வழங்கப்பட்டது. அவர் செய்த தியாகத்துக்கு அவருக்கு எந்தப் பட்டமும் தகுதியில்லை, அல்லது ஈடாகாது என்பது எமக்குத் தெரியும்...

ஆனால், என்ன செய்ய முடியும்? அவரைப் படுக்க வைத்திருந்த பேழையை, விடுதலைப் புலிகளின் சிவப்பு நிறத்திலான கொடி அலங்கரித்திருந்தது. தந்தை, சகோதரங்கள், உறவினர்கள் ஆகியோர் உடலை வந்து தரிசித் துச் சென் றனர். பெட் டியைத் திறந்ததுமே அவரது அன்புத் தந்தையும், ஓய்வு பெற்ற ஆசிரியருமான, திரு. இராசையா அவர்கள் "ஓ..." என்று அலறியவாறு அவர் உடல் மீது விழுந் து புரண் டு அழத் தொடங்கிவிட்டார். அவரின் அழுகையைத் தொடர்ந் து பொது மக் களும், சிறு பிள்ளைகளைப் போல் குலுங்கிக் குலுங்கி அழுத காட் சி நெஞ் சை உருக் கியது. பொதுமக்கள் மணிக்கணக்காகக் காத்திருந்து, நீண்ட வரிசையிலே வந்து தமது இறுதி வணக்கத்தை மண்ணின் மைந் தனுக்குச் செலுத்தினர். ஈரோஸ் இயக்கத் தலைவர் திரு. பாலகுமார், தமிழகத்திலிருந்து வருகைதந்து தமிழ்நாடு காமராஜர் காங்கிரஸ் தலைவர் திரு. நெடுமாறன், கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோர் கலங் கி அழுதவாறு தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

தலைவர் பிரபாகரன், சொர்ணம், குமரப்பா, புலேந்திரன், சந்தோசம், ஜொனி, பிரபா, இம் ரான், அன் ரன் மாஸ் ரர், சங் கர் அண்ணா, நடேசன் மற்றும் ஏனைய இயக்க உறுப் பினர் களும் தத் தம் இறுதி வணக் கத் தை தமது தோழனுக் குச் செலுத்தினர்.

சாஜகான், நரேன், அருணா, சிறி, ராஜன், தினேஸ் போன்றோர் தம்மைச் சமாளிக்க முடியாமல் விம்மி விம்மி அழுதனர்.

திலீபனின் ஈகைப் பயணத்தில் 12 நாட்கள் அவரின் கூட இருந்து, அவரின் போராட்டத்தில் பங்குபற்றி, வேதனையின் எல்லைக்கே சென்று வந்த எனக்கு, இந்த அதிர்ச் சியிலிருந்து மீள்வதற்கு இன்னும் எத்தனை நாட்கள் தேவையோ நானறியேன்.

ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம்! திலீபனின் உயிர் அநியாயமாகப் போகவில்லை அதற்குப் பதிலாக அவர் ஒரு படிப்பினையை எமக்குக் கற்பித்து விட்டுப் போயுள்ளார்... அகிம்சைப் போராட்டம் என்பது மனித நேயமும், உயர் பண்பும் மிக்கவர்களிடம்தான் நல்ல விளைவு களை ஏற்படுத்தும்... ஆயுதங்கள் தான் எமது தமிழீழப் போராட்டத்தைப் பொறுத்தவரை சரியான பதில் தரமுடியும் என்பதையும், திலீபன் மறைமுகமாக உணர்த்திவிட்டுப் போயிருக்கிறார் என்பதே எமது கணிப்பு... அந்தத் ஈகைச்சுடரின் இலட்சியங்கள் நிறைவேற, எம்மை நாம் அர்ப்பணிப் போமாக!

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த
இனப்படுகொலைகளின் நினைவு
நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு
அடைந்த உங்கள் உறவுகளின்
நினைவு நாள் அறிவித்தல்களையும்
மற்றும் எழுத்தார்வம் மிக்க
வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள்
வரவேற்கப்படுகின்றன.

தங்களது ஆக்கம் தமிழ் தேசியம்,
சமூகம், இலக்கியம் சார்ந்ததாக
இருத்தல் நன்று.
எமது மின்னஞ்சல் முகவரிக்கு
தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு
வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com



சிவஸ்ரீ சிவ.ஜனா குருக்கள்
Shiva Sri S.JANARTHANA KURUKKAL
Priest (JANA IYA)
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கள வைபவங்களையும்
ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி
வைப்பதற்கு அழையுங்கள்
Tel: 647.449.6542
Email: aarthanan@hotmail.com
aarthananyathu@hotmail.com

AIR CONDITONER INSTALLATION SALE
High -Efficiency Air Conditoner Starting From $1,899
HIGH EFFICIENCY HEATING & COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
A/C Leak Check & Refilling the Gas
Repair, Service & Installation
ENERGY STAR Ductless Air Conditions
Is Your Home Keeping You COOL?
TOSHIBA Carrier INVERTER
LENNOX
Carrier, Lennox, Comfortstar
Trane, Ameristar, Goodman
FREE 10 Years Parts Warranty
Furnance, Air Conditioner,Hot Water Tank, Tankless Water Heater, HRV
Fireplace, Attic Insulation, Duct Work, Gas Line For BBQ, Stove, Dryer
Call Now for FREE ESTIMATE S.Kumar 416-993-8001



யாழ். கோட்டையை எவ்விதம் கைப்பற்றினோம்

370 வருடங்களுக்கு முன் பிருந்து கடந்த 26.09.1990 வரை எமது தமிழீழ மண்ணில் இருந்து "வந்துகொண்டிருந்த ஆக்கிரமிப் பின் சின்னமொன்று – ஆக்கிரமிப்பாளனின் கூடாரமொன்று – எம்மால் வெற்றி கொள்ளப்பட்டு விட்டது.

மாறி மாறி ஆக்கிரமிப்பாளர்களின் கொடிகள் பறந்த யாழ்– கோட்டையில் இன்று தமிழன் கொடியாகிய புலிக் கொடி பட்டொளி வீசப்பறக்கின்றது.

இந்த மாபெரும் வரலாற்று மாற் றத்தை ஏற்படுத்திய 107 நாள் முற்று கைப் போரின் இறுதிக் கட்டத்தை –ஓரளவிற்கேனும்–தமிழீழ மக்களிற்கு வழங்கு முயலுகின றோம்.

யாழ்–கோட்டைக்குள்ளிருந்த ஆக் கிரமிப்பு அசுத்தத்தை அப்புறப்படுத்த புலிகளின் எலும்புகள் எவ்விதம் ஈர்க் குக் குச்சிகளாக இருந்திருக்கின்றன என்பதையும் இக் கட்டுரை காட்டிச் செல்கின்றது.

மூன்று புறமும் சுரி நிறைந்த அகழிகள். ஒரு புறம் ஆழமற்ற கடல் ஏரி. நான்கு புறமும் பாரிய அகன்ற மதிற் சுவர்கள் வளைந்து — நெளிந்த படி உட்செல்லும் ஒரே ஒரு ஒடுங்கிய பிரதான வாசல்.

மூன்று பக்கங்களில், எதிரி நிலைகளுக்கும், எமது நிலைகளுக்கும் இடையில் இருக்கும். "முற்ற வெளி" என அழைக்கப்படும் 50-100 யார் தூரம் உள்ள சிறிய வெளி.

மதிற் சுவரின் மேற் குபகுதியிருந் து பார்க்கும் போது, மேற்குறித்த வெற்று நிலங் களிலும், அதை அண் டியிருந் த கட்டிடங்களிலும் நடப்பவைகள் அனைத் தையும் சரிவர நோட்டமிட முடியும்.

அதேசமயம் மதிற்சுவரின் மேல் அடுக்கப் பட்டுக் கிடந்த சாக்கு மூடைகளுக்குப் பின்பும் சுவர்களுக்கு உள்ளேயும் என்ன இருக்கின் றது அல்லது என் ன நடைபெறுகின் றது என்பதை வெளியிலிருந்து பார்க்க முடியாது.

யாழ். டச்சுக் கோட்டை தொடர்பான ஒரு மாதிரி உருவம் ஒன்றை மனத்திரையில் விழுத்த இவைகள் போதுமானவை.

1621 ஆம் ஆண்டு அந்திய ஆக்கிரமிப்பாளர் களான போர்த்துக்கேயர்களிடம் தமிழரின் இராச்சியம் வீழ்ச்சி அடைந்ததைத் தொடர்ந்து எமது மக்களை அடக்கி ஆழ்வதற்காக அமைக்கப்பட்ட கோட்டையானது பின்னர் வந்த ஒல்லாந்துப் படையெடுப்பாளர்களினால் இடித்து அழிக்கப்பட்டு அதே இடத்தில் பலமான ஒரு கோட்டை கட்டப்பட்டது.

அது தான் தற்போதைய கோட்டை ஆகும். இக் கோட்டையானது காலத்திற்குக் காலம் இம் மண்ணை ஆக்கிரமிக்க வந்த ஒவ்வொரு ஆக் கிரமிப் பாளரினதும் கூடாரமாகவே இருந்து வந்திருக்கின்றது.

போர்த்துக்யேர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், இந்தியர், சிங்களவர் என்று ஆக்கிரமிப்பாளர் களின் வசம் இருந்த இக் கோட்டையானது கடந்த 26ஆம் திகதி — திலீபனின் 3வது நனைவு நாளன்று — தமிழர்வசம் ஆகி விட்டது.

ஆக்கிரமிப்பாளர்களின் கொடிபறந்த கோட் டையில் இன்று தமிழர்களின் கொடி பட்டொளி வீசிப் பறக்கின்றது.

கடந்த ஆனி மாதம் 11 ஆம் திகதி எமது வரலாற்று எதிரியான சிங்கள அரசுடன் மூண்டபோரை முகாமானது எமது நேரடி முற்றுகைக்குள் கொண்டு வரப்பட்டது.

இந்த முற்றுகைக்கு முதல் விலையாக 16.06.1990 அன்று ஜெயராஜ் தனது உயிரைக்கொடுத்தான்.

கோட்டைக்குள் இருந்த சிங்களப்படைகள் வெளியேறவோ, அல்லது உள்ளே எந்த விதமான உதவிகளுமோ சென்றடையாத வாறு முற்றுகை மிகவும் இறுக்கப் பட்டிருந்தது.

கோட்டையின் அமைப்பு

ஐங்கோண அமைப்பைக் கொண்ட இக் கோட் டை 5 கொத் தளப் பகுதிகளைக் கொண்டிருக்கின்றது. (பீரங்கி போன்ற பெரிய ஆயுதங் களை நிறுத் திவைக்கக் கூடிய கோட்டை மதில் மேலுள்ள விசாலமான பகுதியே கொத்தளம் எனப் படுகின்றது.)

1. பொலிஸ் நிலையப்பக்கமிருந்த பிரதான வாசலோடும் (தென் பகுதி)
2. விளையாட்டரங்கை நோக்கிய படியும் (தென் கிழக்கு பகுதி)
3. வீரசிங்கம் மண்டபப் பகுதியை நோக்கியும். (வடகிழக்கு)
4. தொலைத் தொடர்பு நிலையத் தை நோக்கியும் (வடமேற்கு)
5. பண்ணைச் சந்திக்கு அருகில் மண் டைதீவை நோக் கியும் (தென் மேற்கு) இக் கொத்தளங் கள் அமைந்துள்ளன.

1 வது, 5வது கொத்தளங்கள் கடலை எதிர் கொள்ளக் கூடிய வகையிலும், மிகுதி மூன்று தரையிலிருந்து வரும் எதிர்ப் புகளை சமாளிக்கக் கூடிய வகையிலும் திட்டமிட்டு அமைக்கப்பட்டிருந்தன.

இக் கோட்டையைச் சுற்றி மூன்று புறத் திலும் சுரி நிறைந்த 30 ஆடி அகலமான அகழி உண்டு. மண்டைதீவை நோக்கி இருந்த கடற்கரைப் பக்கமாக பொலிஸ் நிலையத்தையும், பண்ணைச் சந்தியை யும் இணைத்த படி ஒரு வீதி செல்கின்றது. கடற்கரை வீதி என அழைக்கப்படும் இது கடற்கரைப் பக்கமிருந்த கோட்டை மதி லுடன் ஒட்டியபடி செல்கின்றது.

இப் பாதையுடன் ஒட் டியிருக் கும் இரண் டுகொத் தளங் களையும், (பண்ணைச்சந்திக்கு அருகில் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக) அடைவதற்கு அகழிகளைத் தாண்டத் தேவையில்லை. ஆனால், ஏனைய மூன் று கொத்தளங்களையும் அடைய அகழியைத் தாண்டி 30 அடி உயரமுடைய மதிலையும் ஏறி வெற்றிகாண வேண்டும்.

பிரதான வாசலுடன் இருக்கும் கொத்தளப் பகுதி பிரதான கோட்டையை விட்டு வேறுபட் டு நிற் கின் றது. மற் றைய நான்கையும் போல் 30 அடி உயரமான மதிலின் மேல் இது அமைந் திருக்க வில்லை.

அந்த 30 அடி உயர மதிலுக்கு வெளியே அகழியையும் தாண்டி இந்த விரதான வாசல் கொத்தளம் அமைந்துள்ளது. இந்தக் கொத்தளத்தை தாங்கி நிற்கும் மதிற் சுவரின் உயரம் ஆக 10 அடி மாத்திரமே. இந்தக் கொத்தளம் எம்மால் கைப் பற் றப் பட் டாலும் கூட கோட்டைக்குள்ளே செல்வதைத் தடுக்க முடியும். அகழிக்கு மேலால் இடப்பட்ட பாலமும் ஒடுங்கிய வாசல் கொண்ட பாதையும் மீண்டும் எதிரிக்கு சார்பானதாகவே இருக்கும். அப்பாலத்தை தேவை ஏற்படும் போது எதிரி தகர்த்துவிடுவானாக இருந்தால், நாம் 30 அடி அகலமான அகழியைத் தாண்டியே உட் செல்ல முடியும்.

இவை எல் லாவற் றிற் கும் மேலாக பண்ணைச் சந்திக்கு அருகில் மண்டைதீவை நோக் கியிருந் த கொத் தளப் பகுதி கோட் டையைப் பொறுத் தளவில் ஒரு பலவீனமான இராணுவ அம் சத் தைக் கொண்டிருந்தது. 30 அடி உயர முள்ள மதில் மீ தேறி இக் கொத் தளம் வெற் றி கொள்ளப்படுமாக இருந்தால் அகழியைத் தாண்டாமலேயே கோட்டையின் உள்ளே சென்றுவிடமுடியும்.

இதுதவிரக் கோட் டையின் கிழக் குப் பகுதியிலும், மேற்குப் பகுதியிலும், அகழிக்கு வெளியே மறைவானதும், பாதுகாப் பானதுமான காவல் அரண்களும், காவற் கோபுரங்களும் உள்ளன. இவை "சின்னக் கோட்டை" என அழைக்கப்படும். அகழியை அடைய முயற்சிப்பவர்களை அங்கிருந்து தாக்கி தடுக்க முடியும்.

எமது நிலைகள்

கோட்டையைச்சூழ் தரைப்பகுதியாக உள்ள மூன்று புறத்திலும் எமது காவல் அரண்கள் இருந்தன.
கோட்டைக்குத் தென் கிழக்கே அமைந்திருந்த பொலிஸ் நிலையக் கட் டிடங் களிலும், விளையாட்டரங்கிலும் அமைக்கப்பட்டிருந்த எமது அரண்களும் கோட்டைக்குத் தென் மேற்குத்திசையில், தொலைத் தொடர்பு நிலையத்தக்கு முன்னால் பண் ணைச் சந்தியில் அமைக்கப்பட்டிருந்த எமது காவல் அரண் களும் எதிரியின் இரண்டு கண் களுக்கும் நடுவே நெற்றியில் கூடாரமடித்து இருப்பதைப் போன்றது. இவற்றை கோட்டை முகாமுக்கு மிக நெருக்கமாக சுமார் 50 அல்லது 75 யாரிற்கு உட்பட்ட நிலையில் அமைத்திருந்தோம்.

இவைகள் தவிர தொலைத் தொடர்பு நிலையம், தபால் நிலையம், வீரசிங்கம் மண்டபம், நூல்நிலையக் கட்டிடம் உட்பட கோட்டையைச் சுற்றியிருந்த அனைத்துக் கட்டிடங்களிலும் எல்லா மரங்களுக்குக் கீழும், மதிலோரங்களிலும், கழிவு வாய்க்கால் களிற்குள்ளும் கறையான் புற்றைப்போன்று எமது நிலைகளை அமைத்திருந்தோம்.

கோட்டை முற்றுகையைப் பலப்படுத்து வதற்காக மண்டைதீவிலும் எமது அணி ஒன்று நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

இவைகள் தவிர யாழ். நகரப் பகுதிக்குள்ளும், கரையோரப் பகுதிகளிலும் எமது வீரர்கள் காவல் புரிந்தபடி இருந்தனர்.

இந்த நிலையில் கோட்டைக்குள்ளே உணவுப் பொதிகளைப் போடும் முயற்சியில் விமானங் கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை எதிரியின் இம் முயற் சிகள் அவனுக்கு வெற்றியைக்

யாழ்.கோட்டை

கொடுக்கவில்லை. பொதிகளில் அரைப்பங்கு மட்டுமே கோட்டைக்குள்ளே வீழ்ந்தன மிகுதி, பண்ணைக் கடலினுள்ளும், அகழிக்குள்ளும், வெளிகளிலும், எமது காவல் அரண்களுக்கு அருகிலும், சில வேலைகளில் எமத காவல் அரண்களைத் தாண்டி மிகத் தொலைவிலும் வீழ்ந்தன.

இதற்கெல்லாம் காரணம் பொதி போடும் சந்தர்ப்பங்களில் விமானம் இருக்கும் உயரம் தான். வானத்தில் குறிப்பிட்ட உயரம் வரை துப்பாக்கி ரவைகளினால் நாங்கள் கூரை அமைத்திருந்தோம் அக்கூரையைத்தாண்டி உள்ளே எந்த விமானமும் வரத் துணிய வில்லை.

எதிரியின் நிலைகள்

12 அடி அகலமும், ஏறக் குறைய 500 யார் நீளமும் கொண்ட கோட்டையின் சுற்று மதிலில், பாரிய சுடுபடைக் கலங்களை நிறுத்தி வைக்கக்கூடிய 5 கொத்தளங்கள் உள்ளன.

30 அடி உயரம் கொண்ட இந்த மதிற்சுவரில் மேலே மண்மூடைகள் வரிசையாக, இடை வெளிகள் எதுவுமின்றி அடுக்கிவைக்கப் பட்டிருந்தன. அந்த மண்மூடைகளுக் கிடையில் நூற்றுக்கணக்கான துப்பாக்கி சுடும் தளங்களும் அமைக்கப்பட்டிருந்தன.

இவை தவிர மண்டைதீவுக் கடற்பரப்பில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கடற்படையின் பீரங்கிக் கப்பல்களும், போர் விமானங்களும், உலங்குவானூர்திகளும் கோட்டை முகாமின் காவல் அரண்களாக கடலிலும், வானத்திலும் இருந்து செயற்பட்டு வந்தன.

1985ஆம் அண்டின் நடுப் பகுதியின் பின் எம்மால் சுற்றி வளைக்கப்பட்ட கோட்டை பிரதான முகாமின் இரு கரங் களாக பொலிஸ் நிலையக் கட்டிடங்களும், தொலைத்தொடர்பு நிலையக் கட்டிடமும் இருந்தன.

1987 ஆம் ஆண்டு கோட்டை முகாமின் கரங்களாக விளங்கிய பண்ணை பொலிஸ் விடுதிக் கட்டிடங்கள் மீதும், தொலைத் தொடர்பு நிலையத்தின் மீதும் தாக்குதலை நடாத்தி கோட்டை முகாமின் உயிர்வாழ்வுக்கு கேள்விக்குறி ஒன்றைப் போட்டு வைத்தோம். அதன் பின்னர் இந்த 107 நாள் முற்றுகையின் போது இக் கோட்டையைக் கைப்பற்றுவதற்கு பெரிய தாக்குதல் முயற்சிகள் இரண்டினை மேற்கொண்டோம்.

முதலாவது முயற்சி

18.06.190
அன்று நள்ளிரவு 12:00 மணிக்கு யாழ். நகரை உலுக்கிக் கொண்டு ஒரு இடியோசை கேட்டது அதைத் தொடர்ந்து மழையென புலி வீரர்கள் கோட்டையைக் கைப்பற்ற விரைந் தனர்.

மண்மூடைகள் நிரப்பப்பட்ட வாகனங்களின் துணையுடன் கோட்டை மதிலை வெற்றி கொள்ள முனைத்தோம். இம்முயற்சியில்

1. கப்டன் அந்தோனி — அ. சத்திய சீலன் - மன்னார்
2. கப்டன் சேரன் - க. சேனாதிராசா — முல்லைத்தீவு
3. லெப். பூபதி — கு. குமாரசங்கர் - திருகோணமலை
4. லெப். வக்கீல் - செ. உருத்திரதாஸ் - யாழ்ப்பாணம்
5. சுருளி — நந்தபாலன் - யாழ்ப் பாணம்.

எமது போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

இரண்டாவது தாக்குதல் முயற்சிக்கான தயாரிப்பு

தாக்குதலுக்கான திட்டம் தீட்டப்பட்டவுடனேயே கோட்டையின் பலத்தையும் பலவீனத்தையும், முதலில் தரம் பிரித்தோம்.

அகழிகளுடன் கூடிய மூன்று புறத்தையும் கோட்டையின் பலமாகவும், மண்டைதீவை நோக்கி இருந்த கோட்டையின் கடற்கரை வீதிப்பக்கத்தை அதன் பலவீனமாகவும் எடுத்துக் கொண்டோம்.

50-100 யாருக்கு இடைப்பட்ட வெளியை நோக்கி கோட்டை மதில்மேல் இருந்தபடி எதிரி விசிறப்போகும் ரவை மழைக்குள் நனை யாது கோட்டை மதிலை சென்றடைவது என்பது யம கண்டத்தூடு செல்வதற்கு ஒப்பானதாகும்.

அச் சிரமத்தை ஓரளவு சமாளிக்க வாகனங் களைப் பயன் படுத்தலாம் என்றும் தீர்மானித் தோம். அவ்வாறு வாகனங்களைப் பயன் படுத்தத் தீர்மானித்த போது கோட்டையின் கொத்தளப் பகுதியிலிருந்த பீரங்கிகள் (Cannon) அதற்கு அச்சுறுத்தலாக இருந்தன. எமது வீரர்களை ஏற்றிச் செல்லும் ஒரு வாகனம் பீரங்கி வேட்டிற்கு இலக்காகுமாக இருந்ததால் அது எமக்குப் பலத்த இழப்பைத் தரும் - எனவே, அதற்கு ஏற்றாற் போல் கனரக வாகனங்களை எடுத்து எமது தொழில் நுட்பத் தின் மூலம் கவச வாகனங்களாக உரு மாற்றப்பட்டன.



வாகனங்களைப் பயன்படுத்துவது என்ற வுடன் இன்னுமொரு புதிய சிக்கல் எம் முன்னால் நின்றது. அதாவது கோட்டையைச் சுற்றிய எதிரியின் து வான் தாக்குதல் களினாலும், எமது எறிகணைத் தாக்குதலினா லும் பாதிக்கப்பட்டுக் குண்றும், குழியுமாக இருந்த பாதையினூடு இருட்டில் இந்த கனரக வாகனங்களை ஓட்டிச்செல்வது, ஒரு பெரிய பிரச்சனையாக எம் முன் இருந்தது. அதை வெற்றி கொள்ள நிலவு ஒளி மிகுந்த ஒரு நாளில் தாக்குதல் நடாத்தத் திட்டமிடப்பட்டது.

இத் தாக்குதற் திட்டத்தை எமது யாழ், மாவட்டத் தளபதி திரு. பானு தலைமை தாங்கித் தயாரித்தார்.

கோட்டைச் சுற்றாடலின் பலங்கள், பலவீனங் கள், எமது தாக்குதற் தந்திரோபாயங்கள், அதைச் செயற்படுத்தும் யுக்திகள் என்பன வற்றை தாக்குதல் குழுவினருக்குத் தெளிவாக் கினார்.

05.08.1990 அன்று பின்னிரவு நேரம் தாக்குதலுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. எம்மால் தயாரிக்கப்பட்ம எறிகணைகள் கோட்டைக்குள்ளே சரமாரியாக ஏவப்பட்டன. 30 அடி உயர மதில்களுக்குள் விழுந்து வெடித்த அக் குண்டுகளின் அதிர்வால், கோட்டை கிடுகிடுத்தது. உள்ளே இருந்து அவலக்குரல்கள் எழுந்தன.

கோட்டை மதிலின் மேலிருந்த துப்பாக் கிகளும், கோட்டை மதிலை நோக்கி இருந்த துப்பாக்கிகளும், பேசிக்கொள்ளத் துவங்கின.

எமது கவச வாகனங்கள் கோட்டை மதிலை அண்மிக்க முன்னரே விமானங்களும் வந்து விட்டன. கொத்தளப் பகுதியிலிருந்து ஏவப்பட்ட பீரங்கிக்குண்டுகளும், விமானத்திலிருந்து வீசப்படும் ரொக்கற் குண்டுகளும் எமது வாகனங்களைக் குறிவைத்தன.

கோட்டை எங்கே இருக்கின்றது, கடல் எங்கே இருக்கின்றது. கடற்கரை வீதி எங்கே இருக் கின்றது, என்பதை இனங்கண்டு கொள்ள முடியாத அளவுக்கு ஒரே புகைமண்டலமாகக் கிடக்கின்றது.

பண்ணைச் சந்திப்பக்கமாக மண்டைதீவை நோக்கி இருந்த கொத்தளத்தின் மீது எதிரியின் துப்பாக்கிகளை அகற்றி விட்டு எமது துப்பாக் கிகளை ஏற்றுவதற்கு முயற்சித்துக் கொண் டிருந்தோம்.

ஒரு கணத்துக் முன்னால் வீசப்பட்ட விமானக் குண்டு ஒன்றினால், பண்ணைச் சந்திக்கு அருகே வீதியின் நடுவே ஏற்பட்ட பாரியகுழி ஒன்றினுள் முன்னே சென்ற சிறிய பாரம் தூக்கி ஒன்று வீழ்ந்து விட்டது. பின்னால், வந்த இராட்சத பாரம் தூக்கி அதை இடித்துக் தள்ளியபடி முன்னேறியது.

பண்ணைச் சந்திப் பக்கமிருந்த கொத்தளத் தை வெற்றிகரமாகத் தாண்டி, கோட்டையின் பின் புறத்திலிருந்த அவசரகாலத்தில் பயன் படுத்தும் சிறிய வாசலை நோக்கி முன் னேறியது. (அவ் வாசல் சீமெந்துச் சுவர் போட்டு மூடப்பட்டுக் கிடந்தது.)

இவ் இரகசிய வாசலுக்குப் போகுமுன்னர், வீதி ஓரத்தில் இருந்த, கோட்டைமீதான முதலாவது தாக்குதலில் நடாத்தப்பட்ட குண்டுவெடிப் பினால் ஏற்பட்ட மிகப் பெரிய கிடங்கு ஒன்றினுள் எதிர்பாராத விதமாக பாரம் தூக்கி வீழ்ந்து விட்டது.

பாரம் தூக்கிகளை மதிலோரம் கொண்டு சென்று, அதன் உதவியுடன் மதிலின் மேல் இருந்த எதிரிகளின் தலைக்கு மேலே எமது வீரர்களை இறக்கி அவர்களுக்குச் சமாதி கட்ட எடுத்த முயற்சி இரண்டு பாரம் தூக்கிகளின் இழப்பினால் நிறைவேற்ற முடியாது போய் விட்டது.

யாழ் கோட்டையின் ஒரே ஒரு பலவீனமான பண்ணைச் சந்திப் பக்கமிருந்த கொத்தளத் தைக் கைப்பற்றுவது எமது பிரதான நோக் கமாக இருந்தது. பாரம் தூக்கிமூலம் மேலே சென்று மதிலேற இருந்த புலிவீரர்களின் எண்ணம் கை கூடாமல் போக சுய முயற் சியுடன் மதிலேறத் தீர்மானித்தார்கள். பெரிய ஏணி ஒன்றைக் கொண்டு வந்து, மதிலோரம் வைத்து அதன் உதவியுடன் ஏறத் தொடங் கினார்கள்.

அதேசமயம் பலத்த எதிர்ப்பை கொத்தளப் பகுதியிலிருந்து எமது வீரர்கள் சந்தித்துக் கொண்டிருந்தார்கள். புளியமரம் உலுப்பப் படும் பொழுது பொல பொலவென புளியம் பழம் விழுவதைப் போன்று, கைக்குண்டுகள் மேலிருந்து விசப்பட்டன. அவை விழுந்து வெடித்தபோது எமது வீரர்கள் காயமடைந் ததுடன் ஏணியும் உடைந்துவிட்டது. உடைவு பொருத்தப் பட்ட இடம் வளைந்ததினால் மேலும் ஏணியின் உயரம் குறைந்தே இருந்தது. இதனால் மதிலின் மேற்பகுதியை அடையமுடியவில்லை.

மீண்டும் ஏணி திருத்தப்படுகின்றது. மதிலடிவாரத்தில் ஒரு திருத்த வேலை நடைபெறுகின்றது. இதற்கு உதவுவதற்காக மதிலேறவந்த குழு, அருகிலுள்ள அகழிகளுக் கருகிலும், கடற்கரையிலும் நிலை எடுத்து மதில் மேலுள்ள எதிரிகளுடன் போரிட்டுக் கொண்டிருந்தார்கள்.

மதிலின் மேற்பகுதிக்கு சில அடிகள் கீழே சுவரைப்பிய்த்த படி ஒரு அரச மரம் முளைத் திருந்தது. குண்டு வெடிப்பினால் ஏற்பட்ட வெளிச்சங்களில் எமது வீரர்கள் அதைக் கண்டனர்.

திருத்தப்பட்ட ஏணி அரச மரக்கிளையுடன் சாத்தப்பட்டு அதில் ஏறி அசையாதவாறு கிளையுடன் கட்டப்படுகின்றது. இப்பொழுது அதில் ஏறி கொத்தளத்தை வெற்றி கொள்ளும் முயற்சி நடைபெறுகினற்து. எமது தோழர்கள் 5 பேர் ஏணியின் உதவியுடன் கொத்தளத்தை அடைந்து விட்டனர். கொத்தளத்தில் அமைக்

யாழ்.கோட்டை

கப்பட்டிருந்த பதுங்கு குழிக்குள் இருந்து எதிரிகளை ஒழிக்கும் முயற்சி நடைபெற்றது.

ஒரு இயந்திரத் துப்பாக்கியை இயக்கிய படி கொத்தளத்துக்கு அருகில் இருந்து போராடிய டயசுக்கு அருகில் செல் குண்டொன்று வீழ்கின்றது. இவனுக்கு அருகில் இருந்த சீலன் இருகால்களையும் இழக்கிறான். அந்த நிலையிலும் டயசினது இயந்திரத் துப்பாக் கியையும் கையில் எடுத்த படி மெது மெதுவாக ஊர்ந்து எமது தோழர்களை நோக்கிச் செல்கிறான். சில யார் தூரம் சென்றதும் மேலும் செல்ல இயலாமல் மடிகிறான்.

கொத்தளப் பகுதியில் நிற்பவர்களுக்கு உதவவென சென்ற கண்ணாடி, ஜோனி, புரட்சிமாறன், நெல்சன், அனீபா, ஜேம்ஸ், வசிட்டன், சந்துரு, பிலிப்ஸ், நிசாந்தன் ஆகியோரும் மதிலடிவாரத் திலேயே வீழ்கின்றனர்.

கொத்தளத்தின் மேற்பகுதியில் நடந்த சண்டையிலேயே லோசனும், அனிபாவும் இறக்கின்றார்கள். எம்மால் கைப்பற்றப்பட்ட கொத்தளப்பகுதியை பலப்படுத்தி அங்கிருந்து முன்னேறுவதற்குத் தேவையான ஆட்பலம் மேலே இருக்கவில்லை. அடிவாரத்தில் நீண்ட நேரம் நடந்த சண்டையில் குழுத் தலைவர்கள் உட்பட பலர் காயமடைந்துவிட்டனர். சிலர் இறந்து விட்டனர். எனவே கைப்பற்றப்பட்ட கொத்தளத்தை ஸ்திரப்படுத்தமுடியவில்லை.

பெண் போராளிகளின் மனோதிடம்

கோட்டையின் பிரதான வாசல் பகுதியை ஆண்போராளிகளும், பெண்போராளிகளும் சேர்ந்து, ஒரு உச்சத் தாக்குதலைத் தொடுத்து கைப்பற்றுவதற்கான திட்டம் தீட்டப்பட்டது. ஆனால், கோட்டை வாசலைக் கைப்பற்றும் பொறுப்பை மகளிர் படை அணியிடமே தரவேண்டும் என பெண்கள் தரப்பினர் வற்புறுத்திக் கேட்டனர்.

அவர்களது வேண்டுகோள் ஏற்கப்பட்டு வாசல் பறத்தை நேரடியாகச் சென்று கைப்பற்றும் பொறுப்பு பெண் புலிகளின் அணியிடம் வழங்கப்பட்டிருந்தது. அதே சமயம் வாசலுடன் இருந்த தென் பகுதிக் கொத்தளத்தைக் கைப்பற்ற ஆண்கள் அணி சென்றது. இந்தக் கொத்தளமும், வாசல்புறமும் பொலிஸ் நிலையக் கட்டிடத்தில் அமைக்கப்பட்டிருந்த எமது காவல் அரணிலிருந்து சுமார் 40 யார் தூரத்திலேயே இருக்கின்றன. நாம் கோட்டை வாசலைக் கைப்பற்ற முயற்சிப்போம் என்பது எதிரிக்கு நன்கு தெரியும் எனவே, கோட்டை வாசலை மிகவும் பலப்படுத்தி இருந்தான். தாக்குதலின்போது எமக்குப் பெரிதும் முட்டுக் கட்டையாக இருந்த விமானங்களும் கோட்டை வாசல் பகுதியை அண்டிய இடங்களையே தமது பிரதான இலக்காகக் கொண்டிருந்தன. கோட்டை வாசல் பகுதியிலிருந்தும், அதை அண்டிய கொத்தளம் மற்றும் மதில் மேலிருந்தும் சார மாரியான கைக்குண்டுத் தாக்குதல்களை எதிரி நடாத்திக் கொண்டிருந்தான்.

கோட்டை வாசலை நோக்கிய பாதையானது தண்ணீர் ஓடும் ஒரு வாய்க்காலைப் போன்றது. வாய்க்காலின் புருவப் பகுதியைக் காப்பரணாகக் கொண்டு வாசலில் உள்ள எதிரி நிலைகளைக் கைப்பற்ற சங்கீதாவின் தலைமையிலான பெண்கள் அணி சாதுரியமாகவும், துணிச்சலுடனும் முன்னேறியது. எதிரி நிலையிலிருந்து 5-6 யாருக்குச் சென்று விட்டார்கள். (அங்கிருந்தபடி சாரமாரியான தாக்குதலைத் தொடுத்துக் கொண்டு எதிரியின் அரணுக்குள்ளே பாய்ந்து சென்று கையெறிகுண்டை உள்ளே வீசி அரணுக்குள்ளேயே எதிரிக்குச் சமாதிகட்ட முனைந்தார்கள்). பெண்கள் அணிக்கு உதவியாக மறுபுறத்தில் ஆண்கள் அணியானது கோட்டை வாசலின் அருகிலும், மேலேயும் இருந்த எதிரியின் அரண்களைத் தாக்கி அவர்களைத் திசைதிருப்பிக் கொண்டிருந்தார்கள்.


காற்றையே காப்பரணாக்கி கோட்டை வாசலைக்கைப்பற்ற முனைந்த லெப். சங்கீதா, மாதங்கி, அநுரா, மாதுரி, ஆகியோர் கோட்டை வாசலிலேயே தீரத்துடன் வீழ்ந்து போனார்கள்.

அதே சமயம் வாசலுக்கு அருகிலிருந்த கொத்தளத்தைக் கைப்பற்றச் சென்ற ஆண் போராளிகளில் பலர் காயமடைந்தும், சிலர் இறந்தும் விட்டனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் டாங்கி போன்று வடிவமைக்கப்பட்ட புல்டோசர் ஒன்று பொலிஸ் நிலையப் பின் பகுதியிலிருந்து கடற்கரை வீதி வழியாக தென்பகுதிக் கொத்தளத்தை நோக்கி செல்லத் துவங்கியது.

விமானத்திலிருந்து வீசப்பட்ட வெளிச்சக் குண்டுகளும், மற்றும் விமானத்திலேயே பூட்டப்பட்டுக் கிடந்த சக்தி வாய்ந்த மின் விளக்

கோட்டையை முற்றுகைக்குள் வைத்திருந்த எமது காவலரண்கள்



1. பண்ணைச்சந்தியில் 2. தொலைத்தொடர்பு நிலையப் பகுதியில் 3. கொட்டடி இடுகாட்டில் 4. பெரிய தபாற்கந்தோரில் 5. வீரசிங்கம் மண்டபத்தில் 6. திறந்தவெளி அரங்கில் 7. பொது நூல் நிலையத்தில் 8. விளையாட்டரங்கில் 9. பொலிஸ் நிலையத்தில்.

கோட்டையின் பிரதான பகுதிகள்

அ. முற்றவெளி ஆ. கோட்டை அகழி இ. அகழி வெளிப்புறச்சுவர் ஈ. கோட்டையின் கொத்தளங்களும் உட் சுவரும் உ. கோட்டையின் பிரதானவாயில் ஊ. ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் புதுமுதுமிட்டு ஒடி வெளியேறிய பாதை (கோட்டை பெண்கள் சிறைச்சாலைக்கு அருகிலிருந்த முன்னைய வாயில். இது முன்னர் கழிவுகள் அகற்றப் பயன்பட்டது. பின் கதவு அகற்றப்பட்டு கல்லால் அடைக்கப்பட்டிருந்தது. அதனை அகற்றி அதனூடேதான் ஸ்ரீ லங்கா இராணுவம் புதுமுதுமிட்டோடியது).



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE
FRESH START

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)


மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy

DSC DEBT SOLUTION CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

வங்கிக் கடன்களில்
80% வரையிலான
கழிவு
Reduce your
debts upto
80%



Suren Sornalingam
Certified Insolvency Counsellor

Tel: 647-274-2832
Fax: 647-797-1991
www.debtsolutioncanada.ca

யாழ்.கோட்டை

குகளினதும் ஒளியில் புல்டோசரின் நகர்வை எதிரி கண்டு விட்டான். விமானத்திலிருந்து ஏவப்பட்ட குண்டோன்று புல்டோசரின் முன் பகுதியைத் தாக்கியது. கவசமயப் படுத்தப்பட்டிருந்தபடியால் வாகனம் உடைந்து சிதறவில்லை. ஆனால், சாதாரண தாங்கும் சக்திக்கு அப்பாற்பட்ட அதிர்வின் காரணமாக புல்டோசரின் சாரதி மயக்கமடைந்து விட்டான். டோசருக்குள்ளே இருந்த சக தோழர்கள் தண்ணீரைத் தெளித்து சாரத்தியின் மயக்க நிலையைப் போக்கினர். மீண்டும் டோசர் கொத்தளப் பகுதியை நோக்கி தாக்குதலை நடாத்திக் கொண்டு முன்னேறியது.

இந்தத் தென்புறக் கொத்தளப் பகுதியைக் கைப்பற்ற முனைந்த அணிகள் பலத்த எதிர்ப்பைச் சந்தித்தபடி தீரமுடன், உயிரைக் கொடுத்துப் போராடிக் கொண்டிருந்தார்கள். தன்னந்தனியாக ஒரு தோழன் கொத்தளப் பகுதியில் ஏறி அங்கிருந்தபடி எதிரி மீது கைக்குண்டுத் தாக்குதலை நடாத்தினான். இருந்தும் இந்தமுனையில் 13 தோழர்களது இழப்பும் மேலும் பலர் காயமடைந்தும் இருந்தபடியால் கொத்தளத்தில் ஏறித் தாக்குதலை நடாத்துவது இயலாமல் போய்விட்டது.

இக் கொத்தளப் பகுதியைக் கைப்பற்றும் அணிக்கு பொறுப்பாக இருந்த குழுத் தலைவன் வைத்திருந்த துப்பாக்கி குண்டுபட்டு இயங்காது நின்றுவிடுகின்றது. புதிய துப்பாக்கி, ஒன்றைப் பெறுவதற்காகப் பின்னால் இருந்த பொலிஸ் நிலையக் காவல் அரணுக்குச் சென்று பதிய துப்பாக்கி ஒன்றைப் பெற்று வந்து மீண்டும் கொத்தளப் பகுதியில் நின்ற போராடினான்.

தென்பகுதிக் கொத்தளத்துடன் இருந்த கோட்டை வாசலை இருபுறத்திலும் நெருங்கி அதைக் கைப்பற்றும் முயற்சியில் பெண் புலிகள் சங்கீதா, மாதங்கி, மாதுரி, அனுரா, மற்றும் கருணாநிதி, சரத்பாபு, விக்ரம், கெனடி. நிசாந்தன், அலீப், சபேசன், மோகன், எட்றிச் அகிய பதிமூவர் வீரச்சாவடைந்தனர்.

இதே சமயம் தொலைத் தொடர்பு நிலையப் பகுதியிலிருந்து வட-மேற்கு கொத்தளப் பகுதியை கைப்பற்ற முனைகையில் யசோவும் இந்தமுனையில் காயமடைந்த வீரர்களை அப்புறப்படுத்திக் கொண்டிருந்த பில்லாவும் வீரச்சாவைத் தழுவுகின்றனர்.

காயமடைந்து மயக்க நிலையில் உயிருடன் இருந்த பெண் போராளி ஒருவர் காலையில் மயக்கம் நீங்கியும் வெளியேற மடியாத நிலையில் அடுத்த நாள் இரவு – ஏறக்குறைய 15 மணிநேரத்தின் பின்னர் உயிருடன் மீட்கப்பட்டார்.


இந்த முயற்சியில் 27 தோழர்கள் தமது உயிர்களை அர்ப்பணித்துக் கோட்டையைக் கைப்பற்ற முனைந்தனர்.

இப் பாரிய தாக்குதலின் தாக்கங்களும், வெற்றி கொண்டுவிட தீரமுடன முனைந்த புலிவீரர்களின் மன உறுதியும், போராடும் ஆற்றலும் சிறீலங்கா அரசுக்கு கலக்கத்தை ஊட்டியது. எனவே கோட்டையை மீட்பதற்காக பாரிய பொருட்செலவில் ஒரு படை எடுப்பொன்றை நடாத்தத் தீர்மானித்தது.

4000 ற்கும் மேற்பட்ட படையினரையும், 8 போர் விமானங்களையும், மூன்று அவ்ரோ விமானங்களையும் 6 ஹெலிகொப்டர்களையும், 2 கடற்படைப் பீரங்கிக் கப்பற் பிரிவையும் இதற்கு இடுபடுத்தத் தீர்மானித்தது.

ஊர்காவற்துறையிலிருந்து சுமார் 12 மைல் நீளமுள்ள மண்டைதீவுக்கு படையெடுத்து, அங்கிருந்து சென்று கோட்டையைச் சுற்றியுள்ள புலிகளின் நிலைகளை உடைத்து – கைப்பற்றி, அங்கிருந்து வைத்தியசாலை, கச்சேரி உட்பட நகர்ப்புறத்தையும் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர சிங்கள அரசு கனவு கண்டது.

இத் திட்டத்திற்கு ஒப்பறோசன் போட் (Operation Fort) எனப் பெயரும் இட்டனர். சதுப்பு நிலத்தையும், நீண்ட வெளிகளையும் கொண்ட புவியில் அமைப்பை உடைய தீவகத்தில் ஒரு அடி கூட எடுத்துவைக்க முடியாத சிங்கள இரணுவத்தினர் வான் படைகளின் உதவியுடன் மண்டைதீவைக் கைப்பற்றினர். மண்டைதீவுச் சண்டையில் 44 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.



கோட்டையை மீட்பதற்காக சிங்களப்படைகள் நடாத்திய படையெடுப்பின் பாதைகள்

மண்டைதீவில் இருந்தபடியே கோட்டையைப் பிடிக்க இராணுவம் திட்டம் தீட்டியது. 300 கிலோ எடை கொண்ட பீப்பாக் குண்டுகளையும் 50 கிலோ கொண்ட விமானக் குண்டுகளையும் வீசி யாழ். நகரப் பகுதிகளில் இருந்த கட்டிடங்கள் அனைத்தையுமே அழிக்க முயன்று கொண்டிருந்தது.

இத்துடன் நேபாம் குண்டுகளையும், நச்சுக் கிருமிகளைப் பரப்பும் குண்டுகளையும், இரசாயனக்குண்டுகளையும் வீசியது.

13.09.1990 ஆம் ஆண்டு, அதிகாலை 5:00 மணியளவில் சீனத்தயாரிப்பான "வை12" ரக விமானமொன்று யாழ். நகரப் புகுதிக்கு மேலாகப் பறந்து 300 கிலோ கொண்ட பீப்பாக் குண்டுகளை வீசத் தொடங்கியது. சிறிது நேரத்தில் நடைபெற இருந்த தனது படை எடுப்பிற்கு இறுதிநேர உதவியாக புலிகளின் நிலை என தான், கருதிய இடங்களில் குண்டுகளை வீசியது.

அதனுடன் கோட்டைக்குத் தெற்கே ஒரு கி.மீ. தூரத்திலுள்ள சிறுத்தீவு என்ற இடத்தில் இரண்டு கடற்படைப் பீரங்கிக் கப்பல்களும் நிறுத்தப்பட்டிருந்தன.

சரியாக 5:55 மணிக்கு கோட்டைக்குள் ளிருந்து எமது காவல் அரண்கள் அனைத்தையும் நோக்கி சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அது ஒரு வழமைக்கு மாறான சம்பவமாகத் தென்பட்டது.

மண்டைதீவுக் கடலுக்குள் இருந்த எமது வீரர்களின் கண்களை கோட்டையின் மீது பதிப்பிப்பதற்காகவே அது செய்யப்பட்டது. என்பதை சில நொடிகளில் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

Call today to Save energy

Free Estimate! Call today

$50 OFF When you order more than $1000

Broken Glass...? (Door & window) We will fix it within 24 hour.



Let us help with...

- Replacement (Door & Windows)
- Custom Door & Windows
- Front Door & Patio Door
- Garden Door
- Door & Windows Re-Caulking (Important)
- Painting Doors & Windows
- Basement Separate Entrance Door
- Home Painting
- Spotlights installation
- California Shutters

PTR DOORS & WINDOWS

-Over 10 years experience-

Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com



PEEL TAE KWON-DO

PEEL TAE KWON DO

Family Martial Arts

Trusted Local Taekwon - Do Training School



* Over 20+ Years Taekwon-Do Training Experience
* For All Your Taekwon-Do, Martial Arts, Kickboking, Self Defense and Yoga Needs
* Top Quality Training for Kids, Teens and Adults

2016 READERS' CHOICE AWARDS



Ebenezer Location:
4255 Ebenezer Road,
Unit #25
Brampton, Ontario. L6T 2K8.
Tel: 905 913 2571

Bovaird Location:
170 Bovaird Drive, Unit #9, West,
Brampton, Ontario. L7A 1A1
Tel: 905 840 5268



யாழ்.கோட்டை

சிறுத்தீவிலிருந்து சுமார் 20 விசைப்படகுகள் கோட்டையை நோக்கி வருவதை எமது தோழர்கள் அவதானித்து விட்டார்கள், உடனடியாகவே அனைத்துக் கவல் அரண் களுக்கும் செய்தி அனுப்பப்பட்டுவிட்டது எமது துப்பாக்கிகள் படகுகளை நோக்கி முழங்கின.



யாழ் கோட்டை முற்றுகையில் சுட்டு வீழ்த்தப்பட்ட சியாமா செட்டி விமானம் (1990)

படகுகள் புறப்பட்ட அதேநேரம் சிறுத்தீவுக் கடற்பரப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 2 பீரங்கிப் படகுகளும் குண்டுகளைப் பொழிந்தன. பொலிஸ் நிலையக் கட்டிடத்தில் அமைக்கப்பட்டிருந்த எமது காவல் அரணும், பண்ணைச் சந்தி உட்பட தொலைத் தொடர்பு நிலையக் காவல் அரண்களும் எதிரிகளின் பிரதான இலக்குகளாக இருந்தன.

கோட்டைக்குள்ளிலிருந்தும் எறிகளைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

விநாடிக்குப் பத்திற்கும் மேற்பட்ட எறிகணைகள் பீரங்கிக் குண்டுகள் எமது காவல் அரண்கள் மீது வீசப்பட்டது. நிமிடத்திற்கு ஆயிரக்கணக்கில் துப்பாக்கி ரவைகள் பொழியப்படுவதைப் போல- மழையென குண்டுகளும் வீசப்பட்டன.

மழைபெய்யும் பொழுது ஒவ்வொரு அங்குல இடைவெளிக்குள்ளும் நீர்த்துளி விழுவதைப் போல எமது காவல் அரண்களுக்கு மேலும், கீழும் முன்னும், பின்னும் அருகருகிலும் குண்டுகள் விழுந்து வெடித்தன.

எமது சில காவல் அரண்கள் சரிந்தன. சில உடைத்தன. எமது தோழர்கள் சிலர் செத்து விழுந்தனர். சிலர் காயமடைந்தபடி முனகிக் கொண்டு கிடந்தனர். ஆனாலும் எஞ்சிய தோழர்களின் துப்பாக்கிகள் கடலைநோக்கி முழங்கியபடி கிடந்தன. வந்த படகுகளில் ஏழு மூழ்கடிக்கப்பட்டது. மற்றவைகள் தொடர்ந்து கோட்டையை நோக்கி விரைவாக முன்னேறாதவாறு தடுக்கப்பட்டன. எமது துப்பாக்கிகளிலிருந்து புறப்பட்ட ரவைகளுக்குத் தப்புவதற்காக எஞ்சிய படகுகளில் இருந்தவர்கள் கடலுக்குள் குதித்து கோட்டையை நோக்கி நடந்து செல்ல முற்றபட்டனர்.

இவர்களில் பலர் கடலுக்குள்ளேயே குண்டடிபட்டு விழுந்தனர். ஒரு சில படகுகள் மண் டைதீவிற்கே மீண்டும் தப்பியோடின. ஒரு சில படகுகள் காயமடைந்தவர்களுடன் மண்டைதீவிற்குச் சென்றது. ஒரு சில படகுகள் கோட்டையை நோக்கியும் இழுத்துச் செல்லப் பட்டனன.

ஆச்சரியமூட்டக்கூடிய விதத்தில் வேகமான திடீர்த்தாக்குதலைச் செய்து, புலிகளை மலைக்க வைத்து அவர்களின் காவல் அரண்களை உடைத்து அவற்றைக் கைப் பற்றி விடலாம் என எதிர்பார்த்தே சிங்கள இராணுவம் தாக்குதலைத் தொடங்கியது.

ஆனால், அவர்களது திட்டத்தின் முதல் கட்டத்தை வழிப்புணர்ச்சியுடனும், நிதான மான எதிர்த்தாக்குதல் மூலமும் கடலுக்குள் வைத்தே முறியடித்தோம். 6 படகுகளை மூழ்கடித்ததினாலும் தொடர்ந்தும் படகு மூலம் வேகமாக கோட்டையை அடையவிடாது தடுத்ததினாலும் அதைச் செய்தோம்.

இதைத் தொடர்ந்து இராணுவம் எமது நிலைகளுக்குள்ளே புக முயற்சி செய்தது. இரண்டு விதமான யுக்திகளை இதற்காக இராணுவத்தினர் கடைப்பிடித்தனர்.

1. பொலிஸ் நிலையக் கட்டிடத்தின் மீது தொடர்ச்சியான எறிகணைப், பீரங்கித் தாக்குதல்களை நடாத்திக் கொண்டு, அதேசமயம்

2. தொலைத்தொடர்பு நிலையம் மற்றும் பண்ணைச்சந்திக் காவலரண்கள் மீது விமானத் தாக்குதலையும், அதற்கு அனுசரணையாக கோட்டையிலிருந்து பீரங்கித் தாக்குதலையும், ஆர். பி. ஜி. மூலம் ரொக்கற் தாக்குதலையும் நடாத்தியது.

இதற்கு மத்தியில் கடற்கரையை அண்டியிருந்த, கோட்டை மதிலை அடைந்த இராணுவத்தினர் அங்கிருந்து நிலை எடுத்து, பண்ணைச் சந்தியிலிருந்த எமது காவலரண்களை கைப்பற்ற முயற்சி செய்தனர்.

பண்ணைச்சந்தி காவலரண்களைக் கைப்பற்ற இராணுவம் எடுத்த இந்த முயற்சிகளை மனோ உறுதியை அடித்தளமாகக் கொண்ட தந்திரோபாயங்களைக் கடைப் பிடித்து முறியடித்தோம்.

சதுர வடிவில் தண்டவாளங்கள், மண் மூடைகள், ரயர்கள் கொண்டு ஒரு பலமான காவலரணை பண்ணைச் சந்தியில் அமைத் திருந்தோம். இக் காவலரணையும் தொலைத் தொடர்புநிலையத்தையும் இணைக்கும் வகையில் எலிவளை போன்ற ஒரு தொடர் அகழியை அமைந்திருந்தோம்.

இப்பண்ணைச் சந்தி அரணானது திறந்த வெளியில் எதிரிக்கு சவால் விடுவதைப் போல நிமிர்ந்து நின்றது. இது கோட்டையிலிருந்து சுமார் 60 யார் தொலைவில் இருந்தது.

இக்காவலரணை உடைத்து அதைக் கைப் பற்றுவதன் மூலம் தொலைத் தொடர்பு நிலையத்தையும் புலிகளின் கையில் இருந்து மீட்டுவிடலாம் என்ற நம்பிக்கையில் இராணுவம் செயற்பட்டது.

தனித்திருந்த அக்காவல் அரண் விமானத்தால் தாக்கப்பட்டது. ஆர்.பி.ஜி மூலம் ரொக்கற் தாக்குதல் நடாத்தப்பட்டது. கோட்டை மதிலின் மீதிருந்த பீரங்கிகள் மூலம் தாக்கப்பட்டது. காற்று வீசுவதைப்போல் துப்பாக்கிக் குண்டுகள் தாக்கின.

புயலுக்குள் அகப்பட்ட கப்பலைப்போன்று, அவ்வரண் பிய்த்தெறியப்பட்டது. தண்டவாளங்கள் உடைந்தன, ரயர்கள் எரிந்து, மண்மூடைகள் சிதறின. ஆனாலும் அதற்குள் இருந்து புலிகளின் துப்பாக்கிகள் வெடித்துக் கொண்டிருந்தன. எலிவளை பொன்ற தொடர் குழிக்கூடாக காயம் அடைந்த போராளிகள் அப்புறப்படுத்தப்பட்டனர். பதிலுக்கு புதிய புலி வீரர்கள் அவ்விடத்துக்குச் சென்று எதிரியுடன் கடுமையான யுத்ததை நடாத்திக்கொண் டிருந்தார்கள்.

சிறிது நேரத்தில் அந்தக் காவலரணும் உடைந்துபோய்விட்டது. பின்னர் அதற்கு அருகில் இருந்த இன்னொரு காவலரணிற்குள் சென்று புலிவீரர்கள் போரிட்டுக்கொண்டிருந் தார்கள்.

தொலைத் தொடர்புக் கட்டிடத்திலிருந்து பண்ணைச் சந்திக் காவலரணுக்கு உதவிகள் செல்வதைத் தடுப்பதற்காக மூன்று போர் விமானங்கள் தொலைத்தொடர்பு நிலையப் பகுதியில் மாறிமாறி குண்டுகளை வீசத் தொடங்கின.

அவ்விமானங்கள் குண்டுகளை வீசிக்கொண்டிருக்க பண்ணைச் சந்தி அரணை நோக்கி முன்னே வந்த இராணுவத்தினரும் எமது துப்பாக்கிகளுக்கு இரையாகிக் கொண்டு வந்தனர். பண்ணைச் சந்தியிலுள்ள எமது நிலைக்கு 5-6 யார் முன்னாலுள்ள காப்பிடப் பகுதியில் வந்து நிலை எடுத்திருந்தும் அரணைக் கைப்பற்ற முடியாது தடுக்கப்பட்டனர்.

புலிகள், காற்றைக் காப்பரணாக்கி உயிரை ரவைகளாக்கி எதிரியுடன் போரிட்டுக் கொண்டிருந்தனர்.



சுட்டு வீழ்த்தப்பட்ட சிறீலங்கா வான் படைக்குச் சொந்தமான போர்விமானத்தின் சிதைவுகளில் ஒரு பகுதி

இந்நிலையில் எதிரி விமானமொன்று ஆகாயத்தில் நாம் வரித்திருந்த ரவைக் குடையைப் பிய்த்தபடி கீழேவந்த சரிநேராக எமது நிலைகளைத் தாக்கத்து வங்கியது.

இச்சண்டையில் ஈடுபட்டிருந்த புலிவீரன் ஒருவன் தெரிவித்தான் - சுமார் 11.15 மணி இருக்கும். காது செவிடுபடும் படியான குண்டுச் சத்தங்களின் மத்தியிலும் விமானங்களின் இரைச்சல் - மிக மிகத் தாளப்பறப்பதற்கான அறிகுறியுடன் கேட்டது.

பிடரிப்பக்கம் வந்து மோதுவதைப் போன்று மிகவும் தாளப்பறந்து குண்டு வீசுவதும், பின்னர் காணாமல் போவதுமாக இருந்தது.

இந்தச் சத்தத்திற்குச் செவிசாய்த்து அரணை விட்டு வெளியே வந்து பார்க்க அவகாசம் இருக்கவில்லை.

இரண்டு, மூன்று தடவைகள் அவ்விதமாகப் பதிந்து தாக்குவதும் பின்னர் மேலெழுவதும் சத்தமும் கேட்டது. இறுதியாக உறுமியபடி பின் புறத்திலிருந்து எமது நிலைகளை நோக்கி வந்த விமானம் வழமைக்கு மாறாக பண்ணைக்கடல் பக்கமாக வித்தியாசமான ஒலியை எழுப்பியபடி சென்றது. பின்னர் எந்த விமானத்தின் ஒலியும் எமக்குக் கேட்க வில்லை.

"ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி இருக்குமாம் கொக்கு" என்பதைப் போல, தொலைத்தொடர்பு நிலையத்துக்கு அப்பால் ஒரு முளையில் உருமறைப்புச் செய்தபடி விமான எதிர்ப்புத் துப்பாக்கியுடனிருந்த ஒரு தோழனுக்கு இரைகிடைத்துவிட்டது.

அவ்விமானம், தமிழீழ மண்ணில் தாளப்பறந் ததற்கான தண்டனைனைளைப் பெற்று பண்ணைக் கடலுக்குள் குப்புற விழுந்து விட்டது.

பண்ணை வீதிக்குக் கிழக்குப் பகுதியில், கோட்டைக்கு நேரே முன்னால் சமார் 1000 யார் தொலைவில் வீழ்ந்த அதன் பாகங்கள் சிலவற்றை மறுநாள் எமது கடற்புலிகள் கரை சேர்த்தனர்.

விமானம் வீழ்த்தப்பட்டவுடன் சிங்களப் படைக்கு இருந்த இறுதி நம்பிக்கையும் அற்றுப் போக பண்ணைச் சந்திப் பக்கமாக நகர்ந்த வந்த இராணுவத்தினரில் எஞ்சியவர்கள் இறந்தவர்களின் உடல்களையும், ஆயதங் களையும் விட்டுவிட்டு கோட்டையின் பின்புறத் தை நோக்கி பின்வாங்கினர்.

இது இவ்வாறிருக்க பொலிஸ் நிலையப் பகுதி அரண்களைப் பார்ப்போம்.

அதிகாலை 6:00 மணிக்குத் தொடங்கி ஒரு சில நிமிடங்களில் கோட்டையை அடைந்து விடலாம் என்ற நம்பிக்கையுடன் புறப்பட்ட படகுகளில் மூழ்கடிக்கப்பட்டவை தவிர ஏனையவை கோட்டையை வந்தடைய சுமார் ஒரு மணி நேரத்திற்கும் அதிகம் சென்றது.

பண்ணைச் சந்திக் காவலரணைக் கைப் பற்றச் சென்றதைப்போலவே மண்டை தீவிலிருந்து வந்த இராணுவத்தினரில் சிலர் பொலிஸ் நிலையக் கட்டிடங்களையும் கைப்பற்ற கோட்டையின் பின்புறமுள்ள கடற்கரை வீதியால் செல்ல முயன்றனர்.

எமது மதிவெடிகளில் சிக்கியும் பொலிஸ் நிலையக் காவல் அரண்களிலிருந்தும், விளையாட்டரங்குக் காவல் அரணுக் குள்ளிருந்தும் முழங்கிய எமது துப்பாக் கிகளுக்கும் ஒவ்வொருவராக விழத்தொடங் கினார்கள்.

ஒரு மணிநேரமாக மண்டைதீவிலிருந்தும் கடலிலிருந்தும், கோட்டையிலிருந்தும், விமானத்திலிருந்தும் ஏவப்பட்ட குண்டு களினால் எமது காவலரண்களில் சில உடைந்தேவிட்டன. டிஉடைந்து குவிந்த அந்தக் காவலரண்களையே காப்பரண் களாக்கி புலிகள் போரிட்டனர்.

மழைபோல் பொழிந்த ஏறிகணை வீச்சு

யாழ்.கோட்டை

களினாலும், பீரங்கிக் குண்டுகளினாலும் இப்பகுதி அரண்களில் நின்ற பலர் காயம



டைந்துவிட்டனர். உடனடியாக அவர்களது இடத்தை நிரப்பி நின்று போரிடுவதற்காக மேலதிக போராளிகள் அனுப்பப்பட்டனர். காயமடைந்த போராளிகள் உடனடியாக அப்புறப் படுத்தப்பட்டு சிகிச்சை அழிக்கப் பட்டனர்.

பொலிஸ் நிலையப்பக்கமிருந்து எதிரிக்கு கடுமையான எதிர்ப்பைக் கொடுத்து அவனது முன்னேற்றத்தை தடுத்தபடி இருந்த காவல் அரண் ஒன்று எதிரியின் பீரங்கித் தாக்குதலால் சரிந்து வீழ்ந்து விட்டது. கப்டன் ஆனந்த பாபுவின் தலைமையில் நின்று தீரமுடன் போராடிக் கொண்டிருந்த புலிகள் அதற்குள் சிக்கி விட்டனர்.

எதிரிக்குச் சவாலாக இருந்த எமது காவல் அரணொன்று அழிக்கப்பட்ட திருப்தியில் எதிரி மீண்டும் ஒரு முறை ஒரு புதிய நகர்வை எடுக்கத் தீர்மானித்தான்.

இதே சமயம் இந்தக் கோட்டை முகாம் முற்றுகைக்குப் பொறுப்பாக இருந்த புலிவீரன், சுரேஸ், குண்டுபட்டுக் காயமடைகின்றான். (இந்திய இராணுவத்துடனான போரில் வவுனியாக் காட்டில் ஒரு குண்டு வெடிப்பில் சிக்கிய சுரேஸ் தனது ஒரு கையை இழந்தது குறிப்பிடத்தக்கது)

இவனுக்குப் பதிலாகப் புதிய புலிவீரன் ஒருவன் போர் முனைக்கு அனுப்பப்படுகின் றான்.

நேரம் பி.ப. 1:00 மணியைத் தாண்டிவிட்டது.

இந்த நிலையில்தான் கோட்டைக்குள்ளிருந்து ஒரு இராணுவ கவச வண்டி வந்து கொண் டிருந்தது.

மண்மூடைகள் அடுக்கப்பட்டு உள்ளே சுமார் 10 இராணுவத்தினரை ஏற்றிய படி பொலிஸ் நிலையக் கட்டிடத்திற்குள், உடைக்கப்பட்ட கப்டன் ஆனந்தபாபுவின் காவலரணையும் தாண்டி உள்ளே சென்று நின்றது. இந்தவண் டியை காப்பரணாக்கிக் கொண்டிடு பல இராணுவத்தினரும் எமது நிலைகளுக்குள் வரமுயன்றனர்.

ஏறக்குறைய பொலிஸ் நிலையக் கட்டடங்கள் அனைத்துமே உடைந்து விட்டன. எமது பிரதான காவல் அரண் ஒன்றும் சரிந்துவிட்டது இனி இந்தக் கட்டடங்களுக்குள் மனிதர்கள் இருக்கமுடியாது எனக் கருதிக் கொண்டே இராணுவத்தினர் அந்த இறுதி முயற்சியை எடுத்தனர்.

ஆனால் உடைந்த சிதைவுகளுக்குள்ளே இருந்து புலிகள் எழுந்தார்கள். இராணுவ வாகனத்தில் வந்தவர்கள் தாக்கத் தொடங்கு முன்னர் தாக்கப்பட்டனர்.

மிரண்ட இராணுவத்தினர் கோட்டைக்குள்ளே ஓட எத்தனித்தனர். விளையாட்டரங்கில் இருந்த புலிவீரர்களின் துப்பாக்கிகள் இயங்கித் தணிந்தபோது பொலிஸ் நிலைய வாசலி லேயே 7 இராணுவத்தினர் சுருண்டு விழுந்தனர்.

எஞ்சியவர்கள் காயங்களுடன் கோட்டைக் குள்ளே ஓடித்தப்பிவிட்டனர்.

எதிரியின் இறுதி முயற்சியும் முறியடிக்கப் பட்டுவிட்டது. எதிரியின் மூக்குநுனியின் முன்னாலேயே அவனது சக பாடிகளின் சடலங்கள் கிடத்தன. ஆனால் அவனால் அதை எடுக்க முடியவில்லை.



கோட்டையின் உட்புற வாசலில் புலிக்கொடி பறக்கின்றது

நேரம் மூன்று மணியையும் தாண்டிவிட்டது. சிறிது நேரத்தில் பறந்து வந்த அவ்ரோ விமானமொன்று எமது காவல் அரண்களை அண்டிய யாழ் நகரின் மத்திய பகுதிகளில் ஒருவகை இரசாயனக் குண்டகளை வீசத் தொடங்கியது.

மாலை 5:00 மணிவரை 25 ற்கும் மேற்பட்ட இரசாயனக் குண்டகளை நகர்மீது வீசி தனது ஆத்திரத்தை தீர்த்துக் கொண்டது.

தான் போக வழியில்லாத மூஞ்சூறு விளக்கு மாற்றையும் காவிக் கொண்டு போனதைப் போல.

கோட்டையை மீட்க வந்த இராணுவம் கோட் டைக்குள்ளே மாட்டிக் கொண்டு கோட்டை முகாமுக்குள் சிக்குண்டு கிடந்தவர்களுக்கு மேலும் பாரமாகியது.

அன்று தொடக்கம் இரவு, பகல் என்ற பேத மின்றி தொடர்ச்சியாகக் கோட்டை தாக் கப்பட்டது.

முதல் நாள் பகல் கோட்டை மதிலோரம் சென்று விட்ட சில படகுகளின் உதவியுடன்.

தண்டு வலித்து காயமடைந்த இராணுவத் தினர் இரவில் இருட்டின் உதவியுடன் மண்டைதீவுக்குத் தப்பி ஓடவும் முயன்றனர்.

இவர்கள் இடைநடுவில் பண்ணைக் கடலுக் குள் கடற்புலிகளினால் பலதடவைகள் தாக் கப்பட்டனர்.

“பாதுகாப்பான பகுதி” என எதிரி கருதிய மண்டை தீவை நோக்கியிருந்த கோட் டையின் கடற்கரைப்பகுதிகளுக்குள்ளும் தினமும் இரவில் இராணுவத்தினர் மீது தாக்குதல்களை நடாத்தினோம்.

எதிரிகளை மலைக்கச் செய்யும் வகையில் தரையில் எவ்விதம் தாக்கப்பட்டார்களோ அதைப்போலவே கடலிலும் தாக்கப்பட்டார்கள். முன்னரே போட்ட திட்டத்தின்படி தனது படைவீரர்கள் யாழ் நகரத்தைக் கைப்பற்றி விடவார்கள் என்ற அதீத நம்பிக்கையில் சிறீலங்கா அரசியல் தலைவர்கள் கோட்டை கைப்பற்றப் பட்டதாக வெற்றிப் பிரகடனங் களைச் செய்தபடி இருக்க.

இங்கே... மதில்மீது காவல் கடமைக்கு வரும் ஒவ்வொரு சிப்பாயும் புலிகளை காவல் காத்ததுடன் புலிகளின் காவல் அரண்களுக்கு அருகில் செத்துக்கிடந்த தனது சகபாடிகளின் அழுகிய உடல்களை எடுக்கத் திராணி அற்று பச்சாதாபத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். நாட்கள் நகர்ந்துகொண்டிருந்தன.

எதிரியினது குண்டுவீச்சுக்களினால் சிதைக்கப் பட்டுக் கிடந்த எமது காவல் அரண்கள் ஒவ்வொரு விடிகாலையிலும் புதிய பொலிவு பெற்று வருவதைக் கண்டு எதிரி திகைத் திருப்பான்.

திலீபனது 3வது நினைவு நாளும் நெருங்கிக் கொண்டிருந்தது அந்த நாளை நினைத்து எதிரி கலங்கிக்கொண்டிருந்தான்.

கோட்டை தாக்கப்படப் போகின்றது. என எதிர்பார்த்தான்.

கோட்டையை விட்டுத்தப்பி ஓடுவதற்குத் தீர்மானித்து மண்டைதீவை நோக்கியிருந்த கடற்கரை யோரமாக சீமெந்திடப்பட்டு மூடி வைக்கப்பட்டிருந்த பின் கதவு அகற்றப் பட்டு (முன்னர் கழிவுகள் அகற்றப்பயன்பட்டது) தயாராக வைக்கப்பட்டிருந்தது.

விடிந்தால் திலீபனின் மூன்றாவது ஆண்டு நினைவு நாள்.

எதிரி நினைத்திருந்ததைப் போலவே இரவு 12:00 மணியளவில் எமது தயாரிப்பான சக்தி வாய்ந்த ஏறிகணைகள் கோட்டைக்குள் வீசப் பட்டன. பாரிய சத்தத்துடன் கொத்தளங்கள் சரியும் வண்ணம் ஏறிகணைகள் வீழ்ந்து வெடித்த அதே சமயம் கோட்டையின் பின்புற வாசல் உடைக்கப்பட்டு தப்பி ஓடும் படலம் ஆரம்பமாகியது.

கோட்டைப் படை எடுப்பு முறியடிக்கப பட்டவுடன் கோட்டைக்குள் சிக்கிக்கிடந்த இராணுவத்தினர் தப்பி ஓட நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்பது எமக்கு நன்கு தெரியும்.

எனவே கடற்கரையை நன்கு நோட்டமிட்ட படியே இருந்தோம். இராணுவத்தினர் ஒரு சில படகுகள் மூலம் தண்டுவலித்தும், கடலுக் கூடாக நடந்தும் தப்பி ஓடுவதைக் கண்டு விட்டு கடலுக்குள் வைத்தே தாக்கத் தொடங்கி னோம்.

இவர்களிடமிருந்து ஆயுதங்களைப் பறிக்க வேண்டும், இவர்களை தப்பி ஓடவிடக் கூடாது என்று சத்தமிட்ட படி கடற்கரைப்பக்கம் ஓடிச் சென்று இராணுவத்தினரை வழிமிறத்து தாக்கிய நகுலன் எதிரியின் குண்டு பட்டு வீழ்ந்தான்.

இன்னொருமுனையில் சிசிலியா, ரகு — வீரச்சாவடைகின்றார்கள்.

திசை மாறி கடலுக்கூடாக நடந்தும், நீந்தியும் சென்ற இராணுவத்தினரை மண்டைதீவி லிருந்த இராணுவத்தினர் அடையாள வெளிச்சங்களைப் பாச்சி தம்பக்கம் வருமாறு சைகை செய்தபடி இருந்தனர்.

இதுவரை காலமும் எமது மக்களை ஆக் கிரமித்து வைத்திருக்க உதவிய கூடாரங் களில் ஒன்றைக் கைவிட்டு நடு நிசியில் எதிரி தப்பி ஓடிக்கொண்டிருந்தான்.

இம் மண்ணின் மைந்தர்களுள் எத்தனையோபேரை விழுங்கி ஏப்பம்விட்ட யாழ்-கோட்டை - இருளில் - வெறுமனே கிடந்தது.

370 வருட சரித்திரத்தில், ஒரு நாளுமே இல்லாதவாறு, ஒரு பின்னிரவு, கோட்டை மனித சஞ்சாரம் இற்றுக்கிடந்தது.

26.09.1990 விடியற்காலையில், எதிரி விதைத்த பொறி வெடிகளை அறு வடை செய்தபடி புலி வீரர்கள் கோட் டைக்குள் புகுந்து கொண்டிருந்தார் கள்.

கோட்டையைச் சூழ முற்றுகையில் ஈடு பட்டிருந்த புலிவீரர் கள் கோட்டையை உற்று நோக்கியபடி இருந்தார்கள்.

கோட்டையைப்போ லவே அவர்களுடை ய முகங்களும் புதிய தோற்றத்துடன் காணப் படுகினறன.

அவர்களுடைய பார் வைகள் ஆயிரம் கதை களைக் கூறு கின்றன.

கோட்டைமீதிருந்த அவர்களது பார் வைகள் மெதுமெது வாக மதிலடி வாரங்களை நோக்குகின் றன...

அகழிகளை நோக்குகின்றன...

05.08.1990 அன்று, சுதந்திரத்தை மீட்கச் சென்ற வரிப்புலி உடைகள் சில ஆங்காங்கே கிடந்தன. அவற்றுடன், அடக்குமுறைக்கு வேலிபோட்ச் சென் ற புலிகளின் எலும்புகளும் கிடந்தன.

காவல் அரண்கள் மீது ஏறி நடந்த புலிகள் அவற்றைச் சேகரிக்கின்றார்கள்.

சரியாக 10:48 மணிக்கு - இது திலீபன் வீரச்சாவடைந்த நேரம் - யாழ் மாவட்டத் தளபதி திரு. பானு கோட்டை மீது புலிக்கொடி (தமிழீழத் தேசிய கொடி) ஏற்றுகின்றார்.

கோட்டை வெற்றிச் செய்தியுடன், வீழ்ந்துவிட்ட புலிவீரர்களின் எலும்புகளும் மக்களிடம் சுமந்து செல்லப்படுகின்றன.

ஆவணி - புரட்டாதி 1990 - விடுதலைப்புலிகள்

TAX ANALYST

ACCOUNTING | BOOKKEEPING | & MORE



- Affordable and Reliable Services
- Experienced Accountants
- Presonal & Corporate Tax
- Tax Planning / Audit Appeal
- HST/GST/WSIB
- Bookkeeping & Payroll
- UBER/LYFT Tax Filling

CRB/CERB HELP

OFFICE
416-898-8879

CALL FOR APPOINTMENT
416-838-2826

105Consumers Drive.
Whitby ON L1N 1C4

115 Mathesan Blvd W.
Mississauga ON L5R 1C6

www.taxanalyst.ca
kannan@taxanalyst.ca

Allstate.
You're in good hands.

உங்களுக்கு சேமிக்க உதவும்
தள்ளுபடிகள் பற்றி என்னிடம் கேளுங்கள்

பயணக் காப்புறுதி
கனடாவுக்கு வருபவர்களுக்கான காப்புறுதி

செல்லப் பிராணிக் காப்புறுதி

ஆயுள் காப்புறுதி
முதலீடுகள் மற்றும் நிதித் திட்டமிடல்

தனிப்பட்ட சேவைக்கும் ஆலோசனைக்கும்
என்னைத் தொடர்பு கொள்ளுங்கள்



Raji Linghan
Ajax Agency
15 Westney Road, N
(416) 817 5060
rlinghan@allstate.ca

Trademark owned by Allstate Insurance Company used under licence by Allstate Insurance Company of Canada. ©2020 Allstate Insurance Company of Canada. 011E | 201316

இப்போது வந்துவிட்டது!

தற்போதைய வைரஸ் தொற்று காலத்தில்

உங்கள் உடலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து அனைத்து நோய்களிலும் இருந்து உங்களைப் பாதுகாக்க வெளிவந்துவிட்டது

"3 Spoon 100 ஆயுள்"

உள் அடங்கும் பொருட்கள்: உள்ளி, இஞ்சி, தேசிக்காய், வினிகர், தேன், கருஞ்சீரகம்

இவை அனைத்தும் ஆயுள்வேத ஆகம முறைப்படி தயாரிக்கப்பட்டது. இதன் மருத்துவ குணங்கள் சொல்லில் அடங்காது.
அதிகாலை 3 கரண்டி அருந்தி அனைத்து நோய்களில் இருந்து விடுதலை பெறுங்கள். சிறுவர் முதல் பெரியோர் வரை அருந்தலாம்.
சுவையானது, கனேடிய அங்கீகாரம் பெற்றது. இப்போது அனைத்து தமிழ் குரோசரி (Grocery) கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: Raj - 416.388.5054

நீங்கள் எதிர் பார்த்திருந்த பானம்!

Benefits:

1. இரத்தக்குளாய் அடைப்பை நீக்குகிறது
2. இரத்த ஓட்டத்தைச் சீராக்குகிறது
3. நீரிழிவு நோயாளர்களுக்கு மிகவும் உகந்தது
4. உடலில் உள்ள தேவையற்ற கழிவை அகற்றி குடலை சுத்தமாக்குகிறது
5. உடல் பருமனை குறைக்கிறது, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்
6. மலச்சிக்கலை அறவே நீக்குகிறது. வயிற்றுப் புண்ணைக் குணப்படுத்தும்
7. தூக்கமின்மையை இல்லாமல் ஆக்குகிறது.
8. உடலில் உள்ள அதிகப்படியான கொழுப்பினைக் குறைக்கிறது
9. உடல் சோர்வை நீக்குகிறது

பருகும் முறை:

நன்றாகக் கலக்கி ஒவ்வொரு நாளும் அதிகாலையில் மூன்று கரண்டி அருந்தவும்.
பொருட்கள்: உள்ளி, இஞ்சி, தேசிக்காய், வினிகர், தேன், கருஞ்சீரகம்
Note: நீங்கள் இரத்தக்குழாய் அடைப்பிற்காக மருத்துவரால் சத்திர சிகிச்சைக்குப் பரிந்துரைக்கப்பட்டால், 6 மாத காலத்தில் இரத்தக் குழாய் அடைப்பை அறவே நீக்குகிறது.

3 ஸ்பூண்
100 ஆயுள்
3 Spoon100 Life

(சுவையானது)

ஒவ்வொருவரும் அருந்த வேண்டிய பானம்

ஆயுள் வேத ஆகம முறைப்படி தயாரிக்கப்பட்டது.

மருந்து உணவல்ல, உணவே மருந்து.

Heart Attack இல் இருந்து பாதுகாக்கிறது.

NOW $ 20
$ ~~35~~



1. Removing the blood vesse blockae.
2. regulates bood flow
3. Good for diabetes people
4. Remove your body's unnecessary wast
5. Reduces obesity and increases resistance
6. Eliminate constipation, cures ulcer
7. Reject lack of sleep
8. Excess fat in the body dissolve
9. Elima=inate body fatigue

Ingredients: Garlic, Lemon, Vinegar, Ginger, Honey and Black Jeera

Buying Locations: For Distribution Call **416-388-5054** / Montreal No: **514-589-7617**
Soon all Grocer Stores: Scarborough -Markham - Mississauga - Brampton - Ajax

Now Available Stores: **New Spiceland, Pasumai Santhi, Suncity Supermarket, Poorani Villas, Vasantham Super Market**

தாயை நேசிக்க மீசை முளைக்கத் தேவையில்லை...

பாட்டன் பணக்காரன்தான்
அப்பன் அறிவாளிதான்.
ஆயினும்
சிங்களவனின் அடிமைதானே.

கொழும்பில்
கொடிகட்டியவர்கள்தான்
பொருள் குவித்தவர்கள்தான்.
இருப்பினும்
ஒரு நாள் அகதிதானே.

மேல்நாட்டுப் படிப்பும்
வெளிநாட்டு வாழ்வும்
விரும்பினால் பெறலாம்தான்
அப்பொழுதும்
நாடோடியன்றோ?

அடிமையாய் வாழ்வதும்
ஆசையில் திரிவதும்
அஞ்சிச் சாவதும்
அவர்களோடு போகட்டும்.

நாம்
பிறந்தது போலவே
மனிதனாய் வாழ்ந்து
மனிதனாய்ச் சாவோம்.

எத்தனை பெரிய பாடம்
எழிமையாகப் படித்தது
இளைய பரம்பரை.

தம்பி
புத்தகப்பை தொங்கவேண்டிய
உன் தோழில்
துவக்குக் கட்டையைத்
தொங்கவிட்டது வரலாறு.

விளையாட
தும்பி பிடித்த கை
இன்று
விடுதலைக்குத் தும்பி சுடுவது
வரலாற்றின் நிர்ப்பந்தம்.

பால்வடியும் முகத்தில்
படைத்தளம் குடியேறியது
உன் நெஞ்சில் விரவிய
விடுதலை வேட்கையின்
வெளிப்பாடுதானே.

"இந்த வயதில்
நாட்டுப் பற்றா"!
வியப்புக் குறிகளுக்குச் சொல்
தாயை நேசிக்க
மீசை முளைக்கத் தேவையில்லை

உன் அன்னை
பாலைப் புட்டியில் அடைக்காமல்
தன் சிவப்பு இரத்தத்தை
வெண்மையாக்கி ஊட்டினாள்

இன்று நீ.
தாய் மண் மீட்க
சாவைக் குப்பியில் அடைத்துச்
சரித்திரம் படைக்கின்றாய்.

அடக்கு முறையாளர்களால்
முதிர்ந்தது
உன் அறிவு மட்டுமல்ல
பிஞ்சுக் கைகளும்தான்.

ஓங்கிய
உன் கைமுட்டிகளால்
உடைபடுவது
பூட்டிய விலங்குகள் மட்டுமல்ல
இனவெறிக் கோட்டையும்தான்.

உன் நெஞ்சக் கனலை
ஆதிக்கச் சருகின் மேல்
வாரி வீசு
துணிந்தால்
எதிரியின் எலும்பெல்லாம் தூசு.

மறைகின்ற சூரியன்
இரத்தம் சிந்துவதால்தான்
மறுநாளும் வாழ்கின்றது.
விடுதலைப் போராளியைப்போல்.



மரங்களைப் பாதுகாப்போம்



எம் மத்தியில் இன்று எண்ணிலடங்காத மரங்கள் நிறைந்து காணப்படுகின்றது. இம் மரங்கள் சொல்லிலடங்காத தேவைகளுக்கு எமக்கு பயன்படுகின்றது. எனவே நாம் மரங்களைப் பாதுகாப்போம். சிறீலங்கா சிங்கள அரசாங்கம் இன்று திட்டமிட்டு தமிழ்பேசும் மக்கள் வாழுமிடங்களில் மக்களுக்கு எத்தனையோ தேவைகளையும், சேவைகளையும் பூர்த்தி செய்யும் மரங்களை அழித்து வருகின்றது. எனவே எம் அரிய வளத்தினை அழிவிலிருந்து பாதுகாப்போம்.

இன்று காடுகளில் காணப்படுகின்ற மரங்கள் பலவித தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடியனவாக காணப படுகின்றன. ஆனால் அம் மரங்கள் பலவித தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் அம்மர இனங்கள் பாகுபடுத்தப்படுவதில்லை. பரந்த ஒரே நோக்கில் உதாரணமாக வீட்டுத் தேவை என எடுத்துக் கொண்டால் அவ்விறகுத் தேவையை நோக்கமாகக் கொண்டு அவ் முழு இன மரங்களும் அழிக்கப்படுகின்றன. இவ்வாறு முழு இன மரங்களும் ஒரு சேவை நோக்குடன் அழிக்கப் படுவதனால் ஏனைய தேவைகளுக்கு பயன்படும் மரங்களின் பலனை அருகும் நிலை ஏற்படுகினற்து. எனவே நாம் மரத்தினை தேவைகளுக்கு இணங்க பரித்து அவற்றினை இனங்கண்டு அதற்கிணங்க எம் தேவைகளைப் பூர்த்தி செய்வோம்.

காடு அழிக்கப்படுவதனால் விலங்கு இனங்கள் அருகிக் கொண்ட போகின்றது. அத்துடன் சீரான மழையின்மை, மண்ணரிப்பு, வறட்சி என்பன நிலவுகின்றன. எனவே நாம் எமது தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் மரங்களை அழிக்கும் போது அழிக்கும் மர இனங்களை அழிந்து விடாமலும் விலங்கு இனங்கள் அழிந்து விடாமலும் பாதுகாக்க அழிக்கும் அவ்வின மரங்களை உருவாக்கி அதனை விருத்தி செய்வோம்.

எமது சூழலில் எத்தனையோ மரங்கள் பயனுடைய னவாக இருக்கின்றன எனவே இம்மரங்களின் பயன் களை இறிந்து அவற்றினை வீட்டில் நாட்டி அதிலிருந்து பயன்களைப் பெறுவோம். இன்று வீட்டில் நட்ட அதிலிருந்து பயன்பெறக்கூடிய மரங்களாக தவசி முருங்கை, வாதனாராணி, இப்பிலிப்பில், முருங்கை, பெரிய ஆத்தி, சிற்றாத்தி, முல்லை, முடக்கொத்தான், மொசுமோசுட்டை, முசுட்டை போன்றன விளங்குகின் றன. இம் மரங்களில் இருந்து பெறப்படும் இலைகளில் அதிகளவு சத்துக்கள் காணப்படுகின்றன. எமது பொருளாதார பிரச்சனை ஓரளவிற்கு தீர்த்துக் கொள்வதற்கு குறைந்த செலவில் நிறைந்த பயனைப் பெற்றுக்கொள்ள இலகுவான வழிகளைக் கையாளு வோம்.


மேலும் இன்று எம் மத்தியில் எத்தனையோ பொதுமக்களும் போராளிகளம் துரதிஷ்டவசமாக இறக் கின்றார்கள். போராட்டச் சூழ்நிலையில் இறப்ப என்பது சகஜம். ஆனால் அவ்விறப்புக்கள் ஏன் நிகழ்ந்தன? எதற்காக நிகழ்ந்தன? எவ்வாறு நிகழ்ந்தன? என்பது பற்றி ஏனைய பொதுமக்களுக்கோ போராளிகளுக்கோ தெரியப் படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். இந்நிலையில் இவ்விறப்புக்களை ஏனையோருக்கு தெரியப்படுத்து வதற்காக தெருவெங்கும் தோரணங்கள் கட்டப் படுகின் றது. கறப்பு துணிகள் கட்டகப்படுகின்றன. பிரசுரங்கள் வெளியிடப்படுகின்றது. ஒளிபெருக்கியில் சிலவேளை களில் அறிவிக்கப்படுகின்றது. இதற்கு மேலாக சந்திகளில் பனை, தென்னை, பப்பாசி, கமுகு, வாழை என பல இனமரங்கள் உடன் தறிக்கப்பட்டு கட்டப்படுகின்றது.

சந்திகளில் மரங்கள் கட்டப்படுவதனால் வாகனங்கள் போக்குவரத்து செய்வது மிகவும் கஷ்டமாக இருக்கின்றது. சில சந்தர்ப்பங்களில் மரங்களை சந்திகளில் நடுவதனால் வாகன போக்குவரத்து கஷ்டத்தினால் இன்னொரு பொது மகனோ அன்றி போராளியோ இறக்க நேரிடாலம்.

இம் மர இனங்கள் அழிக்கப்பட்டு சந்திகளில் கட்டப்படுவது என்பது ஓர் தேவையற்ற செயலாகும். ஓர் மரத்தை வளர்ப்பதற்கு எவ்வளவோ காலங்கள் எடுக்கின்றன. இந்நிலையில் ஓர் போராளி இறந்தவுடனே மரங்கள் அரைநொடிப் பொழுதில் அழிக்கப்படுவது மிகவும் வருத் தத்திற்குரிய ஒன்றாகும். ஒரு போராளி இறந்தவுடன் அவனுடைய துயர நாளை கடைப்பிடிப்பதற்கு மரம் அழிக்கப்படுகின்றது. இதனை மறுபக்கம் திருப்பிப் பார்க்கும்போது அவன் இறந்தவுடன் அவனுடன் மரத்தின் உயிரும் இந்தப் பூமியில் இருக்கக் கூடாது எல்லாமே அவனுடன் அழிந்து போக வேண்டும் என்ற கருத்தை கொண்டு வருகின்றது. எனவே போராட்ட வேளையில் இறக்கின்ற ஒவ்வொரு போராளியினதும் சரித்திரங்கள் எமது வரலாற்றில் எழுதப்பட வேண்டுமாயின் நாம் இறக்கின்ற ஒவ்வொரு போராளிகளின் சரித்திரத்தையும் எமது வரலாற்றில் படைக்க நாம் அவர்களின் நினைவாக மரங்களை அழிக்காது பதிய மரங்களை உருவாக்கி அவர்கள் எம் மண்ணில் எம் இனத்திற்காக செய்த தியாகங்களை அழிந்து விடாது மரங்களை நடுவதன் மூலம் பாதுகாப்போம்.

இவ்வாறு நாம் மரங்களை நடுவதன் மூலம் போராளி களையும் அவர்களின் வீரச்செயல்களை நினைவு கொள்வதுடன் எமது மர வளத்தினையும் பாதுகாத்துக் கொள்வோம்.

நன்றி – லக்ஷ்மி -



graphic design



437-345-4203


DESIGNS SERVICES

Advertisement Design
Logo Designs
Banner Design
Business Card Design
Poster Design
Flyers Design
Brochure Design
&
Much more...

WEXFORD
WELLNESS CARE INC.







We treat all car accident injuries!

- Massage Therapy
- Physiotherapy
- Orthopaedic
- Acupuncture
- Chiropractic
- Orthotic

We deal directly with Insurance Companies, Extended health Care Corporate Insurance, ODSP WSIB, Motor Vihicle Accident (MVA)

Tel: 647-349-5120
Fax: 647-349-5121
Serve Two Location

Unit 301-240 Alton Towers Cir, Scarborough ON M1V 3Z3
2900 Markham Rd Unit F11, Scarborough ON M1X 1E6
(Majestic City, Colombo Rd)

சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை

உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

NAM THAYAKAM
நம் தாயகம்
"உணவினில் தாய்மண்வாசமும்
உணர்வோடு தாய்மண் நேசமுமாய்"
நம் தாயகம் பிராண்ட் தயாரிப்புக்கள் 416-558-2111

நம் தாயகம்

வாங்குவீர்... வாழ்வு தருவீர்!

பெண் தலைமைத்துவ குடும்பங்களினதும்
போரில் அவயங்களை இழந்தோருக்கான
தற்சார்புப் பொருளாதார மேம்பாடு எமது நோக்கம்

முன்னாள் போராளிகளினதும் துணையிழந்த பெண்களினதும்
தயாரிப்புகள் கலப்படங்கள் அற்ற பாரம்பரிய முறைத் தயாரிப்புகள்,
உடல் நலம் காப்பவை.
நம் தாயகப் பொருட்களைக் கொள்வனவு செய்து தாயக மக்களின்
பொருளாதார முன்னேற்றத்துக்கு பங்களிக்கும் உள்ளங்களுக்கு நன்றி

முள்ளிவாய்க்காலில் இருந்து...



"உணர்வினில்
தாய் மண்
வாசமும்
உணர்வோடு
தாய் மண்
நேசமுமாய்"



Tel: 416-558-2111
nam.thayagam@gmail.com
3031 Markham Road, Unit 35, Scarborough. M1X 1L9 (Markham & Passmore)



தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

திருமலைப் படுகொலைகள் யூன், ஒகஸ்ட், செப்ரெம்பர் – 1985

இம்மாதங்களில் திருமலை மாவட்டத்தில் பல படுகொலைகள் நடந்தேறின. பிரசைகள் குழுக்களின் இணைப்பு அமைப்பின் அறிக்கைகளின் படி முன்னூற்று பதினொரு தமிழர்கள் யூன் 1985 இல் திருமலையில் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. சற்றடே ரீவ்யூ நாளேடு 21.12.1985 இன்று வெளியிட்ட செய்தியில் இத்தொகை முன்னூற்று எண்பத்துமூன்று எனக் கூறியுது. ஜெரமி கிளிங் என்கிற செய்தியாளர் சாம்பல் தீவில் பலர் காணாமல் போயிருப்பதாகவும் அவர்கள் கொல்லப்பட்டிருக்கலாமென டெல்லி நீயூசில் தகவல் வெளியிட்டிருந்தார்.

1985 ஆம் அண்டு செப்ரெம்பர் மாதம் நான்காம் திகதிக்கும் ஒன்பதாம் திகதிக்குமிடையில் திட்டமிடப்பட்ட முறையில் மகிப் பெரிய இராணுவ நடவடிக்கை ஆரம் பிக்கப்பட்டது. திருகோணமலை நகரின் வடபகுதியிலிருந்து தமிழர் களைத் துரத்தும் நடவடிக்கையாக இவ்விராணுவ நடவடிக்கை ஆரம் பிக்கப்பட்டது. இதில் ஆகாய வழியாக உலங்கவானூர்தியும் கடலிலிருந்து எறிகணைத் தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் மேற் கொளளப்பட்டன. சென்ரல் வீதி, பிரதான வீதி, ஏகாம்பரம் வீதி, வீரநகர், திருக்கடலூர், உப்புவெளி, மூன்றாம் கட்டை, நாவலர் றோட், உப்புவெளிச் சந்தி ஆகிய இடங்களில் கனரக ஆயுதங்கள் தரித்த இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். அத்துடன் ஊர்காவற் படையினரும் இங்கு குவிக்கப்பட்டிருந்தனர். இவ்விரு குழுக்களும் சேர்ந்து தமிழாகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இதன் போது தமிழர்களுக்குச் சொந்தமான ஆயிரத்து ஐநூறு வீடுகளும் கடைகளும் கட்டடங்களும் அழிக்கப்பட்டதுடன் தமிழர்களுக்குச் சொன்தமான வள்ளங்களும் சொத்துக்களும் சூறையாடப்பட்டன. இந்த நடவடிக்கையின் போது இருநூறு சிறுவர்கள் தங்கியிருந்த சிவானந்த தபோவனத்தின் கட்டடமும் தகர்த்து அழிக்கப்பட்டது. இந்தக் கோயில்கள் முற்றாக அழிக்கப்பட்டன. இருபத்தைந்து பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும் அழிப்பதற்கு தமிழர்களுக்கு எந்தச் சொத்தும் இல்லை என்றவுடன், இத்தாக்குதல் நிறுத்தப்பட்டது. இத்தாக்குதல் நடவடிக்கை வெளியிற் தெரியாமல் இருக்க நாளேட்டு நிருபர்களோ, வெளி நாட்டு நிருபர்களோ இப்பகுதிக்குச் செல்லத் தடைவிதிக்கப்பட்டனர்.

புதுக்குடியிருப்பு மந்துவில் படுகொலை 15.09.1999

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்திற்கு அருகில் மந்துவில் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்து மக்களின் தேவைகளை நிறைவு செய்யக் கூடிய வகையில் மந்துவில் சந்தியில் பொது நிறுவனங்கள், வியாபார நிலையங்கள், சிறிய சந்தை, கோயில், தேவாலயம் என்பன அமைந்துள்ளன. மந்துவிற் கிராம மக்கள் நாளாந்த தேவைகளிற் பெரும்பாலான வற்றை இங்கெ பூர்த்திசெய்து வாழ்ந்துவந்தனர்.

15.09.1999 அன்று வழமைபோல குழந்தைகள், இளையவர், முதியவரென பலதரப்பட்டவர்களும் சந்திக்குத் தமது தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு வந்திருந்தனர். காலை 10:25 மணியளவில் சிறீலங்கா விமானப்படையின் இரண்டு "கிபீர்" குண்டுவீச்சு விமானங்கள் முல்லைத்தீவு வான் பரப்பினூடாக பற்நது வந்து மந்துவிற் பகுதியை பத்து நிமிடங்களாக வட்டமிட்டு மக்கள் கூடிநின்ற மந்துவில் சந்தைப் பகுதிமீது குண்டுத் தாக்குதலை நடத்தின.

விமானத் தாக்குதலில் சம்பவ இடத்தில் பன்னிரண்டு பொது மக்கள் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களின் உடல்கள் சில அவ்விடத்திலும், வீதியிலும், பற்றைக் குள்ளும், கிணற்றுக்குள்ளும் தூக்கி வீசப்பட்டிருந்தன. இறந்தவர்களின் உடல்கள் சிதைந்த நிலையிலிருந்தன. படுகாயமடைந்திரந்தவர்களை அப்பகுதி மக்கள் வாகனங்களில் ஏற்றி புதுக்குடியிரப்பு வைத்தியசாலைக்குக் கொண்ட சென்றார்கள். இதில் பத்திற்கும் மேற்பட்டவர்கள் அன்று மாலையே உயிரிழந்தனர். இச்சம்பவத்தின் போது நாற்பதிற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். வியாபார நிலையங்கள், பயன்தரமரங்கள், கால்நடைகள் போன்ற பல இலட்சம் பெறுமதியான சொத்துக்களும் அழிந்தன.

இச்சம்பவத்தில் கணவரை இழந்த சுப்பிரமணியம் சரஸ்வதி கூறும்போது...

"எனது கணவர் காணியில் கிடைக்கும் தேங்காய்களை கொண்டு சென்று மந்துவில் சந்தியில் விற்றுவிட்டுவருவார். சம்பவதினமன்றும் பத்துத் தேங்காய்களை விற்றுவிட்டு சாமான்கள் வாங்கி வரவென்று போனார். கிபீர் விமானங்கள் சந்திப் பகுதியில் குண்டுகளைப் போட்டதென்று அறிந்தவுடன், தகப்பனைத் தேடி மகன் பிறேமன் போனார். நான் என்ன நடந்ததோ என்று தெரியாமல் பயத்துடனிருந்தேன். மகன் போன போது வேலிக்கரையில் நாடியைப் பொத்திப் பிடித்தபடி படுத்திருந்தாராம், உடனே வீதியில் வந்த மோட்டார் சைக்கிளை வாங்கி புதுக்குடியிருப்பு வைத்திய சாலைக்கு ஏற்றிக்கொண்டு போகும் போது இடை நடுவிலே இறந்து விட்டார். ஏற்கனவே எனது ஆறாவது மகன், 1985 ஆம் ஆண்டு சிறீலங்கா இராணுவப் பிரச்சனைக்குப் பயந்து, வவுனியாவில் இருந்த மூத்த மகனின் வீட்டில் இருந்து பத்தாம் ஆண்டு படித்தக் கொண்டிருந்த வேளை, 1985 ஆம்ஆண்டு வைகாசி மாதம் இருபதாம் திகதியன்று வவுனியா ஆச்சிக்குளம் பகுதியில் வைத்து சிறீலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். தற்போது பதின்நான்கு ஆண்டகளின் பின்னர் எனது கணவரையும் சிறீலங்கா விமானப்படையினர் குண்டு வீசில் கொன்றுள்ளனர்."

15.09.1999 அன்று புதக்குடியிருப்பு மந்துவில் படுகொலையில் கொல்லப்பட்டோர் விரபம்:

1. சின்னையா ஜெயபாலசிங்கம் (37)
2. சண்முகம் கிருபாகரன் (22)
3. சவிரி யோன் (52)
4. சங்கரப்பிள்ளை செல்வமாணிக்கம் (70)
5. ஞானசேகரம் இலட்சுமிப்பிள்ளை (43)
6. ஜெயராமன் சந்திரகுமார் (20)
7. அலன்றோஸ் கொண்டுயூசியஸ் (19)
8. அந்தோனிப்பிள்ளை (-)
9. ஆறுமுகம் ஜெயராமன் (50)
10. சின்னையா ஜெயபாலசிங்கம் (37)
11. பாக்கியநாதன் றீற்றம்மா (56)
12. தனராஜ் ஜெனோவி (24)
13. வேதநாயகம் செபஸ்தியாம்பிள்ளை (52)
14. துரைசிங்கம் சபாநாயகம் (21)
15. இராசநாயகம் உதயகுமார் (20)
16. இராசேந்திரம் சத்யகுமார் (25)
17. குணசிங்கம் ஜெயச்சந்திரன் (33)
18. கணபதிப்பிள்ளை சத்தியபாமா (25)
19. கனகசபை மிதிலா (26)
20. அன்ரனனிலியோ கிறிஸ்ரிஸ்புளோரன்ஸ் (54)
21. செல்லையா ஆறுமுகம் (59)
22. கணபதிப்பிள்ளை யோகராசா (36)
23. அன்ரனிதவராசா திரேசம்மா (50)
24. அன்ரனிலியோ மெல்றோஸ் (24)
25. சின்னத்தம்பி தம்பு (55)
26. ஜெயமஸ் ஜெயசங்கர் (33)
27. பத்மராசா ஜெனிற்றா (15)
28. சந்திரசேகரம் சயந்தினி (12)
29. தம்பையா சப்ரமணியம் (67)

காயமடைந்தவர்களின் விபரம்:

1. சூ. பேதுறுப்பிள்ளை (80)
2. இ. தனேஸ்வரி (55)
3. இ. மகேஸ்வரி (55)
4. நா. அருந்தவமலர் (52)
5. க. தங்கையா (45)
6. கனகையா (48)
7. சந்தையா நாகலிங்கம் (43)
8. கந்தையா வள்ளிப்பிள்ளை (35)
9. கதிரேசு தேவராசா (70)
10. கதிரேசு தேவராசா (39)
11. கி. அன்னலட்சுமி (61)
12. கிருஸ்ணபிள்ளை அன்னலட்சுமி (51)
13. குணசிங்கம் (50)
14. குணரத்தினம் நிறஞ்சன் (09)
15. பால்ராஜ் பாசமலர் (27)
16. பாலசிங்கம் பால்ராஜ் (29)
17. பத்மராஜா மதியமலர் (40)
18. பி. மரியமலர் (52)
19. பீற்றர்கென்றிலோல் லோறன்சியா (18)
20. சைலன் (03)
21. த. பாலசிங்கம் (66)
22. த. தனுசா (03)
23. த. தேவராசா (39)
24. தி. தர்சினி (17)
25. தியாகராசா தர்சினி (17)
26. தியாகாராசா செல்வாராணி (44)
27. ம. தனராஜ் (20)
28. மயில்வாகனம் (45)
29. மகாலிங்கம் தனராஜா (29)
30. மரியநாயகம் (48)
31. முத்துசாமி (48)
32. முத்துசாமி கோழிமனசாமி (48)
33. அ. இருதயராசா (20)
34. அ. மரியசோபனா (23)
35. அ. விதுச்ன (35)
36. அன்ரன் பெனிற் (51)
37. அலன்றோஸ் மரியநாயகி (40)
38. ஜெ. ஜெயசங்கர் (30)
39. ஜெ. சரஸ்வதி (50)
40. ஜெயராமன் விமல்ராஜ் (06)
41. ஜெயராமு சரஸ்வதி (50)
42. ஜெயராமன் (60)
43. யோன் நான்சி (19)
44. கே. தவசீலன் (19)
45. கே. மேனகா (18)
46. கோபாலகிருஸ்ணன் பத்மாவதி (45)
47. பொ. வள்ளிப்பிள்ளை (90)
48. பெர்னான்டோ அனரலிவின்சன் (35)
49. பெரியதம்பி நடராசா (51)
50. தெ. மரியமலர் (68)
51. சே. மரியம்மா (68)
52. சேதுப்பிள்ளை (80)
53. செல்லையா சந்திரசேகரம் (27)
54. செல்லத்துரை மகேஸ்வரி (46)
55. ச. யோகராணி (41)
56. ச. லோகிதா (15)
57. ச. சர்மிலா (23)
58. சின்னத்தம்பி கந்தசாமி (37)
59. சீனியர் சிவநாதன் (18)
60. சிவகுரு சூரியமூர்த்தி (33)
61. சிவானந்தம் சுதாகரன் (19)
62. சிவநேசன் அழகேஸ்வரி (29)
63. சிவசுப்பிரமணியம் கம்சநந்தினி (21)
64. சுசிதரன் சூட்டி (29)
65. சரஸ்வதி (50)
66. சற்குணன் யோகராணி (41)
67. ராஜா சஜீபன் (03)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

நிலாவெளி படுகொலை – 16.09.1985

திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளிப் பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட நிலாவெளிப் பிரதேசமானது. திருகோணமலை நகரிலிருந்து பத்த கி. மீ. தூரத்திலுள்ளது. 1983 ஆம் ஆண்டு இனக்கொலையைத் தொடர்ந்து 1985 ஆம் ஆண்டு நிலாவெளி அகதி முகாம் மக்களால் நிறைந்து காணப்பட்டது.

16.09.1985 அன்று நிலாவெளியில் நிலைகொண்டிருந்த சிங்கள இராணுவமும் ஊர்காவற்படையினரும் சேர்ந்து அகதிமுகாமைச் சுற்றிவளைத்தனர். அங்கிருந்த முப்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்களைக் கைதுசெய்து. அவ்விடத்திலேயே நிறுத்தி வைத்துச் சுட்டத்தில் அனைவருமே உயிரிழந்தனர்.

16.09.1985 நிலாவெளிப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்

1. முருகேசு தங்கராசா (46)
2. கச்சுமுகைதீன் முகம்மது காலித் (33)
3. வேலு சிவசுந்தரம் (24)
4. வேலு சிதம்பரநாதன் (25)
5. செல்லத்தம்பி நிர்மலானந்தன் (26)
6. சோசுந்தரலிங்கம் அருட்குமரன் (20)
7. அந்தோனிப் பிள்ளை கபிரியேல் (-)
8. இராஜேந்திரன் (29)
9. செய்யதுபுகாரி அப்துரசாக் (32)
10. கந்தையா கந்தசாமி (28)
11. கணபதிப்பிள்ளை சௌந்தர ராஜன் (28)
12. செல்லத்தம்பி ரட்ணராஜா (41)
13. நேசதுரை ரெறன்ஸ் (19)
14. கதிர்காமத்தம்பி கனகசபை (39)
15. முகமட் காசிம் முகமட் ராசிக் (31)
16. தாமோதரம் பிள்ளை நேமிநாதன் (19)
17. வல்லிபுரம் தருமலிங்கம் (18)
18. தர்மதாஸ் உதயநேசன் (19)

நிலாவெளி படுகொலை – 16.09.1985

19. சுப்பிரமணியம் காளி ராஜா (20)
20. செல்வவினாயகம் ஜெய கோபன் (26)
21. இராசையா துரைநாயகம் (36)
22. தாமோதரம்பிள்ளை சண் முகதாசன் (24)
23. மாமாங்கம் ரஞ்சநேசன் (21)
24. அபுசாலிபு அப்துல்நாயீர் (21)
25. சித்திரவேல் மாரிமுத்து (53)
26. சிங்கராயர் கிலீற்றஸ் பிரேமதாஸ் (20)
27. சிவபாலன் கெங்காதரன் (34)
28. பொன்னுத்துரை பார்த் தீபன் (34)
29. யோகராசா (27)
30. இரத்தினசாமி பார்வதி (23)

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங்

அம்பாறை பொத்துவில் இரத்தன்குளம் படுகொலை – 17.09.2006

அம்பாறை பொத்துவில் பிரதேசத்திலிருந்து 11 கிலோ மீற்றர் தொலைவில் இரத்தன் குளம் உள்ளது. இந்த அணைக்கட்ட அமைந்துள்ள பிரதேசம் பொத்துவில் கிராமசேவகர் பிரிவிற்குப் பட்டது. எனினும் தற்போது அந்தக் கிராமம் சிங்களப் பகுதியிலுள்ள லபுகல கிராமசேவகர் பரிவிற்கு மாற்றப்பட்டுள்ளது. பொத்துவிலின் இரத்தன்குளம் பகுதியில் புத்தர் சிலை ஒன்றினை நிவும் முயற்சிகளை சிங்களவர்கள் மேற் கொண்டிருந்தனர். இதனையடுத்து அப்பகுதியில் சிங்களவர்களக்கும். தமிழ் முஸ்லிம்களுக்கும் இடையில் முறுகல் நலை ஏற்பட்டிருந்தது. அத்தோடு சிங்களவர்கள் பொத்துவிலிருந்து தமிழ் முஸ்லிம்களை முழுமையாக வெளியேற்றும் நோக்கில் அப்பகுதியில் வெனகல் என்னும் பெயரில் புதிதாக ஓர் பிரதேசசெயலகர் பிரிவை தனியாக உருவாக்கினர். இதனைத் தொடர்ந்து தமிழ் முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையே எல்லைச் சண்டைகளும், காணிப் பிரச்சனைகளும் தொடர்ந்து வண்ணமே இருந்தன. இதனால் இரு இனத் தலைவர்களுக்கும் இடையே முறுகல் நிலை மேலும் வலுப்பெற்றது.

இந்த நிலையில் மேற்படி குள அணைக்கட்டை புனரமைப்பதற் காக 2006 செப்ரெம்பர் 17 ஆம் நாள் தமிழ் முஸ்லிம் இளைஞர்கள் சென்றிருந்தனர். சிறீலங்கா அதிரடிப்படையினர் அங்கு அவர்களைக் குத்தியும், வெட்டியும், கழுத்தறுத்ததுமாக பத்து தமிழ் முஸ்லிம்களை படுகொலை செய்தனர். ஒருவர் படுகாயமடைந்த நிலையில் தமிழ் முஸ்லிம் மக்களால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனமதிக்கப்பட்டார். இந்த நிலையில் மேற்படி சம்பவ தினத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் சின்னப்பிள்ளை என்னுமிடத்தில் அமைந்துள்ள தமிழ் முஸ்லிம்களின் மையவாடிப் பகுதியில் சிங்களவர்கள் அத்துமீறி நுழைந்து ஒருவரின் உடலைப் புதைப்பதற்கு முயற்சிகளை மேற் கொண்டிருந்தனர். இதனைத் தொடர்ந்து தமிழ் முஸ்லிகள், சிங்களவர்களுக்கிடையில் பெரும் இன முரண்பாடுகள் ஏற்பட்டன.

இவ்வாறு தமிழ் முஸ்லிம்கள் குடியிருக்கும் நிலங்களை தமது ஆதிக்கத்திற்குக் கீழ் கொண்டு வரவதற்கான முயற்சியில் ஈடுபட்டுவந்த சிங்களப் பேரினவாதிகள் தொட்ந்தும் தமிழ் முஸ்லிம்களை ஒடுக்கும் முயற்சியின் ஒரு கட்டமாக அவர்களுக்கு எச்சரிக்கை ஒன்றினை விடக்கும் நோக்கிலேயே சிறீலங்கா விசேட அதிரடிப்படையினரால் இப் படுகொலைகள் மேற்கொள்ளப் பட்டதாக கருதப்படுகின்றது.

இச்சம்பத்தின் போது உயிரிழந் தவர்களின் பெயர் விபரம்

1. எம் அனுர்தீன் (15)
2. எம். நபார் (15)
3. எம். சமுதீன் (18)
4. எ.எம். பைசல் (19)
5. எல். அனிஸ் (19)
6. எம். ஜப்பர் (20)
7. எஸ்.எல். றிசாட் (-)
8. ஏ.எம். அஜ்மீர் (18)
9. எம். பைரூப் (19)
10. எம். ஐ. சியம் (-)

காயமடைந்தவர்

1. எம். மீரமுகைதீன் (55)

மாத்தளன் படுகொலை 18.09.1993

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற் பரப்பினை ஒரு பக்க எல்லையாகக் கொண்டமைந்த கிராமங்களில் மாத்தளன் கிராமமும் ஒன்று. இக்கிராம மக்கள் தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்திசெய்யக் கடற் றொழிலையே நம்பியிரந்தனர். அத்தோடு தமது பொழுதுபோக்கு மையங்களாக இந்தக் கடற்கரை களையே பயன்படுத்தி வரலாயினர். இவர்கள் தமது நாளாந்த தேவைகளை ஈடுசெய்ய வேண்டுமாயின் நான்கு கி.மீ. இற்கு அப்பாலுள்ள புதுக்குடியிருப்புச் சந்திப் பகுதிக்கே செல்லவேண்டிய நிலையும் இரந்தது. தமது கடற்பரப்பில் பிடிக்கப்படும் மீன்களைக்கூட இவர்கள் நீண்ட தூரம் சென்றே மக்களுக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலையில் வாழ்ந்து வந்தார்கள்.

இலங்கையில் உள்நாட்டுப் பிரச்சனை தொடங்கிய காலத்திலிருந்து கடற்படையினர் கடலில் மீன்பிடிப் பதற்குத் தடைவிதித்ததுடன்., மீனவர்களைக் கடலில் தாக்கியும் வந்ததார்கள். ஆனாலும் மீனவர்கள் தொடர்ந்தும் கடற்றொழிலைப் பல சிரமங்களுக்கு மத்தியிலும் செய்து வந்தனர்.

18.09.1993 அன்று மாலை 3:45 மணியளவில் மாத்தளன் சந்தியில் கட்டப்பட்ட பொது மண்டபத்தின் திறப்புவிழாவிற்காக முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளைச் சேர்ந்த இடம் பொயர்ந்த மக்களும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து அப்பகுதியில் வசித்த மக்களும் அப்பகுதியில் வாழ்ந்த மக்களும் அங்கு கூடினர். நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயத்தில் மாலை நான்கு மணியளவில் விமானப் படையின் "உலங்கு வானூர்தி" அப்பகுதியால் சென்றது. நேரம் மாலை 5:30 மணிக்கு மாத்தளன் வான்பரப்பிற்குள பிரவேசித்த சிறீலங்காவின் விமானப் படையின் "புக்காரா" குண்டுவீச்சு விமானங்கள் பத்திற்கும் அதிகமான றொக்கட் குண்டுகளை மண்டபத்தினை நோக்கி வீசியதில் மூன்று குண்டுகள் மண்டபத்தின் மீது விழுந்தன. ஏனைய குண்டுகள் மண்டபத்தின் முன் புள்ள சிறிய வயற்பகுதிகளில் விழுந்து வெடித்தன. எங்கும் "ஐயோ" என்ற அவலக்குரலுடன் மக்கள் திக்குத் திசையறியாது சிதறியோடினர். மண்டபம் புகைமண்டலமாக மாறியது. இவ்விமானத் தாக்குதலில் இருபது பொதுமக்கள் அவ்விடத்தில் உடல் சிதறிப் பலியானார்கள்.

நாற்பதிற்கும் அதிகமானனோர் படுகாயமடைந்தனர். குறிப்பிட்ட பொதுமண்டபமும் முற்றாகச் சேதத்திற்குள்ளானது. தாக்குதல் நடந்த சிலமணி நேரத்தின்பின் காயமடைந்தவர்கள் அம்புலன்ஸ் மூலம் புதுக் குடியிருப்பு வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட டனர்.

18.09.1993 மாத்தளன் படு கொலையில் கொல்லப்பட்டோர் விபரம்

1. இன்ரிகிறேஸ் ஜோசப் (31)
2. இம்மானுவேல் ஆனந்த ராஜா (19)
3. பிரான் சிஸ் அருள் தாஸ்(23)
4. பிலிப்புதவராசா சுஜாத்தா (10)
5. பரமானந்தம் (40)
6. தம்பிராசா குணசிங்கம் (18)
7. தியாகராஜா கண்ணன் (16)
8. மரியதாஸ் அன்ரன் ஜெய பாலன் (32)
9. மரியதாஸ் அன்ரன் யேசு தாஸ் (30)
10. முத்தையா துரைசிங்கம் (45)
11. மரியதாஸ் இன்மானு வேல் ஆனந்தராசா (19)
12. டானியல்பிள்ளை பிலிப்பு தவராசா (39)
13. அந்தோனிப் பிள்ளை சகாயநாயகி (18)
14. யோசப் வினிற்றா கிறேஸ் பிரெட்றிக் (31)
15. யேகமார்க் அன்ரனிதாஸ் (29)
16. செல்லையா செல்வம் (கண்ணன்) (16)
17. சியாத்தா திலீப்மேரி (09)
18. சின்னப்பு அல்போண்ஸ் (22)
19. சங்கரசிவம் புலேந்திரன் (15)
20. சங்கரசிவம் சுரேந்திரன் (18

காயமடைந்தவர்களின் விபரம்:

1. கந்தையா குமாரசாமி (45)
2. அன்னலிங்கம் சொர்ண லிங்கம் (37)

குறிப்பு: - இச்சம்பவத்திற் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங் களையும் பெறமுடியவில்லை.

யாழ் வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் பாடசாலைப் படுகொலை 1995.09.22







யாழ் வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் பாடசாலைப் படுகொலை 1995.09.22





யாழ் மாவட்டத்தில் வடமராட்சியில் நாகர்கோயிற் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்து மக்களின் பிரதான தொழில் மீன்பிடித்தல் ஆகும். கிராமத்தில் 15.02.1956 இல் திரு. வி. நாகநாதன் அவர்களின் முயற்சியினால் நாகர்கோயில் வடக்கில் யாழ். நாகர்கோயில் நாகேஸ்வரர் வித்தியாலயம் அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டது. பின்னர் 1967 இல் யாழ். நாகர்கோயில் மகாவித்தியாலமாகத் தரம் உயர்த்தப்பட்டது.

1990 ஆம் ஆண்டு சிங்கள இராணுவ நடவடிக்கை காரணமாக மயிலிட்டிக் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்தவர்களில் ஆறுநூறு குடும்பங்கள் நாகர்கோயிலிற்கு இடம்பெயர்ந்தன. நாறூறு மாணவர்களைக் கொண்டிருந்த பாடசாலையின் மாணவர் தொகை எழுநூறாக உயர்ந்தது. 1991 ஆம் ஆண்டு ஆனையிறவுப் பகுதியில் நடைபெற்ற சண்டையினால் வெற்றிலைக்கேணி, ஆழியாவளை, கட்டைக்காடு போன்ற கிராமமக்களும் நாகர்கோயிலிலேயே தஞ்சமடைந்தனர். 1993 ஆம் ஆண்டுக்குப் பின்பு மாணவர்களின் எண்ணிக்கை எண்ணூற்றுமுப்பதாக அதிகரித்தது. ஆசிரியர்களின் எண்ணிக்கை முப்பதாக அதிகரித்துக் காணப்பட்டது.

1995 ஆம் ஆண்டு செப்ரெம்பர் அருபத்தோராம் திகதி வடமராட்சியின் பல பாகங்களுக்கும் பலாலியிலிருந்து சிங்கள இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர். மறநாள் இருபத்திரண்டாம் திகதி வெள்ளிக்கிழமை 6:30 மணிக்கு வடமராட்சி கிழக்குப் பகுதியில் சிறீலங்கா விமானப் படையின் "புக்காரா" குண்டுவீச்சு விமானம் மணற்காடு கிறிஸ்தவ தேவாலயத்துக்கு அருகில் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டதில் தேவாலயம் சேதமடைந்ததுடன், மணற்காட்டைச் சேர்ந்த இரத்தினம் அன்ரனிதாஸ் (08), மனோகரதாஸ் மரியஜித் (10), ஜோன்பொஸ்கோ கார்மிளா (05) ஆகிய மூவரும் உயிரிழந்ததுடன், பலர் படுகாயமடைந்தனர்.

அன்றைய நாள் (22.09.1995) வடமராட்சி கிழக்கில் காலை பதற்றமாக இருந்தபோதும் நாகர்கோயில் மகாவித்தியாலயத்துக்கு வழமைபோல மாணவர்கள் வந்தனர். அன்றையநாள் எண்ணூற்றுமுப்பது மாணவரில் எண்ணூற்றுபத்து மாணவர்கள் வந்திருந்தனர். வெள்ளிக்கிழமை என்பதால் காலையில் இறைவழிபாடு ஆரம்பித்தது. இறைவழிபாட்டினைத் தொடர்ந்து நற்சிந்தனை இடம்பெற்றது. அன்றைய நற்சிந்தனையினை ஏழாம் ஆண்டில் கல்விகற்கும் "நவரத்தினசாமி உமாதேவி" எல்லோரையும் கவரக்கூடிய விதத்தில் இனிய குரலில் இருபத்தைந்து நிமிடம் உரையாற்றினார். இதனைத் தொடர்ந்து மாணவர்கள் கல்வி கற்றுக் கொண்டிருந்தார்கள்.

மதியம் 12:45 மணியளவில் வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது நாகர்கோயில் வான்பரப்பிற்குள் பிரவேசித்த சிறீலங்கா விமானப்படையின் இரண்டு "புக்காரா" விமானங்களிலிருந்து மாறி, மாறி எட்டு றொக்கட் குண்டுகள் பாடசாலையையும், கிராமத்தையும் நோக்கி வீசப்பட்டதினால் அப்பிரதேசம் புகைமண்டலமானது.

இத்தாக்குதலில் காலைப் பிரார்த்தனையில் உல்லோராலும் பாராட்டப்பட்ட "நவரத்தினசாமி உமாதேவி" உட்பட எழு மாணவர்கள் பாடசாலையினுள் உயிரிழந்தார்கள். படுகாயத்துடன் உயிருக்காகப் போராடிய பதின்மூன்று மாணவர்கள் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியிலும், வைத்திய சாலையிலும் இறந்தனர். மேலும் நாற்பத்திரண்டு மாணவர்கள் படுகாயமடைந்தனர். இன்னும் சில மாணவர்கள் தமது உடல் உறுப்புக்களை இழந்தனர். அன்று நடந்த புக்காராக் குண்டுவீச்சில் பாடசாலை மாணவர்களுடன் நாகர்கோயில் கிராமத்தைச் சேர்ந்த இருபத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களும் உயிரிழந்ததுடன், எண்பதைந்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்தார்கள். அன்றை தாக்குதலில் இருபது மாணவர்கள் உட்பட நாற்பது பேர் உயிரிழந்தனர். நாற்பத்திரண்டு மாணவர்கள் உட்பட நூறு பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் வலது காலை இழந்த ச. சிறிவித்தியா கூறுகையில்...

"அன்று புக்காரா விமானம் பாடசாலை அருகில் முதல் குண்டை போட்டவுடன் எல்லோரும் சிதறி ஓடினோம். அப்போது மீண்டும் விமான இரைச்சல் சத்தம் பெரிதாகக் கேட்ட போது நான் பாடசாலையிலுள்ள அத்திமரத்தின் கீழே விழுந்து படுத்து விட்டேன். குண்டு பாடசாலை வளாகத் திற்குள் விழுந்து வெடித்தது பாடசாலை முழுக்க புகை மண் டலமாக இருந்தது. எங்கும் ஓரே அழு குரல்கள் கேட்டது. நானிருந்த இடத்தில் இருந்து தலையைத் துக்கிப் பார்த்த போது எங்கும் இரத்தமாக இருந்தது. எனது உடம்பிலும் காலிலும் காயமடைந்திருந்தேன அப்போது நான் அத்திமரத்தை பிட்டு எனக் கருகிலிருந்து எனது ஒன்றுவிட்ட சகோதரியையும் கூட்டிக்கொண்டு ஓடும் நோக்குடன் எழும்ப முயன்ற போது என்னால் ஓடமுடியாமற் போய்விட்டது. அந்தநேரம் எனது அண்ணாதான் வந்து என்னைத் துக்கிக்கொண்டுபோய் மந்திகை வைத்தியசாலையிற் சேர்த்தார். அங்கு எனது வலது காலினைக் கழற்றினார்கள். அத்துடன் எனது வலது கையையும் கழற்ற வேண்டுமென்று கூறினார்கள். பின்னர் யாழ் போதனா வைத்திய சாலையில் மேலதிக சிகிச்சை பெற்றுகுணமடைந்தேன்."

22.09.1995 அன்று யாழ் வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் பாடசாலைப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்

1. இராமநாதன் மேதினி (13)
2. இராமச்சந்திரன் சங்கீதா (14)
3. இராசரத்தினம் உமாகாந்தன் (16)
4. இராசரத்தினம் கவிதா (10)
5. இரவீந்திரராசா அமிர்தா (10)
6. உ.தர்சினி (12)
7. நாகமுத்து செல்தில்வேல் (15)
8. நவமணி மிதுரா (14)
9. நவரத்தினசாமி உமாதேவி (12)
10. குகசரவணைமலை தர்சினி (13)
11. கிருஸ்ணகோபால் தவசீலன் (13)
12. பூலோகராசா துஸ்யந்தி (13)
13. பாலச்சந்திரன் றெஜிதா (10)
14. த.சமித்தா (10)
15. தர்மலிங்கம் உசாநந்தினி (14)
16. தாமோதரம்பிள்ளை சகுந்தா (12)
17. தம்பிப்பிள்ளை கோபிதரன் (-)
18. மயில்வாகனம் கணநாதன் (13)
19. மகாலிங்கம் சண்முகவடிவேல் (16)
20. மார்க்கண்டு நாகலோசனி (10)
21. அன்ரன் மரிய மனோகரதாஸ் மரியறஜித் (09)
22. அன்ரனி மரியறோஸ் அன்ரனிதாஸ் (08)
23. அல்போன்ஸ் அமலவிஜி (14)
24. யோன் பொஸ்கோ கார்மிலரா (04)
25. செல்வகுலசிங்கம் செல்வதி (17)
26. செல்வம் (16)
27. சிதம்பரப்பிள்ளை சசிரூபி (11)
28. ராகவன் (16)

காயமடைந்தவர்களின் விபரம்

1. தங்கவேலாயுதம் றேணுகாயினி (12)
2. அ.றோமியா (10)
3. அக்கினேஸ்திரேசா கலிமண்ட் (12)
4. அக்கினேஸ் திரேசா அகிலதாஸ் (06)
5. அருமைலிங்கம் தாட்சாயணி (13)
6. சி. நரோசினி (09)
7. சி. சாரதா (45)

குறிப்பு: - இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.



மண்டைதீவில் கைது செய்து காணாமற்போனவர்கள் 25.08.1990 – 23.09.1990

யாழ். நகரத்திற்குத் தெற்காக வேலணைப் பிரதேசசேயலகப்பிரிவினுள் ஆயிரத்து இருநூறிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற மண்டைதீவுப் பிரதேசம் அமைந்துள்ளது.

25.08.1990 அன்று சிங்கள இராணுவத்தினர் ஊர்காவற்துரையிலிருந்து மண்டைதீவு நோக்கி இராணுவநடவடிக்கையை மேற்கொண்டனர். இந்நடவடிக்கையின் போது மக்களைப் பாதுகாப்புக் கருதி ஆலயங்களிற் தங்குமாறு முதல் நாள் உலங்குவானூர்தியிலிருந்து துண்டுப் பிரசுரங்களை வழங்கி மக்களுக்கு அறிவித்தனர். இதன்படி மண்கும்பான், அல்லைப்பிட்டி போன்ற கிராமத்து மக்கள் மண்கும்பான் அந்தோனியார் தேவாலயத்திலும், அல்லைப்பிட்டி பிலிப்நேரியார் ஆலயத்திலும் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர்.

24.08.1990 அன்று மண்கும்பான் அந்தோனியார் ஆலயத்திலும், இருபத்தைந்தாம் திகதி அதிகாலை அல்லைப்பிட்டி பிலிப்நேரியார் கோயிலிலும் தஞ்சமடைந்த மக்களில் பதினைந்து வயதிற்கும் நாற்பது வயதிற்கும் இடைப்பட்டவர்களை சிங்கள இராணுவத்தினர் கைதுசெய்தனர். இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர், இருவர் என மண்டைதீவில் இருபத்தெட்டுப் பேரும், அல்லைப்பிட்டியில் முப்பத்திரண்டு பேரும், மண்கும்பானில் பத்துப் பேருமாக மொத்தம் எழுபது பேர் கைது செய்யப்பட்டனர்.

28.08.1990 இல் கைதுசெய்தவர்களில் ஒரு சிலர் விடுவிக்கப்பட்டனர். பின்பு 23.09.1990 சிங்கள இராணுவத்தினரும், துணைக்குழுக்களும் (ஈ.பி.டி.பி) சேர்ந்து மண்கும்பான் அ.த.க பாடசாலையிலிருந்து பதினெட்டு மாணவர்களைக் கைது செய்தனர். எல்லாமாக மூன்று கிராமத்திலும் எண்பத்தெட்டுப் பேர் கைதுசெய்யப்பட்டனர். ஆனால் இவர்கள் எவரும் இன்று வரை விடுதலையாகவில்லை.

இச்சம்பவத்தில் கைது செய்யப்பட்ட ஒரோ குடும்பத்தைச் சேர்ந்த விஜயரட்ணம், சுகிர்தரட்ணம், பிரேமரட்ணம் ஆகிய மூன்று பிள்ளைகளின் தந்தையான யேசுரட்ணத்திடம் இது தொடர்பாகக் கேட்டபோது:

"கைது செய்யப்பட்ட என் பிள்ளைகளின் நிலை தொடர்பாக 1991 ஆம் ஆண்டு முதல் வாரத்தில் நாங்கள் சிறிதர் விதியில் இருக்கும் ஈ.பி.டி.பி. செயலகத்திற்குச் சென்று திரு. டக்ளஸ் தேவானந்தாவிடம் கேட்டோம். ஜி அப்போது அவர் "அநேகமாக மூன்று பிள்ளைகள் என்றால் ஒன்றும் நடந்திருக்காது நான் அனுராதபுரம் போய்வந்து சொல்கிறேன். ஜி என்றார். அப்போது நாங்கள் பிள்ளைகளின் ஆவணங்களைக் கொடுத்தபோது அதைப் பிரதி பண்ணித் தரும்படி கேட்டார். அதன்படியே நாங்கள் அடுத்த நாள் அவரிடம் கையளித்தோம்.

அதன் பின்பு கூட்டுப்படைத் தளபதியாக இரந்த திரு. டென்சில் கொப்பேகடுவ அவர்களிடம் மனு செய்தோம். நேரிலும் அவரிடம் பல தடவைகள் கேட்டோம். ஒவ்வொரு தடவையும், ஒவ்வொரு முறையும் டக்ளஸ் தேவானந்தா வோடு தொடர்பு கொண்டார்களா" என்று தான் கேட்பார். கடைசி முறையாக 13.05.1992 நானும், அப்போதைய கல்விப் பகுதி பிரதி அமைச்சர் திருமதி. இராஜமனோகரி புலெந்திரன் அவர்களும் திரு. டென்சில் கொப்பேகடுவ அவர்களைக் கேட்ட போது, அவர் நான் இம்முறை தீவுப்பகுதிக்குப் போய்வந்து உங்கள் பிள்ளைகளைக் காட்டுகிறேன் என்றார். அதன் பின்னர் 1992 ஆனி மாதம் இறுதி வாரத்தில் கொழும்பு பார்க் வீதியில் இருக்கும் ஈ.பி.டி.பி செயலகத்தில் திரு. டக்ளஸ் தேவானந்தாவைக் கேட்டோம். அவரும் தான் இம்முறை தீவுப்பகுதிக்குப் போய் வந்து சொல்லுவதாகக் கூறினார்.

14.08.1992 திருமலை சீ.சீ.எம்.பி சிறையில் எமது பிள்ளைகள் உட்பட எண்பது பேர் மதிய உணவின் பின்னர் பாதுகாப்பாக வெளியே கொண்டு செல்லப்பட்டனர் என தகவல் கிடைத்தது. அதன் பின்னர் 23.12.1994 இல் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவிடம் மனு பண்ணினோம். அப்போது அவர் ஆணைக்குழு விசாரணை செய்யப்போவதாகவும், அதற்கு எங்களை விண்ணப்பம் பண்ணும்படியும் சொன்னார். அதன் படியே ஆணைக்குழு விசாரணைக்கு விண்ணப்பித்தோம்.

12.06.1996 இல் ஆணைக்குழு விசாரணைக்கு வரும்படி அழைக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது. அப்போது ஆணைக்குழுவினர் உங்கள் பிள்ளைகளை திரு. டக்ளஸ் தேவானந்தாவிடம் கேளுங்கள் என்று கூறினார்கள். ஆனால் நாங்கள் கேட்கமுடியாது நீங்கள் கேட்டுச்சொல்லுங்கள் என்று கூறினோம். அதன்படி தாங்கள் கேட்டுச்சொல்லுவதாகக் கூறினார்கள். ஆனால் இதுவரை எவ்வித பதிலும் எனக்குக் கிடைக்கவில்லை" எனத் தெரிவித்தார்.

சிறீலங்கா இராணுவத்தினராலும் துணைக்குழுக்களாலும் கைது செய்யப்பட்டு காணாமற்போனவர்களில் பலர் சித்திரவதைகளின் பின் உயிரிழந்ததாகவும், அவர்களது உடல்களை மண்டைதீவில் வீட்டு வளவினுள் உள்ள கிணற்றிற் போட்டதாக ஊர் மக்கள் தெரிவித்தனர். இவர்களிற் சிலரின் எலும்பு கூடுகளும் மீட்கப்பட்டன. இவ்வாறு காணாமற்போய் உயிரிழந்தவர்களின் நினைவாக மண்டைதீவில் நினைவுக்கல் கட்டப்பட்டுள்ளது.

25.08.1990 – 23.09.1990 வரை மண்டைதீவில் கைது செய்து காணமற்போனவர்கள் விபரம்

1. சூசைப்பிள்ளை செல்வநாயகம் (35)
2. இ. சுதாகரன் (20)
3. இ. விபுலானந்தர் (30)
4. இரட்ணம் ஜெயசீலன் (23)
5. உதயகுமார் (-)
6. ந. குகானந்தராசா (24)
7. பாலசிங்கம் (30)
8. பத்திநாதர் டயஸ் (22)
9. பத்திநாதர் சென்யூட் (27)
10. பழனித்துரை சத்திய பாலன் (34)
11. பி.தவம் (18)
12. பி. ஜெயச்சந்திரன் (18)
13. பி. சதீஸ்வரன் (-)
14. பி. பத்மராசா (20)
15. ரி. இருதயராசா (26)
16. ரி. ஆரோக்கியநாதன் (23)
17. ரி. அருள்நேசன் (22)
18. ரி. யோகராசா (18)
19. ரி. ஞானேந்திரன் (25)
20. ரி. செல்வரட்ணம் (20)
21. ரி. சுந்தரலிங்கம் (24)
22. ரி. சாந்தலிங்கம் (20)
23. ரி. சிமோன் (20)
24. ரி. ராஜ்குமார் (32)
25. ரி. ராதாகிருஸ்ணன் (-)
26. ரி. ரவீந்திரன் (21)
27. வை. எட்வேட் (21)
28. த. பாலரட்ணம் (20)
29. திரநாயகம் சட்டநாத பிள்ளை (32)
30. மா. தவசீலன் (24)
31. மடுதீன் ஸ்ரானிக் (21)
32. மிசேல் ஸ்ரானிக் (19)
33. மிசேல் சில்வஸ்ரார் (32)
34. அ. அழகராசா (19)
35. அ. ஜெயசீலன் (23)
36. அன்ரன் அசில்லாஸ் (28)
37. அன்ரன் அருள்தாஸ் (26)
38. அந்தோனி ஆரோக்கியராசா (23)
39. அந்தோனி றொபேட் (20)
40. ஆர். முருகானந்தன் (21)
41. ஆர். ரவீந்திரன் (20)
42. அலம்பின் றொபேட் (18)
43. ஜெயக்குமார் (22)
44. ஜோர்ச் சில்வஸ்ரார் (20)
45. ஜேசுதாஸ் (-)
46. யோ. விஜயபாலன் (21)
47. நோபேட் ரமேஸ் (19)
48. கே. இந்திரகுமார் (21)
49. கே. இராசசேகரன் (21)
50. கே. பிரமாதீஸ்வரன் (22
51. கே. பீற்றர்போல் (17)
52. கே. விஜயகுமார் (19)
53. பொ. காந்தலிங்கம் (24)
54. செ. சுவக்கிப் பிள்ளை (30)
55. சொர்ணலிங்கம் லிங்கேஸ்வரன் (21)
56. ச. சதானந்தராசா (28)
57. சாள்ஸ் அன்ரனி அன்னதாஸ் (27)
58. சி. அரவிந்தன் (20)
59. சி. சந்தியசீலன் (29)
60. சி. விமலதாஸ் (20)
61. சிவபாலசிங்கம் (28)
62. வி. டொன்போஸ்கோ (19)
63. விஜயரட்ணம் ரவி (23)
64. வில்பிரேட் தேவராசா (25)
65. எஸ். விறேமரட்ணம் (16)
66. எஸ். திருச்செல்வம் (-)
67. எஸ். மகேந்திரன் (20)
68. எஸ். அன்பழகன் (19)
69. எஸ். அருள்நேசன் (28)
70. எஸ். செல்வநாதன் (21)
71. எஸ். சுகிர்தரட்ணம் (19)
72. எஸ். சிவரூபன் (16)
73. எஸ். சிவகுமார் (19)
74. எஸ். சிவபாலன் (19)
75. எஸ். ரஞ்சித்குமார் (19)
76. எஸ். ரவீந்திரன் (15)
77. எஸ். லிங்கேஸ்வரன் (22)
78. என். இரட்ணசிங்கம் (21)
79. என். ஜேசுதாஸ் (45)
80. எம். சிந்தாத்துரை (28)
81. என். விஜயரட்ணம் (35)

வேறு நாட்களில் காணாமற்போனவர்களின் விபரம்

1. நிசோலஸ் டயஸ் எட்வின் (17) – 17.07.1996
2. பி. வரோதயநாதன் (18) – 25.05.1993
3. தாவீது பென்ஜமீன் (25) – 1992 ஓகஸ்ட்
4. என. சச்சிதானந்தராசா (24) – 1986
5. வி. பாலரஞ்சன் (39) – 1991 பெப்ரவரி

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

சாவகச்சேரி – சங்கத்தானை புக்காராக் குண்டுவீச்சு 28.09.1993

யாழ் நகரிலிருந்து கிழக்குப்புறமாக யாழ்-கண்டி நெடுஞ்சாலையில் சாவகச்சேரி நகர் அமைந்துள்ளது. சாவகச்சேரி நகரப்பகுதியிலிருந்து ஐநூறு யார் தொலைவில் கண்டி வீதியின் கிழக்குப் பக்கமாக சங்கத்தானைக் கிராமம் அமைந்துள்ளது.

1990 இன் பின்னர் போர் தீவிரமடைந்தது. இதன்போது விமானங்கள் மக்கள் குடியிருப்புக்கள், பொது இடங்களென எங்கும் தமது தாக்குதலை நடத்தின.

அத்துடன், சிங்கள இராணுவத்தினர் நீண்டதூர எறிகணைத் தாக்குதல்களையும் மேற்கொள்ளத் தொடங்கினார்கள். இதன்விளைவாகப் பொதுமக்கள் தம்மை விமானத் தாக்குதல், எறிகணைத் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக காப்பகளழிகளை அமைத்து வந்தனர்.

இக்கிராமத்தில் "உதயன் மரக்காலையில்" அமைந்திருந்த பதுங்குகுழி அயலில் வாழுகின்ற மக்களின் பாதுகாப்பரனாக இருந்தது. 28.09.1993 அன்று மாலை 5 மணியளவில் சாவகச்சேரி நகரப் பகுதியில் பெரும் இரைச்சலுடன் வந்த ஆஜன்ரினா நாட்டுத் தயாரிப்பான இரண்டு "புக்காரா" விமானங்கள் இரு தடவைகள் வானில் வட்டமிட்டன. பீதியுற்ற மக்களில் முப்பத்தைந்திற்கும் மேற்பட்டவர்கள் தம்மைப் பாதுகாக்க உதயன் மரக்காலையில் அமைக்கப்பட்ட காப்பகழிக்குள் சென்றனர். இவ்வாமானங்கள் வீசிய முதலாவது குண்டு காப்பகழி மீது வீழ்ந்து வெடித்ததால், காப்பகழிக்குள்ளிருந்த குழந்தைகள் உட்பட முப்பது பேர்வரை சம்பவ இடத்தில் மண்ணுக்குள் புதைந்த நிலையில் உயிரிழந்தார்கள். காப்பகழியில் தஞ்சமடைந்த மக்களில் ஐந்துபேர் மட்டும் காயங்களுடன் மீட்கப்பட்டனர்.

உயிரிழந்தவர்களின் நினைவாக சாவகச்சேரி சங்கத்தானை "உதயன் மரக்காலையில்" நினைவுத்தூபி எழுப்பப்பட்டுள்ளது.

28.09.1993 அன்று சாவகச்சேரி – சங்கத்தானை புக்காராக் குண்டுவீச்சில் கொல்லப்பட்டோர் விபரம்

1. இரத்தினகோபால் சுதர்சன் (11)
2. நாகேஸ்வரி குருநாதன் (56)
3. கந்தையா செல்வராசா (40)
4. கணேசன் கௌசிகா (12)
5. பாலசுந்தரம் சந்திரசேகரம் (09)
6. பாலசுந்தரம் சுரேஸ் (12)
7. பாலசுந்தரம் ரதி (03)
8. தஸ்யனி பாலசுந்தரம் (02)
9. தங்கம்மா கணபதிப்பிள்ளை (56)
10. தங்கராசா சுசீலா (21)
11. மகேஸ்வரி செல்லையா (52)
12. அமுதலிங்கம் லச்சம்மா (53)
13. ஜெகதீஸ்வரன் ஜனனி (07)
14. ஜெகதீஸ்வரன் தினேஸ் (08)
15. ஜெகதீஸ்வரன் தசாஜினி (11)
16. ஜெகதீஸ்வரன் சாந்தினி (31)
17. கோபாலபிள்ளை சுதர்சன் (09)
18. கோபாலரத்தினம் சுபாஜினி (15)
19. பொன்னுத்துரை ஞானேஸ்வரி (60)
20. தெய்வேந்திரன் நாகேந்

கோணாவில் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல் 27.09.1996

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசசெயலர் பிரிவில் உள்ள டங்கியுள்ள கிராமங்களில் ஒன்று கோணாவிலாகும். அத்துடன் இது ஒரு விவசாயக்கிராமமாகும், இங்கு பலர் கூலித்தொழிலிகளாவர். இந்தக் கிராமத்து மக்கள் யுத்தகாலத்தில் பல தடவைகள் இடம்பெயர்ந்து பற்பல இன்னல்களையும் அனுபவித்தவர்களாவார்கள்.

1996 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் இருபத்தேழாம் திகதி காலை 11:30 மணியளவில் சிறீலங்கா விமானப் படையின் இரண்டு "கிபிர்" விமானங்கள் கோணாவில் காந்தி கிராமச்சந்தியில் குண்டுகளை வீசியது. இவ்விமானக்குண்டு வீச்சில் காந்தி கிராமச்சந்தியில் நின்ற மூன்று பொதுமக்கள் அவ்விடத்தில் உடல் சிதறிப்பலியானதுடன், பலர் படுகயமடைந்தனர். படுகாயமடைந்தவர்களில் இருவர் அக்கராயன் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற பின் சிகிச்சை பலனழிக்காமல் உயிரிழந்தனர்.

இச்சம்வத்தில் தகப்பனை யிழந்த விமலேஸ்வரி சம்பவம் பற்றி கூறுகையில்

"1996ஆம் ஆண்டு சத்ஜெய இராணுவ நடவடிக்கை காரணமாக நாங்கள் இடம்பெயர்ந்து போய் இராஜன் குடியிருப்பிலே இருந்தோம். அன்றை தினம் அம்மா மதிய உணவைச் சமைத்துக் கொண்டிருந்தார். அப்பா மரக்கறி வாங்குவதற்காக காந்தி கிராமம் சந்திக்குச் சென்ற போது தான் கிபீர் விமானம் குண்டு போட்டது. அப்பா நெஞ்சுப்பகுதி முழுவதும் சிதைந்து போய் அவ்விடத்திலேயே இறந்து விட்டார். இதை அறியாத நானும் அம்மாவும் காந்தி கிராமத்திற்கு ஓடி வந்து பார்த்தபோது அப்பாவைக் காணவில்லை. சிலவேளை வீட்டிற்கு வந்தீருப்பார் என்று நினைத்து திரும்பவும் வீடு போய்ப் பார்த்த போது அங்கேயும் இல்லை. அப்பா இறந்தது தெரியாது நாங்கள் தேடித்திரிந்த போது எரிந்த ஒரு அண்ணா வந்து சொன்னார், உங்களுடைய அப்பா காலில் காயம்பட்ட நிலையில் அக்கராயன் வைத்தியசாலையில் இருக்கிறார் என்று. உடனே நாங்கள் அவருக்குத் தேவையான பொருட்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு வைத்தியசாலைக்குப் போனோம். அங்கே எனது அப்பாவின் உடலையும் தாத்தாவின் உடலையும் அத்தையும் சில உறவினர்களும் எடுத்து வைத்திருந்ததை கண்ட போது தான் இருவரும் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டார்கள் என்பது தெரிந்தது. பின்னர் இருவரது உடல்களையும் அக்கராயன் முதலாம் இலக்க அரிசி அலை வளவில் வைத்து இறுதிக் கரியைகளைச் செய்தோம். அப்பா இல்லாதுடன் வீடு வாசல்கள் இல்லாமல் மரங்களுக்கு கீழே இருந்து சரியாகக் கஸ்ரப்பட்டோம். மில்லுக்கப் போய் உமியைப் பிடைத்து அதில் வரும் அரிசியை எடுத்துச் சாப்பிட்டோம். அது இல்லாத வேளை வேறு ஆட்களின் காணியிற் போய் தேங்காயை எடுத்து வந்து அதை உரித்துச் சாப்பிட்டு வந்தோம். பின்னர் கஸ்ரம் தாங்கமுடியாமல் திரும்ப சித்தியினுடைய வீட்டிற்கு வந்து அதிலிருந்து எங்களுடைய சொந்த வீட்டிற்கு வந்திருத்தோம். சரியான கஸ்ரத்தின் மத்தியில் நெல்லுப் பிடைச்சுத் தான் சாப்பிடுகின்றோம். நான் படிப்பை விட்டு விட்டேன். எனது அண்ணாவும் அப்படித்தான் படிப்பை விட்டு விட்டார். தற்போது நானும் ஒரு அண்ணாவும் தங்கையும் அம்மாவும் மட்டுந்தான் இருக்கின்றோம். அம்மா புல் பிடுங்கப் போனாற் தான் நாங்கள் சாப்பிடுவது. இல்லாது விட்டால் நான் தான் ஏதாவது ஒரு வேலைக்குப் போகவேண்டும். நாங்கள் எந்தவிதக் குறையும் இல்லாது வாழ்ந்த வேளை எங்களுடைய அப்பாவை சிறீலங்கா விமானப்படை கொடூரமாகக் கொன்றதாற் தான் நாங்கள் இப்படிக் கஸ்ரப்படவேண்டி வந்திருக்கிறது. அப்பா அருந்திருந்தால் எங்களை நல்லபடியாகப் பார்த்து படிக்க வைத்திருப்பார். இப்போது எதிர்காலம் தொடர்பான கேள்விக் குறியுடன் மிகுந்த கஸ்டத்தின் மத்தியிலேயே எமது நாட்கள் செல்லுகின்றது."

இச்சம்பவத்தின் கணவனை இழந்த வைகுந்தவாசன் பரிமளா என்பவர் கூறுகையில்...

"எனது கணவர் ஒரு ஓவியர், விளம்பரம் பலகைகள் வரைவது அவரது தொழில், கிளிநொச்சி மக்கள் எல்லோரும் இடம்பெயர்ந்து அக்கராயன் பக்கம் சென்று கொண்டிருந்தார்கள். கணவர் சந்தைக்குப் போய்விட்டு வருவதாகச் கூறிச் சென்ற சில நேரத்தின் பின் கிபீர் விமானங்கள் சுற்றி குண்டு போட்டவுடனேயே நான் சந்திக்குப் போனேன். அங்கு அவரில்லை. அங்கு நிற்பவர்கள் சொன்னார்கள் அவர் காயப்பட்டு அக்கராயன் வைத்தியசாலைக்கு கொண்டுசென்று விட்டார்கள் என்று. பின்னர் நானும் மூத்த மகனுமாக வைத்தியசாலைக்குச் சென்ன்றபோது அவர் உயிரிழந்துவிட்டார். செஞ்சிலுவைச் சங்கத்தினர் தான் அவரின் உடலை வீட்டிற்குக் கொண்ட வந்து தந்தார்கள். உரிய முறைப்படி தகனம் செய்தோம். அவர் இறந்த பிறகு பிள்ளைகளும் பெரிதாகப் படிக்க வில்லை. அக்கராயனுக்கு இடம் பெயர்ந்தும் பெரிய கஸ்ரத்தை நான் அனுபவித்தேன். அரிசி இடித்துக் கொடுப்பது புல்லுப் பிடுங்குவது போன்ற கூலித் தொழிலைச் செய்து தான் இன்றும் சீவியம் நடத்துகின்றேன் என்றார்."

27.09.1996 அன்று கோணாவில் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலில் கொல்லப்பட்டோர் விபரம்

1. இராசதுரை திருக்குமார் (20)
2. கந்தையா விஜயகுமாரி (31)
3. முத்துசாமி வைகுந்தவாசன் (39)
4. பெரியசாமி வேலு (61)
5. சிவனாண்டி ஜெனகாந் (15)

காயமடைந்தவர்கள் விபரம்

1. பொன்னையா ஜெயநாதன் (16)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலயம் மீதான தாக்குதல் 29.09.1993

யாழ்ப்பாணத்தின் நல்லூர் பிரதேசத்தில் கொக்குவில் கிராமம் அமைந்துள்ளது. சைவசமய வளர்ச்சிக்கும், சைவ அபிவிருத்திக்கும் முன்னோடியாக இக்கிராமத்தில் நந்தாவில் எனும் ஊரில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் இற்றைக்கு இருநூற்றைம்பது வருடம் பழமை வாய்ந்ததாகவும், பல வரலாற்றுச் சிறப்பம்சங்களைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்வாலயத்தில் 1988 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினராலும், 1993 ஆம் ஆண்டு சிறீலங்கா விமானப்படையாலும் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

1988 ஆம் ஆண்டு ஆவணி மாதம் காலை 8:00 மணியளவில் ஆலயப் பகுதியாற் சென்ற இந்திய இராணுவத்தினர் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டு நின்றவர்களைச் சுட்டதில் எஸ். சண்முகம் (நல்லூர் ப.நோ.கூ.ச. ஊழியர்), கண்ணன் (ஆலய புரகர்), குலேந்திரன் (A.G.A கோப்பாய்) ஆகியோர் உயிரிழந்தார்கள். மேலும் ஐந்து பேர் காயமடைந்தனர்.

29.09.1993 காலை 10:00 மணியளவில் சிறீலங்கா விமானப் படையின் "புக்காரா" விமானம் ஆலயம் மீது குண்டுத்தாக்குதலை நடத்தியதில் ஆலய வழிபாட்டில் நின்றவர்களில் மூன்று பெண்கள் உயிரிழந்தனர். ஐந்து பேர் படுகாயமடைந்தனர்.



களத்துக்கு பூத்தவனே திலீபா!



திலீபா...
நீ, செத்து விட்டதா
எவன் சொன்னது?

எங்கள் குருதியில்
அணுக்களாய் சேர்ந்து
மூச்சுக்காற்றாய்
இன்றும் நீ, வாழ்கிறாய்...

சாவை அழைத்து
மடியினில் அமர்த்தி
கொஞ்சம் கொஞ்சமாய்
உன் உடலையே
தின்னக் கொடுத்தாய்!

உண்ணா நோன்பென்பதின்
அர்த்தத்தை
காந்தியின் கல்லறைக்குமல்லவா
சொல்லிக்கொடுத்தாய்!

தமிழீழ தாகம் தீர்க்க
பசி வேள்வியி லொரு
யாகம் தொடங்கினாய்!

சுதந்திர சோலை யமைக்க
போர்க்களத்தில்
குருதிப் பூவா யல்லவா
விதையாக மாறினாய்!

ஆயுதப் படைகளை எதிர்த்து
பட்டினிப் போர் தொடங்கி
அகிம்சை அம்புகளை வீசினாய்!

இருட்டு மண்ணில்
வெளிச்சம் பிறக்க
உன் சிதைக்கு
நீயே யல்லவா
நெருப்பை மூட்டினாய்!

தமிழன் கோட்டையில்
புலிக்கொடி பறந்திட
யுத்த களத்தில்
நீயும் சாம்பலாய் உதிர்ந்தாய்!

மெழுகாய் உன்னை உருக்கி
தீப் பிழம்பா யல்லவா
எழுந்து வெடித்தாய்!

பட்டினி கிடந்து
பசியினை சுவைத்து
காற்றுக்கே
உணவாய் உயிரைக்கொடுத்தாய்!

ஈழம் பிறக்க
தாய் மண்ணுக்குள்
உன் உடலையல்லவா
கருவாய் புதைத்தாய்!

புலியாய் பிறந்து
வரலாற்று பக்கங்களில்
நீ, வாழ்ந்ததாய் பொறித்தாய்!

சரித்திர சுவடுகளில்
புலிகளின்
துப்பாக்கிகக் குண்டுகளாயல்லவா
இன்றும் நீ, வாழ்கின்றாய்!

சுதந்திரக் காற்றை
சுவாசிக்க எண்ணி
வீரியப் புயலாய்
அன்று நீ, மறைந்தாய்!

ஆயிரமாயிரம்
புலிகளையல்லவா
விரட்சமாய் இன்று நீ, முகிழ்ந்தாய்!

பசியையே
பற்றவைத்து
அதில் தீயாய் நீயே எரிந்தாய்!

திலீபா
அன்று நீ, வாழ்ந்தாய்

எங்கள்
குருதியிலும்
மூச்சிலும்
இன்று நீ, வாழ்கிறாய்!

-வவுனியான், தமிழ்நாடு

சிறுவர் இல்லங்கள், ஒரு சில முதியோர் இல்லங்கள் Children's homes, a few nursing homes

இலங்கையில் யுத்தம் ஓய்ந்து ஒரு சாகாப்தகாலம் கடந்து விட்டது. ஆனாலும் வடக்கு, கிழக்கில் பல பராமரிப்பு இல்லங்கள் இன்னமும் இயங்கிவருகின்றன. இவை சிறுவர், மூத்தோர், சிறப்புத் தேவையுள்ளோர் இல்லங்கள் என வகைப்படும். இவை அனைத்தும் பொது மக்களின், பொது அமைப்புக்களின் நன்கொடைகளிலேயே தங்கியுள்ளன. தற்போதைய கோவிட்19 காலத்தில் நன்கொடைகள் குறைந்துள்ள இவ்வேளையில் எம்மாலான சிறு உதவிகளையேனும் இவ்வில்லங்களுக்கு வழங்கி இந்த இக்கட்டான காலத்தை கடக்க அனைவரும் உதவவேண்டுகின்றோம்

COVID 19 நோய்கள் பெரும் பரவல் காலம், உங்களை விட்டால் யாரும் இல்லை இவர்களுக்கு...!

"இந்தக் குழந்தைகள் யாருமற்றவர்களல்லர். தமிழன்னையின் புதல்வர்கள். வரலாற்றுப் பெருமை மிக்க சுதந்திரப் பெருமைமிக்க சுதந்திரப் போராட்ட சூழலில் இந்த இளம் விதைகளைப் பயிரிடுகின்றோம். இவை வேர்விட்டு வளர்ந்து விழுதுகள் பரப்பி விருட்சங்களாக மாறி ஒருகாலம் தமிழீழ தேசத்தின் சிந்தனைச் சோலையாகச் சிறப்புற வேண்டும் என்பதே எனது ஆவல்."



Amman Women & Child Development Center
Sagamam Rd, Kolavil 01, Akkaraipattu - Amparai 4 67 490 4955

Hermans Girls Home
Main St., Periyaneelavanai, Kalmurani - Amparai 97 76 058 5344

Jesus Lives Girls Home
Main St., Kalmuanai - Amparai 01 94 67 492 1161

Methodist Girls Home
Wesly School Rd, Kalmuanai - Amparai 94 67 222 9182

RKM Sharatha Girls Home
Girls Vidyalaya Rd, Karaithivu Amparai 05 94 67 222 3600

Seephe Divi Child Delelopment Centre
Kovil Rd, Veeramunai 01, Sammanthurai - Amparai 94 67 226 1144

Sri Indasara Child Development Centre
DK/65, Aralaganvila Rd, Dehiattakandiya - Amparai 94 27 562 2919

St. Maryís Boys Home
Yard Rd, Kalmunai - Amparai 01 94 71 354 5782

Swami Vipuilanantha Boys Children Development Centre
Kurukkal Rd, Akkaraipattu 7/2 - Amparai 94 67 227 7514

Canaan Harvest Childrenís Home
No 320/8, Passara Rd, 3rd Lane - Badulla 94 77 229 2022

Up Country Children Home
19/6, Badulupitiya Rd - Badulla 94 55 222 3335

Arutpani Girls Home
Beach Rd, Navakkuda - Batticaloa 94 77 6849

Assisi Boys Home
Main Rd, Kurukulmadam - Batticaloa 94 65 225 0313

Benthel Boys Children Home
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa 94 77 632 8577

Benthel Girlís Children Home
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa 94 77 632 8577

Bethel Girls Children Home
Vipulanada Rd, Valichenai - Batticaloa 94 77 515 3078

Eravur Children Care Home
Meerakerny Rd, Eravur - Batticaloa 94 77 996 6345

Good Shepherd Children Home
Post Office Rd, Valaichenai - Batticaloa 94 65 225 7400

Hari Boys Home
New Kalmuani Rd - Batticaloa 94 65 222 3653

Jeevananthan Girls Home
Main Rd, Pudukuduirippu - Batticaloa 94 65 365 0438

Kattankudy Boys Home
Kattankudy 01 - Batticaloa 94 65 224 5308

London Sivan Kovil Girls Home
Main Rd, Settipalayam - Batticaloa 94 65 205 6336

Managayarkarasi Girls Home
Maruthadi Rd - Batticaloa 94 65 205 7310

Manikkavasagar Boys Home
Palaiyadithona, Santhiveli, Kiran - Batticaloa 94 77 191 3037

Methodist Girls Home
Bar Rd, Kotamunai - Batticaloa 94 65 222 5402

Miyani Boys Home
Miyani nagar, Thannamunai - Batticaloa 94 77 459 0298

Miyani Girls Home
Miyani nagar, Thannamunai - Batticaloa 94 77 792 6410

Pariyowan Boys Home
Trinco Rd, Santhurukondan - Batticaloa 94 05 222 2524

Ramakrishana Boys Home
New Kalmunai Rd, Kalladi - Batticaloa 94 65 222 2752

Ramakrirushana Girls Home
New Kalmunai Rd, Kalladi - Batticaloa 94 65 222 2752

Sakthi Girls Home
Shakthi Home Rd, Kaluwanchikudy - Batticaloa 94 65 225 0745

Shakthi Girls Home
Arasadi Thervu, Kokaticholai - Batticaloa 94 65 364 2290

Shanthi Bawan Girls Home
Ghanasooriyam Sq., Cross Rd - Batticaloa 94 65 222 2524

Spaks Girls Home
Main Rd, Periya Kallaru - Batticaloa 94 67 222 1875

Thilahawathiyar Girls.Children Home
Main St., Kathiraveli, Vaharai - Batticaloa 94 77 629 8461

Thilahawathiyar Girls Home
Batticaloa - Hospital Rd, Palukamam - Batticaloa 94 65 225 1166

Thiruniyanasampathar Gurukulam
Main Rd, Kaluthavalai - Batticaloa 94 65 225 0277

Trust Village Womens Development Center
Savukady Rd, Mayilampavelhi - Batticaloa 94 76 789 7573

Vidhyajothi Boys Home
Central Rd - Batticaloa 94 77 481 6576

Vipulanantha Children Home

Main Rd, Palukamam - Batticaloa 94 65 225 1101

Vivehanada Children Home
Rattnam Rd, Valaichenai - Batticaloa 94 65 205 1442

Yoga Suwami Saiva Girls Children Home
Main Rd, Siththandi - Batticaloa 94 65 205 0420

St.Joseph Elders Home
Trinco Rd- Batticaloa 94 71 851 1951

Swami Vipulananthar Elder Home
Government Quaters Rd, Kallady - Batticaloa 94 65 222 6202

Ozanam Centre
Sathurukondan - Batticaloa 94 65 365 8636

Uthayam Association of Visually Handicapped
Saratha St., Nochchimunai - Batticaloa 94 65 205 0707

Elim Boys Child Development Center
Memorial Lane, Manipay - Jaffna 94 77 742 3824

Elim Girls Child Development Center
Memorial Lane, Manipay - Jaffna 94 77 406 9962

Forth Sq Girls Child Development Center
No 35, Sellar Rd, Nallur - Jaffna 94 77 064 1109

Hindu Board Boys Child Development Center
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 990 5304

Hindu Board Girls Child Development Center
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 699 2082

Holy Family Girls Child Development Center
Mirusuvil South, Mirusuvil - Jaffna 94 77 908 1270

Karunai Girls Child Development Center
Palaly Rd, Urumpirai, East - Jaffna 94 77 255 4334

Karunalayam Annai Krishnabai Girls C. D. C.
No 131, Palaly Rd, Thirunelveli - Jaffna 94 77 905 4873

Karunalayam Boys Children Development Center
Karanthan, Neerveli - Jaffna 94 77 416 1002

Salvation Army Girls Child Development Center
Kandy Rd, Kaithady - Jaffna 94 77 976 5696

SOS Village Child Development Center
No 219, Nayanmarkaddu, Nallur - Jaffna 94 77 373 3711

Sri Pramanatha Girls Child Development Center
Vathiri, Karaveddy, Jaffna - Jaffna 94 76 578 3004

Thurkkapuram Girl Child Development Center
Thurkkapuram, Tellippalai - Jaffna 94 21 224 9894

Valluvar Girlsí Child Development Center
Vaddukoddai East, Vaddukoddai - Jaffna 94 77 525 9513

Mother Teresa Elder Home Amithi Illam
Kondavil - Jaffna 94 21 223 0302

Sivapoomi Elders Home
Tholpuram. Chulipuram - Jaffna 94 21 225 0085, 94 21 321 4230

Sivapoomi School ForChildren with Special Needs
Intellectuals Disability - Jaffna Kondavil - Jaffna 94 21 224 9894

Vaalvagham-Home for the Vissually Handicapped
Sabapathipillai Rd, Chunnakam-Jaffna 94 21 224 0146 , 94 76 828 6331

Aruvucholai Boys Child Development Center
Thiruvaiaru West, Thiruvaiaru - Kilinochchi 94 21 228 3313

Aropanam Boys Child Development Center
Uruththirapuram - Kilinochchi 94 21 228 5088

Gandhi Nilaya Chidren Home & Training Centre - Kilinochchi
D-8,Uruthirapuram 94 21 228 4310, 94 77 208 1947, 94 77 720 1461

Holy Family Girls Child Development Center
D-8,Uruthirapuram - Kilinochchi 94 76 685 3115

Karuna Nilayam Girls Child Development Center
A9 Rd, Kandy Rd - Kilinochchi 94 21 228 5836

Mahadeva Saiva Boy Child Development Center
Puthumurippu - Kilinochchi 94 21 492 3121

Mahadeva Saiva Girls Child Development Center (11-18 Yrs)
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3119

Mahadeva Saiva Girls Child Development Center (6-10 Yrs)
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3118

Sencholai Boysí Child Development Center
Thiruvaiaru, Kilinochchi 94 76 536 8308

Sencholai Girlí Child Development Center
Thiruvaiaru - Kilinochchi 94 71 535 4504

Thangamma Elders Home -Kilinochchi
Puthukkulam, Kanagarayankulam 024 4931455, 077 449 9619

Trist Children Home
Ramanathapuram - Kilinochchi 94 21 206 0694

Yogar Swamigal Thiruvadi Nilaiyam Home
Vannerikulam - Kilinochchi 94 76 709 9162

Association. to Empowerthe Special Needs Children
Emersion Rd , Karadipokku 94 77 509 4390, 94 77 375 3776

Killinochchi Special Needs Newtwork
Malayapuram, Karachi - Kilinochchi 94 77 831 7536

Annai Girlsí Child Development Center
Uppukulam - Mannar 94 23 222 2483

Anpu Sakotharar Boys Child Development Center
Keeri - Mannar 94 77 534 4427

Sepamalai Mariyannai Irakathin Girlsí Child Development Center
Pesalai - Mannar 94 23 205 0095

Sivanarul Boys Child Development Center
Thiruketheeswaram - Mannar 94 23 205 0805, 94 77 581 5998

Sivanarul Girls Children Development Center
Thiruketheeswaram - Mannar 94 23 2050 804

Vetijin Nalnampikai Illam Good Faith Home of Victory
No 43, Convent Rd, Pattah - Mannar 94 23 2222 545

Saradha Mission Child Development Center
Kirigalpotta - Matale 94 66 205 1721

St. Francis Child Development Center
Vihaara Rd - Matale 94 77 438 4851

Anpu Boysí Child Development Center
Muthu Vinayagar Puram, Oddusuddan 94 71 535 4502

Barathy GirlChild Development Center
Putharikuda, Mulliyavalai - Mullaitivu 94 77 201 5234

Ladani Girls Child Development Center
Silawaththai - Mullaitivu 94 77 422 8853

Nallayan Girls Child Development Center
Jaffna Rd, Mankulam - Mullaitivu 94 21 206 1034

Pari Girlsí Child Development Center
Mulliyavalai - Mullaitivu 94 21 206 1034

Iniya Vazhvu Illam
A Division , Thevipuram - Mullaitivu 94 21 206 1949

Happy Home Child Development Center
Wanigasekarapura, Kotagala - Nuwara Eliya 94 51 224 4174

Maranatha Child Development Center
Hatton - Nuwara Eliya 94 51 222 2489

Rainbow Child Development Center
Drayton Estate, Kotagala - Nuwara Eliya 94 77 532 1680

Shalom Child Development Center
Lackam Estate, Maskeliya - Nuwara Eliya 94 52 227 7222

Annai Saratha Children Home
Mallihaitheevu, Muthur - Trincomalee 94 26 205 4506

Anpu Illam
167, Central Rd - Trincomalee 94 26 222 1214

Four Square
707 Anpuvalipuram - Trincomalee 94 26 222 7170

Grace Girls
3rd Mile Post, Cholaiyadi, Uppuveli - Trincomalee 94 26 722 3644

Hasanath Boys
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135

Hasanath Girls
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135

My Fatherís House Boys Children Homes
46, Kandasamy Rd - Trincomalee 94 26 222 6861

Rawlathul Athfal
PMB Rice Mill, Muthur - Trincomalee 94 77 934 7438

Rewathe Child Development Center
5th Post, Kandy Rd - Trincomalee 94 26 224 2328

Sivayogasamayam Swami Gangadaranatha Children Home
64 Main St. - Trincomalee 94 26 222 2049

Sri Sanmuga Boys 294 inner Harbor Rd - Trincomalee 94 26 567 0234

Sri Sanmuga Girls 57, Viddyalaya Rd - Trincomalee 94 26 222 2521

Thapovanam Boys
Thirukadaloor - Trincomalee 94 26 222 1469

Thapovanam Girls Thirukadaloor - Trincomalee 94 26 222 1469

Deva Anpu Children Home
Thiththikulam, Murunkanoor - Vavuniya 94 24 4921 859

Hindu Anpakam Children Home
Mannar Rd, Veppankulam - Vavuniya 94 24 222 3683

Salvatorian Girls Home
Iluppaikulam, Neriyakulam, Cheddikulam - Vavuniya 94 24 324 4577

Sri Ahilandeswary Children Home Kovilkulam - Vavuniya 94 24 222 1685

Mother Teresa Elder Home Pampaimadu -Vavuniya 94 24 205 4494

Sivan Elders Home
Ellappar Marutham Kulam - Vavuniya 94 24 222 1685, 94 77 656 7827

Thanagamma Eleders
No. 1 Puthukulam Rd, Puthukula - Vavuniya 94 76 248 2766

ஈகைச்சுடர் திலீபனின் வாசகங்கள்

♦ நான் நேசித்த தமிழீழ மண்ணில் வாழ்கின்ற அனைவரும் எமது உரிமையை மீட்பதற்கான பெரும் புரட்சிக்குத் தயாராக வேண்டும்.

♦ தமிழ் மக்கள் மிகவும் வழிப்புடன் இருக்கவேண்டும். இல்லையெனில் அவர்களின் எதிர்காலம் இருண்ட தாகிவிடும்.

♦ விடுதலை புலிகள் வாழ வேண்டும் என்றோ, ஆள வேண்டும் என்றோ அசைகொள்ளவில்லை. எமது மக்களுக்கு நிரந்தரமான, சுபீட்சமான எதிர்காலம் கிடைக் குமானால் நாம் அனைவரும் மரணிக்கவும் தயாராக உள்ளோம்.

♦ மக்கள் அனைவரும் எழுச்சியடைவார்களாயின் தமிழீழம் உருவாவதை யாராலும் தடுக்கமுடியாது.

♦ எமது உரிமைகளை நாமே பென்றெடுக்கவேண்டும். இதற்கு வேறு யாருடைய தயவையும் எதிர்பார்க்கக் கூடாது.

♦ நான் என்னுயிரினும் மேலாக நேசிக்கும் மக்களே! உங்களிடம் ஒரு பெரும் பொறுப்பை விட்டுச் செல்கிறேன். நீங்கள் அனைவரும் பரிபூரணமாகக் கிளர்ந்தெழவேண்டும். இங்கு ஒரு மாபொரும் புரட்சி வெடிக்கட்டும்.

♦ எம் எதிர்கால சந்ததி வாழ நிச்சயமாக எமக்கோர் நாடு அவசியம். இல்லாவிட்டால் எங்களைப்போல்தான் நாளை எமது எரிர்கால சந்ததியும் துன்பப்படும், கருதப்படும்.

♦ நான் ஆத்மரீதியாக உணர்கிறேன். இன்றில்லா விட்டாலும் என்றோ ஒரு நாள் எமது மக்கள் நிச்சயமாக விடுதலையடைவார்கள்.

♦ ஒரு மாபெரும் சதிவலைக்குள் சிக்கி வரும் எம் மக்களை எப்படியாவது விடுவிக்கவேண்டும்.



♦ என் போராட்ட வரலாற்றுச் சாதனைகளையிட்டு நான் மாபெரும் மகிழ்ச்சியும் பூரண திருப்தியும் அடைகிறேன்.

♦ எமது போராட்டத்தை அமைதி தழுவியதாகவோ அல்லது இரத்தம் தோய்ந்ததாகவோ அமையவேண்டு மெனத் தீர்மானிக்கவேண்டியவர்கள் இங்குள்ள முதலாளித்துவ ஆட்சியாளர்களே.

♦ சுதந்திரத்திற்கு விலையாக எங்கள் உணிரையே கொடுக்கத் தயாராக உள்ளோம்.

♦ மக்கள் புரட்சி இங்கு வெடிக்கட்டும். அது நிச்சயமாகத் தமிழீழத்தை எனது இறப்பின் மூலம் பெற்றுத்தரும். இதனை வானத்திலிருந்து இறந்த ஏனைய போராளிக ளுடன் தானும் பார்த்து மகிழ்வேன்.

♦ மரணம் ஒரு தடவைதான் வரும். ஆதற்காக மானத்தை விற்றுச் சிவிக்கமுடியுமா? இறப்புக்குப் பயந்து ,னத்தை அழியவிட முடியுமா?

♦ இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை இனவாதப் பூதம் விழுங்கும் போது, இந்தியா எமது நிலைப்பாட்டை ஆதரிக்க வேண்டி ஏற்படும்.

♦ எமது மண்ணின் விடுதலைக்காக யார் போராடு கிறார்களோ அவர்களே இந்த மண்ணின் மைந்தர்கள்.

♦ எமது மண்ணின் விடுதலையை நேசிக்காத எவரும் இம் மண்ணை ஆள அருகதையற்றவர்கள்.




AFFORDABLE REFRIGERATION SERVICES INC

Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers

We Sell. Install used &
new Walk in Cooler, Walk in Freezer



Kapil: 647.515.8643
kapil.afr@gmail.com



ARASAN RAJADURAI
REAL ESTATE & DEVELOPMENTS
SALES REPRESENTATIVE

C 416.500.9550
B 416.298.8383
F 416.298.8303
realtorarasan@gmail.com
www.century21.ca/arasan.rajadurai



Century 21 INNOVATIVE REALTY
CENTURY 21
Innovative Realty Inc. Brokerage
2855 Markham Rd
Toronto ON M1X 1C4

“புலிகளின் கிளை அலுவலகமாக இருந்தது என் வீடு”

“எனக்குப் பிறந்த நாள் கொண்டாடும் விருப்பம் என்றுமே இருந்ததில்லை. பிறந்தநாள் கொண்டாடும் அளவுக்கு நாம் என்ன பெரிய மனிதரா” என்று எனக்குள் எப்போதுமே ஒரு கேள்வி எழுந்துகொண்டிருக்கும்.

உண்மைணில் நான் ஒரு சாமான்யமான மனிதன்! நாம் எதையாவது சாதித்திருக்கிறோம் என்று சொல்லிக்கொள்ளவும் எதுவும் இல்லை.

இன்றும் எனக்குள் நான் ஒரு தொழிலாளி என்ற மனப்பான்மையில் தான் ஓடிக்கொண்டிருக்கிறேன். அந்த மனப்பான்மைதான் என்னை எளிமையானவனாக ஆக்கி வைத்திருக்கிறது. எனக்குப் பிறந்தநாள் கொண்டாட விருப்பம் இல்லாம் இருக்கலாம். என் மனைவிக்கு, என் மக்களுக்கு விருப்பம் எப்படி இல்லாமல் போகும்? அதனால் ஒவ்வோர் ஆண்டு அக்டோபர் - 06 ஆம் நாள் பிறந்தநாளை அவர்கள் சிறப்பாகக் கொண்டாடி வந்தார்கள்.

அது 06.10.1982,
அப்போது நான் மேலவைத் துணைத் தலைவராக இருக்கிறேன். என் மகன், ஒரே மகன் புகழேந்தி மாநிலக் கல்லூரியிலும், என் ஒரே மகள் கண்ணகி ஈரோடு கலைமகள் கல்வி நிலையத்திலும் படித்துக்கொண்டிருந்தார்கள். என் மகனுடன் படித்த அவனது தோழர்கள் குறைந்தது 50 பேராவது வந்தார்கள். என் மகளின் தோழியர்களும் வந்திருக்கிறார்கள். திரையுலக நண்பர்கள், அரசியல் துறை நண்பர்கள், உறவினர்கள் என்று பலரும் வந்திருந்தார்கள்.

சட்டப்பேரவைத்தலைவர் அண்ணன் க. இராசாராம் அவர்களும் வந்தார். அதே போல ஈழ விடுதலைப் போராளிகள், ஈழத்துத் தோழர்கள் அனைவரும் வந்தார்கள். அந்தப் பிறந்தநாளுக்கு நான் எதிர்பார்க்காத வகையில் தம்பி மதுரையில் இருந்து வந்துவிட்டார். தம்பியோடு ரகு, பேபி, இராகவன் என்று அனைவரும் வந்து விட்டனர்.

11:30 மணி இருக்கும். ப்ளாட் இயக்கத்தைச் சேர்ந்த உமா மகேஸ்வரன், சிவநேசன் ஜோதீஸ்வரன், தம்பி மாறன் ஆகியோரும் வந்து சேர்ந்தனர். இதனால், என் வீட்டில் ஒருவிதமான பரபரப்பு ஏற்பட்டுப்போனது!

பாண்டிபஜாரில் தம்பிக்கும் உமாவுக்கும் துப்பாக்கிச் சண்டை நடந்த பின்... நீண்ட நாட்களுக்குப் பின்னர் எங்கள் வீட்டில் தான் சந்திக்க இருந்தார்கள். என் மனைவிக்கு கைகால்கள் நடுங்க ஆரம்பித்து விட்டன. உடல் எல்லாம் வியர்த்துவிட்டது. “எதிர்பாராமல் இரண்டு பேரும் வந்து விட்டார்களே... என்ன செய்வது? ஏதாவது நடந்துவிடுமோ...? என்ற பதற்றத்தோடு சொல்லிக் கொண்டிருந்தார்.

நான்,
“அமைதியாய் இரு! நான் பார்த்துக் கொள்கிறேன். எந்த அசம்பாவிதமும் நடக்காது! இந்த வீட்டில் அப்படி நடந்துகொள்ள மாட்டார்கள்” என்று என் மனைவியை சமாதனப்படுத்தினேன்.

அதன்பிறகு தம்பியையும், பேபி, ரகு, இராகவன் ஆகியோரையும் வீட்டின் இரண்டாம் தளத்தில் உள்ள அறைக்கு அழைத்துக் கொண்டு சென்று அமரவைத்துவிட்டேன். உமாவையும், உமாவைச் சார்ந்த நண்பர்களை முதல் தளத்துக்கு அழைத்துப் போய் இருக்க வைத்துவிட்டேன்.

மற்ற ஈழத்து நண்பர்களுக்குக் கூட என்ன நடக்குமோ என்ற அச்சம் ஒருபுறம் இருந்தது. ஆனால் இந்த வீட்டில் அப்படி எதுவும் நடந்துவிடாது என்று என் மீது நம்பிக்கை வைத்திருந்தார்கள். மொட்டை மாடியில் இருக்கும் அறையில் ஏராளமான மாணவர்கள் மற்றும் எனக்கு நெருக்கமான நண்பர்கள் இருந்தனர். விருந்து பரிமாறத் தொடங்கினார்கள்.

நான் கொஞ்ச நேரம் தம்பியோடு சிரித்துப் பேசுவதும்... ஒரு நிமிடம் கீழே இறங்கி வந்து உமாவையும் நண்பர்களையும் கவனித்துக் கொள்வதும் என்று மேலும் கீழுமாக நடந்துகொண்டே இருந்தேன். நான் கீழே போவதும் வருவதுமாக இருந்ததைக் கவனித்த தம்பி, அதற்கான அர்த்தத்தைப் புரிந்துகொண்டு ஒன்றும் தெரியாதவராக... “என்னண்ணே... இப்படி மேலும் கீழுமாக ஓடிக்கொண்டிருக்கிறீர்கள்?” என்று கேட்டுச் சிரித்தார்.

“ஒன்றும் இல்லை தம்பி... நிரம்ப பேர் நண்பர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களையும் கவனிக்கவேண்டும் இல்லையா?” என்றேன்.

“ஆமாம்...ஆமாம்... கவனித்துதானே ஆகணும்?” என்று சொல்லி மேலும் பலமாக சிரித்தார். அவருடன் இருந்த தம்பிமார்களும் பலமாகச் சிரித்தார்கள். மதிய விருந்து முடிந்ததும் நான் உமாவையும் அவரது தோழர்களையும் ஒருவழியாக அனுப்பி வைத்துவிட்டேன். அவர்கள் வெளியே சென்ற பின்னர்தான் என் மனத்தில் இருந்த படபடப்பு அடங்கியது.

அவர்கள் எல்லாரும் சென்ற பின்னே... தம்பியும் மற்ற தம்பிமார்களும் கீழே கூடத்தில் அமர்ந்து நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டுப்போனார்கள். எல்.டி.டி.இ. என்ற பெயரை உமாமகேஸ்வரன் மாற்றிக்கொள்ளாவிட்டால் சுட்டுக் கொல்ல வேண்டும் என்ற தீர்மானத்தில் இருந்த தம்பி... நம் வீட்டில் எதுவும் நடந்து விடக்கூடாது என்பதில் எவ்வளவு உறுதியாக இருந்திருக்கிறார் என்பதை நினைத்து நான் பெருமிதம் அடைந்தேன்.

மகன் புகழேந்தியுடன் வந்திருந்த மாணவத் தோழர்களும், “டேய் புகழ்... உங்க சித்தப்பாவை இன்று பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது” என்று மகிழ்ச்சி அடைந்தார்கள்.

நான் தமிழ ஈழ விடுதலைக் கொள்கையில் இந்த அளவுக்குத் தீவரமாக இருந்ததற்கும்... எங்கள் வீடே விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஒரு கிளை அலுவலகம் போல செயல்பட்டதற்கும் என் மனைவியின் அக்கறையும் ஆதரவும் தான் பெருங்காரணமாக அமைந்தன.
ஈழ விடுதலைப் போராளிகள் என்று சொன்னால் எந்த வீட்டுக் கதவும் திறக்காமல் இருந்த காலம்! ஆனால் எங்கள் வீட்டுக் கதவு அவர்களுக்கு எப்போதும் திறக்கிற கதவாக இருந்தது. ஈழத்தில் பயிற்சி முகாம்களில் இருந்து வருகிறவர்கள் நள்ளிரவு நேரத்தில் வந்து என் வீட்டுத் தொலைபேசியில் தொடர்புகொள்வார்கள்! நள்ளிரவில் வருகின்ற தொலைபேசி அழைப்புகளை நான் எடுத்துப் பேசுவேன். வழி சொல்லி வீட்டுக்கு வரச்சொல்லுவேன். இரவு சாப்பிட வைத்து, மேலே உள்ள குடியில் அவர்களைப் படுத்துறங்கச் சொல்வென். ஒரு முறை விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகள் இராணுவத் தேடுபேரிட்டு பலத்த காயங்களோடு இங்கு வந்து சேர்ந்தார்கள்.

ஒரு பிள்ளையின் வயிற்றில் குண்டு பாய்ந்து குடல் சரிந்து போயிருந்தது. ஒரு பிள்ளை யின் நெஞ்சில் பலத்த காயம் பட்டிருந்தது. மற்றோரு பிள்ளைக்கு கால் மூட்டு பெயர்ந்து போய் இருந் தது. அந்த மூவரும் சென்னைப் பொது மருத்துவமனையில் 43ஆவது வாட்டில் சிறப் புப் பகுதியில் அனுமதிக்கப்பட்டார்கள்.

அவர்கள் மூவருக்கும் என் இல்லத் தில் இருந்து தான் உணவு அனுப்பப்பட்டது. இரவு மட் டுமே நாங் களே (நான், என் மனை வி, பிள்ளைகள், ரகு) அவர்களுக்குப் பிடித்த இடியாப்பம், கோழிக் குழம்பு, ஈழத்து சொதி தயாரித்து எடுத்துக் கொண்டு போவோம். என் மனைவியும் ரகுவும் சமையல் வேலையில் ஈடுபடுவார்கள்.


ஒருநாள் இரவு 7:30 மணி அளவில் மருத்துவமனைக்குப் போனோம். என் மனைவி அந்த மூவருக்கும் இடியாப்பத்தை ஊட்டிவிட்டார். பிறகு வாயைக் கழுவி விட்டு துண்டால் துடைத்துவிட்டார்.

உயிருக்கு ஆபத்தான அந்த நிலையிலும் அந்தப் பிள்ளைகள்... அந்த நாட்டில் (ஈழத்தில்) நடடித்த நாடகத்தை ஒரு டேப் ரெக்கார்டரில் பதிவு செய்து வைத்திருந் தார்கள். அந்த நாடகத்தைப் போட்டுக் காட்டி, “அண்ணி இதைக் கேளுங்க“ என்று காட்சி காட்சியாய் பேசிக் காட்டி சிரித்து மகிழ்ந்தார்கள். ஒன்பது மணிக்கு மேல் வரை நாங்கள் அந்த பிள்ளைகளோடு அன்போடு அளவளாவிவிட்டு வீட்டுக்கு வருவோம்.

அந்த நெருக்கடியான கால கட்டத்தில் விடுதலைப் போராளிகள் என்றாலே கதவடைப்பு நடந்த காலத்தில்... என் மனைவி என்னைக் காட்டிலும் அவர்கள் மேல் அதிகமான ஈடுபாடு காட்டி எனக்கு மிகவும் ஊக்கமளித்தார். உறுதுணையாகவும் இருந்தார். ஈழத்தில் இருந்து வந்த பிள்ளைகளை எங்கள் சொந்தப் பிள்ளைகளாகவே ஏற்றுக் கொண்டு அவர்களை பார்த்துக் கொண்ட விதம் இப்போதும் என்னை நெகிழ வைக்கிறது.

என் மனைவி தமிழரசி மட்டும் எனக்கு

புகழ் வணக்கம்



புலவர் புலமைப்பித்தன்

06.10.1935-08.09.2021

தமிழ் நாடு

ஆதரவாக இல்லாமல் இருந்திருந்தால்... நான் இன்றுவரை ஈழப் போராளிகளோடு ஒரு போராளியாக வாழ்ந்திருக்க இயலாது. நான் பதிவியிலே இருந்தேன். மற்றவர்களைப் போல தன் கணவர் பதவியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்... பணம் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று என் மனைவி கருதியிருந்தால்... ஈழ விடுதலைப் போருக்கு நான் இடையறாத ஆதரவு தருவதற்கு இடையூறாக இருந்திருப்பார்.

ஆனால், என் மனைவி நான் தம்பி மீதும் மற்றவர்கள் மீதும் வைத்த பாசத்தை, பற்றைக் காட்டிலும் அதிகமான பாசமும் பற்றும் வைத்திருந்தார். போராளிகள் யார் என்னென்ன உணவு பிடிக்கும் என்பது என் மனைவிக்கு அத்துப்படி! தம்பி மீது இன்னும் உயிரையே வைத்திருக்கிறார்!

30.08.1993 அன்று மகன் வழிப் பேரன் பிறந்தான். பிறந்த குழந்தையை என் மார்பில் வாங்கி வைத்துக் கொண்டு, “திலீபன்“ “திலீபன்“ என்று மூன்று முறை அழைத்து திலீபன் என்ற பெயரை வைத்தேன்.

என் மனைவி தன் பங்குக்கு பேரனை வாங்கி மடியில் வைத்துக் கொண்டு... “தம்பி“ “தம்பி“ “தம்பி“ என்று மூன்று முறை அழைத்து அவனுக்கு தம்பி என்று பெயர் சூட்டினார்.

இன்றும் என் பேரனுக்கு வீட்டில் பெயர் தம்பி... வெளியில் பெயர் திலீபன்!

நன்றி: புலவர் புலமைப்பித்தன்



ஆன்லைன் விளையாட்டுக்கு அடிமையாகும் சிறார்களை மீட்க என்ன வழி?

ஒரு குடும்பத்தின் 14 வயது மூத்த மகன் இணைய விளையாட்டில் ஆர்வமாகி நாள் ஒன்றுக்கு 10-12 மணி நேரம் அதில் நேரத்தை செலவழிக்க தொடங்கியுள் ளார். பின் அதை பார்த்து 10 வயது இரண்டாம் மகனும் இணைய விளை யாட்டை அத்தமாக விளையாட தொடங் கியுள்ளார்.

ஒரு கட்டத்தில் தங்களை பெற்றோர் கவனிக்காமல் இருப்பதற்காக அவர்கள் இருவருக்குள்ளும் இந்த பிள்ளைகள் சண்டை மூட்டி தங்கள் பக்கம் திரும் பாமல் பார்த்துக் கொண்டுள்ளனர்.

இப்படி ஒரு வித்தியாமான சூழலில் ஒரு குடும்பம் தன்னிடம் சிகிச்சைக்காக வந்த தாக தெரிவிக்கிறார் பெங்களூருவில் உள்ள தேசிய மனநலம் மற்றும் நரம் பியல் அறிவியல் கழகத்தின் மருத்துவ உளவியல் பேராசிரியர் மற்றும் ஷட் கிளினிக்கின் ஒருங் கிணைப் பாளர் மனோஜ் குமார் ஷர்மா.

இந்த பொதுமுடக்க காலத்தில் பதின் பருவத்தினர் மற்றும் இளைஞர்கள் இடை யே அதீதமாக இணைய விளையாட்டில் ஈடுபடுதல் (Binge gaming) என்ற நிலை அதிகரித்துள்ளதாக ஷட் கிளினிக் நடத்திய ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.

இந்த ஷட் கிளினிக் தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் அறிவியல் கழகம் சார்பில் நடத்தப்படுகிறது. இங்கு தொழில் நுட்பத்திற்கு அடிமையாவது குறித்த பிரச்னைகளுக்கு தீர்வு காணப்படுகிறது.

உலக சுகாதார நிறுவனம் 2018ஆம் ஆண்டிலேயே சர்வதேச நோய்களின் வகைப்பாட்டில் இணைய விளையாட்டால் வரும் பாதிப்பையும் சேர்த்துள்ளது.

இந்த இணைய விளையாட்டில் அதீத ஆர்வம் செலுத்துவது கோவிட் சமயத்தில் வளர்ந்து வரும் ஒரு பிரச்னை என்கிறார் கள் நிபுணர்கள்.

பொதுமுடக்கத்திற்கு முந்தைய காலக் கட்டத்தில் இணைய விளையாட்டு குறித்த பிரச்னையால் ஒரு வாரத்தில் 6-7 பேர் வந்தால் இப்போது அது 8-12 பேராக அதிகரித்துள்ளது அதாவது கிட்டதட்ட 30-40 சதவீதம் வரை இணைய விளையாட் டு தொடர்பாக வரும் பிரச்னைகளுக்காக சிகிச்சை பெற வருபவர்களின் சதவீதம் அதிகரித்துள்ளது என்கிறார் மனோஜ் குமார் ஷர்மா.

அதிகரித்த காரணம்?

வெளியில் செல்வதற்கு தடை, பணி அல்லது கல்வி நிலையங்கள் வழக்கமாக இயங்காமல் இருப்பது, அதிகப்படியான நேரம் ஆகியவற்றால் பதின் பருவத்தினர் மற்றும் இளைஞர்கள் இணைய விளை யாட்டிற்குள் செல்ல நேரிடுகிறது என்கிறது ஷட் கிளினிக்கின் ஆய்வு.

மேலும் ஒரு நாளைக்கு 10-12 மணி நேரம் வரை இணைய விளையாட்டில் செலவழிக்கும் நிலை சில பதின் பருவத் தினரிடம் ஏற்பட்டுள்ளது என்றும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று தன்னிடம் சிகிச்சைக்காக வரும் குழந்தைகளின் பெற்றொரும் இந்த லாக் டவுன் சமயத் தில் இணைய விளையாட் டுகள் குறித்த ஆர் வம் தங்களது குழந்தைகளுக்கு அதிகரித்தாக தெரிவிக்கின்றனர் என்கிறார் மனோஜ் குமார் ஷர்மா.



ஆன்லைன் வகுப்புகள் அதற்காக அதிக ரித்த ஸ்மார்ட் ஃபோன் பயன்பாடுதான் இணைய விளையாட்டுகளில் பதின் பருவத் தினர் அதிகம் மூழ் கியிருப் பதற்கான முக்கிய காரணம் என்கிறார் குழந்தைகள் மற்றும் பதின் பருவத்தினர் குறித்த மனநல நிபுணர் மருத்துவர் வெங்கடேஷ்.

இந்தியாவில் மட்டுமல்ல உலக அளவில் இந்த போக்கு அதிகரித்து வருகிறது. சமீபமாக 18 வயதுக்குட்பட்டவர்கள் வெள்ளிக்கிழமை வார இறுதி நாட்கள் மற்றும் விடுமுறை நாட்களில் ஒரே ஒரு மணி நேரம் மட்டுமே இணைய விளை யாட்டில் ஈடுபட அனுமதிக்கப்படும் என சீனா தெரிவித்திருந்தது.

இளைஞர்கள் மத்தியில் கவலைக்குரிய விதத்தில் இந்த இணைய விளையாட்டு பழக்கம் அதிகரித்துள்ளதால் சீனா இந்த அறிவிப்பை வெளியிட்டது.

இதனை எப்போது நாம் addiction என்று சொல்கிறோம்?

எந்த தருணத்தில் ஒரு குழந்தை இந்த விளையாட்டிற்கு அடிமையாகிவிட்டது என்று கூறலாம் என்பதையும் இதற்கு பின் உள்ள மனோநிலையையும் விளக்கு கிறார் மனோஜ் குமார் ஷர்மா.

◆ எந்த ஒரு பலனும் தராத ஒரு செய்கையில் தொடர்ந்து ஈடுப வேண்டும் என்ற விருப் பம்.

◆ எப்போதெல்லாம் விளையாட தொடங் குகிறார்களோ அப்போதெல்லாம் அவர் கள் கட்டுப்பாட்டை இழந்துவிடுவது.

◆ தொடர்ந்து இதில் ஈடுபடுவதால் ஏற்படும் விளைவுகள் குறித்து தெரிந்திருந்தும் அதில் ஈடுபடுவது.

◆ இது எல்லாம் தென்பட்டால் நாம் ஒரு குழந்தை இந்த விளையாட்டிற்கு அடிமை யாகிவிட்டது என்று சொல்லலாம் என் கிறார் அவர்.

எதனால் இணைய விளையாட்டை நாடு கிறார்கள்?

பெரும்பாலான சமயங்களில் இது `peer pressure` காரணமாக நடைபெறுகிறது. தமது நண் பர் கள் விளையாடினால் தானும் தொடர்ந்து அதில் விளையாட வேண்டும் என்ற அழுத்தம் உருவாகிறது. இல்லையேல் நண்பர்களிடத்திலிருந்து தாம் விலகியது போல ஒரு அச்ச உணர் வை அது தந்துவிடுகிறது.

இரண்டாவது கேமிங்கில் வரும் பரிசு களும் அதில் கிடைக்கும் வெற்றிகளும் கொடுக்கும் மகிழ்ச்சி. புற உலகில் எளிதில் வெற்றிபெற இயலாத ஒரு குழந்தை இந்த கேமிங் மூலம் வெற்றியை பெற முயற்சிக் கிறது. ஒரு கட்டத்தில் இது புற உலகத்தை முற்றிலும் புறக்கணிக்கும் நிலைக்கு இழுத்து செல்கிறது.

நாளடைவில் சிலர் 'நான் கேமிங்கில் சிறப்பாக செயல்படுகிறேன் இதையே நான் வாழ்க்கையாக தேர்ந்தெடுக்கலாம்' என்று நினைக் கிறார் கள் ஆனால் ஒரே சிலராலேயே அதில் சாதிக்க முடிகிறது.

இதில் பெரிதாக சாதித்துவிட முடியும் என்ற எண்ணம் நாளடைவில் வகுப்பில் தேர்ச்சி பெறவில்லை என்றாலும் அது பரவா யில்லை என்ற நிலைக்கு தள்ளிவிடுகிறது.

யாரெல்லாம் எளிதாக இதில் பாதிக்கப் படுகிறார்கள்

பொதுவாக சுயகட்டுப்பாடு குறைவாக உள்ள குழந்தைகள், ஏற்கனவே குடும்பத் தில் இம் மாதிரியாக அடிமையாதல் பிரச்னை இருப்பது, போன்ற குழந்தைகள் இதனால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள் என்கிறார் மருத்துவர் வெங்கடேஷ்.

"அதே போன்று ஏற்கனவே சில மனநல பாதிப்புகள் இருக்கும் குழந்தைகளும் இதற்குள் எளிதாக சென்றுவிடுகிறார்கள் இம்மாதிரியான குழந்தைகளை அதிகம் இந்த விளையாட்டுக்கள் பாதிக்கிறது. எனவே இம்மாதிரியான சூழலில் முதலில் இம் மாதிரியான நிலைக்கு தள் ளிய காரணிகளை முதலில் கண் டறிந் து அதற்கு சிகிச்சை அளிக்க வேண்டும்," என்கிறார் அவர்.

எந்த ஒரு அடிமை பழக்கமும் மருத்துவ ரீதியாக, உளவியல் ரீதியாக, சமூக ரீதி யாக என மூன்று வகையில் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. மருத்துவ ரீதியாக உடல் எடை அதிகரித்தல், ஒற்றை தலைவலி, அல்சர், தூக்கமின்மை போன்ற பிரச் னைகள் ஏற்படுகின்றன.

அதன்பின் உளவியல் ரீதியாக விளை யாட்டில் ஈடுபடவில்லை என்றால் மன அழுத்தம் உருவாகிறது. பின் அது குறித் தே யோசித்து கொண்டு இருப்பது. பதட் டம், அதீத கோபம், அதீதமாக நடந்து கொள்வது ஆகியவை ஏற்படுகிறது.

சமூக ரீதியாக படிப்பில் ஆர்வம் குறைவது, வீட்டு வேலைகளில் ஈடுபடாத நிலை, நண்பர்கள் மற்றும் பெற்றொரோடு பேசு வது குறைந்துவிடுகிறது என விளக்கு கிறார் மருத்துவர் வெங்கடேஷ்.

இதை எப்படி தடுப்பது? பெற்றோர்கள் என்ன செய்ய வேண்டும்?

குழந்தைகள் இணைய விளையாட்டில் தீவிரமாக செல்வதை தடுப்பதன் முக்கிய பொறுப்பு பெற்றொருக்கு உள்ளது என்று கூறும் மனோஜ் குமார் அதற்கான வழி முறைகளையும் அடுக்குகிறார்.

பெற்றோர் தொடக்கத்திலேயே குழந்தை களிடம் வெளிப்படையாக பேச வேண்டும். அதேபோன் று குழந் தைகள் சொல் வதையும் எந்தவித முன் அணுமானமும் இல்லாமல் கேட்க வேண்டும்.

இரண்டாவது குழந்தைகளுடன் நேர் மறையான பொழுதுபோக்கை உருவாக்கி கொள்ள வேண்டும். குடும்ப உறுப்பினர் கள் அனைவரும் அதில் ஈடுபடுவது ஒரு ஆ ரோக் கி யமான மன நிலை யை குழந்தைகளிடத்தில் ஏற்படுத்தும்.

குழந்தைகளின் நடத்தை, உண்ணும் பழக்கம், அவர்களின் ஆர்வம், தூங்கும் வழக்கம் என இதுபோன்ற செயல்பாடு களில் பெற்றோர் ஏதேனும் மாற்றத்தை கண் டாலோ அல்லது அதீத கோபம், வெறுப்பு ஆகியவை தென் பட் டாலோ குழந் தைகளுடன் உடனடியாக பேச வேண்டும் அல்லது ஏதேனும் தொழில் முறை ஆலோசகரை தொடர்பு கொள்ள வேண்டும்.

இம்மாதிரியான பிரச்னைகளை தொடக் கத்திலேயே கண் டறிந்துவிட்டால் மிக நல்லது என்கிறார் மருத்துவர் வெங்க டேஷ்.

"படிப் பு மட் டுமே குழந் தைகளுக் கு முக்கியம் என பெற்றோர் அழுத்தம் கொடுக்க கூடாது. பிள் ளைகளுக்குப் பிடித்தமான விஷயத்தில் அவர்களின் ஆர்வம் மேம்பட ஊக்குவிக்க வேண்டும்" என்கிறார் அவர்.

இணைய விளையாட் டில் ஒருவர் எத்தனை நேரத்தை செலவழிக்கிறார்கள் என்று கவனமாக இருத்தல் வேண்டும். அதுவும் இந் த விளையாட் டுகளில் ஈடுபடுவதால் தினசரி நடவடிக்கைகளை பாதிக்கும் விதமாகவோ அல்லது உடல் மற்றும் மன நலத்தில் பாதிப்பு ஏற்படுகிறது என்றாலோ நிச்சயம் கவனம் தேவை என்கிறது உலக சுகாதார நிறுவனம்.

நன்றி - விஷ்ணுப்ரியா ராஜசேகர்
பிபிசி தமிழ்

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின்
நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு
அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள்
அறிவித்தல்களையும்,
மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து
ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.
தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம்,
இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.
எமது மின்னஞ்சல் முகவரிக்கு
தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு
வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com

விளம்பரம் என்பது
உங்கள் வணிகத்தின்
ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு

437.345.4203

2022 உலக வணிகம்
Ulaga VANIKAM
Tel: 437 345 4203
www.ulagavanikam.com
ulagavanikam@gmail.com

www.itouchcarwash.com
I TOUCH CAR WASH LTD
Professional Auto Detailing
HAND CAR WASH

WE SPECIALIZE IN:
. Interior / Exterior
. Wash & Vacuum
. Interior Shampoo
. Leather Treatment
. Engine Shampoo
. High Speed Buff
. Waxing / Polishing
. Headlight Restoration
. Auto Tinting
. Ceramic Pro
. Insurance Approved

HEADED LIGHT RESTORATION
We use only natural quality high-end
products on all our vehicles

புதிய இடத்தில் புதிய பொலிவுடன்
GRAND AUTOMOTIVE INC.
www.grandautomotive.ca
ALL REPAIRS & MANINTENACE ALL KIND OF CARS
உங்கள் வாகனங்களின் சகலவிதமான
திருத்த வேலைகளையும் தரமான முறையில்
திருத்திக்கொள்ள நாங்குகள்
Free Estimates, All Mechanical & Electrical Repairs
Muffler Work, Body Work & Painting
Friendly Services, Quality Workmanship & Guaranteed

We also install car Audio Systems,
Alarm Systems, Auto Glass & Seat Covers
If You are looking for a used Car, let us know
We can find you the best car in Town
Rust Proofing & Undercoating (Save you Body)
GOOD NEWS
Touch-up & Body Work on lease return cars
All kind of Mechanical Work, Call Us

Call: Louis
Tel: 416.757.7891 Dir: 647.831.2709
Email: itouchcarwash43@gmail.com
435A Midwest Road, Unit 5A, Scarborough ON M1P 3A6

BEST QUALITY WORK FOR REASONABLE PRICES!
OUR AIM IS TO SATISFY THE CUSTOMERS

GTA CHIROPRACTIC CENTRE

We are specialized in

- Motor Vehicle Accidents
- Slip & Fall
- WSIB
- Extended Health Care
- Sports Injuries
- Physiotherapy
- Chiropractic
- Orthotics Shoes
- Massage Therapy
- Acupuncture



Health is Wealth

Pathmaraj (Pat) Pathman

Tel: 416-321-0482 Cell: 416-528-5318

Fax: 416-321-0486

GTA Square Mall 5215 Finch Ave, E#206

Scarborough, ON, M1S 0C2

www.gtachiro.ca | Email: gtaphysio@gmail.com

ஒரு விராட் விஸ்வப் பிரம்மனே முயற்சி

R.S தங்கப் பட்டறை

நவீன டிசைன்களில் நகைகள் செய்துகொள்ளவும்
உங்கள் பழைய நகைகளை மெருகூட்டவும்
எல்லவிதமான திருத்த வேலைகளையும் லேசர்
மூலம் செய்து கொள்ளவும்

குறித்த திகதியில் ஓடர்களை பெற்றுக்கொள்ளவும்
பிறந்த திகதி எண் ராசிக்கேற்ப பொருத்தமான
மாணிக்க கற்களை அவற்றின் இயற்கைத்
தன்மைக்கான சான்றிதழுடன் பெற்றுக்கொள்ளவும்

திருமணத்திற்கு பொன் உருக்குதல் காது குத்துதல்
பல விதமான டிசைன்களில் தாலி செய்து கொள்ளவும்



பழைய நகைகளை மாற்றி
இன்றய காலத்துக்கேற்ப
புதிய வடிவங்களில்
செய்துகொள்ளவும்

தொடர்புகளுக்கு: 416.292.9816 / 416.822.7171

S.மூர்த்தி

Majestic City (Markham & McNicoll)
2900 Markham Rd, Unit A16, Scarborough

FRONTLINE COMMUNITY CENTRE

குடிவரவாளர்களுக்கான சேவைகள்

பெண்கள் மற்றும் முதியோர்
நலதிட்டங்கள் கனடிய மனநல அமைப்பு

வருமான வரி பத்திரம் நிரப்புதல்
கனடிய வருமான வரித்துறை

பொதுவான திட்டங்கள்

மாற்றுத்திறனாளிகளுக்கான திட்டங்கள்

வேலைவாய்ப்பு சம்பந்தமான சேவைகள்

முதியவர்கள் சமூக நீரோட்டத்தில்
பங்குபெறுவதற்கான திட்டங்கள்

தன்னார்வத் தொண்டாற்றல்

(416) 840-4425
3031 Markham Rd, Unit 26 & 27
Scarborough ON M1X 1L9

Frontline Community Centre

frontlinecommunitycentre

http://fcccanada.org/

Nickon Photo & Video

நிக்கோன் போட்டோ & வீடியோ

Digital Album

டிஜிட்டல் அல்பம்





உங்கள் குடும்ப மற்றும்
சமூக நிகழ்வுகளை நினைவில்
நிறுத்தி, நிழற்படமாக்கிட...



Call: Vijay

416.554.8899

Facebook ID:
Nickon Studio

2022 ஆம் ஆண்டின்

உலக வணிகம்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அலலது
செலவோ அல்ல,அது ஓர் முதலீடு.

விளம்பரத்திற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம்
வீண் விரயமன்று அது உங்கள்
வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு.

உங்கள் வணிகம் பெருகவும்
முன்னேற்றமடையவும் இன்றியமையாதது.

விளம்பரம் இன்றேல்
வியாபாரம் இல்லை

விளம்பரத் தொடர்புகளுக்கு

437 345 4203





thamilarvanikam@gmail.com



நாகபடுவானில் 2000 ஆண்டுகளுக்கு முன் பாம்பை பானைக்குள் வைத்து நாகத்தை வழிபட்டதற்கான மிகத் தொன்மையான சான்றுகள் கண்டுபிடிப்பு.

தென்னாசியாவில் தொன்மையான நாட்டுப்புற வழிபாடுகளில் ஒன்றாக நாக வழிபாடு காணப்படுகின்றது.

நாகம் பூமிக்குள் இருந்து வந்து மீண்டும் பூமிக்குள் மறைந்து போவதால் ஆதிகால மக்கள் அவற்றைப் மண் (பாம்பு) புற்றுக் குள் வைத்து வழிபட்டனர். இதற்கு மத வழிபாட்டில் நாகத்தை குலமரபுத் தெய் வமாகக் கொண்டிருந்த மக்கள் வாழ்ந்து வருவதே காரணமாகும். இதன் காரண மாகமே வடஇந்தியாவில் அரசமைத்த குப்தரும், தக்கணத்தில் ஆட்சி புரிந்த சாதவாகனரும் தம்மை நாக குலத்தவர் என அழைத்துக் கொண்டனர். தமிழகத் தின் பண்டைய தலைநகரான நாகபட் டினம் நாகரின் தலைநகராக இருந்த தெனக் கூறப்படுகின்றது. இலங்கையின் பூவீக மக்களது வரலாறு கூறும் பாளி இலக்கியங்கள் வடஇந்தியாவில் இருந்து விஜயன் தலமையிலான மக்கள் இலங் கை வருவதற்கு முன்னர் இங்கு வாழ்ந்த மக்களை இயக்கர், நாகர் எனக் குறிப் படுகின்றன. ஆயினும் இலங்கையின் மனித வரலாறும், நாகரிக வரலாறும் விஜயன் வருகையைத் தொடர்ந்து ஏற்பட்டது எனக் கூறும் அறிஞர்கள் பலரும் பாளி இலக்கியங்கள் கூறும் இயக்கர், நாகரை மனிதப் பிறவிகள் அற்ற அமானு சராகவே எடுத்துக் கொள்ளுகின்றனர். ஆனால் பேராசிரியர் சத்தமங்கல கருணாரத்தினா போன்ற அறிஞர்கள் விஜயன் வருவதற்கு முன்னர் வாழ்ந்த நாகரை இலங்கையின் தொன்மையான இனக்குழுக்களில் ஒன்று என்பதற்கு இற் றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னர் புழக்கத்தில் இருந்த கல்வெட்டுக்களில் வரும் நாககுலம் பற்றிய செய்திகளை ஆதாரமாகக் காட்டுகின்றனர்.

இலங்கையில் கி.மு.6ஆம் நூற்றாண்டள வில் விஜயன் தலமையிலான வட இந்தியக் குடியேற்றம் நடந்ததாகக் கூறப் படும் காலத்திற்கு முன்னரே இலங்கை யில் வளமான நாகரிக வரலாறு கி.மு. 1000 ஆண்டிலிருந்து தோன்றி வளர்தை பரவலாகக் கண்டுபிடிக்கப்பட்டு வரும் ஆதியிரும்புக்காலப் பண்பாட்டுச் சின்னங் கள் (ருெங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங் கள்) உறுதிப்படுத்துகின்றன. இலங்கை யின் தொல்லியற் திணைக்களப் பணிப் பாளராக இருந்த கலாநிதி சிறான் தெரணியகல இப்பண்பாட்டை இலங் கைக்கு அறிமுகப்படுத்தியவர்கள் நாக இன மக்கள் எனக் கூறுகின்றார். இப்பண் பாட்டு மக்கள் தென்தமிழகத்தில் இருந்து இலங்கைக்குப் புலம் பெயர்ந்தவர்கள் எனக் கூறும் பேராசிரியர் கா.இந்திரபாலா இந்த நாக இன மக்களின் ஒரு பிரிவினரே இற்றைக்கு 2500 ஆண்டளவில் தமிழ் மொழி பேசும் மக்களாக மாறினர் எனக் கூறுகின்றார்.

தமிழகத்தில் சங்ககாலம் தொட்டு பாம்பு புற்று வழிபாடு இருந்ததற்கான சான்றா தாரங்கள் பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. ஆனால் இக்காலத் திற்கு முன் இருந்த ஆதியிரும்புக் காலப் பண்பாட்டில் இவ்வழிபாடு இருந்தற்கான ஆதாரங்கள் கிடைத்ததாகத் தெரிய வில்லை. ஆனால் வடஇலங்கையில் அண்மையில் கட்டுக்கரை, நாகபடுவான் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வுகளின் போது ஆதியிரும்புக்கால மக்களிடையே இவ் வழிபாடு இருந்தற்கான அதிக ஆதாரங் கள் கிடைத்துள்ளன. அவற்றில் இருந்து இலங்கைக்கு ஆதியிரும்புக் காலப் பண்பாட்டை அறிமுகப்படுத்தியவர்கள் நாக வழிபாட்டை குலமரபுத் தெய்வமாக கொண்டிருந்த மக்கள் எனபது உறுதி யாகின்றது. அவற்றுள் நாகபடுவானில் கண்டுபிடிக்கப்பட்ட நாகத்தைப் பானை யில் வைத்து வழிபடப்பட்ட மரபு வட இலங்கை மக்களிடையே நாக வழிபாடு தொன்மையானது என்பதை உறுதிப் படுத்துவதாக உள்ளது.

இவ்விடம் பூநகரிப் பிராந்தியத்தில் முழாங் காவிலுக்கு அண்மை யில் உள்ள காட்டுப் பகுதியில் அமைந்துள் ளது. இங்கு கண்டு பிடிக்கப்பட்ட நாக வழி பாடு பற்றிய சான்று கள் சில தென்னாசியாவின் ஏனைய வட்டாரங் களில் இது வரை கிடைத்ததாகத் தெரிய வில்லை. இவ்விடத்தில் நாகபடு வான் என்ற இடப்பெயரின் பழமை, அதன் பொருள் ஆய்வுக் கு உரியது. படுவம், படுவான் என்பது பழ மையான தமிழ்ச் சொல். இப்பெயர்கள் சங்க இலக் கியத்தில் ஆழமான குளம், பெரிய குளம் என்ற பொருளில் பயன் படுத்தப்பட்டுள்ளது. இதனால் நாககுளம் என்ற பொருளைக் கொண்ட இடப்பெயரே இன்றும் மாற்றம் அடையாது நாகபடு வான் என்ற பண்டைய தமிழ்ச் சொல்லில் அழைக்கப்படுகிறது எனலாம். கலாநிதி இரகுபதி இவ்விடப் பெயர் ஆதியில் இங்கு நாகத்தைக் குலமரபாகக்க கொண்ட மக்கள் வாழ்ந் ததன் காரணமாகத் தோன்றியது எனக் கூறுகிறார். இவ்விடத்தில் ஆதியிரும் புக்காலப் பண்பாட்டுச் சின்னங்களுடன் அதிக எண்ணிக்கையில் சுடுமண்ணா லான நாகச் சின்னங்கள், பீடத்துடன் கூடிய நாக, நாகினி சிலைகள், சிற்பங்கள், நாக கற்கற்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாதாரங்கள் ஆதியிரும்புக்காலப் பண்டு மக்கள் மதவழிபாட்டில் நாகத்தை தமது குலமரபுச் சின்னமாகக் கொண்டிருந்த னர் என்பதை உறுதிப்படுத்துகின்றன. அவற்றுள் நாகச் சிற்பத்தை பானையில் வைத்து வழிபடப்பட்டதற்கான சான்றுகள் தொல்லியல் அறிஞர்களுக்குப் புதிய அம்சமாகக் காணப்படுகின்றது.

இங்கு அகழ்வாய்வு செய்யப்பட்ட ஆய்வுக் குழிகளில் ஒன்றில் அரைவட்ட வடிவில் செய்யப்பட்ட பெரிய பானை மண்ணில் புதைக்கப்பட்டு அதன் மேற்பகுதியில் பாம்பு வந்து போவதற்கான வாய்ப் பகுதியும், அதைச் சுற்றி மூடிய நிலையில் பாம்பு புற்றை அடையாளப்படுத்தும் நான் கு சிறு கலசங்களும் காணப்படுகின்றன. பானைக்குள் இருந்த மண்ணை அகற்றிப் பார்த்த போது நிலத்தில் புதைக்கப்பட் டிருந்த அழகான நாக பாம்பின் சிலை பானையால் மூடப்பட்டிருந்ததை தெரிய வந்தது. இப்பானையின் மூன்று திசை களிலும் தெய்வங்கள் அமர்ந்திருக்கும் பீடங்கள் காணப்படுகின்றன. அவற்றில் அமர்ந்துள்ள தெய்வத்தின் இடது கால் பானையை முட்டியவாறு உள்ளது. நான்காவது திசையில் மண் சட்டிகளின் விளிப்புப் பகுதியில் நான்கு திசைகளை நோக்கயவாறு நாகபாம்பு படமெடுத்த நிலையில் இருக்க, அவற்றின் வால் பகுதிகள் சட்டிக்குள் இணைந்து சட்டியின் நடுமையத்தில் ஒரு வட்டமாகக் காணப் படுகின்றது. இவ்வாதாரங்கள் பாம்பு புற்று வழிபாடு தோன்றுவதற்கு முன்னோடியாக ஆதியிரும்புக்காலப் பண்பாட்டுடன் தோன றிய தொன்மையான வழிபாட்டு மரபு எனக் கூறலாம். இங்கு மேற்கொள்ளப் பட்ட அகழ்வாய்வுகளின் ஒன்றுக்கு மேற் பட்ட நாக வடிவங்கள் மண் சட்டிகளில் வைக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாதாரங்கள் சமகாலத்தில் நாக வழிபாட்டு ஆலயங் களில் நாகதோசம் நீங்க செப்பு அல்லது மண் பாத்திரங்களில் நாகபாம்பை வைத்து ஆலயங்களுக்கு கொடுக்கும் மரபு ஆதியிரும்புக் காலத்தில் இருந்து தோன் றியிருக்கலாம் என்பதைக் காட்டுகின்றது.

பண்டுதொட்டு திருகோணமலை உள் ளிட்ட அநுராதபுரத்திற்கு வடக்கில் உள்ள பிராந்தியம் நாகதீபம்), நாகநாடு என வரலாற்று மூலங்களில் தனித்து அடை யாளப்படுத்தப்பட்டுள்ளன. இப்பெயர்களே கி.பி.13 ஆம் நூற்றாண்டுவரை இப்பிராந் தியத்தில் வன்னி, வன்னிப்பற்று என்ற பெயர்களும், 15 ஆம் நூற்றாண்டில் யாழ்பாணயன் பட்டினம் என்ற பெயரும் தோன்றும்வரை தொடர்ச்சியாகப் பயன் பாட்டில் இருந்து வந்ததற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன. பண்டைய இலங்கை யில் நாக இனமக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் பல பிராந்தியங்களில் காணப் பட்டாலும் அது இலங்கையில் ஒரு பிராந் தியத்தின் பெயராக அடையாளப்படுத்திக் கூறப்பட்டு வந்ததற்கு தற்காலத்தில் வடஇலங்கையில் வாழும் தமிழ் மக்களின் பூர்வீக வரலாறு ஆதியிரும் புக்காலப் பண்பாட்டை அறிமுகப்படுத்திய நாக இனக்குழுவோடு தோன்றி வளர்ந் ததையே கட்டுக்கரை, நாகபடுவான் அகழ்வாய்வுகள் உறுதிப்படுத்துகின்றது எனலாம்.



- பேராசிரியர் புஸ்பரட்ணம் - நன்றி

34ஆம் ஆண்டு வீரவணக்கம்

34th Year Veeravanakkam



கேணல் சங்கர்

வைத்தியலிங்கம்
சொர்ணலிங்கம்
வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்
18.09.1949 - 26.09.2001

ஐந்து அம்ச கோரிக்கைகள்:-

I. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இன்னும் தடுப்புக் காவலில் அல்லது சிறைகளில் இருப்போர் விடுதலை செய்யப்பட வேண்டும்.

2. புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்களக்குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேணடும்.

3. இடைக்கால அரசு நிறுவப்படும் வரை புனர்வாழ்வு என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.

4. வடக்கு கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடன் நிறுத்தப்பட வேண்டும்.

5. இந்திய அமைதிப் படையின் மேற்பார்-வையில் ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் திரும்பப் பெறப்படுவதோடு தமிழ் கிராமங்களிலும், பள்ளிக்கூடங்களிலும் குடியிருக்கும் இராணுவம், பொலிஸ் வெளியேற வேண்டும்.



ஈகைச்சுடர் Thileepan

லெப். கேணல் திலீபன்

இராசையா பார்த்தீபன்

ஊரெழு, யாழ்ப்பாணம்

27.11.1963-26.09.1987

இந்திய அரசிடம்
5 அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து
15.09.1987 தொடக்கம் 26.09.1987 வரை
12 நாட்கள் நீராகாரம் அருந்தாமல்
உணவு தவிர்ப்பு போராட்டம் நடத்தி
ஈகைச்சாவை தழுவிக்கொண்டார்



Demand as follows:-

1. All Tamils detained under the Prevention of Terrorism Act should be released.

2. The colonization by Sinhalese in Tamil areas under the guise of rehabilitation should be stopped.

3. All such rehabilitation should be stopped until an interim government is formed

4. The Sri Lankan Government should stop opening new Police Stations in the Northeastern Province.

5. The Sri Lanka Army and Police should withdraw from schools in Tamil Villages & the weapons given by the the Indian Government to 'Home Guards' should be withdrawn

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

The thirst of the Tamils is the Homeland of Tamileelam